S 42 S.49

உ

குமரன்றுணை.

# தேவ ரிஷி முனி சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய வைத்திய வாத யோக ஞானசாஸ்திரத்திரட்டு

நான்காம்பாகப் புஸ்தகம்.

இஃது

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப் பெற்று

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக் கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1914.

*Registered Copy Right.*

உ
கடவுள் துணை.

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் ததிபர்களுக்கும், புஸ்தக வியாபாரிகளுக்கும், இன்னும் மற்றுமுள்ள மகான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

இந்த யோக ஞான சாஸ்திரத் திரட்டு என்னு மிப் புஸ்தகத்தில் அச்சிட்டிருக்கிற சாஸ்திரங்களின் முடிவிற் கண்டிருக்கிற ஒவ்வொரு மகான்களிடத்திலும் ஓலை ஏட்டுப் பிரதிகளைச் சகல சுதந்தரத்துடன் பெற்று, என் மூதாதைகள் கையாண்டுவந்த ஓலையேட்டுச் சாஸ்திரங்களையுஞ் சேர்த்து, இந்நூலுக்குப் போதுமான திரவியத்தைச் செலவு செய்து என்னால் (கெவர்ண்மெண்ட் சட்டப்படி) ரிஜிஸ்தர்செய்திருப்பதால் இச்சாஸ்திரங்களைப் பிறர்எவ்விதத்திலும் அச்சிடக்கூடாதென்பதை இதன்மூலமாய்த் தெரிவித்துக்கொண்டேன்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோன்,

புஸ்தகஷாப், புதுமண்டபம் மதுரை.

உ

கடவுள் துணை.

# முகவுரை.

உலகின்கண் சர்வேஸ்வரனுல் உற்பத்தியாக்கப்பட்ட பலவுயிர்களிலும், சுவேதஜம்-அண்டஜம்-உற்பீஜம்-சராயுஜமாகிய நால்வகை யோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்துநான்கு லட்சம் ஜீவராசிகளிற் சிரேஷ்டமானது இம்மானிடப்பிறவியேயாம்; இதில் ஜெனிக்கும் சிசுக்கள்-பாலர்-குமாரர்-எவ்வனர்-விருத்தர்களாகிய ஆண் பெண்ணினங்களுக்குரிய சகல சுக துக்கங்களையும், தர்மார்த்த காம மோக்ஷ மர்மங்களையும், இகபர சாதனங்கட்குரிய இயல்பினையும், எண்ணிலாப் பிறவித் துன்பங்களையும், இஷ்ட காமியார்த்த இன்ப ரசங்களையும் எடுத்துக் கூறிய நூல்கள் பலவாயினும், அவற்றினை இனிது விளங்கக் கூறுவன: அகண்ட பரிபூரண சச்சிதானந்த வடிவாயுள்ள சின்மய சொரூப நிலையைப் பெற்ற தேவ, ரிஷி, முனி, சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய யோக ஞான சாஸ்திரங்களேயாம்.

இவ்வித சாஸ்திரங்களை வெளிவிடாது நமது முன்னோர்கள் தொன்றுதொட்டு ஓலை ஏடுகளி லெழுதி, வீடுகளில் காலை மாலை பூசையில் வைத்துப் பூசித்து வாசித்து வருவது யாவருக்குந் தெரிந்த விஷயமே. அப்படிப்பட்ட அரிய சாஸ்திரங்கள் நமது நண்பர் இ. ராம. குருசாமிக்கோனர் மூதாதைகள் கையாண்டுவந்த ஓலை ஏட்டுப் பிரதிகள் பலவாம். அவற்றுட் சிலவற்றையும், கனம் ந. ராம. கணபதியாபிள்ளை யவர்களிடத்திலும், என்னிடத்திலும் கைவசமா யிருந்த ஓலைச் சுவடிகளையும் ஒருங்கே திரட்டிப் பார்க்கையில், பதினெண் சித்தர்கள் பாடல்களிற் சில இருந்தும் சில இல்லாதிருக்கவே அதையுஞ் சேர்த்து அச்சிடக் கருதி "சொல்லும் பொருளுஞ் சுவையுங் கனியும், எல்லும் ஒளியும் இருப்பது போல, என்பாற் பிரியா தெழில் நட் பதனை, அன்பாற் கொண்ட அருமை நண்பர்" இ. ராம. குருசாமிக்கோனரிடம் வெளியிட, அவரு மதற்கிணங்கி பல தேயங்களிற் சென்று சில ஏடுகளைச் சேகரித்துக்கொண்டு வந்தனர். அச்சமயம் தெய்வகடாக்ஷத்தால் திருப்பழனியின்கண் வசிக்கும் ஸ்ரீ கைலாச போகமகாரிஷீஸ்வர சுவாமி யவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகா கைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ கைலாச தெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்கள் தமது ஆச்சிரமத்திற் கையாண்டுவந்த பலசாஸ்

திரங்களடங்கிய ஏட்டுச் சுவடிகளை வரப்பிரசாதத்துடன் கொடுத்து, அச்சிடும்படி உதவி புரிந்தனர்கள்.

எல்லாச் சுவடிகளையும் காயிதத்தில் எடுத்தெழுதிப் பார்க்கையில் அதிற் சில சாஸ்திரங்களில் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு செய்யுட்களில் இரண்டு வரியும் மூன்றுவரியுமாக இருந்ததுடன், சிலபாக்களில் எதுகை மோனைக பேதமில்லா திருந்தன. அவைகளைப் பூர்த்தி செய்யவேண்டி, இப்புஸ்தகத்தில் அச்சிட்டிருக்கும் ஒவ்வொரு சாஸ்திரங்களின் முடிவிற் கண்டிருக்கிற நமது ஆத்மநண்பர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு பிரதிக்கு நாலு ஓலையேட்டுப் பிரதிகளைப் பெற்று அவற்றுள் வரைந்துள்ள லிகிதப்பிரகாரம், அனேக மகான்களின் உதவியைக்கொண்டு என் சிற்றறிவுக் கெட்டியவாறு சீர்திருத்தஞ் செய்ததுமன்றி, இதற்கு தேவரிஷி முனிசித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய "யோக ஞான சாஸ்திரத் திரட்டு" எனத் திருநாமஞ் சூட்டிப் பன்னிரண்டு பாகங்களாக அச்சிட்டிருக்கின்றனன்.

இச்சாஸ்திரங்களை யெல்லாந் திரட்டி ஒன்றுசேர்த்து அச்சிடுவதற்காகப் பொருட் செலவும், தேகப்பிரயாசையும் எடுத்துக்கொண்டு சதா துணைக்கருவியாயிருந்த மதுரை புதுமண்டபம் புஸ்தக வியாபாரியும், ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸ் சொந்தக்காரருமாகிய நமது நேயர் இ. ராம. குருசாமிக் கோனாரவர்களது நன்றியும், தாலபத்திர சாஸ்திரச் சுவடிகளுதவிய ஏனைய நண்பர்களது நன்றியும் யான் என்றும் மறக்கத்தக்கனவன்று.

இவ்விதம் பன்னிரண்டு பாகமாய் அச்சிட்டிருக்கிற இவ்வரிய பெரிய சாஸ்திரங்கள் ஒரு புஸ்தகத்திலிருப்பது மற்றொரு புஸ்தகத்தி லில்லாதிருப்பதால், பன்னிரண்டு வாலியத்தையும் பார்ப்ப தவசியம். ஆகையால் ஒவ்வொருவரும் இதனை வாங்கிக் கையாண்டு வருவீர்களென நம்புகின்றனன்.

இங்ஙனம்,

த. குப்புசாமி நாயுடு,

மதுரை.

உ

கணபதி துணை.

# நான்காவது புஸ்தகம்.

---

தேவ ரிஷி முனி சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய

## யோகஞான சாஸ்திரத்திரட்டின்

அட்டவணை.


| தொகை | சாஸ்திரங்களின் பெயர். | | | பக்கம். |
|---|---|---|---|---|
| 1 | மச்சமுனி | தூலஞானம் 10 | ... | 1 |
| 2 | ஷை | சூட்சுமஞானம் 10 | ... | 4 |
| 3 | ஷை | காரணஞானம் 10 | ... | 7 |
| 4 | ஷை | தீட்சைஞானம் 55 | ... | 10 |
| 5 | ஷை | ஞான தண்டகம் 97 | ... | 18 |
| 6 | ஷை | ஞான தீட்சாவிதி 100 | ... | 33 |
| 7 | வேதமுனிவர் | ஞானசூஸ்திரம் 24 | ... | 47 |
| 8 | தூர்வாசமகாரிஷி | ஞானசூஸ்திரம் 77 | ... | 53 |
| 9 | யூகிமகாமுனிவர் | தத்துவஞானம் 105 | ... | 65 |
| 10 | வசிஷ்டர் | ஞானோதயம் 16 | ... | 92 |
| 11 | ஷை | வைத்திய சூஸ்திரம் 206 | ... | 97 |
| 12 | பாம்பாட்டி சித்தர் | ஞானசூஸ்திரம் 16 | ... | 149 |
| 13 | ஷை | பாடல் 130 | ... | 154 |
| 14 | ஞானசித்தர் | மெய்ஞ்ஞானம் 12 | ... | 175 |
| 15 | ஷை | பாடல 35 | ... | 179 |
| 16 | சுகப்பிர்மரிஷி | ஞானசூஸ்திரம் 32 | ... | 182 |
| 17 | கூர்மானந்தர் | மவுனஞானம் 5 | ... | 191 |
| 81 | கூர்மானநதர் | ஞானசூஸ்திரம் 50 | ... | 193 |
| 19 | சூரியானந்தர் | ஞானசூஸ்திரம் 13 | ... | 206 |
| 20 | ஷை | கற்பஞானசூஸ்திரம் 25 | ... | 210 |
| 21 | கண்ணானந்தர் | சிவராஜயோகம் 14 | ... | 217 |
| 22 | அசுவனிதேவர் | சிவயோககற்பம் 16 | ... | 221 |
| 23 | பராசரிஷி | ஞானோபதேசம் 22 | ... | 226 |
| 24 | தேரையர் | நவலோகபற்பம் 16 | ... | 232 |
| 25 | ஷை | சிவபூஜாவிதி 75 | ... | 237 |


அட்டவணை முற்றிற்று,

சொன்னதினல் விட்டகுறை யெய்திலுண்டாம்
சொல்லுமுன்னே அறிவோடே பத்திநிற்கும்
பன்னதினல் பலநூல்சாஸ் திரங்களெல்லாம்
பாங்கான கேசரியைப் பாருபாரு
மன்னதினு லுலகத்தோர் மனத்தாற்கெட்டார்
மாயையென்ற திரோதாயி மயக்கத்தாலே
தன்னதினு லாவதென்ன செயலேயென்று
சதாகோடி யிறந்தார்கள் தாக்கிப்பாரே. (4)

தாக்கையிலே புருவமையந் தன்னில்நின்று
சச்சிதா னந்தமென்ற குருவைநோக்கிப்
பார்க்கையிலே மனமுறத்தே அறிவிற்சென்று
பதறுமல் ஊமையென்ற யெழுத்தையூணி
நோக்கையிலே ரவிமதியாம் வன்னிக்குள்ளே
நுகர்ந்துநின்ற ஞானசத்தி பதத்தைநோக்கித்
தேக்கையிலே கண்டுகொள்ளாத் தீபம்போலச்
சேர்ந்துநிற்கும் கேசரிதான் மைந்தாகாணே. (5)

காணப்பா யிதுக்கண்டால் ஞானஞ்சித்தி
கைவிட்டு சூஸ்திரம்போல் தேகஞ்சித்தி
ஊணப்பா அஷ்டாங்க யோகஞ்சித்தி
ஒன்றுமில்லை யென்றுசொன்ன சரங்கள்சித்தி
தோணப்பா பிறவியத்த குணமோசித்தி
சொல்லரிதா மென்றுசொன்ன மவுனஞ்சித்தி
வீணப்பா மற்றதெல்லாம் வாய்ப்பேச்சாகும்
மேவியந்தக் கேசரிக்குள் விரைந்துகூடே.

கூடாமல் உலகோர்கும் பகத்தைச்செய்து
குமட்டியந்த மாருதத்தாற் கண்கள்போயும்
ஓடாமற் கும்பித்து மயக்கமுற்று
உதரத்தே நோய்பிறந்து உழன்றோர்கோடி
நாடாமல் நாடிநின்று மூலத்துள்ளே
நலமான வாசிகொண்டே யூதியேறி
வாடாமற் கேசரிக்குள் புக்கமாட்டார்
மதிகெட்ட யோகியவன் மைந்தாகாணே.

உ

குமரன் துணை.

மூன்றாவது:

மச்சமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# காரண ஞானம் ௰.

ஓங்கார மாவதென்ன வென்றுகேட்கில்
உகாரமொன்று மகாரமொன்று அகாரமொன்று
பாங்காக நின்றபிர ணவமேயாச்சு
பாரிந்தக் கருவல்லோ ஆசான்சொன்னார்
வாங்காத அகாரஉகா ரத்திற்சேர்ந்து
வன்னிநின்ற விடமல்லோ மகாரமாச்சு
தாங்காதே உரைக்கிற்கே சரியைக்காட்டும்
சச்சிதா னந்தமென்ற மவுனந்தானே. (1)

ஆறுதலங் கடந்துநின்ற மதியுட்புக்கி
அம்பரத்தே அறிவுகுரு பதத்திற்சென்று
மாறுதல மொடுங்கியதற் குள்ளேசென்று
மகத்தான வன்னிரவி மதியுங்கண்டு
தேறுதல மல்லோகே சரியுமாச்சு
தேர்ந்தவுடன் செகமெல்லாம் மித்தையாச்சு
பேறுதலம் நின்றுறக்கத் தேகம்பொன்னாம்
பிடித்தயிடம் பொன்னாகும் பேணிக்காணே. (2)

காணவல்லோ கேசரியை மூலந்தொட்டுக்
கலங்காமல் மனத்தாறு தலமும்பார்த்துப்
பூணவல்லோ ரவிமதியாம் வன்னிக்குள்ளே
புகழாக மேல்நோக்கிச் சொலித்துநிற்கும்
ஊணவல்லோ அதைப்பார்கே சரிதான்மைந்தா
ஒகோகோ நிற்குணத்தின் காந்திகாந்தி
தோணவல்லோ அதைக்கண்டா லவனேஞானி
சுகமறியான் வாய்ப்பேச்சுச் சொல்லுவானே. (3)

எண்ணியெண்ணி யகண்டத்துக் கேசரி
　　எட்டிக்கொண்டு அதுக்குள்ளே வாழுவார்
மண்ணில்வந்து பிறப்பா றிறப்பில்லை
　　மருவுங்காயம் மகத்தான சித்தியாம்
ஒண்ணிநின்ற ஜனகாதி நால்வரும்
　　ஓவியத்துள்ள பாவைபோல் நிற்கின்றார்
கண்ணுள்நின்ற ஒளியது விண்ணொளி
　　கலந்துகூடிடக் கைகண்ட முத்தியே. (8)

கைகண்டோர்கள் கயிலாசக் கொங்கணர்
　　கடந்தமூலர் பதஞ்சலி மாமுனி
தைகண்டேறியே தன்னை யிகழ்ந்திட்டுத்
　　தாக்கிநின்றனர் கேசரிக் குள்ளையா
மெய்கண்டேறி விரைந்திட்ட மூர்த்திகள்
　　விண்ணில் வாழ்ந்தனர் கயிலாசத்தேகமாய்
மைகண்டேறியே சித்தாதி கோடிபேர்
　　மாண்டசொல்லவர் வர்க்கத்தி லில்லையே. (9)

இல்லைஇல்லை யிறப்பும் பிறப்புந்தான்
　　ஏதினாலது இப்படி யாச்சென்றால்
அல்லையென்ற திரோபவை மாயத்தை
　　அகற்றிநின்ற அதீத மனத்திலும்
எல்லைகண்டு இருந்திடங் கேசரி
　　எளிதுவார்த்தையே ஏற்றங் கடினங்காண்
தில்லையென்ற பதிதாண்டி நின்றது
　　சென்றபேர்க்கு இறப்பது நின்றதே. (10)

மச்சமுனி சூட்சும ஞானம் ௰,

முற்றிற்று.

---

ஸ்ரீவில்லிபுத்தூரைச்சேர்ந்த மகம்மதுசாயபுபுரம் திருவேங்கடத்தேவரவர்கள் குமாரர் போத்திலிங்கத் தேவரவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

கேட்டறிந்துகொள் வோர்க்கென்ன காரணம்
    கெட்டிப்பட்ட மவுனத்துள் ளேநின்று
மாட்டறிந்துகொள் வஸ்துவை யுண்டுநீ
    மனத்தைத்தாண்டி யறிவுக்குள் ளேசெல்லப்
பூட்டறிந்துகொள் பொன்போலே தேகமாம்
    போக்கினோடு அகண்டத்தி லேறியே
ஆட்டறிந்துகொள் கற்பூர தீபமாம்
    அகண்ட சோதிபோற் சித்தியுமாகுமே. (4)

சித்தியென்ற திதுவல்லோ சித்திதான்
    செத்துச்செத்துப் புளியுப்பை விட்டவர்
பத்திகொண்டு கரையேறக் கக்கிஷம்
    பாழ்த்தகற்ப மிதற்குச் சரியல்ல
முத்தியென்ற திதுவல்லோ முத்திதான்
    மூடமூட படுவாயை மைந்தர்காள்
சுத்திகொண்டு தசதீட்சை தாண்டிடித்
    சுத்தமான மவுனத்திற் பூசியே. (5)

பூசையென்ன கிரிகையல் லோவென்றால்
    பொங்கியெங்கும் பராபரை கேசரி
ஆசையென்ன மதுவாம் லகிரியால்
    அகண்டத்தேத்தி அணைந்தே நுகர்ந்திடு
ஓசையென்ன மவுனத்தி னோசையே
    உத்துப்பார்க்க உலகத்து ஞானியர்
பாசையென்ன பலகற்பந் தாளித்துப்
    பருவமாகச் சமாதிக்குள் வாழ்வரே. (6)

வாழ்ந்துநின்ற சமுசார மென்செயும்
    மயக்கமான திரோபவை யென்செயும்
சூழ்ந்துநின்ற கருவிக ளென்செயும்
    சுற்றத்தோடு திரிவார்கள் பேயர்கள்
தாழ்ந்துநின்ற படிபோலப் பேசுவார்
    சகலசித்து மவர்க்கே பலித்திடும்
ஏழ்ந்துபோகத் தசதீட்சை தாண்டிடில்
    என்னைப்போலவு மெண்ணிடீர் மக்களே. (7)

உ
பராசத்திதுணை.

இரண்டாவது:
மச்சமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# சூட்சும ஞானம் ௰.

கட்டளைக்கலிப்பா.

கண்டுகண்டு பலநூலைப் பார்க்கையிற்
 கலந்துசொல்லும் வெகுகற்ப மார்க்கங்கள்
உண்டுஉண்டு உயர்த்தியும் தாழ்த்தியும்
 உரைத்தார்கற்பம் ஒருகோடி சித்தர்கள்
விண்டுவிண்டு ரசமுதற் றூதுவும்
 விந்தைவிந்தையாய் மூலிகை சொல்கிறார்
கொண்டுகொண்டு தெளிந்தது கோடிபேர்
 குறித்தகற்பம் குறிசொல்லக் கேளுமே. (1)

கேளுமிந்த உலகத்தில் மானிடர்
 கெட்டியாகச் செபத்தைமுன் னேபண்ணி
நீளுமிந்தச் சிவயோகம் கண்டபின்
 நிலைத்துமெள்ள அகண்டத்திற் றூவுவோம்
ஆளுமிந்தப் படிகோடி சித்தர்கள்
 அடக்கிமாத்திரை கேசரத் தேகினார்
வாழுமிந்தப் படிமெத்தக் கக்கிஷம்
 வகையெண்ணும விறந்திடார் கோடியே. (2)

இறந்துபோனவர்க் கென்னமெய்ஞ் ஞானந்தான்
 இகழ்ச்சியென்று இகத்துளோர் தூஷிப்பார்
மறந்துசெத்து மறுஜென்மம் புக்கினால்
 வலுமையாகிய சஞ்சித மென்னமோ
பிறந்துநிற்கிற் பெரிய திரோபவை
 பெண்ணைப்போல்வந்து பேயாக்கிப் போடுவள்
துறந்துவிட்டுக் கரையேறக் கற்பந்தான்
 சொல்லுவேனந்தச் சூட்சத்தைக் கேட்டிடே. (3

ஞானமென்ன புருவமை யஞ்சிவம்
    நாடிப்பாரு அகார வடிவதாம்
வானமென்ன மனத்தி லுகாரந்தான்
    மருவிரெண்டையுங் கூட்டிட நாதமாம்
கானமென்ன மகார மவுனந்தான்
    கண்டுகூடக் கடின மிதுமெத்தப்
பானமென்ன லகிரியைக் கொண்டிடப்
    பார்க்கப்பார்க்கப் பளிச்சென்று யேத்துமே. (8)

எத்தயேத்த யெழுத்தந்தப் பூரணம்
    இருத்திவைத்த யிடமல்லோ கேசரி
மாத்தமாத்த மனமூந் திடப்படும்
    வருகுந்தொய்தமாம் வாசனை போய்விடும்
கோர்த்தகோர்வை குலையாத கூடையா
    குறித்துக்கேசரி கூடில் ரவியொப்போ
பார்த்தபார்த்த யிடமெல்லாம் நீயன்றோ
    பறந்தபோதக் குறிகண்டோர் சித்தரே. (9)

சித்தரென்றது வேறில்லை யுன்மனம்
    தெளிந்துநின்ற அறிவேசித் தகச்சது
முத்தரென்றது வேறில்லை ஞானமாம்
    மூலவாயுவுங் கண்டத்தி லேறின
பத்தரென்றது வேறில்லை உன்மனப்
    பானத்தாலும் பணிந்திட்ட பூசையால்
சுத்தரென்றது வேறில்லை சுத்தத்தால்
    தொட்டலோகம் பசும்பொன்னு மானதே. (10)

மச்சமுனி தூலஞானம் ௰,

முற்றிற்று.

மதுரை திண்டுக்கல்ரோட் சிவராஜயோகி ☞ பங்காருசாமியார் அவர்கள் குமாரர் சாமியார் ☞ குருசாமிநாயுடு அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

கண்டு கொள்ளுஞ் சிரசுக்கு மேலையா
    கலந்த வன்னி ரவிசோமன் கோடிபோல்
உண்டு நின்ற சகலமுந் தன்னுளாம்
    உற்றுப் பார்க்க நினைவற்ற கேசரி
விண்டு கண்டு இருகாத நாளுந்தான்
    விரைந்து மூவருந் தேடியுங் கண்டிலார்
பண்டு விட்ட குறையாற் குருசொல்லப்
    பலிக்கும் பாருமெய்ஞ் ஞானமுஞ் சித்தியே. (4)

சித்தி பண்ணுவே னென்றுல கத்தோர்கள்
    செவியை மூக்கைப் பதப்பற மூடியே
அத்தி நாத வொலிகேட்ட தென்றல்லோ
    அலைச்ச லேகொண் டலைவார் மயக்கத்தோர்
பத்தி மூவரும் நீந்தறி யாமலே
    பாழ்த்த மாயைக் கடலுக்குள் மூழ்கினர்
முத்தி காணவும் நீயோ அறிபவன்
    மூட ஞானம் முழுமோசங் கண்டிடே. (5)

மோசமென்ன ஜெகமெலாம் மால்மயம்
    முத்திவாச லடைத்தது பெண்மயம்
வாசமென்ன சம்சாரப் பொன்மயம்
    மயக்கமென்ன திரோபவ மாயந்தான்
பீசமென்ன விதுக்கெலாம் நானென்று
    பெரியபீசம் பிறப்பிறப் பாச்சுது
காசமென்ன அருமாந்த கண்ணுக்குள்
    கலந்தமாயைத் திரைவந்து சூழ்ந்ததே. (6)

சூழ்ந்துநின்ற திரையைவி வேகத்தால்
    சுத்தவீரன் தரிப்பான்மற் றோர்க்கென்ன
வாழ்ந்துநின்ற சமுசார மாயையை
    மருவித்தள்ளித் தரிப்பா னறிவுற்றோன்
தாழ்ந்துநின்ற மிலேச்ச ரதீதத்தைத்
    தாக்கித்தென்ன பலனுண்டோ சொல்லிடீர்
ஆழ்ந்துநின்ற அகண்டத்துக் கேசரி
    அறிந்த பேர்க்கு மெய்ஞ் ஞானமும் வந்ததே. (7)

உ
குருவே துணை.

# தேவ ரிஷி முனி சித்தர்கள்
திருவாய் மலர்ந்தருளிய
## யோக
# ஞான சாஸ்திரத் திரட்டு.

## மச்சமுனிவர் தூல ஞானம் ய.

கட்டளைக்கலிப்பா.

நெட்டுக் கொண்ட சடத்துக்கு ளாரென்றால்
நின்ற வன்னி ரவிசோமன் மூன்றல்லோ
கட்டுக் கொண்டிட வாயுவைப் பூரித்துக்
கலங்கி நின்று தவிப்பா ருலகத்தோர்
பட்டுப் பட்டுத் தெளிந்தாலு மென்படார்
பார்க்கப் பார்க்க மனமன மாயையால்
தெட்டுப் பண்ணி மயக்குந் திரோபவை
ஜெகத்துக் காலையுஞ் சிந்தையிற் கண்டிடே. (1)

சிந்தை கூர்ந்து திரோபவை மாயத்தைச்
சேர்ந்த றிந்து ஜெகவித்தை யென்றுநீ
தந்தை தாயை யறிபுரு வமையச்
சார்பில் நின்றுநீ சாதக மாய்ச்சென்று
விந்தை யான குருபத மேல்நின்ற
வீட்டில் வன்னி ரவிசோமன் கூடிய
மந்தை வீதியிற் சேருஞ் சிகாமணி
மருவுங் கேசரி கண்டுகொள் மார்க்கமே. (2)

மார்க்க மாகவே மூலத்தில் வன்னிதான்
மருவி நின்றது தூல மயமது
ஏர்க்கை யாகு மிருதயஞ் சூரியன்
இசைந்து நின்றது தூல மயமதாம்
காக்க மாகக் கபால மயமது
கண்டு சோமனுந் தூலமு மாச்சுது
சாக்ர மூன்றுக்கு மேலாந் துவாதமா
சாந்தம் நின்றது கண்டது கொண்டிடே. (3)

மதிகெட்டா ரென்றசொல் லாருக்காச்சு
மகத்தான கேசரிக்குள் வாழ்ந்தோர்க்காச்சு
விதிகெட்டா ரென்றசொல் லாருக்காச்சு
வேதாந்த சிரோமணியாம் ஞானிக்காச்சு
பதிகெட்டா ரென்றசொல் லாருக்காச்சு
பராபரத்தை யம்பரமாய்ப் பாய்ந்தோர்க்காச்சு
கெதிகெட்டா ரென்றசொல் லாருக்காச்சு
கேள்வியற்ற மூடருக்குக் கிட்டுந்தானே. (8)

தானென்ற ஆணுவத்தா லுலகத்துள்ளே
சாதகமாய்க் குருவென்று வேடம்பூண்டு
வானென்ற வெட்டவெளி யொன்றுமில்லை
மகத்தான சாங்கத்தே நில்லென்பார்கள்
ஊனென்ற திரோதாயி வலையிற்சிக்கி
ஓகோகோ நின்றலைவா ரொன்றுங்காணூர்
பானென்ற கருவுகே சரிதானெங்கே
பார்க்கிறதோர் முறையறியார் பதியிதாமே. (9)

முறையாகத் தானென்ற ஆசைபோக்கி
மூதண்ட வேதசாஸ் திரத்தைப்பார்த்து
நிறையாக மனமொடுங்கி யறிவிற்சேர்ந்து
நிற்குணத்தின் வீதியிலே நேர்ந்துகூடி
மறையாக நின்றகே சரியைக்கண்டு
மனமுருகிக் கலந்ததிலே தானேதானாய்த்
துறையாக யிரவுபக லற்றலல்லோ
சொல்லலாம் ஞானியெனச் சொல்லலாமே. (10)

மச்சமுனி காரண ஞானம் ம,
முற்றிற்று.

திருப்பூவணம் சுப்பராய சுவாமி யவர்களிட மிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

நாதன்காரவது:

மச்சமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# தீட்சை ஞானம் ருரு.

வெண்பா.

முப்பாழுக் கப்பால் முடிந்தமுத லெந்நாளுந்
தப்பாமற் பூரணத்திற் சாருவார்—எப்போதும்
வேகாச் சடலமுத்தி வேண்டுங்கோ முக்கோணஞ்
சாகாக் கணேசனருள் தான். (1)

வேறு.

பூரணத்தெய்வம் புகழ்பெற்றதெய்வம்
காரணத்தெய்வங் கருத்தஞ்சுபூதமாம்
வாரணத்தெய்வம் வழங்கும்பரைமூலந்
தாரணந்தொண்ணூறுந் தாருஞ்சடலத்தே. (2)

சடலத்தினுள்ளே தனித்தசிவமொன்று
உடலுக்குறுதியா யோடுந்தசவாய்வு
திடமாம்புரியஷ்டஞ் சீரணித்தேபோகிற்
கடலேகெதிகாண்பின் னென்றுங்காணேமே. (3)

காணுபகாரங் கடியசிவமாச்சு
பூணுயுகாரம் புரிகின்றசத்தியாம்
தோணுதிதுரெண்டுஞ் சேரச்சுழிமுனே
வீணல்லநந்தி விளங்கியநாமமே. (4)

நாமமோங்காரம் நல்லபிரணவம்
காமம்விளைந்த கந்தப்பனாலே
வாமமிகுந்த மதனவாரணமாகி
ஓமமிகுந்த ஒளிகுண்டலிக்கே. (5)

குண்டலிசத்தி குடிபோய்ப்புகைந்தே
சண்டனுக்காளாய்த் தக்கப்படுகிறாள்

கண்டது அவ்வென்னுங் கடையதோரட்சரம்
பிண்டத்துக்குற்பத்தி பிறக்குமிதிலே. (6)

பிறக்குஞ்சுழிமுனை பேரிட்டவாசியிற்
பிறக்குஞ்சிகார வகாரமிதிலே
பிறக்குஞ்சுவாசம் பன்னிரண்டங்குலம்
பிறக்கும்புரியட்டம் பின்னொன்றுமில்லையே. (7)

இல்லையென்றெண்ணாதே யிருக்குந்திரிகோணம்
சொல்லப்படாத துரியமதின்மேல்
அல்லலொருவன் அவனிவனானவன்
பல்லுயிரெல்லாம் படைத்ததொருவனே. (8)

ஒருவனொருத்தி யொன்றிலொன்றுச்சு
இருவரிருந்திட மீரேழுலோகமாம்
கருவுங்குருவுங் கைவண்ணமானதால்
இருவரொருவ ரேகாந்தமானதே. (9)

ஏகாந்தமான வெங்கள்மூத்தான்குரு
வாகாந்தசத்தி வாமத்துக்குண்டலி
மோகாந்தமான முனையையடக்குவள்
ஆகாந்ததிரோதாயி யர்த்தியினாதமே. (10)

நாதமாஞ்சத்தம் நல்லதசவாய்வு
நாதமாஞ்சுண்ணம் நல்லசிவமாகும்
நாதமாம்பூரணம் நந்தியகாரந்தான்
நாதந்தான்மூலத் தெழுந்தநடனமே. (11)

நடனத்தின்கூத்தெல்லாம் நாடியதெவ்வென்னில்
நடனகணேசன் நலங்கொண்டிருந்திடம்
நடனபராபரை நற்குண்டலிசத்தி
நடனத்தின்வடிவாய் நந்தியிருந்ததே. (12)

நந்திக்குப்பேர்கேள் நலமானஅண்டந்தான்
கந்தன்கணபதி காலன்திரிகோணன்
செந்தியிருந்திடஞ் சித்திரபுத்திரன்
அந்தத்துக்காதி யாங்காரமாரனே. (13)

ஆங்காரக்கூத்தா லாடும்பிறவிதான்
ஆங்காரக்கூத்தா லாடும்பிரபஞ்சம்
ஆங்காரக்கூத்தா லாடும்கடனந்தான்
ஆங்காரக்கூத்தா லையவாழ்ந்தாரே. (14)

அழியாச்சிகார மாஞ்சிவமாடும்
அழியாவகார மானந்தசத்தியாம்
அழியாவொண்ணிக்கி லப்பனேநந்தியாம்
அழியாமுக்கோணத் தமர்ந்ததுட் காணே. (15)

காணும்நகாரங் கடியபிர்மாவாம்
பூணுமகாரம் பூண்டசரஸ்வதி
தோணுமொண்ணிக்கிற் றரியமாம்நந்திதான்
வேணுஞ்சுவாதிஷ் டானம்விளங்குமே. (16)

விளங்குமகாரம் விஷ்ணுவுமாகும்
விளங்கும்உகாரம் விமலையுமாகும்
களங்கவொண்ணிக்கிற் காரணநந்தியாம்
பளங்கனிக்கூரும் பசுபதிபாசமே. (17)

பசுவென்னசிவன்தான் பண்பாய்ச்சொல்லக்கேள்
பசுவாங் கணபதி பாசத்துக்காத்மா
பசுவென்னதுன்பம் படைக்கின்றமாரன்
பசுவாமாங்காரப் பதியிலிருந்ததே. (18)

பதியென்னமாசிவம் பரசிவமேயது
பதியானபூரணம் பாலானவிந்து
பதியென்னநாதம் பறந்துவொண்ணித்துப்
பதியானபாசம் படைக்கின்றவாறே. (19)

வாறானவிந்து வளங்கிடும் பாசத்திற்
கூறானபாசந்தா னென்னக்குலாவிடும்
மாறானசித்தை யாங்காரம்புக்கிடில்
ஆறாதபுண்ணி லழிந்தினபாசமே. (20)

பாசம்பசுவிலும் பற்றுவதன்றல்ல
பாசம்பதியிலும் பத்துமெய்ஞ்ஞானிக்குப்

பாசத்தினட்சரம் பாரோங்காரந்தான்
பாசமறிந்தாற் பதிசெல்லலாமே. (21)

பதியினெழுத்தைப் படைத்தஅகாரந்தான்
சதியாம்பசுவுக்குத் தானும்உகாரந்தான்
கதியாமிதினுற் கைகண்டவாறு
துதியாதபேர்க்குத் துரியங்கிடையாதே. (22)

துரியமகாரஞ் சொல்விடில்வாலையாம்
அரிபிரமாதிக ளாருமறிந்திடார்
பெரியகுருபரன் பின்னேநற்சீஷனுய்த்
திரியஅருள்வார் சிவசத்திவாலையே. (23)

வாலையினட்சரம் வழுத்துவேன்தீட்சையில்
வாலைக்குழந்தைக்கு வயணம்பிறக்கவே
மாலைக்கடந்த வளர்ந்தஅனுகதம்
நூலைச்சிகாரம் ருத்திரமூலமே. (24)

மூலமதாக முழங்கும்றீங்காரம்
ஆலயத்தாருடன் அவ்வொடுநந்தியாம்
காலனுமில்லை காமனுமில்லை
சீலமறிந்தே சிறக்கவுமோதிடே. (25)

சிறக்கும்விசுத்தி தெளிந்தமயேசுரன்
உறக்கும்வகாரம் உறுகின்ற-அவ்வும்
இறக்குஞ்சிறியு மிருவரும்நந்தியாம்
மறக்கும்விடாதே வாசியின்சித்தியே. (26)

சித்தியதாகச் செப்புமூலங்கேள்
முத்தியாம்அவ்வொடு சவ்வுமுழக்கமாம்
சத்தியஞ்சொன்னேன் சதாசிவன்மயேஸ்பரர்
பத்திபராபரம் பாஞ்சஞ்செழுத்துமே. (27)

அஞ்செழுத்தோடே அஞ்செழுத்தோதினுல்
அஞ்செழுத்தாலே யடங்குவாரைவரும்
அஞ்செழுத்தோதுவா ராசாணைப்பின்சென்று
அஞ்சிற்பிரிய அருள்வாரையஞ்சுமே. (28)

அஞ்சொடு அஞ்சை யருள்வாரேயாமாகில்
அஞ்சுமேபாவம் அடங்காதகோபமும்
அஞ்சொடுமூன்றை யருளினற்பாவம்போம்
அஞ்சியடிபணிந் தாசானைப்போற்றே. (29)

ஆசானைப்போற்ற ஆர்க்குங்கிடையாது
ஆசானிருந்திட மவ்விடஞ்சொல்லுவார்
ஆசானுலகிலெட் சாந்திரத்தோன்றாய்
ஆசான்சிறியர்போ லாயிருப்பாரே. (30)

இருப்பார்மலையி லேறமாகடினம்
இருப்பார்புவியா னென்றுரையாமல்
இருப்பார்சரித்திர மேறப்பெற்றேதான்
இருப்பார்பதத்தை யிணங்கிப்பணிவையே. (31)

இருக்குஞ்சுழிமுனை றீங்காரமேலே
இருக்கின்றவாசி வகார-சிகாரம்
இருக்கின்றசத்தி குண்டலிக்குள்ளாய்
இருக்கின்றபிரணவ மெய்துங்கிணேசனே. (32)

கிணேசனிருப்பார் கீழ்பஞ்சபூதத்தால்
கெணபதியானார் கிருபையாயைந்து
மணமானதாலே வளங்குமேஐங்கரன்
குணமானவிக்கினே சுரனென்றுங்கூறே. (33)

கூறுனமுக்கோணம் குதிக்கின்றவிக்ரமம்
பேறுனதாலே பெருமைபுண்டாச்சு
வாறுனவிந்து வாசலடுக்கவே
ஆறுனகோணத் தமர்ந்தமுக்கோணமே. (34)

முக்கோணமூர்த்தி முழங்குங்குறியிடம்
சக்கோணத்தாலே சருவர்க்குங்குண்டலி
அக்கோணத்தாயை அழகானவல்லபை
தக்கமேஆத்துமா அத்தியொண்டாதே. (35)

ஒண்டிடும்பிள்ளையார் தாமேயென்றெண்ணி
கண்டிடும்போது கனலும்யெழும்பிடும்

அண்டத்தினுள்ளே அமர்ந்தவாசாரியன்
சண்டனூர்பூதஞ் சார்ந்ததினாலே. (36)

நாலானகோணம் நான்முகனிருப்பிடம்
சாலாக்கினையிற் சதாசிவன்தன்னொடு
மாலானருத்திரன் மயேசுரனொரொடு
சேலாமொன்றஞ்சுஞ் சேர்ந்திடமாறே. (37)

ஆராறுமாறு மறிவகைகேளு
பாராப்பிராணன் பனிரெண்டதாகும்
கூராயிருப்பதைக் கூட்டிலொன்றொன்றனை
வீராயறிய விளக்கினேன்காணே. (38)

காணுமாகுங் கண்ணையறிந்தபின்
வாணாளுக்காதி வாழ்கின்றஆத்துமா
வீணல்லசொன்னேன் வேதமுறையாது
தோணுவதற்குச் சொன்னேனான்சித்தியே. (39)

சித்தியெவ்விடஞ் சீதரன்றேவியால்
முத்தியுங்கண்டு மொழிவார் மும்மண்டலம்
சத்தியமுப்பாழ் கடக்குத்தலைவனும்
பெற்றவர்க்கல்லோ பேராஞ்சொரூபியே. (40)

சொரூபம்வேறாகிற் றரியமறிந்தவர்
பெரியகுருபரன் பேசும்பொருளல்ல
அரிபிரமாதிக ளடங்கினதவ்விடம்
கரிமுகனாத்துமா பரமென்னுங்காட்சியே. (41)

பரங்களறியப் பண்பாகச்சொல்லக்கேள்
சரங்கொண்டபூரணந் தன்னையறிகிலார்
திரங்கொண்டவேதஞ் சிறக்கும்புரியட்டம்
தரங்கொண்டஆத்துமா தானதுவாமே. (42)

ஆமேபுரியட்ட மாத்துமாவிளக்கமாம்
ஆமேநற்பூரண முப்பாழுக்கப்பாலாம்
ஆமேபொருளொன் றறிந்ததுமுத்தியாம்
ஆமேமுக்கோணஞ் சுழிமுனைக்காதியே. (43)

ஆதியாமக்கினி மண்டலத்தப்புறம்
நீதியாய்நின்ற நிலையுமறிகிலார்
வீதியாய்ச்சொன்றல் விண்ணிலிடிவிழும்
சோதியாந்தத்துவந் தூலசடலர்க்கே. (44)

தூலமிருக்கச் சூட்சமேலெட்சயம்
காலனுமில்லை கருத்துறவைத்திடில்
பாலனுமாவாய் பாராய்தெரிசனம்
கோலங்கள்வைத்த குறிகாணுவாயே. (45)

குருவேதுஆத்துமா கோனென்றறிந்தபின்
குருவேதுநந்திக் குண்டலிக்குள்ளாய்த்
திரமாயுபதேசஞ் செப்புங்குருபரன்
தருவானநந்தி தாமவரென்னே. (46)

அவரென்னஆத்தா ளந்தப்படிமூலம்
பவமேதுதன்னைப் பெற்றவள்குண்டலி
தவமேபுரிகின்ற தாயையேபூசி
சிவமேதுசெய்திடிற் சிந்தையாந்தந்தையே. (47)

தந்தையைப்போலே சதிரா கமூலத்திற்
சிந்தையில்வைப்பாய் சிவமதுபூசனை
சந்தையமில்லை சத்தியஞ்சொன்னேன்
ஐந்துகுலதெய்வ மறிந்துநீபூசியே. (48)

பூசிப்பாய்பஞ்ச கர்த்தாவையுமன்பாய்
நேசிப்பாய்லெட்சயம் நினைவறிவேகுரு
பாசிக்கும்நந்தி பரகுருவேயருள்
ஆசிக்குமந்தத் துரைத்திடுந்தந்தையே. (49)

உரைத்திடுமந்திர மூலமவுனமே
உரைத்திடுமந்திரம் வாசியில்வாலையாம்
உரைத்திடக்கேளு உறுகின்றஅவ்வை
உரைத்திடப்பிரணவப் பிரதிஷ்டையோதிடே. (50)

ஓதறிவாலே உள்ளஞ்செழுத்தையும்
ஆதியுமந்தமு மடிநடுபூரணம்

சோதியில்நாதந் துரியம்பிறந்திடம்
நீதியாயின்பம் நிலைத்திடும்யோகமே. (51)

யோகப்பிராணயம் லெட்சயமூலமும்
பாகத்துடனேபண் பாயுரைத்தேனேயான்
ஆகத்தற்புத மாதியென்றேசொன்னேன்
தேகத்தில்வாசி தெளிந்துபார்சீஷரே. (52)

சீஷரைப்போலே தெளிவார்க்குச்சித்தியாம்
ஆசானுமீச னருள்நந்திவாசியாம்
தேசிமாகுரு செய்யுங்கணேசனும்
வாசமாய்நிஷ்டை வைப்பார்களாதியே. (53)

ஆதியாத்துமா அந்தவரையாச்சு
சோதியாய்நின்ற சுடர்கொளுந்தாமரை
கோதிலாவண்ணங் குலாவுஞ்சரஸ்பதி
ஓதியுணர உறவாகும்பிரமமே. (54)

பிரமமவுனம் பிலக்கும்உகாரத்தால்
உரமாய்வாசியென் றோதுமறவால்
திரமாம்துவாதத்திற் செழுஞ்சுடரொன்றாகும்
நிறமாமதுஞானம் நேர்ந்துபார்நூல்முற்றே. (55)

மச்சமுனி தீட்சை ஞானம் ருரு,
முற்றிற்று.

மதுரை மேலமாசிவீதி, இராமநாதபிள்ளையவர்கள் குமாரர் ☞ அரியநாயகம் பிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

ஐந்தாவது:

மச்சமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# ஞான தண்டகம் ௧௭.

வெண்பா.

குருநந்தி ஆசானைக் கும்பிட்டேன் ஞாலந்
திருமூலர் நாமத்தைச் சேவித்—தருமுன்னோன்
போககரு விட்டிமையைப் பூசியருச் சித்தேற்றக்
காகநிறத் தங்கிபதங் காப்பு. (1)

வேறு.

காப்பாகிய வட்டவி நாயகனைப்
பாப்பானடி மூலமே பட்சணியாம்
ஆப்பாகிய தண்டக நூலதுவாம்
பூப்பார்கரு வாகுமெ னப்புகலே. (2)

புகல்மந்திர தந்திர பூரணியைச்
செகமுன்புரி பூசைதெ ளிந்தநலம்
மகமென்பது தீட்சை மகாரகுரு
அகமெங்கும் நிறைந்தது ஆரறிவீர். (3)

வீரவிரி சித்தரி மைபகரத்
தாரமுறு சக்கரத் தாவழலை
பூரமிடும் பச்சணி யாம்பாவை
யோரமுறை யார்புடமிட் டெடுவாய். (4)

எடுவாதுரு சிட்டொரு நாதமயில்
விடுவாகடு அக்கர பத்தரியை
நடுவார்துளி விட்டரை மாவதனம்
இடுவார்குட முட்டையி லேகருவை. (5)

கருவாகிய தாரணை மாகடலே
யுருவாகிவை வேசணி யூதியுரு
வருவார்கடை வாசலை மாசணிவார்
பெருவாருதி பெற்றம றைப்பிதுவே. (6)

இதுவேநிற மஞ்ச ளெனக்கருவே
புதுசாகிய வெள்ளைப் பூவிடுநீ
மதுவாசனை மூடிய மத்தகமேவர்
அதுசாதனை யத்த முளிக்கவொணா. (7)

ஒணர்வோதிய மாமவு னப்பொருளைக்
குணகிழ்திசை யிட்டு நறுக்கிடுவார்
பிணமாகுவர் பட்சணி யிற்பிழையார்
கணநாரத நாதரி சிக்கருவே. (8)

ரிசிமூலிகை யோடித லைக்குலையில்
பொசிவாசிய மச்ச முனிச்செடியே
வசியாவென வைப்பது வட்சரமே
பிசியாவது பட்டது நிற்செயமே. (9)

செயமோகினி சக்கர வட்டெழுதோ
மயசாவலை யாடிய பிண்டநெயில்
அயனார்சர சோதிம டக்கொடிவேர்
பயமோசெய பருத்தி விரைக்கடுகே. (10)

கடுவாய்புலி நிற்கு மடக்கொடிவேர்
தொடுவாய்நடு கத்தி யகத்தினிவை
படுவாயரி மாயரி சித்தரியை
இடுவாய்வட மூலையி லக்கினியில். (11)

வேறு.

அக்கரிதார மரத்தைதருசு
புக்கரிவிந்து புகட்டவேபூர
வக்கணையூடு மரத்தையொடிக்கப்
பொக்கணந்தூக்கிப் புறப்படுவீரே. (12)

படுவார்தண்டு படுந்தயிலத்திற்
கடுவாயிரலைக் காக்கணமூலி

சூடுவாரிம்மினிக் குக்குடநத்தை
சடுவார்குடுகுடு தண்ணிவெளமே. (13)

வெளங்கருவண்ட மீரவிரகன்
குளங்கரைவண்டு கொல்லிவேர்முட்டை
உளங்கரைகண்டை யூமைகையுப்பு
யலிங்கரைப்பூவே யாதியனுதி. (14)

நாதமாஞ்சத்தி சாரணைப்பிள்ளையை
நாதமாஞ்சுண்ணம் நவின்றவென்நந்தி
நாதமாந்தண்டக்க மூலக்கருவெளி
நாதமேசெப்ப நாமறிந்தோமே. (15)

அறிந்தநடனத்தை யடுத்தவழலைப்பூ
பிரிந்தவகைநந்தி பேச்சென்றேன் வித்தை
செரிந்தநஞ்சென்பர் செகசாலக்கூத்து
மரிந்ததிரிதண்டு வேர்வாங்குமசியே. (16)

மசிவட்டகுண்டலி நாற்கோணமிட்டு
நசியிட்டவீட்டை நகுலன்பேர்சொல்லி
ரிசியெட்டுமூலம் ரேசகபூரகம்,
கசியிட்டகும்பகந் தண்டக்கமாமே. (17)

அக்கமும்பக்கமும் மூலிரெண்டாகும்
சொர்க்கமும்நரகமுஞ் சொன்னாலேதோணும்
அக்கமேகார ரெட்டிமூலியதாம்
பக்கமேபஞ்சமி தக்காளிவேரே. (18)

வேரதேகாத்தொட்டி ஆணிதேயாகும்
பேரதேதக்காளி பெண்ணடிமூலம்
ஊரதேநின்று லோடாதுமாத்துப்
பாரதேகானம் படர்ந்தகாத்தொட்டி. (19)

தொட்டியப்பூடு துடியானசல்லியம்
கெட்டியாய்ப்பாடு கிளிப்பிள்ளைபாட்டை
சொட்டிவிப்பார்க்குச் சுரோணிதஞ்சோறும்
குட்டிமைக்காட்டிக் குடிப்பானங்குறளியே. (20)

குறத்திக்கொருபிள்ளை யென்போனப்பா
பரத்திகைப்பிள்ளை படியாளுஞ்சோதி
உரத்துடன்பேசும் உடையன்சுக்குப்பலம்
விரைத்தறுப்பார்க்கு வெள்ளாமைகையிலே. (21)

கையிலேபோட மையொன்று காட்டுறேன்
பொய்யல்லமஞ்சனும் பூப்பிள்ளையெண்ணெநெய்
தையலைக்கூட்டித் தளுகின்றரண்டையும்
வையிறேன்கருவூரார் மண்டையிற்போட்டிடே. (22)

போட்டிடுபுல்லா மணக்குந்தயிலமுந்
தாட்டிகன்சொன்னபேய்ப் பீர்க்கந்தயிலமுங்
கூட்டியிதெல்லாங் குளியானைமின்மினி
சூட்டிக்கருக்கிமைச் சுண்டவைகண்களே. (23)

வேறு.

கண்கறுத்தபிள்ளை பெண்சிகப்பிவெள்ளை
மண்கடித்தசுள்ளை விண்பதித்ததுள்ளை (24)

துள்ளிமரிரத்தம் விள்ளிறதுமுப்பூ
பிள்ளைகள்செலத்தில் வள்ளிசூயரைப்பே. (25)

அரைத்ததைவளித்து அடைத்திடொருசெப்பு
நரைத்தவிரைசுட்டு நறுக்கெனநுணுக்கே. (26)

நுணுக்கியேபொடித்து துணிச்சீலைவடித்து
திணிக்கவேபடப்பை மணிக்கடுகெடுப்ப. (27)

வேறு.

எடுகுறுமுனிதிரு வருளியகருவைப்
படுதிருமூலரென் நந்திபடைத்தார்
வெடுவெடுவருகரு வூர்முனிபோகர்
அடவுடனேகொங் கணருமுரைத்தார். (28)

உரைத்ததுபட்சணி கொங்கணர்சொல்லி
மரைத்தகத்தியர் பட்சணிபேசுங்
கரைத்ததுமூல ரருட்டிருநீலம்
பரைத்ததுபாசை தறப்பதுவாமே. (29)

வாமனமச்ச னுரைத்ததுதோணும்
ராமனைவைத்த செடிக்கனிமூலி
பூமணிமுப்பூ வுரைத்தநிகண்டு
காமனைவெத்தி படைத்ததுபாரே. (30)

பாரிதுநூறு நிகண்டொருதீட்சை
நூறதுபச்சணி நூறதுவெண்பா
தேரொருநூல்பெரு நூலதுவென்னூல்
சீரொருசேகர மாகவேதேடு. (31)

தேடிடநூல்வரு பாசைகள்தீரும்
பாடிடுபூமிசை வாழுவைபாரு
நாடிடுபூரணி ஞானமெய்வாலை
யாடிடவேதீ யடவதுகேளே. (32)

கேளரியிட்டொரு சித்தரிமீதே
கோளரியையை யிசைத்திடுகூட
வேளரிநாம மிதோகிலிசவ்வைச்
சூளறீங்காரம் ஓங்காரஞ் சூடியே. (33)

சூடியஅட்சரம் பூரணிவீட்டை
நாடியேமூலே சுயந்திடுமூணு
சாடியேசொர்ன மதுதகடாமே
பாடியபட்சணி பூசைகள்பாரே. (34)

பூசைபரிமள வாடைசுகாந்தம்
பேசியதேவி யுதிரமேயுண்ணும்
நாசிநடுமுனை ஈசனுமங்கே
கூசிடுகாமலே கூடநின்றுடுமே. (35)

ஆடவேதண்டக்க மூலிகைவேரைப்
பாடவேசொல்லிப் படித்துவைப்பார்கள்
கூடவேபச்சணி மாதுபேர்வாலை
தேடவோங்கென்று செப்பவுமாமே. (36)

மாசிவகார யகாரநகாரம்
தேசிகாவென்று சிகாரமிருந்ததை

வாசிவாகாசி வருங்குதிரைக்கே
பூசிவாபட்சணி பூடிதுவாமே. (37)

பூட்டியதண்டக்க காமமோபாசை
ஆட்டியபட்சணி ஆரறிவார்சொல்
காட்டியமச்ச முனிதருதீட்சை
வீட்டிமையாக விளம்பினநூலே. (38)

நூல்வெளியென்று ரிஷிக்குலமானூர்
கால்வழிகண்டு கடைப்பிள்ளையாகிப்
பால்பழமென்று அருந்தியபாடல்
ஞாலநிகண்டு படித்ததுநாமே. (39)

வேறு.

நாம்படித்து வாசித்தோம் சித்தர்மெய்த்தார்
நம்முடைய குரலாகப் பரிட்சைகண்டு
தேம்பெடுத்து விழிதுயின்றூர் செவிக்கேஇன்பம்
சேர்த்திடவே ஞானதிட்டி நந்தியாசான்
தாம்படித்து முன்னெனக்குக் கொடுத்ததாலே
சகலசித்து மென்குருதண் டக்கம்பேசும்
வீம்படித்தார்க் கின்னூலை யீயவேண்டாம்
வெகுமூலர் திருநீல கண்டந்தானே. (40)

கலித்துறை.

தானேஉரியிட்டுமுக்கோண வாலையின்சக்கரமும்
தானேவெளியிட்டுச்சூலத்தைப் பொத்திச்சரியிடவே
தானேவந்தாடும்யெமபாதை கால்வைத்தசங்கரனூர்
தானேகுறுமுனிதண்டக்க நூறுமென்தண்டக்கமே. (41)

வேறு

அக்கணமூல மரியாவதாரு
மக்கணமாக வளிகெடாவாதி
சிக்கெனவாலை சிவரூபிசேரில்
இக்கெழுவேது நீங்காரமூணு (42)

ஊணுவதொன்று சுழியொன்றுஊமை
தோணுவதொன்று சுழியோகதவிடை

பேணுவதொன்று பிசகோசொல்பிங்கலை
ஆணுயிர்பானு கிரிசோமனுவதே. (43)

ஆவதுநாசி நடுவாயெழுந்தது
சாவதுமில்லை பிறப்பதுவுமில்லை
தேய்வதுமில்லை வளர்வதுமில்லை
மூவருமொன்ருய் முனைசுழியூமையே. (44)

ஊமையுருவே யலியுருசிவமஞ்
சாமியுருவே சதாசிவதாரணை
நேமியுருவே நெடுமாலிருந்திடம்
ஆமையுருவே அறிவிந்துநாதமே. (45)

வேறு.

நாதவிந்துவே ஞாலமைதேடிடு
போதமென்பதே பூரணவாலையை
பூதமைந்ததே மேவிடுபூரணம்
வாதமென்பதே பூரகவாதமே. (46)

பூரகவாசி புறப்படுரேசகம்
பாரகவீடு படைப்பதுகும்பகம்
ஏரகமோன மிருப்பதுகண்டவ
சீரகவாமி பொசிப்பதுதீதமே. (47)

வேறு.

பொசிபூவையாரி விடுபூதகண்மாலை
ரிசிமூனிவிடுரே சகமெய்ஞ்ஞானி
வசிசோமனுவிடு மால்கணவிகூடச்
சசியாறுபூவெளி சமைந்தரதமீதே. (48)

கலிவிருத்தம்.

ரதபூவுமை கெந்தி ரசங்கருகு
பதமாகிய சூதப ரஞ்சருகை
விதநேரிடை தானிடு மிஞ்சிவரில்
கதிபூரணி விந்து குடுங்கடுகே. (49)

கடுகோரிடை பண்டித னங்கிடவே
நெடுவேதை தரும்பரி செம்பினிலே

இடுவீரனே மண்டி யெழுந்துலகம்
சுடுமேழரை யென்பது வுந்துருசே. (50)

துரிசோரிடை கெந்தி ரசஞ்சருகு
அரிதாரமு மிந்துட னஞ்சையுமே
பொரிகார முருந்தவ செங்கனலில்
விரிவாயுல கங்கள் பெருங்குருவே. (51)

வேறு.

குருவானை யிவ்வகை கூறுதே பாரில்
திருவானை ஞானி தேறுமோ வாதங்
கருவான மூலி கைகண்டமாகனி
உருவாக வென்று லொடுங்கிவை யுள்ளதே. (52)

உள்ளது வாத முரையா ரொருவரும்
கள்ளமில் லாமற் காட்டினேன் தண்டக்கம்
பிள்ளைகட்காகப் பேசினேன் பாரு
எள்ளலாய் விட்டா லியங்கா துருளையே. (53)

வேறு.

உருளிகரு மூலியொரு வட்டாடமிட்டு
இருளிடரி லஞ்சுடரை யெடுத்தாதரித்து
மருளிருள கத்துயர மிறக்கடைகடந்தால்
லுருளிகரு வோடிட கூடைத்தொடிதரும்பால். (54)

பால்பருகு முக்காலப் பலத்திரிதிரித்து
ஞாலவழி நூல்கரு நக்கெனயெடுத்து
மூலகுரு நந்திமொழி தீபமதியத்த
காலனெதி ரில்லையொருக் காலும்வெளிமீதே. (55)

வேறு.

வெளிகடந்த நந்திதிரு நீலகண்டர்
விளம்பினர் திருமூலர் வெளியாய்த்தானே
பழிதொடர்ந்து கொல்லுமடா யென்றுசொல்லிப்
படித்திட்டா ரகத்தியர்பட் சணிநன்றாக
நெளிதமென்று நினையாதே தண்டகத்தை
நேமிசிவ காமிபதம் நினைந்துபோத்தித்
தெளியவென்றூற் பதினெண்பேர் தண்டக்கத்தைச்
சேகரமா யொன்றுபண்ணித் தெரிந்துபாரே. (56)

பாரென்று முப்பூவை முடிக்கவேணும்
பருவமின்னாள் காமப்பால் பருகவேணும்
சீரென்ற மாதுகுறி யறியவேணும்
சிவந்தபதங் கண்டெடுக்கத் திரமும்வேணும்
பேரென்று திருநாமம் பொதிகைநாதன்
பேரிட்ட பெதும்பையல்லோ வாலைவாலை
காரென்று அவள்பதத்தைப் பதினெண்பேரும்
காசலையாய்ப் பூசித்துக் கதிபெற்றாரோ. (57)

பெற்றபிள்ளை கூற்றுவனென் றுரைத்துமாண்பர்
பேசிடுவார் பிள்ளைக்குப் பெண்ணுங்கேட்பார்
உற்றகுண மொன்றாகி லுலகத்தோர்கள்
ஒருமொழியாய் நில்லாரோ சிவன்தேடாரோ
பற்றமில்லா திருந்ததினால் நாங்களெல்லாம்
பாடுபட்டோம் பலன்கண்டோங் குருவுங்கண்டோம்
குற்றமொன்றும் வாராது யெந்தன்பாடல்
குறுமுனிவர் பாடலுடன் கூட்டிப்பாரே. (58)

பாத்திடவே தண்டக்கஞ் சாலந்தோணும்
பதினொரு யிரத்துயிரு நூறுசாலம்
காத்திடவே வேணியுகங் கயிலாசத்தைக்
காத்திருந்தா ரதின்பிறகு யீசன்கண்டு
பாத்திடமோ நீபிள்ளாய் கருவுக்கென்று
பரமகுரு அகத்தியனைப் பார்த்துக்கேட்கத்
தோத்திரமே பண்ணியடி மேலேவீழ்ந்து
துதித்திடவே கனிவுவந்து சொன்னார்தானே. (59)

தானேது பின்னுந்தா னீசன்சொல்வார்
சண்முகமோ யென்குருவோ யெனக்குப்பிள்ளை
தேனான சிவபீச வர்க்கஞ்சொந்த
சிவசுப்பிர மணியருட சீஷன்நீயே
ஆனதினாற் கும்பேச ரீன்றபிள்ளாய்
அகத்தீசா வுனக்காக அளித்தேன்ஞாலம்
பானமுதந் தேவர்திரு மாலுங்கூடப்
பார்க்கடலைக் கடைந்தவிதம் பாவித்தோமே. (60)

பாலித்தோ மெந்தனுட னுமைமீதாணை
பரமாணை சிவமாணை பாருள்ளோர்க்கு
ஞாலத்திற் பொருள்திறந்து நவிலவேண்டாம்
நற்பொருளின் பச்சணிநா மஞ்சொல்லாதே
கேலிக்கு வுலகமெல்லாஞ் செந்தீபத்தும்
கீழுலகும் மேலுலகும் பாழாம்பாழாம்
போலிப்பாய் பாடாமல் மார்க்கமாகப்
பூட்டிப்பா டென்றபடி போதித்தாரே. (61)

வேறு.

போதித்தார் கும்ப முனிபூ ரணத்தைச்
சாதித்தா ரிந்தத் தரணியுள் ளோர்க்கு
ஆதித்தர் கூடி யலர்ந்தபது மம்போல்
சோதித்த பூரணந் துவாதசந் தானே. (62)

துவாதசஞ் சத்தமி தூலமுஞ் சூட்சமும்
பவாதசங் கூடிப் பவுரணை நாளிலே
ஓவாதிசந் தந்த வுமைவிந்து நாதம்
சிவாதிசந் தீண்டி செத்திறந் தாரே. (63)

இறந்தது சிப்பி யெலுஞ்சரு கூடே
பிறந்தது பூரம் பிரட்டியப் பாவிடு
துறந்தது கண்வழி சூட்சமாம் நம்பொருள்
மறந்தது தேடி வசப்படு வீரே. (64)

வசக்கிய காளை தருமச்சன் பாட
விசக்கியக் கொண்டு இரதஞ் சார்ப்படி
எசக்கிய தும்மி யிலைச்சா றொருதுளி
நசிக்கி நரிக்கி நகட்டிடு நாதமே. (65)

நாதந் துருசு நடனக் குருவிதை
வாத மடத்தி லடைப்பர்சிக் கென்னப்
பூதம் பொறிவழிப் பூட்டையும் போட்டுப்
பாதை பிடிக்கக் கையான் பவிதமே. (66)

பவிதங் கடகை தருமாத் திரைப்பால்
புவிதம்பத் தென்பார் பூரண சின்மயம்

கலிதுங் கிடக்கரை காணு மடையர்
எலிதம் பசிக்கு விருந்திடும் பூனையே. (67)

பூனை மணிக்கற் பதிப்பார் புவியில்
ஞான மளித்து நடப்பார்மெய் யாமென
தான மளிய நடந்தாலும் பாரில்
மான மளிய வரும்ரச வாதமே. (68)

வாதஞ் சிவக்க வகைபரஞ் சோதி
நாதஞ் சிவக்க நாடுரசவாதம்
பூதஞ் சிவக்கப் பொருந்துமெய்ஞ் ஞானம்
பாதஞ் சிவக்கப் படிமீதிற் பலாபலம். (69)

பலம்பெருகு மஞ்சட் பாவைச மூலம்
நிலம்பரு கச்சக் கரம்நேரே நிறுத்திப்
பிலன்குறை யாது பிசாசுக் கிரையிடு
புலம்புர வேளை யடக்கிவை பூமியில். (70)

பூமி ரெம்பி மாணம் புரிய
வாமி படக்கொண்டு மாரணஞ் செய்வாய்
நேமி பொற்கிரி நெத்தியிற் றீயிடு
தாமித மோபார் சணக்தரு காரே. (71)

வேறு.

காரையிலேமுள்ளைப் பூரையைதுள்ளப்
பேரையேகிள்ள ஆரையேகொள்ள. (72)

கொள்ளவேவைபிண்டம் விள்ளவேகைகண்டம்
துள்ளவேமெய்யண்டம் தள்ளவோபொய்விண்டோம். (73)

விண்டதுசத்தி கண்டதுபுத்தி
தொண்டதுமுத்தி பண்டதுசித்தி. (74)

சித்தசரூபி மத்தகமீரி
வித்தையிமேலரி வைத்ததுபாரே. (75)

பாரனல்வாயு மேரதுபூவி
நீரதுதாவி யூரதுலாகி. (76)

ஆகியமுப்பு யோகிகள்வைப்பு-
மோகியஅப்பு யேகியிருக்கும். (77)

இருக்குமருந்தை உறுக்குஞ்சந்தைச்
சறுக்குதிந்து வெறுக்குவனென்றே. (78)

என்றதுநீறு வென்றதுபாறு
குன்றதுமேறு சென்றிதுவேறி. (79)

வேறு.

தீயிட்ட கூற்றேது துறையைப்பாரு
திரும்பவும்போய்ப் பிறந்திறந்த செயலைப்பாரு
நோயிட்ட கூடிருந்த பாண்டம்பாரு
நேரான பின்பிருந்த மணிநூற்பாரு
தாயிட்ட அன்னமுண்ட வயத்தைப்பாரு
தப்பவுமோ ரகத்திலுண்ட விருந்தைப்பாரு
காயிட்ட ரசங்கலந்த கனியைப்பாரு
கன்னிதந்த ரசவாதக் கருவைப்பாரே. (80)

கருவென்ன தண்டக்கஞ் சாத்தக்கேளு
கார்மேகம் பொழிந்ததுபோற் சாடும்பாரு
குருவென்ன முப்பூவை நாதமென்று
கூடவுமே யிருகருவுங் கோழிமுட்டை
அருவென்ன அஞ்சுகருப் பஞ்சபூதம்
அடையாளம் பட்சணிபோ லாகுஞ்சீவன்
சருகென்ன சென்மமிது சாதியாச்சு
தண்டக்க மென்றதுவு மிதுவென்பாரே. (81)

இதுவென்றும் அதுவென்றும் வேறேயென்றும்
இந்திரமா ஞாலமென்றும் பாடலென்றும்
பொதுவென்றும் தனதென்றும் பொன்பொன்னென்றும்
பூவென்றும் பாவென்றும் பூடொன்றென்றும்
மதுவென்றும் சலமென்றும் பானமென்றும்
மகத்தான சத்தியென்றும் சிவமேயென்றும்
முதுகென்றும் நெஞ்சென்றும் முன்பின்னென்றும்
மூதாக்கள் நாதாக்கள் மூட்டினாரே. (82)

மூட்டினு ரண்டாண்ட பிண்டமென்றும்
    முனியுரைத்தார் ரிசியுரைத்தார் நூல்பாரென்றும்
காட்டினுர் மூலகுரு நந்தியென்று
    கைக்கடங்காப் பட்சணியைக் காணுரென்று
பூட்டினு ரண்டமல்லோ கோழிமுட்டை
    புத்திகெட்ட ஞானிகளே புகலக்கேளு
ஆட்டினுர் சிதம்பரத்தைத்தாலமீதில்
    அப்பவல்லோ குழைதிருடி யாடினுரே (83)

நாரதரும் முனிவர்களும் மாலும்வேத
    நான்முகனும் வாசவனும் நந்திதானும்
பாரதமாய் விளித்திருந்து மதாதியென்றும்
    பதனமென்ற அருவியென்ற பட்சணியே
வீரதமே காணுர்க ளீசனப்போ
    விமலியுமைக் குரைத்ததினுற் ரூயுமப்போ
சேரவெனக் குரைத்தநந்தி ஆசான்சொன்ன
    செம்மையாய்ப் பார்மீதிற் செப்பினேனே. (84)

செப்பரிய அரியெழுத்திற் பிறந்ததிந்தத்
    தேகமப்பா அயனெழுத்திற் பிறந்தார்சித்தர்
அப்பவல்லோ சிவனெழுத்து ஆகர்சத்தில்
    அண்டபிண்ட வழலையுரு வானமூலம்
தப்பவல்லோ சொன்னுர்கள் சார்ந்தவேளை
    சந்திரனே சூரியனே புரவிவேகம்
இப்பவல்லோ யானறிந்தோம் நந்திஆசான்
    எடுத்துரைக்க அட்சரத்தை யிகழ்ந்திட்டேனே. (85)

இகழ்ந்திட்டேன் மகாரமல்லோ பிறந்திறந்து
    எழுந்துதடா நகாரமது சீவனுச்சு
புகழ்ந்திட்ட உகாரமோடு இகாரஞ்சேரிற்
    பூரணிம ணேமணித்தாய் புரந்தவீடு
மகிழ்ந்திட்டேன் அகாரள கராங்கூடி
    வந்திட்டால் ஞானவரை சிவமுமாச்சு
அகந்திட்ட ஓங்காரம் காலுபேரும்
    அடைந்திருந்த கூடாச்சு ஆயுளாச்சே. (86)

ஆச்சப்பா மேருமுதல் ஞாலமாகி
அடங்கிநின்ற உயிரெழுத்து மூலஞ்சொன்னேன்
பேச்சப்பா வாய்ப்பேச்சாய்ப் பேசிடாதே
பேரின்ப வாலையுரு உயிரதாச்சு
மூச்சப்பா பிறந்திடமு மதுவேயாச்சு
மூலமணி பூரகமும் பதிகளாறும்
வாச்சப்பா போச்சுனக்கு மவுனபூசை
மச்சமுனி புண்ணியத்தால் மகிழ்ந்துபூணே. (87)

பூணுவது ஆயிரத்தின் மலரைப்பூணு
பொன்னிறத்தி லிருந்தவளைப் பூணுபூணு
தோணுவது லட்சயத்தைத் தோணுதோணு
தூலசூட் சாதிமுனை சுழினைதோணுங்
காணுவது சதாசிவத்தைக் காணுகாணு
காலாங்கி நந்திகுரு ஆசான்வீடு
பேணுவது அவரையல்லோ பேணவேணும்
பிறகல்லோ மறுசமயம் பேசலாமே. (88)

பேசியதே ரகசியமும் புவனைதானும்
பேணியல்லோ நந்திதிரு மூலர்சொன்னர்
ஆசியவா யெடுத்துரைத்த அரையும்வீடும்
அதிற்பதித்த லக்ஷமிரு தலமும்பாரு
தோசிகட்குச் சொல்லாதே துறையின்ரூபம்
துலக்கிவைத்தால் மகாகொடுமை துடுக்காய்ச்செய்வார்
காசினியி லவனைவிட்டு யோகியான
கடைப்பிள்ளைக் கின்னூலைக் கருதுவாரே. (89)

வேறு

கருதிய சக்கரம் நானுங் கரையிற்
பிருதிவி யப்பொடு தீயாறு வின்படி
அருதியாங் காற்று மாகாசமாம்வெளி
உருதி அகார இகார உகாரமே. (90)

உகார மெகார மோங்கார மைந்திடு
சிகார வகார நகார மகாரமாய்
யகார மைந்தோ டொன்பது மொன்றும்
பகார மயமாய்ப் பதிப்பா யரையே. (91)

அறைபதி னாறி லைம்பதும் பத்தும்
உறைபதி னாறு மொன்பது மொன்றும்
முறைமுறை நாலும் மூனுமவ் வஞ்சும்
மறைவென்ன சொன்னேன் மாரணமாமே. (92)

ஆமே அறுபது மல்லவே யெட்டுப்
பூமே லொன்பது புகலுமிருபது
தாமே பதினெட்டுச் சகலதுந் தம்பனம்
ஆமே யென்னந்தி யருளிய நூலே. (93)

பேதன மாறறை பிரிச மிருபது
சாதன மென்பது தாக்கிடு யெட்டு
வாதனை யஞ்சு வரைந்துவை வேஷனம்
சீதன மான வசியத்தைச் செப்பே. (94)

செப்பாய் முப்பது சிரிய நாற்பது
அப்பிய ஐம்பது ஆரியமுந்நூறு
ஒப்பிய நாலு ஊனுவை ஐயுடன்
தப்பிலா வசியந் தானும் பாரே. (95)

பாருமே வுட்சா டனத்தைத்தொண் ணூறு
சேருமே யெண்பது தீயில்வை முப்பது
மாறிய கிலியை மறுத்திடு சட்டியிற்
கூரே அவிக்கி வெள்ளாவி கூறே. (96)

கூறிய ஸ்ரீயும் பதினெட்டுஞ் செத்திடும்
மாறிய ரீயும் இருபதும் வைத்திடு
ஆரிய சவ்வு மறுபது மைம்பதும்
பேரிடு கிருஷ்ணம் பிரட்டிய மனைக்கே. (97)

பிரட்டிய மோகனம் பிறனா யஞ்சார்
துரட்டிய பத்துடன் செல்லுவா யெட்டுக்
குரட்டினிற் காளி கொட்டத்தில் மோகினி
முரட்டுத்தண் டக்க முனிபாடல் முற்றே. (98)

மச்சமுனி ஞான தண்டகம் கூஎ,
முற்றிற்று.

மதுரைவடக்குமாசிவீதி ந. ரா. ம. கணபதியாபிள்ளையவர்களிட மிருந்துவாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம்அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

ஆ ரூ வ து:

மச்சமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# ஞான தீட்சாவிதி ௱.

காப்பு வெண்பா.

மூலத் தெழுந்திடு முக்கோண சக்கரத்துட்
காலச்சி காரக் கடவுளே—வாலை
குணபதியே நந்தியுறுங் குண்டலிக்கு ளாசான்
கணபதியே தீட்சைவிதி காப்பு. *

வே று.

ஆதியும் அந்தமு மில்லாத பூரணம்
சோதி யடிமுடி தோய்ந்த நடுவணை
நீதியிற் சத்தம் நிலைத்தநி லைவரும்
ஓதி யுணர்வா ருறுகின்ற காலையே. (1)

காலிற் சிவமே கனத்த மயேசுரன்
மூலத்தில் நின்ற முழக்க மறிந்திலார்
கோலம் படைத்தவள் குண்டலி சத்தியாம்
பால்வைத்த அண்ணல் பரமா னவனே. (2)

பரமான யோகம் பதத்தைப் பணிய
அரமனைக் குள்ளாம் அகாரம் உகாரம்
திரமாய் மகாரஞ் செப்பிடில் வாலையாம்
தரமாம் வகார சிகார மிருந்ததே. (3)

இருந்த சிகாரத் தெழுந்த களிமூன்
அருந்தவ மப்பா அறுகோணத் துள்ளே
பொருந்திடும் வல்லபை குண்டலி சத்தியை
திருந்தும் பரையே தெளிந்தறி வீரே. (4)

B 5

அறிவா லறியவே அம்மை நடுவணை
திரிகோண மேல்முனை சென்றிடு மந்திரம்
பிரியா திடையே திரிகோணம் ரெண்டினில்
முறியாத கந்தன் மேல்கீழு முக்கியமே. (5)

கீழ்வாய்முக் கோணம் கிடப்பதும் ஆரந்தான்
வாழ்வான பிங்கலை மேலாங் கணபதி
ஆழ்வா யதன்கீழ் சித்திர புத்திரன்
சூழும் பிரணவம் ஓங்காரத் தென்னே. (6)

ஓங்கார மையம் ஒளிகொண்ட குண்டலி
ஆங்கார மார்க்கு மவனென்ற தட்சரம்
ரீங்காரத் துள்ளே யிருக்கின்ற வல்லபை
ஊங்காரக் கூத்தர்க்கு உறவிது காணே. (7)

காணுயங் கென்ற மூலங் கணபதி
நாணுய சங்கென்ற நலமான சண்முகன்
ஊணுயே காட்சரம் ஒளிசித்ர புத்திரன்
வாணுயவட் கும்வகாரசி காரமே. (8)

சிகாரம் வகாரம் சிவநந்தி காரணம்
நகார மதன்மேல் நாற்கோண வீட்டுளே
இகார மிருந்த இயல்வது கண்டபின்
சுகாரத் துரியஞ் சொல்லும் பிரமமே. (9)

பிரமன் சரஸ்வதி பேசு மனத்தால்
துரியம் பிறையிற் சூழ்ந்திதழ் பத்து
வரமா மகாரம் வளங்கும் உகாரம்
தரமான சீதரன் தன்னுட தேவியே. (10)

தேவியென் தாயாள் சீதைமா லட்சுமி
ஆவிக்கனு போகி அந்தர மாரிணி
பாவித்துப் பார்க்கப் பாவங்க ளோடிடும்
பாவிக்கு மொன்றும் பலியாது கண்டிடே. (11)

கண்டேன் சுழுத்தி அனுகதமுக் கோணம்
விண்டேன் சிகாரம் றீங்கார மிட்டு

உண்டா ருருத்திரன் உற்றிடும் பார்வதி
பண்டுட னேதப் படையான் பிறப்பே. (12)

பிறக்குமாஞ் சித்தர்பால் பேரான சோம்புனல்
உறக்கொண்ட கோப மொடுநெடு மூச்சு
மறக்க வறிதா மயேசுர மூலத்தான்
நிறக்கு மயேஸ்பர நித்தவ காரனே. (13)

வகார சிறீயும் மருவி யிருந்தது
அகாரத்தி லுன்னி அடக்கிட மாட்டார்
விகாரத்தி னலே விழுந்தார் கடையில்
மகாரத்தை யோதி வைத்திடு வீரே. (14)

வைக்கும் பிரணவ லெட்சியை மூட்டி
வைக்கவே வாசி கைவச மாகும்
வைக்கு முறைதான் மவுனத்தை யுன்னு
வைக்குமே சாக்கிரம் மனோமணித் தாயே. (15)

தாயொடு தந்தை சதாசிவன் றன்னொடு
வாயார அட்சரம் வாழ்த்திப் பூசிக்கத்
தோயுமே அவ்வொடு சவ்வு முதித்தபின்
நீயே பிரம நிலைகண்டு வாறே. (16)

வாரும் பராபரம் வாழ்வான தம்முறை
பாருக் கழுவே பற்றின காலையில்
கூறுமாம் அட்சரம் கொடிய பிரணவம்
தேறுமே யோகிக்குச் செப்பவு மாமே. (17)

ஆமே வேதாந்த மதையறி யார்கள்
ஆமே சுழிமுனை வாசியறி யார்கள்
ஆமே மவுனத்தின் அட்சரங் காணார்கள்
ஆமே அட்சரம் ஆர்க்குந்தெரி யாதே. (18)

தெரியாது லட்சயம் தெரிவார்கள் யோகி
பிரியாது நந்தி பெலத்த சுழிமுனை
மரியாது மாரணம் மக்கள் பிறப்பிக்க
விரியாத வாதம் விளங்கிடு வேனே. (19)

விளங்கும் வகாரம் வேறொன்று மூலமாம்
வளங்குமா மொன்று மகத்தான முடியொன்று
களங்க மறவே கண்டிடு மூன்றையும்
பளங்கனிந் தூந்தல் பார்ப்பீர்முப் பூவே (20)

முப்பூ வழலை முடிக்க வறிகிலார்
முப்பூ வழலை முடிக்க வல்லார்க்கு
முப்பூவில் தீட்சை முப்பத்தி ரண்டுடன்
முப்பூவில் சோடசம் மூலங் குருவே. (21)

குருவாகச் சோடசம் கொளுகி முடித்திட
விரிவான நாதம் விந்துடன் கூடி
திருவாம் வழலை செய்திடு வீரேல்
கருவாம் வழலை கைகண்ட வாறே. (22)

கைகண்டார் தீட்சை முப்பத்தி ரண்டும்
கைகண்டார் விந்து நாதத்தின் செய்தியும்
கைகண்டு கொங்கணர் நாற்பது பாடலுள்
கைகண்டு கைமுறை கட்டுரைத் தாரே. (23)

கட்டுடன் சொன்னார் கைமுறை தப்பாமல்
சட்டை முனியார் தருவித்தார் சூத்திரம்
திட்டமுட னெண்ணெய் தீர்க்கங் கழற்றினார்
விட்டது சொன்னேன் வினையான பானுக்கே. (24)

வினையான பாசம் விடுவிக்குங் காலம்
உனைநந்தி வந்து உபதேசஞ் செய்வார்
நினைவாற் பிழைக்க நேசமுரைத் திட்டேன்
மனதாரத் தீட்சையும் வைத்தேனென் பாடலே. (25)

என்பாடல் தீட்சைக் கிதுதா னொருநூறு
என்பாடல் சூத்திரம் எண்பதுஞ் சொன்னேன்
என்பாடல் பாரீர் நிகண்டொரு நூறு
என்பாடல் பார்த்தோர்க் கெய்திடும் ஞானமே. (26)

ஞானந்தா னாவது நாலாம் பதவெளி
ஞானந்தா னாவது நந்தி யிருப்பிடம்

ஞானந்தா னுவது நல்வாசி யோகத்தால்
ஞானந்தா னுவது நடுக்கத்தி யோடாதே. (27)

ஓடாது வாசி உறவாம் பராபரம்
நாடாத பூரணம் நாடுஞ் சிவகளை
தேடாது ஆசை பாசத்துக் குள்ளாய்
வாடாது சிந்தை மவுனத்தை யுண்ணவே. (28)

மவுனந்தா னுவது வாலையின் தீட்சையாம்
மவுனந்தா னுவது வாசிக்கு மூலமாம்
மவுனந்தா னுவது வாழுஞ் சமாதிக்கும்
மவுனந்தா னுவது மந்திர மூலமே. (29)

மந்திர தீட்சை முப்பத்தி ரண்டுக்குள்
மந்திரத் தாலே வளங்கு மவுனந்தான்
மந்திர பீஜாட் சரங்களை யோதிடில்
மந்திரஞ் சித்திக்கும் வாசியு மாவரே. (30)

வாசியைப் பார்ப்பது வாழ்ந்திடும் யோகிக்கு
தேசி யவனும் சிவனும் அவன்றானும்
பூசிநீ நாற்பத்து முக்கோணச் சத்தியை
காசிக்குப் போவதேன் கைகாணுஞ் சித்தரே. (31)

சித்தர்க்குச் சொன்னேன் தெவிட்டா தொருநூறு
சுத்தமாந் தீட்சை தொகுப்பையறிந் தோர்க்குச்
சத்தியஞ் சொன்னேன் சடாதாரங் கைவசம்
முத்தியு மிதிலே மூதறி வோர்க்கே. (32)

மூதறி வென்பது முப்பாழுந் தாண்டினுல்
சாதக மாவது சரிகைமுதல் நாலும்
வேதாந்த மாவது விளங்கிய காயத்தால்
வாதந்தா னுவது வழலைக்குள் ளாவதே. (33)

ஆவது சித்தம் அழியாது காயந்தான்
ஆவது ஞானத்துக் காதியாம் யோகந்தான்
ஆவது யோகத்துக் காதியாம் வாசிதான்
ஆவது வாசிக் குடிமூல மாதியே. (34)

ஆதியாம் பொன்னடி யாரு மறிந்திலார்
சோதியின் நாத முதிக்குங் குருவென்ன
காதினில் நஞ்சைக் கலக்க வறிகிலார்
வாதிகள் கூடி மலைப்பார்கள் கோடியே. (35)

கோடி துறைமுகம் கோடான கோடியாம்
ஆடியே பார்க்க ஆராலாஞ் சித்தர்க்காம்
பாடிப் படித்துத் திரிகின்ற பத்தர்க்குக்
கூடி முடிப்பதற் கொன்றுங்கூ டில்லையே. (36)

கூறுடன் சொல்லாற் குறித்த வழலையை
வீறுடன் கைமுறை தப்பிவிடு வார்கள்
பேறுக ளேது பிறந்தே யிருக்கையில்
வாறுடன் தானும் வளர்ந்துசெ னிப்பதே. (37)

செனிக்கின்ற காலம் சென்மாந்தர மாகில்
தனிக்கின்ற தேழு தோற்றத்திற் சாராமல்
தொனிக்கு நரனுகிற் சோதியவ னுகும்
மனத்தின் பிறவி வகுத்துரைத் தேனே. (38)

உரைக்கின்ற அட்ட கன்மத்தின் வாலைகேள்
நிரைக்கும் பிரணவம் பிரணவத் தீாதியும்
தரைக்குள் ளிருப்போர் தானைந்துங் கூட்டியே
விரைக்கவல் லார்க்கட்ட கன்மம் விளங்குமே. (39)

விளங்குங் கிரிகைக்கு மேதினிக் கோர்வாலை
ளங்க மறவே கருவாகச் சொல்லக்கேள்
வளங்குமே ஐயுங் கிலியொடு சவ்வும்
உளம்பெறச் சொன்னேம் ஓதியறி வீரே. (40)

ஓதி யறிந்திடில் யோகிக்குத் தாகமாம்
வாதிகள் செய்யும் தராதர வாதமாம்
சாதியாம் யோக சாதனை வாலைகேள்
போதிக்கி றேன்நான் புகழ்கின்ற சிங்கியே. (41)

சிங்கென்ற தைந்துடன் சேர்மூன்று ரேசகம்
அங்கென்ற தைந்துடன் சேர்மூன்று கும்பகம்

வங்கென்ற தைந்துடன் சேர்மூன்று பூரகம்
மங்கென்ற மூன்றே மவுனம தாமே. (42)

மவுனத்தின் வாலை வசமா யுரைக்கிலார்
தவன சதாசிவன் தானுமுரை பேசார்
கெவனத்தின் சித்தர் கெட்டாலும் பேசார்
தவபோ தனர்களுந் தானுரை யார்களே. (43)

உரையார் குளிகை உறவாய்க் கொடுத்தாலும்
உரையார் தனங்களைக் கட்டிக் கொடுத்தாலும்
உரையார்கள் பேதிக்க உண்மைகள் சொன்னாலும்
உரையார் பெரியோர்க ளுண்மையிதென் பாரே. (44)

உண்மையாய்ச் சொல்கிறேம் உற்றமவு னத்தை
தண்மையாய்ச் சொன்னேன்சீ ஷர்க்குத்தப் பாமல்
வண்மைக்குள் மண்ணொன்று மகத்தாம்விண் ணொன்று
வெண்மைக்குள் ளான வெளிநடு வொன்றே. (45)

நடுவான தொன்றினல் நாடும் நடுவணை
விடுவார்குரு விற்கு மெய்க்குண்மை யாயிடில்
கடுகள வாகிலுங் கப்புவ ராமல்
தொடுகுறி போலவே சொல்லுவார் வாலையே. (46)

வாலையி னாலே வழங்கிய தீட்சைகள்
வாலையி னாலே குளிகைவளப் பங்கள்
வாலையி னாலே வருங்கற்ப சித்திகள்
வாலையி னாலே மாயோகஞ் சித்தியே. (47)

சித்திக்கும் லெட்சயம் வாலைப்பருவங்கேள்
எத்திக்கும் மவ்வொடு அவ்விற் பிறந்ததும்
முத்திக்கு ளங்கென் றெழும்புஞ் சுழிமுனை
சத்திக்கு ளஞ்சால் தான்லெட் சயமே. (48)

தானும் பராபர வாலையைச் சாற்றக்கேள்
கோனும் மகாரம் குறிப்பாம் நடுவில்
தேனும் விசரி சிறக்குந் துவாதசம்
நாணுகிச் சொன்னேன் நடனத்தின் வாலையே. (49)

நடனத்துக் கப்பால் பூரண வாலைகேள்
அடியாம் நடுமுடி யந்தத்தி லொன்றாய்த்
தி'டமா மனத்திற்கும் சேர்ந்தறி வாலே
ஜெடத்தினிற் பூரண வாலையின் தீட்சையே. (50)

தீட்சை யிதுவரை சேரவெட் டாச்சுது
தீட்சையில் லாட்டால் வாலைசொல் லார்கள்
தீட்சைக்குறை யாணி யாயையான் செப்பினேன்
தீட்சையில் லாட்டால் சேரவிழ லாச்சே. (51)

ஆச்சே புவனைக் காதியாந் தீட்சைகேள்
பேச்சது மூலம் பிரணவத் தாலே
வாச்சே கிலியும் மனோமணி மூலமும்
பாச்சே மயேச பதிமூலம் பதித்திடே. (52)

பதித்திடும் பூமி நகாரம் மகாரமாம்
உதித்திடும் போது உறவாம் புவனைதான்
விதிக்குந் திரிபுரை தீட்சையை விள்ளக்கேள்
கதிக்கும் மயேஸ்பரி காரண மூலமே. (53)

மூல மிருப்பது மூளுந் திரிபுரை
காலுந் தலையுங் கருத்த திரிபுரை
சீலமாம் யாமளை தீட்சையைச் செப்பக்கேள்
தாலமாம் பிரணவம் தானும் அகாரமே. (54)

அகாரமென் பார்க ளறியார்க ளாங்காரம்
சிகாரமென் பார்க ளிச்சியா மூமைதான்
நகாரத்தி னோடு யாமள்சீ தானம்
மகாரத்தி னாலே வளர்ந்திடுந் தீட்சையே. (55)

தீச்சையிற் சாமளை செப்பும் பிரணவம்
ஆச்சி மனோமணி மூலத்தா விரண்டென
வாச்சியாஞ் சாமளை மாலும்பிர் மாவும்
தாச்சியில் லாத அம்பிகா சத்தியே. (56)

சத்தி மனோமணி மூலஞ்ச தாசிவம்
பெத்தார் பிரணவம் அம்பிகை யாமடி

முத்தியாங் கங்கையில் மூலத்தி னாலே
சித்திக்குச் சத்தி தீட்சையைக் கேட்டிடே. (57)

கேட்டிடு மைங்கரன் மூலத்தில் ரெண்டுடன்
நாட்டும் பிரணவம் நகாரம் மகாரம்
மாட்டிடும் வல்லபை மார்க்கமறிந் தோதில்
சாட்டுங்கே சரியாஞ் சத்தியின் தீட்சையே. (58)

சத்தியி லெட்டாந் தீட்சையைச் சொல்வேன்
பத்தும் பிரணவம் பார்க்கவன் மூலமும்
ருத்திர மூலம் நுகர்க்கே சகிமால்
பெத்த பிரணவம் பெருமுன்னு மனையே. (59)

உன்னு மனையாஞ் சத்தியின் தீட்சை
மன்னும் பிரணவம் வேண்டுமால் மூலமும்
தன்னு மயேசுரன் ருத்திரன் மூலமும்
என்னும் பிடாயே மால்கஞ்சன் காணே. (60)

காணும் பராசத்தி கருணைக் கடல்தீட்சை
வேணவிதத் தாலும் விள்ளார் பெரியோர்கள்
பூணவே வாதிதான் பொன்மலை யீந்தாலும்
தோண வுரையார் சொல்லும் பரைக்கையே. (61)

கையாரச் சத்தியைக் கண்ணாரக் கண்டு
மெய்யாரச் சொல்கிறேன் விளங்கு மனோமணி
எய்யாது அவ்வென்ற அட்சரத் தாலே
அய்யா பிறந்த தறிந்துணர் வீரே. (62)

உணர்வான மூலமா னந்தா யியம்பும்
கிணமான மண்ணொடு கிருபைக்கட லாச்சு
மணமா யிருப்பது மாயோக சித்தியில்
ரிணபாவி கோவிற்கும் ரேசிக்கில் முத்தியே. (63)

முத்திகொடுத் தாண்டே மோசங்கள் வாராமல்
பத்தி மவுன சத்தியின் தீட்சைகேள்
எத்திக்கும் லட்சயத் தின்பமறி வார்க்குப்
புத்திகள் சொல்வேன் புகழாய் மகாரமே. (64)

மகாரத்தி னாலே வளர்ந்தமவு னந்தான்
மகாரத்தி னாலே வளர்ந்திடும் விந்துதான்
மகாரத்தி னாலே வளர்ந்திடும் நாதந்தான்
மகாரத்தி னாலே மவுனாயி தீட்சையே. (65)

ஆயி கொடுத்தா ளச்சுதன் மூலத்தில்
ஆயிக்கு ளீசன் வகுத்தபிர மாவாம்
தாயா மவுன சத்தியின் தீட்சையைத்
தோயவல் லார்க்குச் சுகங்கா ணுஞ் சித்தியே. (66)

சித்திக்கும் நன்றாய்ச் சிவயோக தீட்சை
சத்தியின் தீட்சை தவறாமற் செப்பினேன்
முத்தர்க்குச் சொன்னேன்மூ வுலகுங் கொண்டாடப்
பத்தியுள் ளார்க்குப் பலித்திடுந் தானே. (67)

பலித்திடும் ஆசான் பதத்தைப் பணிந்திடில்
பலித்திடும் ஆசான் நிழலாகப் பின்பற்றப்
பலித்திடும் ஆசான் பரிவாய் மனம்வைத்தால்
பலித்திடும் தீட்சை பகருமொரு நூறே. (68)

பகருவேன் கேளுநு பண்பாய்ச் சிவதீட்சை
நிகருவேன் ருத்திரன் தீட்சையி லிரண்டுடன்
இகலுமால் தீட்சை யிரண்டுட னென்று
புகலும யேசுரன் தீட்சையும் அஞ்சாச்சே. (69)

அஞ்சாம் பராபர தீட்சையு மொன்றதாய்
மிஞ்சா மவுனத்தில் தீட்சையு மொன்றுதான்
வஞ்சகற் காகா மாடத்தோர்க் காகா
நஞ்சறச் சொன்னோம் நலமாஞ் சிவத்துக்கே. (70)

சிவதீட்சை மார்க்கஞ் சேரவே செப்பக்கேள்
புவியிற் குருக்கள் மடங்களிற்புக் காதே
செவியுனா கேட்பது மாத்திர மப்பா
பவமே தரிக்கிலான் பசுமுழு மாடே. (71)

முழுமாடு நிர்மூடன் மூதுணர் குண்டலி
ஒழுகச் சுழிமுனை உற்பனங் காண

நழுவிக் கொண் டேதான் திரிவான்நாய் போலே
கழுவடி காப்பான் கடைப்புண் ணடியே. (72)

புண்ணடி மீறுங் குளிதனிற் புக்கிச்
சண்ணினுன் தாரணி தன்னிற்குரு வென்றே
நண்ணியே நாமம் எடுத்தே நரகிலே
எண்ணிலாச் சென்ம மெழுவகைத் தோற்றமே. (73)

தோற்றத்தில் நால்வகை யோனியிற் சுத்தி
வேற்றுரு வாகவே வெவ்வேறு ரூபமாய்
சாற்றிய தொக்கணச் சடலமெடுத் திட்டால்
போற்றுஞ் சுழிமுனை புகுதக்குரு வாமே. (74)

குருவான நந்தி கூர்கின்ற போதம்
அருளான ஆசான் ஆதி மகாகுரு
உரையாணி யான சிவயோக தீட்சையை
திரமாய்ப் புதல்வர் செப்பிடக் கேளே. (75)

கேளப்பா மூலம் கெடியாம்பீ ஜாட்சரம்
ஆளப்பா நங்கென் றடியான சீதரன்
வேளப்பா உம்மென்றே விளம்பஅறி வார்கள்
கோளப்பா கோடா கோடியு மோடுமே. (76)

ஓடுமுதல் தீட்சையும் உரைத்தே னினிக்கேள்
தேடுந் தவமெலாஞ் செப்பமாய் வந்திடும்
ஆடும் புரியஷ்ட மாங்கார மோடிடும்
வீடுங் குடியும் விளங்குமா லென்னே. (77)

மாலான தட்சரம் மாயமகா சத்தி
சேலாம் நகார மகாரத்தைச் செப்பிடு
மேலான மூன்றுந் தீட்சைவிளம் பக்கேள்
பாலாஞ் சிவசத்தி பார்க்கச் சிகாரமே. (78)

சிகார வகாரம் சிறக்கின்ற நந்தியால்
அகாரம் உகாரம் அப்பைஅறி வார்க்கு
மகாரத்தி னாலே வளர்மூன்றுந் தீட்சை
விகாரத்தைப் போக்கி வேணபடி யோதே. (79)

ஓதிட நான்காந் தீட்சையுரைக் கக்கேள்
ஆதித்த வாதி சமாமனா மூன்றுமேட
போதித்த தான புசம்பெறு மஞ்சுடன்
வாதியா னட்சர மாட்டும்பின் சிங்குவே. (80)

சிங்கென்று செப்பிடிற் சேரநாலாந் தீட்சை
பங்கம்வா ராமலே பத்தும்யோ கிக்கு
எங்கு மிருக்கலா மிருவினையெய் தாது
தங்கோலம் விட்டாற் றானவன் கோலமே. (81)

கோலம் படைப்பான் குமரனென் றைக்கும்
காலனு மில்லை கைலாசம் புக்கலாம்
மேலாஞ் சதாசிவ தீட்சைவிளம் பக்கேள்
சீலமாம் அங்கென்ற பிரணவத் தெட்டிலே. (82)

எட்டு மிரண்டு மிசைந்தோ தவல் லார்க்குத்
திட்டமாம் அங்கென்ற தைந்துஞ் சிறந்திடில்
அட்டாங்க சித்தி யவர்க்குகை வசமாம்
பட்டண மெல்லாம் பறைகொட்டி னேரே. (83)

கொட்டினேன் ஞான சிவயோக தீட்சையைத்
திட்டினே னென்னூல் பாராத லுத்தரை
வெட்டினேன் மூலத் தெழுந்திடு மாரனைக்
கட்டினேன் விந்து கைவச மாச்சே. (84)

கைவச மாகவே கொங்கணர் தீட்சையும்
மெய்வசம் கும்ப முனிசொன்ன தீட்சையும்
மைவசம் யோகிகள் மார்பாணி யாகவே
உய்யும் படிக்கு உணவாகும் பார்த்திடே. (85)

பார்த்திடு மூன்றுநூல் பால்பழஞ் சீனியாம்
கார்த்திடு மாறுந் தீட்சையைச் சொல்வேன்
ஏர்த்திடு நாத மனோமணிக் குத்தான்
கீர்த்தியா மஞ்சங் கிருபைக் கடலே. (86)

கடல்போ லிருந்த கர்மங்க ளெட்டிடும்
உடலுக்குள் நோய்தா னோடிமுடிந் தேபோம்

நடமிட்ட தேழாந் தீட்சைநவி லக்கேள்
விடமிட்ட சத்தி விளங்குக ணேசனே. (87)

கணபதி மூலங் காரணமூன் றூச்சு
பணமாலி காரம் பத்துமேசிங் கென்று
வணமான தைந்துடன் வாழுமட் டாட்சரம்
கெணபாத கம்போங் கெடியான தெட்டே. (88)

எட்டாட் சரமா யிருநான்கு தீட்சையில்
ஒட்டிய ருத்திரன் மூலத்தி னேடு
இட்டற மூன்று லெழும்பிய சாதம்
விட்டிடும் வாசி மயேசுரர் மூலமே. (89)

மூலத்தி னுமேல முளங்குமட் டாட்சரம்
மேலொத்த தொன்பதாந் தீட்சைவிளம் பக்கேள்
வாலைப் பிரணவம் வாழுஞ் சதாசிவம்
மாலுக் கருமை மனே மணிமூலமே. (90)

மணியான அங்கென்ற வாசிபஞ் சாட்சரம்
தணியான தெட்டுஞ் சாதிக்கும்வல் லோர்க்கு
கனியான பூரணங் கண்டுகளி கூறும்
துணியான யோகிகள் சொல்லிய பத்தமே. (91)

பத்திக்குச் சொல்லக்கேள் பார்ப்பத்தாந் தீட்சையை
முத்திக்கு மூல மாங்கார மூலம்
சத்தியின் மூலந் தருநாத மூலம்
சுத்திப் பிரமன்மால் தோன்றிடும் ருத்திரன் (92)

தோன்று மயேசுரன் மூலத்துட னெட்டாம்
ஊன்றறி யட்சர மொன்றும்பொய் யல்லக்கேள்
மூன்று யுகமொரு மாத்திரை யாயிடும்
மான்றலை பத்தாந் தீட்சை மகிமையே. (93)

மகிமையின் தீட்சை வளமையைக் கேளு
பகிரண்டம் படைப் பானன் றளிப்பான்
சுகமீது வின்ப துன்பங்க ளாவது
நெடிழுங் குருகும் நிலையான தொன்றே. (94)

ஒன்ருன தொன்றை ஓதி யுணர்வார்கள்
ஒன்ருன வனுக்கே உணர்வார்கள் சித்தர்கள்
ஒன்ருன வன்றன்னை உள்ளத் தூணுர்க்கு
ஒன்றும் பலியா ஒக்கவெறும் பொய்யே. (95)

பொய்யாது குருமுனி தீட்சை யிருநூறு
அய்யாபஞ் சாட்சரம் அட்டாட் சரங்களும்
மெய்யாய்ப் பலிக்க விளம்பினர் சாபத்தை
கய்யவே போக்கிக் காட்டுவார் கண்டிடே. (96)

கண்டிடும் நாற்பத்து முக்கோண சக்கரம்
அண்டிடுந் தில்லைச் சிதம்பர சக்கரம்
விண்டிடு வார்கேள் பூசை மகிமையும்
எண்டிசை அட்ட கர்மத் தியல்பாமே. (97)

இயல்பாம் வயிரவன் சக்கர பூசையும்
இயல்பாங் கணபதி சக்கர பூசையும்
இயல்பான நந்தி குருபூசை மார்க்கமும்
இயல்பாமு தண்டலே கியமுஞ்செய் தாரே. (98)

செய்கின்ற லேகியம் லெட்சயம் வாசியில்
செய்கின்ற யோகத்தின் செயற் செய்மாக
செய்கின்ற மார்க்கஞ் சித்தரெல்லாஞ் செய்வார்
செய்கின்ற தெல்லாஞ் செயமல்லக் கண்டிடே. (99)

கண்டிடும் லேகியம் வாயிற் கிடக்கையில்
உண்டிடும் வாசியை உறப்பாய் மனம்பற்றக்
கொண்டிடும் போதுநீ நந்தியின் கீழே
குண்டலி பார்க்கக் கொழுந்திட் டெரியுமே. (100)

எரியுமொளி கண்டா லேகவெளி யாச்சு
பிரியாது பின்பு பூரணம் பேசிடுந்
தரியாது நோய்கள் சகல விகற்பமுந்
துரியமாந் தீட்சை சொல்லொரு நூற்முத்தே. (101)

மச்சமுனி ஞான தீட்சாவிதி ா,
முற்றிற்று.

உ

பராசத்திதுணை.

ஏழாவது:

வேதமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய

# ஞான சூஸ்திரம் உச.

ஆதியடி நடுவாகி முடிவுமாகி
அருளொளியாய்ப் பரவெளியா யெங்குமாகி
நீதியெனும் பொருளாய்நிட் களமதாகி
நித்தியா னந்தசுகா தீதமாகி
வீதியெனும் மேருமுடி மீதுமாகி
வீரான கதிர்மதியு மிரண்டுமாகி
சோதியெனு மம்பலத்தில் நடனஞ்செய்யும்
சுத்தபரம் பொருள்பாதங் காப்பதாமே. (1)

சார்ந்துநின்ற குருபதத்தில் மனக்கண்ணூட்டி
சச்சிதா னந்தபர வெளியினூடே
நேர்ந்துமுப்பா ழப்பாலும் மவுனங்கொண்டே
நிறைந்துநின்ற சின்மயத்திற் றூங்கியானும்
சேர்ந்துசென்று அங்குசத்திற் சிங்கென்றேறி
சிறப்பாக ரேசித்து வங்கென்றூணிப்
பார்த்துநின்றே அண்டபகி ரண்டமான
பரப்பிர்ம நவகண்டங் கடந்தேன்பாரே. (2)

பாரப்பா அடிமுடியுங் கொடியாய்நின்று
பரந்தேறி நடுவணைமுக் கோணவீட்டில்
நேரப்பா மயிர்ப்பாலஞ் சுழுத்திபீடம்
நிலையான சுழினைரெண்டு மீனைப்பற்றி
வேரப்பா ஓங்காரக் கம்பங்கண்டு
விழிசொருகி விண்ணிரவி மதியைவேண்டி
கோரப்பா கொண்டெழுந்த வோங்காரத்தில்
குறித்திருந்த வனுபூதி கூறுங்காலே. (3)

காலென்ற சுழிமுனையிற் பற்றிநின்று
　　கனபிரா ணயவொரு பனிரெண்டுக்குள்
நாலென்றும் பூரணமாய்ப் பாழாய்நின்ற
　　நலமான பரப்பிர்ம வெளியாய்நின்றார்
சேலென்றுஞ் சுத்தவெளி நித்தமாகி
　　சின்மயமே யொட்டியுமொட் டாமல்நின்றார்
வாலேதோ காலேதோ அறியவேண்டி
　　மனோமணித்தா யருள்மொழிந்து வளங்கண்டேனே. (4)

கண்டதொரு வகையென்ன சொல்லக்கேளு
　　கனநாத விந்துசிவ சத்தியாலே
உண்டதொரு சோடசத்தி விரவியப்பா
　　உற்றுநின்ற சிவமாகும் பிங்கலைக்குள்
கண்டமென்னப் பனிரெண்டு மதியின்கூறு
　　கனமான வென்றுயார் சத்தியாகும்
மண்டலங்க ளுறைந்ததனுற் கலையைக்கட்டி
　　மைந்தனே கெவுனமதி லாமென்றேனே. (5)

ஆமப்பா மேலவர்க்கு குளிகையொன்று
　　அறைகிறேன் ரசமதுவும் விந்துவாகும்
நேமப்பா வாசிபச் சிலையுமாகும்
　　நின்றதொரு வன்னியல்லோ பீடமாகும்
தாமப்பா ரசமணியின் வித்தைதானும்
　　தன்னுள்ளே ரசமதனை மணிபோற்செய்ய
வாமப்பா வுலகமெங்குங் கெவுனமார்க்கம்
　　மகிழ்வாகச் சென்றறிவா யிதனைவிட்டே. (6)

விட்டல்லோ கானமெங்குஞ் சுற்றிச்சுற்றி
　　விருதாவாய் ரசமதனை வாங்கித்தானும்
திட்டமுள்ள மணியாகச் செய்வதென்று
　　தேடியலைந் திறந்தல்லோ போனார்கோடி
துட்டர்களைச் சேராதே மைந்தாநீயும்
　　தூய்மையென்ற வழிசேர்ந்து விந்தைக்கட்டு
நிட்டையுள்ள ஞானமணி யாகும்பாரு
　　நிந்தையின்றி விந்ததனை மணியாய்ச்செய்யே; (7)

செய்யப்பா தன்னிடத்தில் வாசிதன்னைத்
திரமாகத் தம்பித்துள் ளடக்கியேத்து
வையப்பா தம்பனமே செய்யுமார்க்கம்
வழுத்துகிறேன் கபாலமதிற் பார்த்துக்கொள்ளு
துய்யநுனி நாக்கையண் ணாக்கில்மோதி
சூழ்ந்ததமர் தன்னையுமே அடைத்துப்பாரு
பையப்பா வோசையுட னிருளோதோன்றும்
பதட்டமுட னோட்டிவிடு மயங்கிடாதே. (8)

மயங்காதே தகர்க்கும்போ தோசைகேட்கும்
மறைந்துநின்ற சொரூபத்தி னொளியுங்காணும்
தியங்காதே கண்ணிரண்டு மனாக்கண்பாரு
தீபசுழி மூக்கின்மேற் குறியாய்ப்பாரு
உயங்காதே கடக்கசெவி யசைவுங்காணும்
உற்றகண்ட வாசல்கத வடைக்கும்பாரு
இயங்குநின்ற வாசலே மூடைத்துப்போகும்
இசைவான வாசிகீழ் நோக்கும்பாரே. (9)

நோக்கியே வாசியது யிறங்கும்போது
நுண்ணறிவாய்ச் சுழிமுனையைச் சிவ்வென்றேதான்
தாக்கியே அமுத்திக்கொள் நந்திபீடம்
தன்மையுடன் வாசியைத்தான் சுழித்துக்கொள்ளு
ஊக்கமாய் லிங்கவட்டம் அபானவாயல்
ஓங்கியே யடைக்குமடா நந்திவேகம்
போக்காக வாசியது பீசஞ்செல்லும்
பூரணமாய்ச் சென்றபின் புரைக்கக்கேளே. (10)

கேளப்பா கபாலமெங்கும் விம்மலாகும்
கெடியான கவனத்தா லுள்ளேசெல்லும்
வாளப்பா சுடர்க்கம்பம் சூடுண்டாகும்
மனமங்கே மயங்குமப்பா மயங்கிடாதே
நாளப்பா ஓமென்ற மனங்கும்பித்தே
நன்றாகுதுங்கிப் பீசத்தே மனத்லைதயூணு
நீளப்பா வாசியது மேலேநோக்கி
நின்னயமாய்த் தண்டுவழி யோடுந்தானே. (11)

தானான சுடர்க்கம்பம் நரம்பதொன்று
தனித்தஞ்சு மரத்தின்கண் போலநிற்கும்
வானான வாசியுமவ் வழியிலோடி
மகத்தான கமலவண்ட வமுதந்தன்னிற்
கோனான வாசிநிற்க வன்னிமீறிக்
கோடிகதிர் கண்ணிமைக்கு ளடங்குமோசொல்
பானான விந்துதனை வாசிதானும்
பம்பரம்போற் சுழற்றிமணி செய்யும்பாரே. (12)

செய்யவிந்து மணியாஞ்சா ரணையைத்தானும்
செலமென்ற நுனிநாக்கை யணுப்போல்நீக்கிப்
பையவே யுருண்டுவரும் மணியினோடு
பண்பான வாசிதனைப் பாருபாரு
நையாமல் விந்துமணி வாசிகூடம்
நாடியே படீரென்னப் பீசத்துள்ளே
வைபவமாய் நந்தியுட வழியிற்செல்லும்
மகத்தானசுழற் சிக்கிக் கொள்ளுந்தானே. (13)

கொள்ளப்பா அவ்விடத்தில் வன்னிவீடு
குறியப்போ தண்ணாக்கிற் றிறந்துமூடும்
கள்ளப்பா னுருத்திறந்து வுட்சிவந்து
கண்டுருகி வலுவாஞ்சா ரணையாமெண்ணு
விள்ளானாற் றெட்டுச்சா ரணையைப்பாரு
வீராக யேகுமணி யண்டந்தன்னில்
சள்ளையிலா நுனிநாக்கைப் பாதிவாங்கு
தானோடி வருமணியுங் கபாலமெண்ணே. (14)

எண்ணவே அண்டத்திற் பிணையைவைத்து
எட்டியே கபாலவரை பெரியவாசல்
நண்ணியே மூடும்போ துடலைத்தானும்
நாலிரண்டு வரைவரையுந் தூக்கும்பாரு
அண்டமுதற் றிசைகளெட் டுஞ்சுழன்று
அரைநொடியி லேவருகு மணியின்வேகம்
நுண்ணறிவாய் முன்போலக் கதவைமூட
நோக்கியே கம்பநுனி மேலேபோமே. (15)

போமப்பா கதவினுனி சற்றேநீக்கிப்
பொருதிவரு மரைநொடியில் மணிதானப்பா
நேமப்பா ரசமணியின் மார்க்கந்தன்னை
நுவன்றேனே இம்மணியின் வேகத்தாலே
ஆமப்பா அண்டர்முதல் முனிவர்தானும்
அயர்ந்திருந்தா ரவர்களுக்கிம் முறையைச்சொன்னேன்
நாமப்பா மாந்தருக்காய்ச் சொல்லவில்லை
நாடிப்பார் மவுனியடா விட்டிடாதே. (16)

சூடாமணி மாத்திரை.

விட்டுப்போம் சகலநோ யானதெல்லாம்
விடாமழைபோற் றெடுத்தகன லானதெல்லாம்
மட்டிலாச்சூ டாமணியின் மாத்ரைதன்னை
மகிழ்வாகப் புகலுகிறேன் கபடம்விட்டுத்
தொட்டவியா திகளெல்லா மோடுதற்குச்
சூட்டுகிறேன் படித்தோர்கள் மெச்சவேதான்
கட்டுவித முந்திரிகை யுப்பின்பூவும்
கருத்தறியத் திப்பிலிபே ரீச்சுதானே. (17)

பேரீச்சுக் கோஷ்டமோடு முத்தக்காசு
பெருமையுள்ள வெட்டிவேர் பன்னீர்ப்பூவும்
சாரிச்சுத் தாமரைப்பூ நன்னாரிவேர்
சரியான சந்தனத்தூள் வகைவகைக்குத்
தாரிச்சு பலமொன்று யிடித்து நன்றாய்த்
தவறுமற் கல்வத்திற் போட்டபின்பு
நேரித்து லிங்கமொரு காசுபோடு
நிலையான பூரமொரு காசுபோடே. (18)

போடப்பா அரிதாரங் காசுபோடு
புனிதமுற நாபிவரைக் காசுபோடு
ஆடப்பா தண்ணீர்விட் டான்கிழங்கின்
அச்சாற்று லீர்நாள்தா னரைத்துக்கூட்டு
நீடப்பா கறிப்பான்சார் விட்டுநன்றாய்
நீங்காமல் மூன்றுநா ளரைத்துத்திரு
தேடப்பா உழுந்திடைதா னுண்டைசெய்து
தீர்க்கமுடன் நிழலுலர்த்தி நயஞ்செய்வீரே. (19)

வீரத்தைப் பழச்சாறோர் தினமேயூர
　　விட்டெடுத்து மேனாபி தனைவெள்ளாட்டின்
நீரத்தில் மூன்றுநா ளூரப்போட்டு
　　நீயெடுத்து யிநுமிச்சை மிளகுசாற்றில்
தீரத்தை விடாமுன்போற் செய்பூரத்தைத்
　　தேனதிலே சுருக்கிட்டு யெடுப்பாய்விஷ்ணு
தாரத்தைச் சுண்ணாம்புக் கற்பன்னோந்து
　　தரம்நீத்திக் கழுவிநன்றாய்ப் பதனஞ்சேரே. (20)

வேறு

பதனமுடன் சுகிர்த மாகப் பண்புடன் சொல்லக் கேளு
விதனமுந் தீர வேண்டி விளங்குமாத் திரையி லொன்று
நிதமுறக் கொடுத்து மேலாய் நேர்படப் பார்ப்பீ ராகில்
அதனம தான கர்ம விழலது அகலுந் தானே. (21)

அகன்றிடுஞ் குளிர்சு ரங்கள் அசாத்திய விரண மூறல்
நகன்றிடுங் கன்னி தோஷம் நாடாது சன்னி யாவும்
புகன்றிடுங் கண்சு ழற்றல் பொல்லாத கிறுகி றுப்பு
இகன்றிடுங் குத்தல் பித்தம் யேங்கியே அலறிப் போமே. (22)

அலறிய சன்னி வேர்வை அழலது நீங்கிப் போகும்
நலவனும் பானம் பார்த்து நாடியே கொடுப்பீ ரப்பா
பலவித நோய்க ளெல்லாம் பறந்திடும் பறவை போலே
நலமதி லறிவுள் ளோர்க்குத் தான்றெரிந் துரைத்த தாமே. 23)

அறிவினற் பத்தி யத்தை அடவுடன் புகல வேணும்
பிரியமாந் தெரிந்த விதம் பேர்பெறச் சொல்ல வேணும்
குறியவே ஸ்நானஞ் செய்யக் குணமுடன் றவல வேணும்
குறிகுண விதத்தைக் கண்டு கூறுவீர் தினமுந் தானே. (24)

வேதமுனி ஞான சூஸ்திரம் உச.

முற்றிற்று.

திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீ போகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகாகைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ தேண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமி யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

எட்டாவது:

தூர்வாசமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

# ஞான சூஸ்திரம் எஎ.

வெண்பா.

ஏமப் பிறப்புக் கினிய வழிலையெனும்
காமப் பிறப்பின் கரைபோலாம்—வாமத்தில்
ஆயிபதம் பூசி யருளும் பராபரத்தின்
தேயுங் கணேசனடி தேர்.

வேறு.

மூலமது நாதவிந்து யெழுத்தினாலே
முன்நகர மெழுத்தாறு மகாரம்பத்தாய்
மேலமது சிகாரமுமே பனிரண்டாகும்
மெய்யான வகாரந்தான் பதினாறென்றும்
ஆலமது அமுதான யகாரமேழாய்
அப்பாலும் நின்றபொரு ளறிவேயொன்றாய்ப்
பாலமது மயிர்ப்பாலம் நெருப்பாறான
பஞ்சவெழுத் தடிமுடியே முதலாங்காப்பே. (1)

பதினெட்டும் பதினாலே மூன்றேயாகிப்
பவமகற்றும் நவமான வகாரமாறாய்ப்
பதினெட்டி லேழாகி மூன்றேயாகிப்
பதினெட்டும் இம்மூன்றும் பொருளுண்டான
பதினெட்டு விபூதியடா திருநீறாகிற்
பாமகள்மா மகள்மலையின் மகளுமாகப்
பதினெட்டுந் தியானமுட் கொண்டுநீயும்
பதித்திடுவாய் புருவமையம் பதிவாய்த்தானே. (2)

பதிவான தாருக்கும் பதியாம்வீடு
பத்தியுடன் அரிஓமென் றஞ்சுஞ்சேர்த்துப்
பதிவான அ-இ-உ எ-ஒவென்றும்
பரதேவ தாசத்தி வாகங்காளி
பதிவாக ஊணப்பா யோதிக்கொள்வாய்
பகரைந்து ஐந்துமொரு பத்துமோடு
பதிவான மனோமணித்தாய் தானேதானாய்ப்
பத்துடைய சித்தனெனப் பகருவாளே. (3)

பகரரிது பகர்ந்தபின்பு தன்னைத்தானே
பாரென்னைப் பாருன்னைப் பாரேதன்னை
பகரரிது அவர்சொல்லுந் தன்னைத்தானே
பதிந்துபார் விபூதியது உறுதியாச்சு
பகரரிது உறுதியல்லோ உலகமானாள்
பத்துவய தானதிவள் சித்தியானாள்
பகரரிது இப்படியே பகர்ந்தசொல்லைப்
பத்திப்பார் பிறவிபிணி யத்துப்போச்சே. (4)

பிணியான நோய்பிணிக ளோடிப்போச்சு
பிரணவத்தோ டாறுதல்ம் புதிமேலாச்சு
பணியான சரப்பணியு மணியலாச்சு
பார்மகளோ டஞ்சுமொரு சுத்திதீட்சை
அணியாத ஆபரண மணிந்தேகொண்டால்
அரகரா யேகதச தீட்சைநீறு
தணியாமற் றனித்தணியும் விபூதியாலே
சகலசா பமுநிவர்த்தி முத்தியாச்சே. (5)

முத்தியென்ற நந்திசத்துச் சித்தானந்தி
மூலமனோ விர்த்தியதாய் நின்றமூர்த்தி
அத்திமுகன் மும்மதத்தோன் கந்தன்முன்னோன்
ஐந்துகரன் தொந்திவயி றுடையோனப்பா
சித்திபெறத் துதிக்கையாற் றிருநீறள்ளித்
தீர்க்கமுட னுனக்களித்த களிப்பினாலே
முத்திபெற வந்ததிந்த தூலதேகம்
மூலபஞ் சாட்சரத்தை யாதிபாரே. (6)

குறுவிருத்தம்.

ஆதியு மந்தமு மனுபொன் வாயுவில்
மாதொரு பெண்பிளே மகாசத்தி யாகினள்
நீதி பராபரை நேமியின் றங்கையாம்
சோதியில் வாதச் சுடரொளி நாதமே. (7)

நாதனிருக்கும் நடுமண்டலத்திலே
போதமுறைந்தே புகழ்ந்திடும்வாசிதாண்
ஓதிபமானது ஓமென்றகுண்டலி
ஆதியின்றீயி லளவற்றவாயுவே. (8)

வாயு வடக்க மாயோகமாரிஷி
வாயு வடக்க மனமேதிளேத்திடும்
வாயு வடக்க மாமுப்பாழ்கண்டிடும்
வாயு வடக்க மயேசுரமூலமே. (9)

மூலக்கிழங்கு முளேத்தேகிடக்குது
காலத்தையூணிக் கடுகவறிந்திலார்
காலத்தையூணிக் கடுகவறிந்தபின்
ஓலத்தறிந்தே ஒளிவிட்டதெட்டுமே. (10)

எட்டுக்குமுந்து மெழுத்தையறிந்தவர்
அட்டமாசித்தி யடங்கியமாமுனி
கெட்டுமுகாரங் கெடியர்ங்கணேசனுக்
கொட்டியமூலங் கோலமதாமே. (11)

ஆமேயறிந்தபின் னூருமக்கொப்பினி
தாமேநல்லீசனேத் தாமென்றறிந்திடு
வாமேவகார மயேசுரமூலமாம்
பூமேல்வளர்ந்திடும் பொன்னும்வழலேயே. (12)

வழலேகருவை வாகாய்ச்சொல்லக்கேள்
தழலதுபோலச் சதாசிவன்வெந்திட
அழலாம்பராபர மகண்டவெளியாய்
உளமேமகிழ்ந்து வுரைப்பதுகேளே. (13)

கேளாய்அமுரி கெடிபதினூறு
நாளாய்கற்சுண் ணம்படிரெண்டு

ஆளாய்பூவை யளக்கும்படியெட்
டோளாய்ப்பாறை யுப்பதுமொன்றிடே. (14)

ஒன்றாய்க்கலக்கி யொருநாட்டெளியவை
நன்றாயிருத்து நலம்பெறக்காச்சிடு
மன்றாகவத்தி வருமெழுகாம்பதம்
சென்றிருமூன்று கழஞ்சிடுவெள்ளையே. (15)

வெள்ளையைப்போலே வீரனைக்கூட்டிடு
ஒள்ளியவில்லை யுணர்வாய்ப்பிடித்திடு
உள்ளியவெயிலி லுறமாயுலர்த்திடு
தெள்ளியகாரச் சேனீரைக்குத்திடே. (16)

குத்திடுகாரங் கொடுங்காரமாக
வைத்திடநன்றாய் வகைசொல்லக்கேளு
பத்துடனாறு பகர்ந்திடுமண்டமும்
முத்தியில்வெண்கரு மூர்க்கமதாமே. (17)

மூர்க்கமாம்வெண்கரு முறிந்துசலமாக
மார்க்கமதாகும் வகையெருக்கின்பால்
ஆர்க்கரைவீர மதனொடுபூரம்
நேர்க்கநல்லண்டம் நீரதுகூட்டே. (18)

கூட்டிடுபூவைக் கொழுத்தஞ்சுசுண்ணம்
ஆட்டவகைக்கு அரைக்காசுயிட்டிடு
காட்டிக்கவையாற் கடைந்திடுவெண்ணெயாம்
ஆட்டியபோது அதைப்பனிவைத்திடே. (19)

பனியிலிருக்கப் பளிச்சென்றுநீராங்
கனியஞ்சுசுண்ணங் கடுங்குகையாக்கிப்
பனிவாய்ப்பதித்துப் பகர்வாய்ப்புடமிட
மனவாகிநீரும் வழலையிதாமே. (20)

ஆமேயன்னீரை அழகாய்வழலைக்குத்
தாமேதினமூனு தான்குத்திவைத்திடு
ஏமேயிருமூன் றிரவியிற்காய்ந்தபின்
நாமேவழலையை நாடறியாதே. (21)

நாடகமாடும் ரவிமதிப்பெண்பிளை
கூடிக்குழைந்து குலாவுங்குலப்பெண்
தேடியுண்பார்போற் செகவோசையாகினள்
ஆடியபெண்பிளை யாதியிதாமே. (22)

ஆதிவழலை யருஞ்சுண்ணமானபின்
சாதிச்சரக்கு அறுபத்துநாலும்
ஓதியுபரச மொருநூற்றிருபது
வாதிகளாற்றினம் வகையானதொன்பதே. (23)

ஒன்பதுலோக முடன்காணநீறும்
வன்பகையஞ்சு சுண்ணக்குகையிலே
தன்கடுங்காரச் சேனீரதாலே
என்படுங்கண்டா விடுதீயிற்கம்பே. (24)

கம்பதுபோலே கடுஞ்சாம்பலாகும்
நம்பலவெய்யிலில் நலமாகச்சுண்ணமாங்
கொம்பதுகாமம் படக்கடுஞ்சுண்ணம்
வம்பரேயிந்த மகத்துவம்வழலையே. (25)

வழலைசவுக்கார மென்பார்கள்வாதிகள்
உழலைப்படுவா ருள்ளெண்ணெய்வாங்கிடத்
தழலிலெரிப்பார் தாளிப்பார்கண்டிலார்
பழவினையென்று பகுத்தறிவாரே. (26)

அறிவாம்வழலை அடங்காத்துறையது
உறவாமுதற்றர மூதியெடுசுண்ணம்
மறவாதவாத வழலைக்கிராவணங்
திரிகூடபீடஞ் சேர்ந்தவழலையே. (27)

வழலையிதுவன்றி வைப்பேன்ரண்டாந்தரம்
அழலேபூநீரு ஆனதுயெண்பலர்
தழலாயிருந்த தனிச்சுண்ணமீர்பலம்
பழமானபாறை யுப்பதுபாரே. (28)

பாரிதுவோர்பலம் பண்பாகத்தூக்கிச்
சீர்வெடியுப்பிற் சிறந்தபுளிக்கூட்டி

நீரதுவிட்டுநே ரிட்டொருசாமம்
வீரனுற்காசு வெள்ளையோர்காசிடே. (29)

காசிடைகூடன் கடுகப்பொடித்திடு
நேசமுடனே நிலைத்தாட்டிவில்லைசெய்
வாசினையாக வழலையிதுவாகும்
கூசிடாவெயிலிற் குலாவியுலர்த்திடே. (30)

உலர்த்துந்துவாதச மொருமூன்றுமிட்டிடு
அலத்துகார்நீரை யப்பிப்பின்குத்து
பிலத்தேதினமூன்றிற் பிரண்டுபொடியாகும்
மலத்தாங்குகைக்கு ளிட்டுதீயிடே. (31)

தீயிடுகற்சுண்ணங் கீழ்மேலுமிட்டு
வாயிடுசட்டிக்குள் வைத்திடுவாலுகை
தீயிடுசாமஞ் சிறப்பானசுண்ணமாம்
பாயும்நற்சாரஞ் சரிசேர்பனிவையே. (32)

வைத்திடநீராம் மகத்தாஞ்சவுக்காரம்
கைத்திடப்பட்ட சரக்கெலாங்கட்டுணும்
மெய்த்தமெழுகாகும் வீரத்தினீராலே
வைத்தாரென்நந்தி வழலைரெண்டாந்தரம். (33)

தரமானமூன்றுந் தரத்தின்வகைகேளு
திரமானபூவை யாதியாங்கடல்நுரை
பரமானகுக்குடத் தண்டம்பொடித்திடு
நுரையுஞ்சரியாய் நுகரவரைத்திடே. (34)

அரைப்பாயெருக்கலம் பாலுடன்வெண்கரு
நிரைப்பாறியாட்டி நிலைத்து துசுண்ணமாங்
தரைப்பானபூவுக்குத் தானீருமெட்டொன்று
இரைப்பானகல்லுப்பு யீரெட்டுக்கொன்றிடே. (35)

ஒன்றுயரைத்திடு உப்புடநீராலே
நன்றுகச்சாமே மரைத்தபின்கூடனும்
வென்றுகவீரனும் வெள்ளையுங்கூட்டி
ஒன்றுய்ப்பொடித்து உறவாசத்துவிடே. (36)

உறவாய்வகைக்கு ஒருகாசுதூக்கி
நிறமானவில்லைசெய் நீட்டிரவியிலே
அறமாயுலத்தி யதிற்கடுங்காரம்
தரமாகக்குத்தித் தரைமீதுலர்த்திடே. (37)

உலத்தியேயஞ்சு சுண்ணக்குகையில்வை
பிலத்தியேகற்சுண்ணத் துள்ளாகவைத்திடு
நிலத்தியவாலுகை யேத்தியெரிசாமம்
முலத்தானவழலை மூன்றுந்தரமிதே. (38)

இதுதானேசுண்ணம் இளக்கமேறிடும்
பதியானசத்துப் பறிக்குருவாகும்
துதியானசூதமுஞ் சொல்லுமுன்கட்டுணும்
கெதியானநாலாந் தரவழிகேட்டிடே. (39)

கேட்டிடுசிப்பியைக் கெடியாயமுரியில்
மாட்டிடுமுறவாம் மண்ணுங்கரைத்திடு
நாட்டியெரித்திடு நால்சாமமட்டும்நீ
நீட்டியமறுநாள் நிமிர்ந்தகிளிஞ்சியே. (40)

கிளிஞ்சிமண்தன்னைக் கிண்டியேதள்ளித்
தெளிஞ்சவெயிலிற் றினமேழுகாய்ந்தபின்
நளிஞ்சேயிடித்திடு மப்பாவதுதூளாம்
ஒளிஞ்சேவடிகொண் டுறுதிதூள்வாங்கே. (41)

வாங்குபொடிதான் வளமாயெண்பலம்
பாங்கானபாறை யுப்பதுவோர்பலம்
சாங்கம்வெடியுப்புத் தானேயொருபலம்
தாங்கியரைப்பலந் தான்சீனங்கூட்டிடே. (42)

கூட்டிடுவெள்ளைப் பாஷாணங்காற்பலம்
மீட்டியவீரன் கழஞ்சியதொன்று
தாட்டிகச்சூடன் தானதுகாற்பலம்
ஊட்டியரைத்திடு உப்புநீர்வாரதே. (43)

வார்த்தாட்டிவில்லை வளமாய்ரவியுறக்
கோர்த்தெழுநாளிற் குமிரிபுலர்ந்தபின்

நீர்த்தேகடுங்கார நீர்தனைக்குத்தி
ஏத்தேநாள்மூன்று யிஞ்சிடக்குத்தே. (44)

குத்தியுலர்ந்தபின் குகையதுதன்னிலே
வைத்தேயெரித்திடு கற்சுண்ணத்துள்ளாய்க்
கைத்திடுகாமத்திற் கடுஞ்சுண்ணமாகும்
மெய்த்திடுசிப்பியின் வித்தையுங்கோடியே. (45)

கோடிக்கேயோடுங் கொடிதானவஸ்துவிற்
கூடிக்குளிர்ந்து குலாவமலைபொன்னும்
ஆடித்திரிய அறியார்கள்கைமுறை
நாடிக்கிளிஞ்சியிற் கைமுறைநாதமே. (46)

நாதமேவிந்துவும் நாடுந்திருவடி
வாதமீதெல்லாம் பலிக்கும்வழியால்
ஆதிமுப்பூவை யறியார்களாரும்
சோதியினுண்மையைச் சொல்லவொண்ணாதே. (47)

ஒண்ணாபூநீ ருயர்ந்திடுஞ்சத்தியாம்
பண்ணுஞ்சிவத்தைப் பாரிலறிந்திலார்
சுண்ணும்புங்கூட்டித் துரைமைமுடித்திலர்
வண்ணான்காணுட்டால் வாதம்பலியாதே. (48)

பலியாதோவென்று பாவியெண்ணாதே
கலியாதேகற்சுண்ணாந் தானேயொருபலம்
நிலப்பாறையுப்பு நீரதுயெண்பலம்
வலிவீரன்வெள்ளை வகைக்கொருகாசிடே. (49)

இட்டிடுசூடன் காசிடைகூட்டி
விட்டிடுவிந்து நீராலரைத்திடு
கொட்டிடுகாதங் குழறியரைத்திடு
பட்டிடுவில்லை பாரதினுண்மையே. (50)

ஆண்மையிதின்முறை யாருமுரைத்திலார்
வீணிலேகூட்டு வேதையைப்பார்த்தாற்
காணுமோசெம்பு கனகமாதாமோ
ஊணியவுப்பை யுரைக்கவித்தாதியே. (51)

ஆதிக்குருவிது அப்பாவழலைதான்
சோதியைப்போலே சுடரொழிவிட்டிடு
மாதுநல்லாளும் வகையாயுரைத்திட்டாள்
மேதினியோர்க்கு விளம்பினநாமமே. (52)

நாமேரவியிற் காச்சிடுபக்கந்தான்
நாமேகடுங்காரம் நாட்டினேமூன்றுநாள்
நாமேமறுபடி யேழ்தினங்காய்ந்தபின்
நாமஞ்சுண்ணக் குகையில்நளுங்கிடே. (53)

நளுங்கிடுங்கற்சுண்ணச் சீலையுஞ்செய்திடு
நளுங்கிடுங்கற்சுண்ணத் துள்ளாகவைத்திடு
நளுங்கிடுகாரம் நலமாயெரித்தபின்
நளுங்கிடுமுப்பூ நாதாந்தச்சத்தியே. (54)

சத்தியீதப்பா சாரமீதாச்சுது
சத்தியீதப்பா காரமீதாச்சுது
சத்தியீதப்பா தணிப்பூவழலைகாண்
சத்தியமென்று சாற்றினார்நந்தியே. (55)

நந்தியுரைத்தார் நலமானபூநீரை
நந்தியுரைத்தார் நலமாஞ்சவுக்காரம்
நந்தியுரைத்தார் நாலுவழலைக்கும்
நந்திகுருவை நாட்டென்றார்கண்டிடே. (56)

கண்டேனேசுண்ணங் காரமதில்ரெண்டு
கண்டேனேயுப்புக் காரமதிலொன்று
கண்டேனேமூன்று முப்பூவாய்க்கண்டிது
கண்டேனேபூவைச் சுண்ணக்கரையிதே. (57)

கரைகாணுமுப்பூக் கண்டால்மகாவாதி
வரையாம்வழலை நாலுவகைவைப்புத்
தெரிவாகச்சொன்னேன் செயமாம்வழலை
யுரைபாகமந்த யிடைபாகஞ்செய்திடே. (58)

செய்யும்வகைதான் திரமாகச்சொல்லக்கேள்
வையும்வழலை சவுக்காரஞ்செய்திடப்

பொய்யும்புலையும் பூரிப்பார்கண்டிடு
லவயேமுப்பூ வழலையதெட்டே. (59)

எட்டுப்படியி லமுரியும்ரெட்டிக்
கொட்டிக்கரைத்துக் குறுகவேவைத்திடத்
திட்டங்கற்சுண்ணந் திரமாய்ப்படிரெண்டு
இட்டுக்கரைத்து யிடுவாய்நீயப்பிலே. (60)

அப்பில்விளைந்திட்ட தாகமுடநாதம்
உப்பெனப்பாறைமே லுயர்ந்துவளர்ந்திட்ட
உப்பதுவொன்று வொன்றாய்க்கரைந்திடச்
செப்பும்வழலை திரமாகக்காச்சிடே. (61)

காச்சிக்குறுகிக் கனகிவருகையில்
வாச்சநலலெண்ணெய் வளமாயரைப்படி
பாச்சிக்குறுக்கிப் பதங்கண்டுண்டைசெய்
மூச்சியாச்சரியந் தான்சவுக்காரமே. (62)

சவுக்காரமிப்படிச் செய்தவன்வாதிகாண்
சவுக்காரத்தாட்டுச் சகலசித்தாதியும்
சவுக்காரமென்பார் பரங்கிதன்வைப்பதைச்
சவுக்காரமுப்பூவைச் சாத்தினதாமே. (63)

சாத்தும்வழலைச் சவுக்காரமேயென்றும்
தோற்றுவதேது மில்லைதெளிந்திடு
கூற்றுவனுயிரைக் கோட்டிகள்கொள்வது
மாத்திரமன்றி மாத்தறியாதோ. (64)

அறியாரறியா ரறிவார்கள்சித்தர்கள்
முறியாதமுப்பூ வழலையினாலே
தறுகாமற்சொன்ன சவுக்காரமேசெய
மறினல்தரமுமே வாதத்துக்காகுமே. (65)

வாதத்துக்காகும் மயேசுரமூலங்காண்
போதமிகுந்த பொறியாற்கேதக்கும்
சோதியின்றூபந் துறந்துகிடக்குதோ
வாதிகளெல்லாம் மயங்கினவாறே. (66)

வாரேதங்காடியில் வழலையைவாங்குவார்
நீரேதோசெய்ய நிலையாமலூதுவார்
கூரேதுங்காணூர் குலாமர்கள்வாதிகள்
பேரேதுசும்மா பேரின்பஞானிக்கே. (67)

பேரின்பஞ்சென்று பெருத்தவழலையைச்
சார்வாயுரைத்தார் தானென்றுங்கண்டிலார்
மேருப்பமுக்க விதமுமறிந்திலார்
ஆரடாசித்த னறிவான்வழலையே. (68)

வழலைக்குளெண்ணெய் வளமாகத்தள்ளி
வழலைக்குக்காரங் கடுங்காரமேற்றி
வழலையைத்தொட்டு மாட்டச்சரக்குச்சாம்
வழலையினாலே மலைதான்பொன்னுமே. (69)

பொன்னுஞ்சகஸ்திரத் தெண்மாற்றுமட்டும்
பொன்னுமோமற்ற வழலைக்கொருமாத்துப்
பொன்னாகிலுமே பூட்டவறியாட்டால்
பொன்னுவதேது புகழ்பூவழலையே. (70)

பூவைத்தெளிந்தாற் புகழுஞ்சவுக்காரம்
பூவையறியாட்டாற் பொருளுமுதற்கெடும்
பூவென்றமுப்பூவைப் பூட்டவறியார்கள்
பூவென்றதாதி பூவேகுருவாமே. (71)

குருவொடுகெந்தியைக் கூட்டிக்கலந்திடு
குருவோடயத்தையுங் கூட்டியரைத்திடு
குருவோடுசூதத்தைக் கூட்டியரைத்திடு
குருவிடுரவியிற் குறையாதெண்மாத்தே. (72)

மாத்தாம்வழலையால் மலைகளுஞ்சுண்ணமாம்
சாத்தவேசுண்ணங் தடவப்பசும்பொன்னும்
நீத்தவேசுண்ணத்தில் நீறுஞ்சரக்கெலாம்
வேத்தவுபாசம் வெண்ணீறதாமே. (73)

ஆமேவழலை யடைவாகச்சொன்னேன்
பாமேவுடனே பதினெட்டுச்சித்தர்கள்

மோமேயிந்த முப்பூவழலையில்
தாமேசவுக்காரஞ் சரத்தார்பெரியோரே. (74)

பெரியோர்களெல்லாம் பிற்கருபேசி
அரிதிதுவென்று அளவற்றநூற்பாடித்
தெரியாமலங்கே செப்பினார்பூவைப்
பரியாசக்கூற்றாய்ப் பாடினார்கண்டேன். (75)

பாடினேன்காவியமெண் ணூற்றொருகோர்வை
கூடியெழுபத்தேழ் குறிக்கினேனானதில்
நாடியென் னூலை நயமாயறிந்தோர்கள்
ஆடுவார்வாச முனிக்கொப்பாரெனவே. (76)

ஒப்பாருமில்லை யொளியாங்குருநந்தி
செப்பியவாதந் திறந்தாரெனவே
அப்பனேமுதற்சிற் றருளென்றுவாதம்
முப்பூவழலை சவுக்காரமுற்றே. (77)

துர்வாசர் ஞான சூஸ்திரம் எஎ,

முற்றிற்று.

மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் க.ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிர தியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன் துணை.

ஒன்பதாவது:

யூகிமகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# தத்துவஞானம் ௱௫.

சத்தாகி நித்திய னந்தமாகிச்
 சகலவுயிர்க் காதார பூதமாகி
வித்தாகி வித்துள்விளை மணியுமாகி
 விளங்குகின்ற மதிகதிரு மிரண்டுமாகிப்
பத்தாகி யெட்டாகிப் பலவுமாகிப்
 பாழ்வெளிக்கு ளொளிவாகி ரூபாரூபச்
சித்தாகி நான்மறைகட் கெட்டாதாகித்
 திகழ்கின்ற சோதிதனைப் போற்றிக்காணே. (1)

காணாம லலைந்தார்கள் லோகத்தோர்கள்
 கருமிகட்குக் கிட்டாது கடினமப்பா
தோணாமற் கெட்டவர்கள் கோடாகோடி
 தொல்லையிலே விழுந்தார்கள் அனந்தங்கோடி
வீணாகத் திரிந்தார்கள் லெட்சங்கோடி
 மெய்க்குருவைக் காணாமல் விலகினார்கள்
சாணான வயிற்றாலே அலைந்தார்கோடி
 சளப்பட்டு மாண்டார்கள் கோடிதானே. (2)

மாளாம லிருப்பதற்கு வயணஞ்சொல்வோம்
 மகாரமொடு மங்கென்று மதுவில்வாங்கித்
தாளாமா லமட்டியே தன்னுள்வாங்கிச்
 சகாரமொடு மேற்சுழியுஞ் சங்கென்றாணிப்
பாழாகப் போகாமற் புருவம்பாரு
 பச்சைநிற மாயிருக்கும் பசுமைகாணும்
வீணாகப் போகாது வித்தையெல்லாம்
 மெய்யாகும் பொய்யல்ல வினவினோர்க்கே. (3)

ஓரான இதழுள்ளே அமுதமப்பா
ஊறிவரும் வழிகண்டா லுடனேசித்தி
ஈரான வாசியைநீ பிடித்தாயானால்
எப்போதும் இப்படியே யிருந்துவாழ்வாய்
தூரான மூன்றெழுத்தைக் கண்டாயானால்
துன்பமற்றுப் பேரின்பந் துலக்கமாகும்
ஏராத வாசியைத்தா னேத்திவைக்கும்
ஏகாந்த வெளிகாணும் இருள்காணாதே. (4)

காணவே அட்சரத்தின் கருவைக்கேளு
கனமாந்தம் பனமும்நம சிவயவென்றும்
தோணவே வசியம்யவ சிமநவென்றும்
சொல்லுச்சா டனத்துசிவ யநமவென்றும்
பூணவே அழைத்தல்வசி யநமவென்றும்
புகழாமோ கனமும்நய வசிமவென்றும்
ஆணவித்து வேடம்வய நமசியென்றும்
அமட்டுபே தனமுமந யவசியென்னே. (5)

என்னவே மாரணமாம் மசிவயநவென்றால்
எடுத்துரைத்த சாஸ்திரங்கள் சித்தியாகும்
நன்னவே அஷ்டகர்மம் ஆடுதற்கு
நலமாக இப்படியே யெடுத்துவோது
உன்னவே வாலைமூன் றெழுத்தைக்கூட்டி
ஓதிடவே யெட்டெட்டுஞ் சித்தியாகும்
மன்னவே ஒவ்வோரு கருமத்துக்கும்
மாட்டிவிடு லெட்சமுரு மருவியோதே. (6)

ஓமென்ற யெழுத்துக்கு வொளிவுகாணும்
உத்தமியாள் பதங்காணும் யோகமாகும்
நாமென்ற யெழுத்துக்கு நடனங்காணும்
நாதாந்தப் பிராணயஞ் சித்தியாகும்
மாமென்ற யெழுத்துக்கு மதியுங்காணும்
மகத்தான வெட்டவெளி அறிவிற்சேர்க்கும்
சீமென்ற யெழுத்துக்குத் தெளிவுகாணும்
சேர்ந்தாடு மட்சரங்கள் சிங்குவங்கே. (7)

வங்கென்ற யெழுத்துக்கு வகாரமாடும்
வரவழைக்கும் வித்தையெல்லாம் வசத்திலாடும்
யங்கென்ற யெழுத்ததுவே ஆயிபீடம்
அம்மையுட பதங்காணும் அறிவுதோணும்
றிங்கென்று யெழுந்தவிடம் கண்டாயானல்
நிலைக்குமடா உன்தேகம் நிசமாய்ச்சொன்னோம்
உங்கென்று உண்டவர்க்கு யெல்லாஞ்சித்தி
உத்தமியாள் பதமறிய உரைத்திட்டோமே. (8)

இட்டபடி இன்னமொன்று சொல்லக்கேளு
இன்பமுடன் சட்டைமுனி கற்பம்பாரு
விட்டகுறை வந்துவிட்டால் கற்பமுண்ணு
வேதாந்த மூர்த்தியென்றே விருதுவாங்கு
அட்டியொன்றுஞ் செய்யாதே ஆட்பார்க்காதே
ஆங்கார மாயையிலே அழுந்திடாதே
வெட்டவெளி யாகுமடா அறிந்தபேர்க்கு
மெய்ஞ்ஞானங் கண்டவர்க்கு வெளியுமாமே. (9)

வெளியான வெளிக்குள்ளே யிருந்தமூலி
வேகாமற் கொண்டுவந்து தயிலம்வாங்கிப்
பழியாதே காசிடைதான் கொண்டாயானல்
பறக்குமடா நரைதிரையும் பயந்தேபோகும்
அழியாது தேகமது அரனைக்காண்பார்
அப்பவல்லோ சித்தரெல்லாம் அழைத்துக்கொள்வார்
விழியான விழிதிறக்க மெய்யைக்காண்பாய்
வேதாந்த சாரமெல்லாம் வெளியாய்ப்போமே. (10)

போக்குடனே பூசையைத்தான் சொல்லக்கேளு
புத்தியுள்ள சிஷருக்குப் புகழுண்டாக
நாக்குவிட்டுப் பேசாதே வட்டம்போடு
நாயகியாள் முக்கோணம் நடுவேபோடு
ஆக்கமுடன் சூலமிட்டு அதுக்குள்நீதான்
அப்பாலே ஓமென்று அறிந்துகட்டி
ஊக்கமுடன் வடமுகமா யிருந்துகொண்டு
உத்திர வேணுமென்று மொழிந்திடாயே. (11)

மொழிந்திடவே வலக்கரத்திற் கிடத்தைவாங்கி
மோகனத்தைச் சாபத்தால் நிவர்த்திசெய்து
தெளிந்திடவே வேணுமென்று தாய்பதத்தில்
திவ்யமுள பத்திரமோ டுறைந்துவைத்துக்
குளிந்திருந்த அன்னமொடு அண்டஞ்சுத்தி
கொத்தோமீட அடைக்கிலேயுங் கூடவைத்துப்
பளிங்கொளிபோல் நின்றவட்குப் பழமுந்தேங்காய்
பாலோடு தேன்கரும்பு பூசிப்பாயே. (12)

பூசிப்பாய் தூபமொடு தீபங்காட்டிப்
போக்கோடெட் டெழுத்தாலர்ச் சனையேசெய்து
நேசிப்பா யுபசாரம் அநேகஞ்செய்து
நிஷ்டையுள்ள தாய்பதத்தை நினைவில்வைத்து
வாசிப்பாய் தோத்திரங்க ளனந்தங்கோடி
மனோமணியின் பதபூசை மகிழ்ந்துசெய்ய
ஆசிப்பா யதன்பிறகு ஆத்தாள்தந்த
ஆனந்த பூரணத்தை நிகழ்த்திட்டேனே. (13)

நிகழ்ந்தசீர்ப் பிருதிவு மப்புதானும்
நேரான தேயுவொடு வாய்வுமாகும்
அகழ்ந்தவா காயத்தோ டைந்துபூதம்
அரிதான பிருதிவு மண்ணுமாகும்
தகழ்ந்தவப்பு சலமாகும் நெருப்புந்தேய்வு
தாக்கான வாயுவது காற்றுமாகும்
இகழ்ந்தவா காயமது சத்தமாகும்
ஏற்றபிரு தீவுபொன் னிறமதாமே. (14)

ஆமேதா னப்புநிறம் படிகமாகும்
அக்கினியி னிறந்தானே சிவப்பதாகும்
காமேதான் வாய்வுநிறங் கறுப்பதாகும்
கார்மேகப் புகைநிறமா மாகாயந்தான்
தேமேதான் வர்னமுமீப் படியேயாகும்
சேர்ந்துநின்ற தெய்வத்தின் தலமேகேளாய்
போமேதான் பிருதிவிக்குத் தேவன்பிர்மா
பெரியசுவா திஷ்டான மிருப்பர்தாமே. (15)

இருப்பான வீடதுவு மூலாதாரம்
இதழாறு பிருதிவியின் பீசம்நவ்வாம்
மருப்பான மயிர்நரம்பு தசைதோலென்பு
மாசற்ற வப்புவுக்கு விஷ்ணுதெய்வம்
செருப்பான மணிபூர வீடுமாகும்
சிறுபிறைபோற் பத்திதழ்கள் தானேசுற்றி
அருப்பான வப்பினுக்குப் பீசம்மவ்வாம்
அதின்கூறைத் தான்கேட்பா யுதிரஞ்சீயே. (16)

சீயான நீரோடு மூளைமச்சை
தேய்வுக்கு ருத்திரன்றன் றெய்வமாகும்
மூயான முக்கோண மகத்தாம்வீடு
முயற்சியா யீராறு மிதழ்தான்சுற்றில்
தேயான சிவ்வதுவுந் தேய்வுபீசம்
சிதையாம லிதழுக்குட் சேர்ந்துநிற்கும்
ஆயான வாகாரந் துஞ்சல்போகம்
அவருடைய கூறதுதான் பயமுஞ்சோம்பே. (17)

சோம்பான வாயுவுக்கும் மகேசன்றெய்வம்
சோடசமா மிதழோடே விசுத்திவீடு
ஆம்பான வாயுவுக்கு வவ்வுபீசம்
அவருடைய தன்கூறு உளத்தல்நிற்றல்
வாம்பான வாடலோ டிருத்தலோடல்
வசையான வறுகோணங் குடியிருப்புத்
தேம்பான வானமாக் கினையினுள்ளே
சிதையாம லிரண்டிதழோ டிருக்கும்பாரே. (18)

இருக்கின்ற வாக்கினையின் கூறுகேளாய்
ஏற்றகா மக்குரோத லோபமோகம்
மருக்கின்ற மதமுமாச் சரியத்தோடு
வானுக்குச் சதாசிவமே தெய்வமாகும்
பிருக்கின்ற வாகாச பீசம்யவ்வாம்
பேரான வைம்பூதப் பிரிவுமாகும்
தெருக்கின்ற தசநாடிச் செயலையெல்லாம்
செப்புகிறேன் தெளிவாகச் சிறந்துகேளே. (19)

சிறந்தஇடை பிங்கலையுஞ் சுழினையோடு
சிறப்பான காந்தாரி யத்திச்சிங்குவையாம்
பிறந்தஅலம் புருடனொடு குகுதன்றானும்
பேரான சங்கினியும் வயிரவன்றான்
திறந்தவிவை பத்துந்தான் நாடியாகும்
திரிமூன்று நாளையினி லொடுங்கும்பாரு
மறந்தஇடை பிங்கலையுஞ் சுழினைமூன்றும்
வாதத்தி லொடுக்கமென வகுக்கலாமே. (20)

வகுக்கவிதின் குணங்கன்ம மொடுகுளுத்தி
மலக்கட்டு வாதத்தின் கூறுமாகும்
அருக்ககாந் தாரியத்தி சிங்குவையாம்
அலம்புருட னிதுநாலும் பித்தக்கூறு
உருக்கவே யிதின்குணங்க ளுஷ்ணந்தாகம்
உயர்மோக முழலைவாய் வும்மேகோக்கும்
நருக்கவே நாடிபட படத்துடிக்கும்
நாசமாம் பயமோடு கோபமாமே. (21)

ஆம்குகுதன் சங்கினியும் வயிரவன்றான்
அரிதான சிலேட்டுமத்தி லடங்கும்பாரு
மாமேவா யழற்பரியு மிதன்றன்கூறு
மலர்விழியுங் குழிந்துமுகம் வேர்த்திருக்கும்
தேமேதான் நெஞ்சடைக்குந் திசைசலங்கும்
சிறுகாலுந் தண்ணீர்தா னுழற்றிவிக்கும்
பாமேதான் பத்தினிடப் பண்புமாகும்
பரிகாரஞ் செயுமவர்க்குப் பரிசிதாமே. (22)

பரிசான விடையின்பிங் கலையுமொக்கப்
பயின்றதோர் குதத்தினடி மூலம்பற்றிச்
சுரிசான பாகங்கண் மாறிமாறிச்
சுழிமுனையின் றன்னோடு நெட்டிட்டேறும்
திரிசான திருவணைக்கால் போலேமாறிச்
சிரசளவு தான்முட்டித் திரும்பமீண்டு
விரிசான மூக்குகடப் புருவம்நெற்றி
மீண்டுமே திரும்பியந்த மூலம்புக்கும். (23)

புக்குகின்ற காந்தாரி நாபிபற்றிப்
பொருநரம்போ ரேழினுக்கும் ரூபமாகிச்
சிக்குகின்ற தெசதாய மேலேயோடிச்
சிரசளவு நீங்கியே கண்டம்புக்கி
நக்குகின்ற நாவடியிற் சிறந்திருக்கும்
நலமான வத்திசிங் குவையிரண்டும்
விக்குகின்ற மூலத்தின் மேலேபற்றி
மேலேறி யிரண்டுசெவி தனைத்தொட்டாமே. (24)

தொட்டேறி நரம்பெல்லாங் கதந்துவீசித்
துறையான நயனமிரண் டினிலேநிற்கும்
மட்டேறி யலம்புருடன் வயிரவன்றான்
மாசற்ற வடிமூலங் தன்னைப்பற்றிக்
கட்டேறி யிரண்டுநன்னங் தனிலேநிற்கும்
கனிவான சங்கினியுங் குகுதன்றானும்
நட்டேறி நாபித்தா னத்திற்றோன்றி
நலமான குதமளவும் நடிப்பர்பாரே. (25)

பார்க்கவே சடந்தான்சென் மிக்கும்வாறு
பகர்சுக்லச் சுரோணிதத்தி னோடேகூடி
மூர்க்கமேசிப் பையின்முத் துதிர்ந்தாற்போல
முனையறுகு நுனிபனிப்போற் சுரோணிதத்திற்
றூக்கசுரோ ணிதந்திரண்டு சொரூபமாகித்
தமர்வாசற் றனைமூடும் வாயுதானும்
வேர்க்கவே வேலியைப்போல் வளைந்துகாக்கும்
விந்துவுடன் பிராணவாயு விளக்குமாமே. (26)

விளக்குகின்ற வபானவாயு வெளியில்நிற்கும்
விந்துவுடன் பிராணவாயு வுடல்கலக்கும்
களக்குகின்ற வுதானனது கருவளர்க்கும்
கருவுக்குள் வியானன்மூன் றுங்கலக்கும்
இளக்குகின்ற வைந்தாநாள் கருப்போலாகும்
ஈரைந்தா நாள்தனிலே திரளும்பாரு
முளக்குமூ வைந்தாநாள் முட்டைபோலாம்
மூதற்றிங்கள் கம்பமாய் முனைபோலாமே. (27)

ஆமிரண்டாந் திங்கள்தலை முதுகுதோன்றும்
அடுமூன்றாந் திங்களரை விரல்கைகாலாம்
நாமேநா லாந்திங்கள் பதமூக்காகும்
நலவைந்தாந் திங்கள்செவி நாவுகண்ணும்
வாமேயா றுந்திங்கள் நகங்களாகும்
மருவேழாந் திங்கள்மயிர் நரம்பெலும்பாம்
தாமேதான் சடமோடு சலமலங்கள்
தயங்கியவோர் தாதுவொடு மூச்சுண்டாமே. (28)

மூச்சுண்டா மெட்டினிற்று புண்டசாரம்
முனையான கதிர்போல அருவிபாய்ந்து
தோச்சுண்ட கபாலத்தின் வழிமேயசென்று
சுத்தசலம் பிள்ளைக்குத் தொடர்ச்சியாகும்
பேச்சுண்டா மொன்பதிலே யறிவுதோன்றிப்
பிறப்பித்தோன் றனைநினைத்துத் தவமேசெய்து
கூச்சுண்டாங் கும்பிட்டே யருள்வாயென்றுங்
கொடியபத்தாந் திங்கட்கும் பார்வையாமே. (29)

பார்வையா மபானன்கீழ் நோக்கிவைக்கும்
பாலகனும் பார்தனிலே•பயின்றபின்பு
ஆர்வையாய் முன்னறிவு மசதியாகி
அழுதுகொண்டு வாதமத்திற் கருவ்பாசம்
மார்வைமா யாசத்தி கிரியாசத்தி
மயக்கத்தி லறிவழிந்து வினையினாலே
கோர்வையாய் விதியும்வந் துற்பவித்துக்
கொடிபடர்ந்த சுரைபோலச் சென்மமாச்சே. (30)

சென்மசரீ ரந்தொண்ணூற் றாறதென்னச்
செப்புமங் குலமவர்கள் கையாலேதான்
தன்னரச மிரத்தமாங் கிசமுமேதை
தசைமச்சை யோடுசுக்லந் தாதேழாகி
உன்னமா முருவென்னுஞ் சரீரமாகி
உயர்சட்டை ரசஞ்சேர்ந்து ரோகமாகி
வன்னமாம் வாதபித்த சேட்பமாகி
வருகின்ற சடத்தினுட வண்மைகேளே. (31)

வண்மையாம் வாதமது முப்பதாண்டு
மட்டுமே வளருகின்ற காலமாகும்
பெண்மையாம் பித்தமது முப்பான்மூன்று
பேணியே வளருகின்ற காலமாகும்
திண்மையாஞ் சேட்பமது முப்பத்தேழு
செயலோடு வளருகின்ற காலமாகும்
உண்மையாய்ச் சடமதனுக் கொருநூறுண்டு
உகாந்தமாங் கருவிகளி னுறுதிகேளே. (32)

உறுதியாம் பூதாதி யோரைந்தாகும்
உயர்கின்ற பொறியைந்து புலனைந்தாகும்
கறுதியாங் கன்மவிந் திரியமைந்தும்
கடிதான ஞானவிந் திரியமைந்தும்
திறுதியாந் தீதாய கரணம்நான்கும்
திறமறிவு ஒன்றுதச நாடிபத்தும்
மறுதியாம் வாயுவது பத்துமாகும்
மகத்தான விஷயமஞ்சு கோசமஞ்சே. (33)

அஞ்சவே யாதார மாறுமாகும்
அரியமண் டலமூன்று மலமூன்றாகும்
தொஞ்சவே தோஷமுமூன் றீஷணைதான்மூன்று
தோதகமாங் குணமூன்று வினையிரண்டாம்
தஞ்சவே ராகமெட்டு வவத்தையைந்து
தயங்கியதோர் கருவிகடான் றெண்ணூற்றாறு
ஒஞ்சவே யொவ்வொன்றாய் விரித்துச்சொல்வேன்
உறுதியாம் பூதாதி யுரைக்கக்கேளே. (34)

உரைக்கவே பிருதிவு மப்புதேய்வும்
உரிமையாம் வாய்வோடா காசமாகும்
புரைக்கவே பூதந்தா னஞ்சதாச்சு
பொறியைந்தின் விபரமதைப் புகலக்கேளாய்
திரைக்கவே சுரோத்திரமுந் தொக்குசட்சு
சிங்குவையாக் கிராணமிவை யாகவைந்தும்
துரைக்கவே சுரோத்திரந்தான் செவியுமாகும்
தொக்காவ துடம்பென்றே சொல்லலாமே. (35)

சொல்லவே சட்சதுதான் கண்ணுமாகும்
தூயசிங் குவைநாக்காக் ராணமூக்காம்
புல்லவே புலனைந்தும் புகலக்கேளு
புகழான சத்தமொடு பரிசம்ரூபம்
நல்லவே ரசகெந்த மாகவைந்தாம்
நலமான சத்தமது கேள்வியாகும்
செல்லவே செவியினிடக் கூறதாகும்
செய்பரிசஞ் சுகதுக்க மறிதல்காணே. (36)

காணவே தேகத்தின் கூறதாகுங்
கண்ரூப மாவதுதான் காண்பதாகும்
நாணவே கண்ணினிடக் கூறதாகும்
ரசமாவ தறுசுவையை யறிதலாகும்
பூணவே நாக்கினிடக் கூறதாகும்
புகலும்நற் கந்தந்துர்க் கந்தங்காணல்
தோணவே மூக்கினிடக் கூறதாகும்
சுகமான பொறியைந்தின் சூக்ஷந்தானே. (37)

தானான கன்மவிந் திரியமைந்தின்
சார்பதனைச் சாற்றிடவே வாக்குபாதம்
பானான பரவியபா யுருமுபஸ்தம்
பகரைந்தின் பிரிவதுதான் வாக்குவாயாம்
கானான பாதமது காலேயாகும்
கனமான பாணியது கையுமாகும்
ஊனான பாயுருதா னபானமாகும்
உபஸ்தமது லிங்கமென வுரைக்கலாமே. (38)

ஆமென்ற கன்மவிந் திரியமைந்தின்
அடைவெல்லாஞ் சொன்னதன்பி னப்பாற்கேளாய்
நாமெனுங்கன் மேந்திரிய விஷயமைந்தை
நவின்றிடவே வசனமொடு கமனமாகுந்
தாமென்ற தானமொடு விசர்க்கானந்தம்
தாக்காக வீதைந்துஞ் சாற்றினேனுன்
பாமென்ற விதனுடைய விபரமெல்லாம்
பரிவாக வொவ்வொன்று யுரைக்கின்றேனே. (39)

உரைக்கதுவே வாக்கதுதான் வசனிப்பாகும்
உறுதியாம் பாதமது நடத்திவைக்கும்
பரைக்கவே பாணிகையால் வழங்கிவிக்கும்
பாயுருதான் மலந்தனையே பிரித்துவைக்கும்
துரைக்கவே யுபஸ்தமது சுக்லமூத்ரம்
துரிசாக விடுவிக்குஞ் சுப்ரமாகும்
நரைக்கக்கன் மேந்திரிய விஷயமைந்தின்
நலமதனை நவின்றிடவே நண்பாமென்னே. (40)

என்னவே கரணமது நாலதாகும்
ஏற்றமனம் புத்தியாங் காரஞ்சித்தம்
நன்னவே நாலினுட பிரிவைக்கேளாய்
நலத்தமன மாவதொன்றைத் தானினைக்கும்
பொன்னவே புத்திவிசா ரிக்குமத்தைப்
போராமாங் காரங்கொண் டெழுப்பிவைக்கும்
தென்னவே சித்தமதை முடிப்பிவிக்கும்
சிறந்தவந்தக் காரணந்தான் நான்குமாச்சே. (41)

ஆச்சுதறி வொன்றின்விசா ரணையைக்கேளாய்
அனைத்தையுமே பார்த்திருந்தங் ககண்டந்தானுய்க்
கோச்சுதே குருவாய்த்தத் துவங்களாகிக்
கொடியதீ வினையாய்நல் வினையுமாகிப்
போச்சுதே பெண்ணுய்ப்பிர பஞ்சமாகிப்
புகலரிய நிர்க்குணநின் மலமுமாகித்
தீர்ச்சுதே சிவமாகிச் சீவனுகிச்
செழுஞ்சுடரின் கதிரொளியாய்ச் சிறந்தவாறே. (42)

வாறுன தத்துவமுப் பத்துந்தானே
மன்னியதோ ராத்துமதத் துவமேயாகும்
நாறுன நாடிபத்தின் விபரங்கேளாய்
நயந்தசுழி முனையிடைபிங் கலைகாந்தாரி
ஆறுன அத்தியுஞ்சிங் குவையினேடு
அலம்புருடன் குகுதன்சங் கினியீரைந்து
மூறுன விதன்பிரிவை முன்னேசொன்னேன்
மூர்க்கமாம் வாயுபத்தின் முறைமைபாரே. (43)

முறமையாம் பிராணனபா னன்வியானன்
    மூர்க்கமா முதானனொடு சமானன்நாகன்
திறமையாங் கூர்மனொடு கிருகரன்றான்
    தேவதத்த னொடுதனஞ் சயனுமாகும்
பிறமையா மிதின்பிரிவு பிராணவாயு
    பெருமூலா தாரத்திற் றோன்றித்தானே
உறமையா மசவையெனும் மந்திரத்தால்
    ஓங்கார முதலெழுத்தை யுன்னித்தானே. (44)

உன்னிமே லெழுமீரா றங்குலந்தான்
    உயர்வாமெட் டங்குலந்தான் மீளவாங்கி
நன்னிநா லங்குலந்தான் பாழிற்பாயும்
    நலமான குணமெல்லாம் பிராணவாய்வு
பன்னீல வர்னந்தே வதைதானிந்து
    பலபலவாம் பொசிப்புஞ்சீ ரணமதாக்கும்
சொன்னமுந் நூற் றறுபான்நா ழிகைக்குமூச்சு
    சொலநாளொவ் வொன்றுக்குச் சுவாசங்கேளே. (45)

நாளொன்றுக் கிருபத்தோ ராயிரத்து
    நவிலறு நூ றெழுந்திருக்குஞ் சுவாசந்தானே
கோளொன்றிப் பதினூலா யிரநானூறு
    குவிமூலா தாரத்துள் ளொடுங்கும்பாரு
பாளொன்மீற ழாயிரத்தீர் நூறுமூச்சு
    பாழாகப் பாய்ந்திடுமென் றறிகப்பின்னை
ஏளொன்றி யிதனையே யுட்சாதித்தால்
    எப்போதும் பாலரா யிருக்கலாமே. (46)

இருக்கவே அபானத்தி னியக்கங்கேளாய்
    ஏசுவாதிஷ் டானத்துற் பத்தியாகும்
மருக்கக்கீழ் நோக்கிமல சலத்தைத்தள்ளும்
    வாகாக நிறந்தானும் பச்சையாகும்
அருக்கவே யாசனத்தைச் சுருக்கிவைக்கும்
    அன்னசா ரத்தையெலாஞ் சேரவைக்கும்
திருக்கவே தேவதையும் வரதராஜன்
    திறமான வியானனுடை சிறப்பைக்கேளே. (47)

சிறப்பான வியானனது தோளில்நின்று
திகழெழுபத் தீர்சகஸ்த்ர நாடிசென்று
தறுப்பான சரவசரந் தனிலேநின்று
தானீட்டல் முடக்கல்பரி சங்களாயும்
அறப்பான அனசாரந் தன்னைத்தானே
அங்கங்கே நிறைப்பித்தாக் கயைரக்ஷிக்கும்
பறப்பான ததுபாவ வர்னமாகும்
பாரினிலத் தெய்வந்தா னேமனுமே. (48)

ஏமனு முதானனுட வேற்றங்கேளாய்
எழிலான வுதாவக் கினியெழுப்பிப்
பூமனு மன்னசா ரந்தனைத்தான்
பொருந்தவே சமீபித்து நிறுத்திவைக்கும்
காமனு யெடுப்பித்துங் கலக்கிவைத்து
கலக்கியே வருந்திவைக்கும் வளப்பமாகும்
வீமனு மின்னினுட வர்னமாகும்
விளங்கியதோ ரக்கினிதான் தெய்வமாமே. (47)

ஆமென்ற சமானனுட வண்மைகேளாய்
அடிநாபி பாதங்கஞ் சமன்கொண்டேகி
வாமென்ற வாய்வுகளை மிஞ்சொட்டாமல்
மடக்கியே சமன்செய்து மருவப்பண்ணும்
தாமென்ற வறுசுவையைத் தண்ணீரன்னம்
சமன்செய்து சரீரமெல்லாஞ் சாரப்பண்ணும்
வாமென்ற வர்னமது புட்பராகம்
மகத்தான தெய்வமா தித்தனுமே. (50)

தெய்வமாம் நாகனுட சிறப்பைக்கேளாய்
செயலான சகலகலை யாக்கிவைத்து
பைவமாய்ப் பர்டிவைக்கும் விழிப்பிக்குங்கண்ணை
பாங்காகச் சிமிட்டுமுரோ மம்மசைக்கும்
பெய்வமாம் பொன்னினுட வர்னமாகும்
பெரிதான தெய்வந்தா னனந்தனுகும்
கொய்வமாங் கூர்மனுட குணத்தைக்கேளாய்
கொடியமனந் தனினின்று நிமைக்கொட்டாமே. (51)

நிமைக்கொட்டுங் கொட்டாவி தானுங்கொள்ளும்
நேராக வாய்மூடும் பெலனுண்டாக்கும்
கமைக்கொட்டுங் கண்விழிக்கும் மூடப்பண்ணும்
காக்ஷியெல்லாங் காண்பிக்கும் விழிநீரோடும்
விமைக்கொட்டும் வர்னமது வெளுப்பதாகும்
மேலான தெய்வந்தான் விஷ்ணுவாகும்
கமைக்கொட்டுங் கிருதகான் குணத்தைக்கேளாய்
கசிநாவு நாசிதனிற் கசிவுண்டாமே. (52)

கசிவுண்டாங் கடும்பசியின் கன்மஞ்செல்லும்
கண்ணியே யிருத்தலொடு போதலாகும்
துசிவுண்டாய் தும்மலோ டிருமலுண்டாம்
சுயமான வர்னமது கறுப்பதாகும்
தெசிவுண்டாந் தெய்வமது சிவன்றானாகும்
திரோதயையிற் கூறுன திறமுமாகும்
குசிவுண்டாந் தேவதத்தன் குணத்தைக்கேளாய்
குடிலமாய்ச் சோம்புமுறித் திடுதலாமே. (53)

முறித்திடுதல் முயற்சியாய் விழிக்கும்போது
முகுளிதமாய்க் கண்ணினையே யுலாவவைத்தல்
தரித்திடுதல் சண்டைகொளற் றூக்கல்பேசல்
சண்டாளக் கோபத்தை யுண்டுபண்ணல்
குறித்திடுதல் குதங்குய்யத் தானத்தன்றிக்
கூர்ந்ததெய்வந் தேவேந்திரன் படிகவர்னம்
தறித்திடுதற் றனஞ்சயனைச் சாற்றக்கேளாய்
சாங்கமாய் மூக்கில்நின்று தடிக்குந்தானே. (54)

தடித்துமே உடம்பெல்லாம் வீங்கப்பண்ணும்
தந்திரமாய்க் கன்னத்திற் சமுத்ரம்போலத்
திடித்துமே சுந்தரமாய்க் கோஷமாகித்
திரண்டுமே துஞ்சியகா லந்தனிற்றான்
வடித்துமே வாயுவெல்லாம் போனபின்பு
வளமான தலைவெடிக்கு மூன்றுநாளில்
அடித்துமே தலைவெடித்தா லப்பாற்போகும்
அதின்வர்னம் நீலவர்ன மறிந்துகொள்ளே. (55)

அறிந்ததெய்வந் தான்தன்வந் திரியேயாகும்
　　ஆகவிந்த வீரைந்து மாதிவாய்வு
வெறிந்ததோர் விஷயமைந்தின் விபரங்கேளாய்
　　மீறியதோ ரமாவாசைப் பருவமாகும்
தறிந்தசல வசையமல வசையத்தோடு
　　தாக்கான சுக்கிலமாம் வசையமைந்தும்
எறிந்ததோ ரமாவாசை யன்னம்தண்ணீர்
　　இருக்குமிட மென்றுதா னியம்பிடீரே. (56)

இயம்பிடவே பருவசையந் தான்விளம்பில்
　　இயன்றவன்னந் தண்ணீர்தா னேகமாய்ந்து
புயம்பிடவே பீரியுமிடம் அமவசையம்
　　புசித்ததெலா மலமாகிப் போக்குவைக்கும்
தயம்பிடவே சலவசைய மருந்தும்நீர்தான்
　　தங்கியே யிருக்குமிடஞ் சலப்பையாகும்
சுயம்பிடவே சுக்கிலமா மசயஞ்சொல்லில்
　　சுகமான சுக்கிலப்பை யென்றுசொல்லே. (57)

சொல்லான விஷயமைந்தின் னுருகுப்புச்சொன்னேன்
　　சூட்சமாங் கொஞ்சமைந்தின் சூனுக்குக்கேளாய்
அல்லான வன்னமயங் கோசமயத்தோடும்
　　அரிதான பிராணமய கோசமாகும்
மல்லான மனோமயவிக் யானமயமாகும்
　　மகத்தான வானந்த மயமுமைந்து
மெல்லான விதின்பிரிவு விளம்பக்கேளாய்
　　மெய்வாய்கண் மூக்கோடு செவியுமாமே. (58)

ஆமென்ற வைம்பொறியில் மண்ணின்கூறுல்
　　அன்னமய கோசத்தி லப்பணேந்தால்
ஊமென்ற வூணுண்டாம் பிராணமயகோசம்
　　உத்தியிதிற் றேயுவந்தால் புத்தியுண்டாம்
மாமென்ற மனோமயமாங் கோசமாகும்
　　வாயுவிதில் வந்தடைந்தால் விகாரமுண்டாம்
நாமென்ற ஞானமய கோசப்பேராம்
　　நலத்தவா தம்வந்தால் சுகமுண்டாமே. (59)

வந்தாலா னந்தமய கோசப்பேராம்
மகத்தான கோசமைந்தி லெடுத்ததேகம்
குந்தான கோசமைந்தின் குணத்லைதச்சொன்னேன்
குறிப்பான வாதார மாறுங்கேளாய்
முந்தாமூ லாதாரஞ் சுவாதிஷ்டானம்
முதிர்மணிபூ ரகமனு கதம்விசுத்தி
அந்தாலாக் கினையுமா தாரமாகும்
அடுக்கான வாதாரத் தாண்மைகேளே. (60)

கேளேமூ லாதாரங் குதங்குய்யத்தும்
கெடியாக நடுவிருக்கு மபானத்தின்மேல்
வேளைவீ ணுதண்டின் கீழிருக்கும்
மிக்கநடு வேரங்கு லப்ரமாணம்
மூளேமுக் கோணம்நா லிதழ்தானுகி
முனிந்தநா லிதழ்நாலட் சரமுடைத்தாய்
வாளேமுக் கோணநடு மந்த்ரறீங்காரம்
வல்லபையாஞ் சத்திவலப் பக்கமாமே. (61)

பக்கமா மந்திரமும் ஸ்ரீங்காரமாகும்
பகரான தெய்வம்விக்கி னேசுரன்றான்
வக்கமா மூலம்வங் கெனநிறுத்தி
வாசியைநீ மறவாமல் மாட்டியூதி
ஒக்கமா மூலங்கீ முடியிற்றானும்
ஓங்காரக் கம்மதி லடியிற்கட்டி
இக்கமா மிருவரையுந் தெரிசித்தக்கால்
இகபரமும் வெளியாகி யேறலாமே. (62)

ஏறவே பளிச்சென்று மூலத்தீதான்
இதற்குமே லிரண்டாமங் குலத்தின்மேலே
கூறவே நால்வட்ட மாறிதழ்தான்
குறிசுவாதிஷ் டானமுமின் னெளியேயாகும்
ஆறவே யாறுமட்சர முடைத்தாய்
அதற்குள்ளே பிருதிவிதான் குடியிருப்பாம்
வேறவே வேதந்தா னிருக்கோடெல்லாம்
விளங்கியதோ ரக்ஷரமும் நகாரமாமே. (63)

நகாரமா மெழுத்ததுவும் பிரமனாகும்
லவ்வான பீசமது மண்ணுக்காகும்
உகாரமா மந்திரத்லதை யுன்னிக்கொண்டு
உயர்வாய்வைக் கும்பிக்கி லறிவுவொன்றும்
சிகாரமா முப்புரிநூற் சிரசுநா லு
சிறந்தசரஸ் வதியுமங்கே தெளிவாய்க்காணும்
பகாரமாய்த் தெரிசித்துப் பழக்கம்பண்ணப்
பாருலக மயக்கமெல்லாம் பண்பதாமே. (64)

பன்மையா மாருமங் குலத்தின்மேலே
பதிந்தபிறை போலமணி பூரகந்தான்
தொன்மையாஞ் சுற்றிலும்பத் திதழதாகிச்
சுயம்பான வக்ஷரமும் பத்துந்தானய்
அன்மையா மப்புதனுக் கிடமதாகி
அதற்குள்ளே தெய்வந்தான் விஷ்ணுவாகித்
தன்மைபக்கச் சத்திலட் சுமியதாகும்
தயங்காத வக்ஷரம காரமாமே. (65)

மகாரமா மக்ஷரந்தான் விஷ்ணுவாகும்
மகத்தான மவ்வதுவு மப்புபீசம்
விகாரமாம் வேதமது யசுருவாகும்
மெய்நிறைந்த கவுத்துகபஞ் சாயுதங்கள்
நிகாரமாம் லட்சுமிதான் பாகமாகி
நேர்மையாய் வாசியைமங் கெனநிறுத்தி
உகாரமா யூதின லுலகவாழ்க்கை
ஒருகொடியில் வெளியாகு மூணிப்பாரே. (66)

ஊணியிதன் மேலிருநா லங்குலந்தான்
உத்தமமா மனாகதத்தின் வீடுமாகும்
தோணிதிரி கோணமுமீ ராறிதழ்தான்
சுற்றிலுமே பனிரண்டட் சரமுடைத்தாய்
சேணியே தேயுவுக்கங் கிருப்புமாகிச்
சிகாரமா மெழுத்தாகிச் சிறப்புமாகிப்
பூணியே பூதபீசம் ரவ்வுமாகிப்
புகழான ருத்திரனும் புரிந்தார்பாரே. (67)

புரிந்திருந்தார் சிகாரத்தில் ருத்ரன்ருத்ரி
புகழாக வாசிவைத்துச் சிங்கென்றாணு
கரிந்திருந்த காயமுமோ வாலையாகும்
கனிசாம வேதத்தின் கருத்துந்தோன்றும்
பரிந்திதற்கு மேற்பனிரண் டங்குலந்தான்
பார்வையாய் மேலேறி விசுத்திவீடு
அறிந்தாறு கோணசோ டசமிதழ்தான்
அதிலேதா னீரெட்டட் சரமுமாமே. (68)

ஆமெனவே வகாரமறு கோணமத்தி
அமருமகே சுரன்மகேஸ் பரியுமாக
வேமெனவே யதர்வணவே தத்தோடொக்க
மிக்கான வாயுவது மிதழுக்குள்ளே
போமெனவே பீசந்தான் யவ்வுமாகும்
புகழாகக் கும்பகஞ்செய் தூதியூதி
வாமெனவே வங்கெனவு மிறுத்திப்பார்க்க
வயசெல்லா மொருநாளாய் மனதிற்காணே. (69)

காணவிதன் மேலீரெட் டங்குலந்தான்
கண்டமா ருதம்புருவ மஃவாயாகி
ஊணவே யிரண்டிதழா யோங்கிநிற்கும்
உற்றுநின்ற வட்சரமு மிரண்டுமாகும்
ஆணவே நடுவுக்குள் யகாரம்நிற்கும்
ஆக்கினையின் வீடாகும் விசும்பிருப்பு
பூணவே பூதபீசம் யவ்வுமாகும்
புகழான மாணிக்கப் பிரபையவ்வே. (70)

யவ்வுக்குட் சதாசிவமுஞ் சத்திநிற்கும்
யங்கென்று கும்பித்தா லநேகஞ்சித்தி
மவ்வுபர மானந்த மருவிநின்று
மகிழ்ச்சியாங் கருவிகளி னிடமதாகி
அவ்வுடமைம் புலன்றனையு மறியப்பண்ணி
அறிவோடு நினைவுதனின் மயக்கத்தாட்டி
உவ்வுமுள்ள படிநடத்திக் காண்பனகேட்பனவாய்
உகந்துகுரு வெழுந்தருளி வியார்த்திப்பாரே. (71)

பார்க்கவே யாதார மாறுமாச்சு
பரிந்திட்ட தத்துவங்கண் முப்பத்தாறும்
சேர்க்கவே சுவதத்வ மாகுங்கண்டீர்
சிறந்திருந்த மண்டலங்கண் மூன்றுங்கேளாய்
ஆர்க்கவே அக்கினிமண் டலத்தினோடு
அலரிமண் டலமிந்து மண்டலந்தான்
தோர்க்கவே யிதன்சூக்ஷி சொல்லக்கேளாய்
சுருதியா மூலமென்ற தொடர்ச்சிதானே. (72)

தொடர்ச்சியாஞ் சுவாதிஷ்டா னத்தின்கீழே
சுகமாக மையமணி மண்டலந்தான்
படர்ச்சியாம் முச்சுடராய் மூலமட்டும்
பரவிசுவா திஷ்டான மட்டுநிற்கும்
மடர்ச்சிமணி பூரமனு கதத்தின்மையம்
வளையம்போற் சூரியமண் டலந்தான்நிற்கும்
அடர்ச்சிமணி பூரமனு கதத்திற்றானே
அடர்ந்தேறுஞ் சூரியமண் டலந்தான்பாரே. (73)

பாரென்றாற் சும்மாதான் பார்க்கப்போமோ
பறந்தோடும் வாசியைநீ மாட்டிப்பாரு
வேரென்றால் விசுத்திமேலாக் கினையின்கீழே
விளங்கியெழுஞ் சந்திரமண் டலந்தான்பாரு
தூரென்றாற் றுவாதசாந் தத்தின்மட்டும்
சுடரொளியாய்ப் பிரகாச மாகிநிற்கும்
மூரென்றான் மண்டலங்கண் மூன்றுமாச்சு
மூர்க்கமா மலமூன்றின் முடிவுகேளே. (74)

முடியான வாணவமு மாயைகாம்யம்
முயற்சியா யிதின்பிரிவான் முடியுமாறு
திடியான செம்பினிற்றான் களிம்புபோலும்
சிறுநெல்லி னுமிபோலு மாத்துமாவை
முடிவான மேலெழுவொட் டாமற்காத்து
முடிவித்துத் தன்னுதென்றே காத்திருக்கும்
மடிவான மாய்கையதா ணவத்தைக்கொண்டே
வருகிறது தெரியாமல் மடிக்குந்தானே. (75)

மடிக்கின்ற காமியங்கண் டத்துக்கெல்லாம்
மகிழ்ந்திடுதன் மாயைமுற்று விங்குநிற்றல்
துடிக்கின்ற மலமூன்றின் செயலுமாச்சு
தோஷமூன் றுவனவாஞ் சுளுவுகேளாய்
நடிக்கின்ற வாதபித்த சேட்பமூன்று
நலமான விதின்பிரிவு நாட்டக்கேளாய்
வடிக்கின்ற வாயுவது நிலைகலங்கி
வாதமா மக்கினியு மார்க்கமாமே. (76)

மார்க்கந்தான் பித்தமங்கி யாதாரத்தை
மசக்கிவைத்து மாயையுடன் வருத்திவைக்கும்
தூக்கந்தான் சேட்டுமநீர் மிகுதியாக்கித்
துவாரங்க டோறுமிடை விடாமல்நிற்கும்
மூர்க்கந்தான் ஶ்ரேஷமிது மூன்றுமாச்சு
மூண்டதோ ரீஷணைகள் மூன்றைக்கேளு
வேக்கந்தா னர்த்தவீ ஷணையும்லோக
வீஷணையுங் காமவீ ஷணைமூன்றுச்சே. (77)

ஆச்சென்ற மூன்றையுந்தா னறையக்கேளு
அதிகமாம் அர்த்தவீ ஷணைகுணந்தான்
வேச்சென்ற வர்த்தமுமே லாசைகொள்ளல்
விளங்கியதோர் லோகவீ ஷணையைக்கேளாய்
காச்சென்ற காணியுட னுறவுந்தேடிக்
காரியங்க ளதின்மேலே யாசையாகும்
ஆச்சுகாம வீஷணைகா மியத்தைத்தேடி
யாசையது படுதலீ ஷணைமூன்றுமே. (78)

மூன்றான பின்புதான் குணந்தான்மூன்று
மொழியவே ராசததா மதசாத்வீகம்
வேன்றான விதின்பிரிவு விளம்பக்கேளாய்
வெகுளிபேசா திருத்தல்வேண் டிக்கொடுத்தல்
தான்றான தன்னைச்சார்ந் தாரைக்காத்தல்
தகமையுட னுயிர்களைத்தம் முயிர்போலெண்ணல்
பான்றான பகைவரைவென் றிடுதல்நீங்கல்
பலகலைக ளறிதல்பயில் பண்புண்டாமே. (79)

உண்டுலகுக் கோருறுதி யென்னவாழ்தல்
உண்மையாய் நலந்தெரிதல் புகழேபூண்டல்
தண்டுதா டாண்மையொடு மேன்பாடான
சாற்றியதோர் குணம்ராச தத்துக்காகும்
மிண்டுதா மதகுணமு மேதோவென்னில்
மிகுதியாய் வஞ்சனையே செய்தலாகும்
வண்டுபா டொழிதல்போ ராடல்வாது
வணக்கமில்லா வெகுளியென விளம்பலாமே. (80)

விளம்பலே செய்நன்றி மறுத்தல்விந்தை
மிகப்பேசல் நிந்தையுரைத் திடுக்கம்பேசல்
முளம்பலே முன்னுரைத்தல் பழியைக்கூறல்
மூகமாய்ப் பேசல்பகை யுடனேவாழ்தல்
புளம்பலே பொய்கொலைகள் களவுகாமம்
பொல்லாங்கு யாவையுமே புகன்றுபேசல்
களம்பலே காமத்தின் குரோதமிக்கக்
கடியதா மதகுணத்தின் காட்சியாமே. (81)

காட்சியாஞ் சாத்விகந்தா னேதோவென்னிற்
கமழ்சாந்த மும்வாய்மை தயையொடுக்கம்
தாட்சியாந் தண்ணமுத முதவிடுநற்சீலந்
தயவான குணமன்பு பெருமைசீர்த்தி
மாட்சியா மறையினிறை மண்மயக்கம்
வறிஞோா வாழ்வித்தல் நல்லோர்க்கீதல்
நாட்சியா யிறைவனடி யிணைப்பணித்தல்
நல்லோருக் கீதலறந் தேடல்தானே. (82)

அறந்தேடல் உறவின்முறை சுற்றத்தாரை
அகதிபர தேசியருக் கன்னமீதல்
திறந்தேடல் தெய்வமறை யோரைக்காணல்
தேவதைசட் குபசாரச் சிந்தைசெய்தல்
புறந்தேடல் புண்ணியங்கள் தேடலின்பம்
பூசுரருக் காகுதிகள் பலிகொடுத்தல்
தறந்தேடல் சாத்விகத்தின் குணமீதென்று
சாற்றினேங் குணமூன்றின் றன்மைதானே. (83)

தன்மையாய் வினையதனைச் சாற்றக்கேளாய்
சார்ந்ததோர் நல்வினைதீ வினையிரண்டாம்
பன்மையாம் வினையிரண்டின் பயனேதென்னில்
பரவியநல் வினையதுதான் புண்யமாகும்
தின்மையாந் தீவினைதான் பாவமாகும்
சேர்ந்தவினை யிரண்டாலே நரகஞ்சொர்க்கம்
புண்ணியஞ்செய் தவர்க்குநல்ல சுவர்க்கமாகும்
பொல்லாத பாவிகட்கு நரகமாமே. (84)

ஆமேதான் விகாரமெட்டை யறையப்போமோ
அதிகாமக் குரோதமத லோபமோகம்
வாமேதான் மாச்சரிய மிடும்பைவேகம்
வகையாக விதன்குணத்தை வழுத்தக்கேளாய்
காமேதான் காமமென லாசையாகும்
கடிதான குரோதமெனல் பிணக்கதாகும்
போமேதான் லோபமெனல் பிடிப்பாடாகும்
பேர்பெரிய மோகமெனல் பிரியமாமே. (85)

பிரியமா மதமதுதான் கெருவமாகும்
பெரிதான மாச்சரிய மிடும்பாங்காரம்
உரியமா மிடும்பையுதா சனைகளாகும்
உறவேக மாவதுவே கடூரமாகும்
நரியமாம் விகாரத்தின் நன்மைசொன்னேன்
நாசமா மவத்தையைந்தின் நாட்டங்கேளாய்
அரியதொரு அவத்தையா மிதனின்போக்கு
ஆக்கிரசாக் கிரமுஞ்சொற் பனமுமாமே. (86)

சொற்பனமாஞ் சுழித்திதுரி துரியாதீதம்
சொல்லுமிவை அவத்தையைந் தாகச்சொல்வர்
நிற்பனமாஞ் சாக்கிரந்தான் நெற்றிநேரே
நிறைந்திருக்குங் கருவியுட நியமமாகக்
கற்பனமாஞ் சொற்பனமுங் கண்டத்தானங்
கடந்திருக்குங் கருவியுடன் காயத்தோடே
இற்பனமாஞ் சுழுத்திதா னிதயத்துள்ளே
இயங்கிநிற்குங் கருவியுட னியம்பிடவே. (87)

இயங்குதுரி யம்நாபிக் கமலந்தன்னில்
ஏற்றமாங் கருவியுட னிணங்கிநிற்கும்
முயங்குதுரி யாதீத மூலாதாரம்
மூர்க்கமாங் கருவியுட னமர்ந்திருக்கும்
சயங்கிடவே கருவிகடான் றெண்ணூற்றூறும்
காரியமாய்த் தேகத்தைக் காத்துநிற்கும்
வியங்கியிந்த முப்பதுதத் துவமாந்தானே
வேதமாம் வித்தியாதத் துவமாமென்னே. (88)

தத்துவமாங் கருவிகடான் றெண்ணூற்றூறும்
சடத்தெங்கு மூடாடித் தகமையாகும்
உத்துவமா முடலதனி னுண்மைகேளாய்
உதிரவங்க னெனும்புவியி லுற்பவித்து
அத்துவமா யுள்ளிதழாய் மலர்ந்துதப்போ
அத்திமுகத் துக்கருவிட் டுருத்தரித்து
சத்துவமா வுருவாயவ் வவயவத்தின்
தாக்குஅவ் வென்னுமட் சரந்தானுமே. (89)

அவ்வென்னு மட்சரத்தில் நாடிதோன்றும்
அந்நாடி நின்றுதத் துவந்தான்தோன்றும்
எவ்வென்னு மெலும்புதசை புடைநரம்பு
ஈரெட்டுப் பழுவோடு கொங்கைரெண்டாம்
முவ்வென்னு முட்டுக்கால் வளையிரெட்டு
மூட்டியமைத் தங்ஙனேயோ ருருவமாக்கி
சுவ்வென்னு மிடையொடுபிங் கலையுஞ்சேர்த்துச்
சுழிமுனையென் றுருதுளையும் வழியதாமே. (90)

வழியதுவாய் வாசல்வள மெனக்கொண்டங்கே
வளமாக வுடலுண்ட வண்மையெல்லாம்
கழியதுவாய்க் காளவாய்க் காந்தலாகிக்
ககனம்போ லெரிந்துமே மடியப்பாய்ந்து
சுழியதுவாய்த் தூராத குழியதாகத்
துர்ப்பாவை நிணமாய்ப்பற் றீரலும்மாய்ப்
பொழியதுவாய்க் காளிதமும் பித்துமாகிப்
பொருமலுமாய்ச் செறுமலுமாய்க் கிருமியாமே. (91)

கிருமிவகை வாயுவையுந் தானிறுத்திக்
கிரணமுந்நூற் றறுபதுமேரங் குடனிரங்கி
அருமியா யமர்ந்தகுடலதுதான்விர்த்தி
அமர்ந்தமுப்பத் திரண்டுமுழங் குடலுமாகும்
ஒருமிமுள மொன்பதுவாய் மடித்துமொப்ப
உற்றசுக் கிலச்சலந்தான் மூன்றுமாகி
வருமியாய் வச்சிரத்தோல் மேலேபோர்த்து
வழிபலவாய் மொழிமொழியாய் சந்துமாச்சே. (92)

சந்துமூன் றரைக்கோடி மயிர்த்துவாரம்
தாக்கான நாலெட்டு வுறுப்புமாகி
இந்துவிரு பதுவிரலை நான்குகீரு
எட்டுச்சா ணீளமுமா யேகமாகி
நந்துநாற் சாண்பெறுமெய் வாய்கண்மூக்கு
நலத்தசெவி யுடல்மண்ணு வின்கூறாகிப்
பந்துரெண்டு காலுமா யிரண்டுகையாய்ப்
பதினாறு கவருடைய வீணுதண்டே. (93)

தண்டோடே யாறுதெரு கடலேழாகும்
தாக்கான வெட்டுத்தூண் முப்பான்சந்து
எண்டோடே யெழுபதுபே ரெலும்புதானும்
ஏற்றமா மொழிமுச்சா ணெலும்புமாகும்
முண்டோடே யெலும்புமுச்சாண் சதையுமாகும்
முக்கியமா மெண்பலமீ ரலுமாமென்ப
கண்டோடே நாளுழி யுதிரமாகும்
நற்பத்து வாசலையு முடைத்ததாமே. (94)

உடைத்துதிர மாங்கிசமும் மேதையத்தி
உயர்ந்தசுக் கிலமச்சைச் சத்ததாது
படைத்தபலம் முப்பத்தி ரண்டுமாகும்
பண்பான பழுவெலும்பு பதினாறென்க
முடைத்தமுது குத்தண்டீ ராறுகோர்வை
முதற்சூழ்ந்த தாளசைவ தைந்துமாகும்
நடைத்தநரம் பெலும்பிலே மூளையுங்கூட்டி
நலம்பெறவே சதைமேவி நாடிற்றன்றே. (95)

நாட்டியே பிடரியினிற் கோர்த்தநாடி
நரம்புபின்ன லோரேழா யிரமாமென்க
ஆட்டியே யசைவுடலந் தான்றுலக்கில்
ஆருயிர்தா னுற்பத்தி யாறதாகும்
தூட்டியே தொழுத்தையிரண் டாயிரத்துத்
துடர்ந்துவிண் வளருமெய்யா யிரமாமென்க
சேட்டியே கோணங்கள் பதினாறும்
சேட்டுமமுக் குண்டலத்தி னனலதாமே. (96)

அனலெழும்பி வாயுதச நாபிருக்கி
அல்லலுறும் வாசலொன்பான் கதவொன்றிட்டு
இனலெழும்பி யீசர்வா சலைத்திறந்து
இடையினொடு பிங்கலைநா தனையேநோக்கி
நினலெழுப்பி யன்பென்னும் நெய்சொரிந்து
நேராக வமிர்தமென்னுங் கிரியையிட்டு
வனலெழுப்பி மணிவிளக்கை நிறையவேற்றி
வாசியைநீ வரவழைத்து வைத்துக்கொள்ளே. (97)

கொள்ளவே யைம்புலனை நாசமாக்கிக்
கோசமா மட்சரத்தை யளவறிந்து
அள்ளவே யைம்பத்தோ ரட்சரத்தின்
ஆதார நிராதாரஞ் சோதித்தேறி
உள்ளவே மண்டலத்தின் வலமாய்வந்து
உதிரமண் டலமொக்கப் பால்சொரிந்து
கள்ளக்கா மம்வெகுளி மயக்கறுத்துக்
கடும்புரவி குசைதாங்கிக் கருதிப்பாரே. (98)

தாங்கியே யிருமூன்று தெருவுஞ்சுற்றித்
தயங்காத அசுவங்கள் தெருவும்ரெண்டு
ஏங்கியேழா யிரத்திரண்டு நூறுவாய்வு
இரவுபக லளவாக விமைப்பில்லாமல்
ஓங்கிவோங் காரமெனு மூலநாடி
உறுதியெழு பத்திரா யிரமாம்நாடி
நாங்கியே நரம்போடு நாடிக்கெல்லாம்
நலத்தவுறப் படுநாடி யொன்றுண்டாமே. (99)

ஒன்றென்று மிதிலாதித் தன்போல்நாடி
ஒருபத்தும் பறித்துத்தான் பறந்தவாறும்
நன்றென்னுங் காலொடுகை நடுக்சஞ்சத்தில்
நாடிநுழைந் துயிராகி மெய்யிலோடிப்
பென்றுநரம் பாலெலும்பைப் பிணைப்பிசைத்து
பெருநாடி புகுமத்தை யறிந்தடங்கி
அன்றெனவே நாடிபத்தும் அடங்கிநிற்கும்
அதிமூல முந்திமுத லுருவுமாமே. (100)

உருமுடிச்சுக் கீழ்மேலும் பதிந்துநிற்கும்
உகமையாந் தலையினிலே யீசுரன்றான்
செருவினைசெய் வினைப்பயனை முனமறிந்து
திகழிந்திர மான்றலைபோ லிமைப்பானுள்ளே
தருவினைசத் தப்பரிச ரூபரசகந்தம்
தானம்வகை தொறுமுத்தி கொடுத்துநல்கி
தருவினைசெய் தகமையறுத் துள்ளேநோக்கித்
தொண்ணூற்று றுங்கருவி தத்வமாமே. (101)

ஆமெநரம் பெழுபத்தீ ராயிரமாம்நாடி
அதிவீறும் நாடிவிஷ்ணு நாடியாகும்
மோமருத்ர நாடியிடை பிங்கலையும்
முதுகெலும்பு பதினாறு பழுவுமாகும்
ஊமெனுமுப் பத்தொருவார்க் குழியுமாகி
உதிர்ந்துநின்ற வயுழக்கா முதிரமாகும்
நாம்நாழி வாதமுமுந் நாழிபித்தம்
நானாழி சேட்டுமமும் நலத்ததாமே. (102)

நலத்தமூன் றரைக்கோடி ரோமத்வாரம்
நல்லிருபத் தெண்கோடி மலத்துவாரம்
மூலத்தமுப்பத் தெண்கோடி சலத்துவாரம்
முயன்றிரத்த மைம்பலமாங் கிசமும்நூறு
கொலத்தகெந்த மெண்பலம்ரோ மம்நூற்றெட்டு
கோடியாம் மேதைபல மிருநூறாகும்
பெலத்ததோல் முந்நூறு பலமதாகும்
பேரான தொண்ணூறு நிணந்தானமே. (103)

ஆமென்ற குடன்முந்நூற் றெழுபலந்தான்
அதிகமாம் வழுக்கைநாற் பலமதாகும்
தேமென்ற சீயுரித்தான் கண்கள்ரெண்டும்
சிறக்கவே நாலுகழஞ் சாகுங்கண்டாய்
நாமென்ற நாக்குநாற் கழஞ்சதாகும்
நற்கந்த மூக்குத்தான் முக்கழஞ்சு
ஓமென்ற கன்னஞ்சேர் நாற்கழஞ்சு
எலும்புநூற் றோர்பத்தெண் பலமுமென்னே. (104)

என்னபல மிறைச்சிநூற் றறுபத்தைந்தாம்
ஏற்றமுப் பலந்தானு மூளையாகும்
பன்னுதா மணாமொட்டு மைங்கழஞ்சு
பார்க்கவே சலப்பையோர் முழந்தான்நீளம்
கன்னவே கருவிகள்தொண் ணூற்றாறாகும்
கணக்காக வுடற்குறிப்பு காயமாகும்
தன்னவே தத்துவங்க ளெல்லாஞ்சொன்னேன்
சார்நாடி யின்றன்மை சாற்றினேனே. (105)

## யூகிமுனி தத்துவஞானம் ௱௫.

முற்றிற்று.

மதுரை இராமாயணச்சாவடித் தெருவிலிருக்கும், ☞ அஷ்டாங்கயோகி, சுந்தரமகாலிங்க சுவாமி யவர்களிட மிருந்து வாங்கிய வெட்டுப்பிரிதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

பத்தாவது:

வசிஷ்டர் ஸ்ரீராமனுக்குபதேசித்த

# ஞானோதயம் ௰௬.

அண்டமுடி மீதிலங்குந் தீபமாகி
யானந்த முற்றபர மோனமாகி
மூண்டகமாங் கமலமல ரமுதமாகி
முத்தியென்ற தலமதனில் வளர்வோனாகிக்
கொண்டல்நிற மேனியரி யயனுமாகிக்
குணபதியு மணபதியு மிரண்டுமாகித்
தொண்டர்களுக் கருளளிக்கும் வடிவமாகித்
துலங்குபிர்ம பதமதனைச் சித்தம்வைப்பாம். (1)

சித்தம்வளர் பூரணத்தைக் காண்பாருண்டோ
சிவயோகி யுரைத்துவரத் தெரியவேணும்
பத்தியுடன் வாசிதனைத் தெரியப்போமோ
பரமசற் குருவருளா லறியவேணும்
மூத்திதந் தாண்டகுண் டலியைக்கண்டால்
முடிவற்ற பதியதனிற் கூடலாகும்
வெத்திபெறக் கண்டமதில் அங்கென்றோதி
விரித்துரைக்கக் குறியதனைக் கருதிப்பாரே. (2)

கருதிப்பார் தோன்றிமறை யாதமின்போற்
காணுமடா விழிக்கடங்கா வொளியாந்தீபம்
உறுதியுடன் பார்க்கக்கண் கூச்சமுண்டாம்
உள்ளமயங் காமலுமக் குறிவிலேறு
சுருதியுரைத் திடும்வழியே செய்துவந்தால்
சுந்தரம்போல் நந்தியொளி 'தானேதோற்றும்
பருதிமதி அகாரமொடு உகாரம்ரெண்டும்
பண்பாகச் செபித்தவன்மெய்ஞ் ஞானிதானே. (3)

தானென்ற ஞானிகட்கு அகாரதீட்சை
தானறிந்தோர் மனமாகச் செபிபாண்டொன்று
நானென்று தவறுமற் றினங்கடோறும்
நன்மைபெறப் பழக்கமது செய்துவந்தால்
தேனென்ற மூலதல மதுவுங்காணும்
சித்தமதைப் பற்றிவிடா திருந்தாயானல்
கோனென்ற மூலவன்னி யகன்றுபோகும்
குறிப்பறிந்து செய்துவந்தாற் கூறுவேனே. (4)

கூறுவேன் அசதியொடு கசடதென்ற
குற்றமுள்ள வறுசுவையு மகன்றுபோகும்
தேறுதற்கு உகாரத்தை மருவியேறு
சித்திபெற ஆண்டொன்று தினந்தோறுந்தான்
பேறுபெற நடந்துவரும் பழக்கத்தாலே
பின்புனக்கு நீர்க்கடுத்து வெட்டைமீறும்
வேறுமித மாய்நினைத்து விட்டிடாதே
மேலாகு முனதுடம்பி லினஞ்சொல்வேனே. (5)

சொல்லுகிறேன் ஆக்கைதனில் வாய்வுநின்று
சுகமில்லா ததுபோலப் பித்தமீறும்
வல்லதொரு வூண்சுவையை மனம்வெறுக்கும்
மயங்கிநீ யிந்தவித மிருக்குதென்ன
செல்லவிட்ட வுன்மனதைத் திருப்பிடாமல்
சீராக உகாரமதை யேற்றுயேற்று
நல்லதன்றி வியாதியது பெலத்துதானல்
நான்சொன்ன கற்பமதைச் சடலத்தூற்றே. (6)

ஊற்றினல் வியாதிமுற்றும் விலகிப்போகும்
உன்றேகஞ் சுந்தரம்போ லாகும்பாரு
நாற்றிசையோ ரறியார்கள் சுழினைமேலே
நலம்பெறவே வாசிதனை யேற்றுயேற்று
தேற்றியே அத்தலத்தில் முனைமேல்நின்று
தேறியே சற்குருவைத் துதித்துப்போற்று
மாற்றியே செய்தாக்கால் மனம்வேறுகும்
வையகத்தோர் தனக்கிதனை வழுத்திடாதே. (7)

இதமாயிவ் வுலகதனிற் சாஸ்திரங்கள்
இயல்பாகக் கற்றறிந்தோ மெனவேயெண்ணி
சதமான மெய்க்குருவைப் போற்றிடார்கள்
சடலத்து ளிலகுகின்ற தலங்காணார்கள்
பதமான உண்மைநிலை புணர்ந்திடார்கள்
பாவியடா பராபரத்தின் நிலையுங்காணார்
நிதமவரைப் பாராதே கருச்சொல்லாதே
நின்மலத்தில் மனதைநீ நிறுத்துவாயே. (8)

நிறுத்தியே சடாட்சரத்தின் மகிமைபாரு
நேர்மையுட னறுகோண மிட்டுநன்றாய்
வருத்தமிலா ஓம்நமசி வயமென்றேதான்
மனதினு லறிந்துநீ கோணத்திட்டு
திருத்தமுடன் சரஹண பவவென்றேதான்
செய்யதொரு கோணமதைச் சுற்றில்நாட்டிப்
பொருத்தமாய் வட்டமுடன் சூலமிட்டுப்
பொருளறிந்து தானெழுதி யோகம்பாரே. (9)

யோகமதில் ரேசகபூ ரகமும்பண்ணி
யுண்மையுடன் கும்பகத்தில் நின்றுகொண்டு
ஏகமென்ற மனதுறமாய்ச் செபித்தாயானால்
என்மகனே வடிவேலன் பிரகாசிப்பான்
தாகமா யவர்பதமே பணிந்துபோற்றித்
தன்மையுள சிவாயகுரு சிவமேயென்று
வேகமுடன் பூட்டுமுனை திறக்கவென்று
வேண்டினாற் றிறவுகோல் தருவார்தானே. (10)

தானென்ற கணபதியின் றிரத்தைக்கேளு
தன்மையுடன் முக்கோண மிட்டுக்கொண்டு
நானென்ற ஓங்காரம் நடுவேபோட்டு
நன்மையே காட்சரத்தை மத்தியிட்டு
வானென்ற சதாசிவத்தைக் கருத்திலூணி
மகத்தான கணபதியே நமாவென்றேதான்
தேனென்ற குரு பதத்தில் நின்றுகொண்டு
திரமாகப் பூசைசெய்தால் வருவார்காணே. (11)

காணப்பா கணபதிதான் பிரகாசித்தாற்
கருத்துடனே அவர்பதத்தைப் போற்றிசெய்து
வாணப்பா நின்றநிலை யதனைக்கண்டு
வருந்தியே கேட்டதெல்லா மீவாரப்பா
தோணப்பா குண்டலிதான் பிரகாசித்தாற்
றொகுப்பாக அட்டசித்துங் கைக்குள்ளாடும்
வீணப்பா போகாது அறிவாய்ப்பாரு
வேணுமே யிவர்திரந்தான் வேணுங்கேளே. (12)

கேளப்பா மானதமாம் பூசைசொல்வேன்
கிருபையுடன் முகங்கரங்கால் சுத்திசெய்து
நாளப்பா விபூதியுத் தளமாய்ப்பூசி
நல்லதொரு மனதாக அறிவிற்சேர்த்து
வாளப்பா நின்றநிலை தவறுமற்றுன்
மைந்தனே ரேசகமாய்ப் பூரணத்தை
ஆளப்பா வைத்துநீ கும்பகத்தில்
அப்பனே நின்றுக்கால் பூசையாமே. (13)

பூசையிந்த மார்க்கமது கோடாகோடி
புண்ணியமா மானதத்தின் பூசைநேர்மை
ஆசைதனி லகப்பட்டாற் காண்பதேது
அப்பனே மனதிருத்தி நாடவேணும்
பாசைபதி னெட்டறிந்த சித்தரோடு
பண்புடனே தபோதனரை வணங்கவேண்டும்
ஓசையுள்ள மூலாதா ரத்தைக்கண்டு
உற்பனமாய்ப் பூசைசெய்தால் வரமீவாரே. (14)

வரமதுநீ பெற்றபின்பு மனத்தையூணி
மனதாகப் பூரணத்தை வணங்கிநில்லு
திரமுடனே பூரணத்தில் நின்றுயானால்
திரமுட னட்டசித்துங் கைக்குள்ளாடும்
பரமென்ற குண்டலியின் நன்மையாலே
பராபரமே மனதிற்குப் பரிவாய்க்காணும்
சரமென்ற வாசியெல்லா மிதற்குள்ளாச்சு
சச்சிதா னந்தமயந் தானுண்டாச்சே. (15)

ஆச்சென்ற பொருளெல்லாங் காண்பாய்மைந்தா
அப்பனே யென்னூலி னிருநூற்றுறில்
பேச்சொன்றஞ் சொல்லாமல் வைத்தியத்தைப்
பிரியமுடன் பார்த்தாக்கால் வெளியாய்த்தோணும்
சூச்சமதாய்த் தெரிந்துகொண்டு வெளிவிடாதே
சுந்தரம்போ லிருப்பாய்நீ சுகமதாக
வாச்சுதென்று யென்னூலைப் பார்த்துத்தேறு
மகிழ்ச்சியுடன் பூவுலகில் வாழலாமே. (16)

## வசிஷ்டர் ஸ்ரீராமனுக்குபதேசித்த ஞானோதயம்-௰சு.

முற்றிற்று.

சத்திகிரி சிவகிரி திருவாவினங்குடி யெனத் தழைத்தோங்கும் திருப் பழனிமலையிலெழுந்தருளிய ஸ்ரீ கைலாச போகமகாரிஷீஸ்வர சுவாமி யவர்கள் ஆதீன ஆச்சிரமம் ஆதீன மகாகைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ கைலாசதேண்டாயுதபாணி ரிஷீஸ்வரசுவாமி யவர்களிட மிருந்துவாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம்அச்சிடலானது.

உ

ஸ்ரீ ராமஜெயம்.

பதினோராவது:

வதிஷ்டர் ஸ்ரீராமனுக்குபதேசித்த

# வைத்திய சூஸ்திரம் உ௱௬௲.

காப்பு.

பூரணமாய் நின்றபரை பாதம்போற்றி
புகழான சூத்திரத்தி ணிருநூற்றூறு
நாரணனு ருபதேசஞ் செய்தமார்க்கம்
நவிலுகிறேன் ரெகுராமா நன்றாய்ப்பாரு
ஆரணனுந் திருமாலும் ஆதியந்தம்
அறியாம லழலுருவாய் நின்றசோதி
காரணமாய் மகவாக வந்தகந்தன்
கணபதியுஞ் சரஸ்பதியுங் காப்புத்தானே. (1)

தானென்ற சதாசிவத்தைப் பூசைசெய்து
தாயான யீஸ்பரிக்குப் பிள்ளையாகி
நானென்ற வாணவமும் மலமும்நீக்கி
நாசிநுனி புருவமையம் நாட்டம்பார்த்துக்
கோனென்ற சிதம்பரத்தின் கூத்துக்கண்டு
கோவிந்த ரிடஞ்சென்று கூடிப்பின்னும்
ஊனென்ற வுடம்புக்குட் பிணிகள்தீர
உபதேசஞ் செய்தமுறை வுரைக்கும்நூலே. (2)

நூல்பார்த்தாற் போதாது வயித்தியர்க்கு
நொடிக்குமுன்னே பலவிதமாய் நோய்களுண்டாம்
கால்பார்த்துத் தலைபார்த்துக் கையும்பார்த்துக்
கண்பார்த்து முகம்பார்த்துக் கருத்துட்டேர்ந்து
பால்பார்த்துத் தயிர்பார்த்து வெண்ணெய்பார்த்துப்
பக்குவமாய் நெய்யெடுக்கும் பருவம்போலே
சேல்பார்த்துத் திறம்பார்த்து மருந்துசேர்த்துச்
சிவன்மேலே நேசம்வைத்தாற் றீரும்நோயே. (3)

நோயில்லை பேயில்லை பாவமில்லை
நூல்வழியே நடந்தவர்க்குத் தோஷமில்லை
தாயில்லை தகப்பனில்லை பெரியோரில்லை
தனக்குவமை யொருவரில்லை யென்றுபேசி
நாய்போலே தன்வயிறு வளர்த்தபேர்க்கு
நாலாயி ரச்சில்வான் வியாதிதன்னைப்
பேய்கொண்டு பேசுகிற பித்தரோகம்
பிடிக்கும்பா ரதுதீர்க்கப் பெருமைகேளே. (4)

பயித்தியத்துக்கு.

கேளப்பா கொம்மட்டிப் பழத்தைவாங்கிக்
கீறியே குடலெடுத்துப் பிசைந்துநன்றாய்ப்
பாளப்பா விரைதோடு தள்ளிப்போட்டுப்
பழச்சோறு தனியாக வெடுத்துக்கொண்டு
நாளப்பா வொன்றுக்கே யிரண்டுபோது
நலமாகச் சரீரமெல்லாம் நன்றாய்த்தேய்த்தே
வளப்பா நாளைக்குங் காலைப்போதில்
இருகழஞ்சு வுள்ளுக்கு வியல்பாய்க்கொள்ளே. (5)

இயல்பாக விப்படிநீ கொள்ளும்போது
இருளான பித்தமது தீர்ந்துபோச்சு
பயமில்லை கிருக்குமில்லை கிரிகையில்லை
பாழான புலப்பமில்லை பயித்யமில்லை
தயவாக விந்தமுறை செய்யும்போது
சாயங்கா லந்தனிலே தண்ணீர்விட்டால்
நயமாக விந்தமுறை பயித்தியந்தான்
நாரணனு ருரைத்தபடி நவின்றிட்டோமே. (6)

மருந்து.

நவிலுகிறே னின்னமொரு முறைதானப்பா
நலமான இலுமிச்சம் பழந்தான் நூறு
செவியிலே சொல்லாமற் கொண்டுவந்து
தினம்பத்துப் பழம்பத்துச் செவிப்பாயாகில்
புவியிலே வாராது கிரிகைதானும்
புகழான இலுப்பைபுட புண்ணுக்குத்தான்
பவியமாய்ப் பொடிசெய்து தலையிற்கீறிப்
பண்பாக நாள்பத்துப் பரிந்துதேயே. (7)

பரிவாக விந்தமுறை செய்யும்போது
        பறக்குமப்பா பயித்யமென்ற கிரிகைதானும்
உரிதாக விம்முறையை வுலகத்தோர்க்கு
        உரைத்திட்டோந் தப்பாது வுண்மையாகும்
அரிதான சத்தியங்கள் தன்னைச்செய்து
        அரசர்பொரு ளாலயத்தின் பொருள்கடன்னை
மரியாதை யில்லாம லெடுத்தபேர்க்கு
        வங்கிஷங்க ளுள்ளமட்டும் மாறுப்பேயே. (8)

பித்தகர்ம வரலாறு.

மாருத பேய்ப்புலப்பம் வந்துதானால்
        மாமுனிவர் நூல்பார்த்தே வுலகினுள்ளே
வீறான மருந்துகளைச் செய்யும்போது
        மென்மேலு மதிகமதாய் விளங்குமப்பா
ஆறான வாதாரந் தன்னிலுள்ள
        அட்சரத்தைத் தகட்டிலேதா னெழுதிக்கொண்டு
பேறாக லெட்சமுரு ஜெபித்துக்கட்டப்
        பேய்ப்புலப்பந் தீருமல்லாற் பிணிதீராதே. (9)

சாந்தி.

பிணிதீர வேணுமென்று லரசன்பொன்னும்
        பெருமையுள்ள வாலயத்தின் பொன்னையுந்தான்
பணியான கற்கோயிற் குளமுங்கட்டிப்
        பரதேசி யரதேசி பசியா லுண்ணல்
துணிவாக லிங்கப்ர திஷ்டைசெய்து
        சுமைதாங்கி நந்தவன முண்டுபண்ணத்
தணிவாகும் பயித்தியங்கள் தீர்ந்துபோகும்
        சண்டாளக் கருமஞ்சா ராதுபாரே. (10)

மருந்து.

பாரப்பா கர்மத்தை நிவர்த்திசெய்து
        பாரிலுள்ள யிஞ்சிச்சார் கரண்டிரண்டு
நேரப்பா கேசரிப்பால் கரண்டிநாலு
        நிசமான கரும்புவெல்லங் களஞ்சிரண்டு
சேரப்பா யிதுமூன்று மொன்றாய்ச்சேர்த்துத்
        தினம்பத்துக் கிருபோது தின்பீராகிற்
றேரப்பா யேறிவரும் வெய்யோன்கண்ட
        சிறுபனிபோல் நீங்கிவருந் திறத்தைப்பாரே. (11)

திறமாக விந்தமுறை செய்யாவிட்டால்
  தீராத பயித்தியந்தா னுலகத்தோர்க்கு
அறமான தருமத்தைச் செய்வதாலே
  அசத்தியத்தால் வந்தபிணி யகன்றுபோகும்
கிரமமா யிதையறிந்து செய்தபேர்கள்
  கெட்டிவயித் தியனென்று பேர்கேட்பார்கள்
மறவாம லிப்படியே செய்யச்சொல்லி
  மால்சொன்ன வயித்தியத்தை மகிழ்ந்துபாரே. (12)

பாரிலுள்ள வயித்தியர்க ளிந்தநூலைப்
  பாராமற் பலநூலும் பார்த்துப்பார்த்து
ஊரிலுள்ள மருந்தையெல்லாங் கொடுத்துப்போட்டு
  ஒவ்வொன்ருய்க் கொடுத்துவிட்டு ஓடுவார்கள்
தூரிலே பலமிருந்தால் மரஞ்சாகாது
  துறையறிந்து பண்டிதந்தான் சுழுவாய்ச்செய்யில்
வேரிலே பிலங்கெட்டு மாறுமாப்போல்
  வேரோடு பித்தமென்ற கிரிகையெல்லாம். (13)

துவாலை.

பித்தமென்ற கிரிகையது தீரவென்ருல்
  பிலமாக இன்னமொரு முறைதானப்பா
முத்திருக்கன் செடியுடனே ஆதளைதான்
  முக்கியமாய்த் தானெடுத்து மோரிலாட்டி
உத்தமனே ஒண்ணரைநாள் மூன்றுபோது
  உறப்பர்கக் கண்டமுதற் சரீரமெல்லாம்
நித்தளமாய்ப் பூசியபின் மூன்றுபோது
  நெடுநாளைக் காடியிலே நிசமாய்ச்செய்யே. (14)

நிசமாகு மிந்நூலின் படிதப்பாமல்
  நிண்ணயமாய்ச் செய்தாக்காற் பலிதமாகும்
கசமாகும் பலநூலும் பார்க்கவேண்டாம்
  கைகண்ட வித்தையிதைக் கருதிப்பாரு
நிசமான பதினெட்டுச் சித்தருக்கும்
  ரிஷிகளுக்கும் பெரியவர்தா ஞதிநாதன்
வசமான ஆயிரத்தி யிருநூறுக்குள்
  வயித்தியத்தில் முன்னூறு மிதுவும்நேரே. (15)

கிராணி அதிசாரத்துக்கு கபாடசூரணம்.

நேரான வுடம்புக்குட் சூடுதட்டி
நெஞ்சுடம்பு புண்ணாகிக் கடுப்புக்கண்டால்
கோரான கோரக்கர் மூலிதன்னைக்
கொண்டுவந்து பசுப்பாலில் அவித்தெடுத்து
சீராக வுலர்த்திபதி லொருகழஞ்சு
சிறப்பாக வெடுத்தபின்பு சொல்லக்கேளு
பேரான அதிவிடயங் கழஞ்சுவொன்று
பிரியமுட னொருகழஞ்சு கிராம்புகூட்டே. (16)

கூட்டப்பா சாதிக்காய் சாதிபத்ரி
குணமான வோமமது கழஞ்சுவொன்று
வாட்டப்பா யிவ்வளவும் யிளவறுப்பாய்
வறுத்தபின்பு படிபாதி யாகவேதான்
ஆட்டப்பா வொருபாதி மருந்துதன்னை
அடைவாகச் சூரணித்துப் பதனஞ்செய்து
காட்டப்பா படிபாதி மருந்திேைனாடு
கஷாயத்து முறைமையது கருதுவாயே. (17)

கியாழம்.

கருத்தான மாதளத்தின் பிஞ்சினோடு
கனமான பலாக்காயின் பிஞ்சுதானும்
வருத்தமுள்ள பருத்தியின்றன் பிஞ்சுசேர்த்து
வண்மையுள்ள வேப்பீக்கில் கருவேப்பீக்கில்
பொருத்தமுள்ள வத்திக்காய் முத்தக்காசு
புகழான வில்வவே ரிவைகளெல்லாம்
நிறுத்தெடுத்து ஐங்கழஞ்சு வெவ்வேறாக
நீர்வத்த வறுத்தபின்னெற் பொரியுஞ்சேரே. (18)

சேரப்பா யிவ்வளவு மொன்றாய்க்கூட்டிச்
சிறப்பாக விருநாழி தண்ணீர்விட்டு
நேரப்பா யெட்டொன்றாய் வத்தக்காச்சி
நேரியதோர் சீலையிலே வடித்தெடுத்து
பாரப்பா முன்வைத்த சூரணத்திற்
பணவிடைதான் பின்போட்டுப் பத்துநாளும்
சீரப்பா தப்பாம லிரண்டு நேரம்
செலுத்தினால் வயிற்றளச்சல் தீருந்தானே. (19)

தானென்ற கிராணியெட்டுஞ் சன்னிபதிமூன்றுந்
    தளர்ச்சி யொடு கடுப்புமரோ சிப்புரத்தம்
ஊனென்ற வுடம்புக்கு ளுஷ்டிணங்கள்
    ஓக்காளம் அதிசாரம் சீதக்கட்டு
நானென்ற ஆண்மைசொல்லி வந்தநோய்கள்
    நாடாம லோடிவிடும் நலமுண்டாகும்
ஏனென்று மெண்ணாதே யின்னமொன்று
    இயல்பாகச் சொல்லுகிறேன் முத்தக்காசே. (20)

முத்தக்கா சைக்கழஞ்சு பாகஞ்செய்து
    முக்கியமாய் வறுத்தரைத்து நாழிநீரில்
சுத்தமுள்ள வுளுவைகனி லைங்கழஞ்சு
    சுழுவாக வறுக்கையில் முன் சலத்தைவிட்டு
உத்தமதொரு கியாழுமுழக் கானபோது
    உண்மையுட னிரக்கியதை வடித்தெடுத்து
சித்தான கோரக்கர் மூலிதன்னைத்
    திறமாகப் பணவிடைதான் சிறந்துகாணே. (21)

மருந்து.

காணப்பா சாதிக்காய் சாதிபத்ரி
    கழஞ்சுவொன்று குன்றினிடை யபினுஞ்சேர்த்து
தோணப்பா நாற்சரக்குஞ் சூரணித்துச்
    சுழுவாக யிட்டாறு பொழுதுகொள்ள
வீணப்பா கிராணியெட்டு கடுப்பிரத்தம்
    விஷமான சன்னிபிர மூலவாய்வு
ஆணப்பா அரோசிப்பு அதிசாரந்தான்
    அதிபேதி களிச்சலுஷ்ண மனைத்துந்தீரும். (22)

கலியாணிகிருதம்.

தீராத நோய்களில்லை யுலகந்தனனிற்
    செய்பாகங் கைபாகந் திறமாய்ச்செய்தால்
பாராம லோடிப்போம் பித்தப்பாண்டு
    பண்டிதற்குப் பணங்காசு பறிக்கலாகும்
நேராக மங்கையர்க்குக் கெற்பமப்பா
    நில்லாமற் போச்சுதென்றால் மருந்தைக்கேளு
ஓராமற் கல்யாணிக் கிருதந்தன்னை
    யுண்மையாய்ச் செய்துவிடு வுலகத்தோர்க்கே. (23)

உலகத்திற் பெண்கள்செய்த பாவத்தாலே
உதரத்திற் கிருமியது மிகுந்ததாலே
சிலேதொட்ட மதனெய்யும் பாணந்தொட்டு
ஸ்திரிகளுடன் புருடனவன் கூடும்போது
பிலங்கெட்டு விந்துவந்து நழுவிப்போனால்
பிள்ளையில்லா மலடனென்று பேசுவார்கள்
கலையொத்துப் பாய்ந்தாலுங் கிருமிதின்று
கருவழித்துப் போடுமப்பா கருதிப்பாரே. (24)

கருதிப்பார் முத்தக்கன் கிழங்கினோடு
கனமான கும்பளங்காய் நெல்லிக்காயும்
சுருதியுள்ள சதாவேலிக் கிழங்குதானும்
சுத்தமாய்த் தனித்தனியே சாருநாழி
குருதிக்கு ளிளகிவரு மாவின்பாலுங்
குணமாக ஒருபடிதான் கூடச்சேர்த்துப்
பருதிபட வொட்டாமல் நிழலில்வைத்துப்
பசுவின்நெய் யொருபடியும் பண்பாய்ச்சேரே. (25)

சேரப்பா பொரிகாரம் பெருங்காயந்தான்
செயமான காந்தம்வகை கழஞ்சுவொன்று
நேரப்பா வாளமது கழஞ்சுநாலு
நெய்யுள்ள தேங்காயுங் கழஞ்சிநாலு
பாரப்பா யிவ்வளவும் பொடித்துப்போட்டுப்
பதமாக மூன்றுதினம் வெதுப்பிக்காய்ச்சி
சீரப்பா நாலாநா ளானபோது
சீனிபல வொன்றரையுந் திறமாய்ப்போடே. (26)

போட்டவுடன் மெழுகுபத மாகக்காய்ச்சிப்
புகழ்சீனி பலமொன்றே டளையும்போட்டு
நாட்டமுடன் வடித்தபின்பு மத்தாலாட்டி
நலமாகக் கடைந்தெடுத்துப் பதனம்பண்ணு
காட்டரிது கலியாணக் கிருதந்தன்னைக்
கர்மத்தை நிவர்த்திசெய்து கரண்டிதானும்
வாட்டமற்று இருபதுநாட் கொள்ளும்போது
மகத்தான பத்தியந்தான் மகிழ்ந்துகாணே. (27)

காணப்பா உப்பாகா புளியுமாகா
    கருப்பிட்டிப் புகையிலையு மோருமாகா
ஆணப்பா பெண்ணுடனே கூடலாகா
    அப்புதொட லாகாது மறுபத்யந்தான்
பூணப்பா பத்துநாள் புளியுப்பன்றிப்
    புத்தியுடன் நடந்தவற்குப் பிள்ளையுண்டாம்
வீணப்பா பேசுகின்ற வீணருக்கே
    விள்ளாதே யிந்தமுறை விட்டிடாதே. (28)

விட்டவற்குத் தொட்டகுறை கிருதந்தானும்
    விமலனரு ளுண்டாகிக் கிடைத்துதப்பா
தட்டாகு மிந்தமுறை சுழுவதாகும்
    தாமையது காத்தடிக்கப் பூத்தாப்போலே
கட்டான கலியாணிக் கிருதந்தானும்
    காசிடைதான் கொண்டாக்கால் கருவாசற்குள்
திட்டமா யிருக்கின்ற மணிப்புழுத்தான்
    தின்னாது கருவளர்ந்து திறமதாமே. (29)

திறமாக மருந்துகொண்ட முழுக்கிலப்பா
    சிவனாணை ஸ்ரீயுடனே புருடன்கூடிற்
பிரமாண மாகிப்பின் கலையிற்பாய்ந்தாற்
    பிள்ளையது முந்நூறு நாளிற்காணும்
நிறமான வாசியிடை கலையேயானல்
    நிச்சயமாய்ப் பெண்பிறக்கும் நிலைதப்பாது
அறமான தர்மமது செய்தபேர்க்கு
    அண்ணலா ரருள்கிடைக்கு மடவிதாமே. (30)

பிள்ளையில்லாதவர்க்கு.

ஆமப்பா பிள்ளையுமொன் றிரண்டுபெற்று
    அப்புறந்தான் பிள்ளையில்லா திருப்பவற்குக்
காமப்பா கலவியினாற் பிள்ளையுண்டாய்
    கருவழிந்துப் போவதற்குக் கயிலைநாதர்
தாமப்பா செய்தமுறை திருமால்சொன்னார்
    தவறுமற் கைமுறையாய்த் தனித்துப்பாரு
நாமப்பா சொன்னதென்று நினைக்கவேண்டாம்
    நாரணனார் சொன்னமுறை நாடிப்பாரே. (31)

நாடிப்பார் பொரிகாரம் பெருங்காயந்தான்
நலமான காந்தமொடு கழஞ்சு மொன்று
கூடிப்பார் தேங்காய்நேர் வாளந்தானும்
குறிப்பாயிம் மருந்துவகை காற்கழஞ்சு
வாடிப்போ காதிலுமிச் சம்பழச்சார்
வாங்கியே மெழுகதுபோ லதையரைத்துத்
தேடித்தான் திரியாம லாறுபோது
சேவிக்கக் கெற்பமது சேருந்தானே. (32)

சேரப்பா பூவையுடன் புருடன்றானும்
சேர்ந்திடவே திங்களொன்றுக் குள்ளதாகப்
பாரப்பா கெற்பமது பிலத்துக்கொள்ளும்
பதினறு பெற்றிடுவாள் பாருபாரு
சீரப்பா தப்பாத முறைப்படிக்குச்
செய்தவனே திறமான வயித்தியன்பார்
பேரப்பா லோகமெல்லாந் தொனிக்கும்நன்றாய்ப்
பிரபலமா யின்னமொன்று புகலுவேனே. (33)

தாம்பூரசுத்தி

புகழான தாம்புரத்தைச் சுத்திசெய்யப்
பூதலத்திற் பலதுறையுந் தேடிப்பார்த்து
இகழான மருந்துகளைச் செய்வாரப்பா
இந்நூலுங் கும்பமுனி நூலும்பார்த்து
நிகழாதே புவனையுட கக்கிஷந்தான்
நிசமாகு மிந்தமுறை வடுகனேறி
துகழான சுவானனுட காட்டந்தன்னைச்
சுட்டிடத்தா னெடுத்துநவச் சாரந்தூவே. (34)

தூவியே ரவியில்வைக்கச் செயநீராகும்
சுருக்காக அதையெடுத்து வைத்துக்கொண்டு
சீவியே பொடியான தாம்பூரத்தைச்
செயமான பழச்சாறுந் தருசுங்கூட்டி
மேவியே யரைத்துருட்டி வில்லைசெய்து
விளங்கவே குகையிலிட்டு வுருகும்போது
ஓவியே ஜெயநீரைச் சாய்த்தாயானல்
ஓரோகோ வூறலது வோடுந்தானே. (35)

ஓடுமே யிந்தமுறைப் படிதப்பாமல்
உற்பனமாய்ப் பத்துமுறை வுருக்கிச்சாய்த்தால்
பாடுவர மாட்டாது பத்துமாத்துப்
பசுமையுள்ள பொன்னிலுமே அதிகமாகும்
ஏடுகளி லிந்தமுறை யெழுதிக்காட்டார்
இதுபோலே வொருவருமே சொன்னதில்லை
நாடுதனிற் பாவியென்று திரியவேண்டாம்
நலமாகும் யிந்நூலை நாடிப்பாரே. (36)

நாடியே திரிவார்கள் சித்தரெல்லாம்
நலமான கைமுறையைக் கவர்ச்சிசெய்யக்
கூடியே திரிந்தாலும் முறைகாட்டாமே
குருவான நந்தியொளி காட்டினாலும்
ஆடிநிற்கும் சிதம்பரத்தை யடவதாக
ஐம்பத்தோ ரெழுத்துடனே அறிவித்தாலும்
வேடிக்கைக் காரரைப்போல் வேறேயொன்று
மித்திரமாய்ச் செய்துவிடு மிதுகாட்டாதே. (37)

இதுபோலே யின்னமொரு சுழுவதாக
இயல்புடனே சொல்வேன்தாம் பூரசுத்தி
மெதுவாக நினைத்தவர்க்கு வாயாதப்பா
விட்டகுறைக் காரருக்கும் முறைதான்கிட்டும்
சதிரான தக்காளி யவரிச்சாத்தில்
சவ்வீரம் பொரிகாரம் மடல்துத்தந்தான்
பிதிராமல் மெழுகதுபோ லரைத்துக்கொண்டு
பின்னொருவற் குரையாமற் செம்பிற்பூசே. (38)

பூசியே யோட்டில்வைத்துப் புடந்தான்போடு
பொன்னாகுஞ் செம்பூறல் பறந்துபோச்சு
வாசியே செப்புபத்து வெள்ளியொன்று
வகையாசத் தகடடித்துச் சொல்லக்கேளு
பேசியே காரமொடு வீரந்துத்தம்
பெருமைநா யுருவியுப்புக் கழஞ்சுகூட்டு
பூசியே குக்குடத்தில் வைத்தெடுத்தாற்
போச்சுதப்பா செம்பூறல் வேதைக்காமே. (39)

வேதையிது கைகண்ட. வித்தையப்பா
விபரீதம் பண்ணிடுவார் சித்தர்கூடிப்
பாதையிமேல கிணறிருப்ப தறிந்துகொண்டு
பாராமற் போய்ச்சாயிம் பயித்யகாரர்
ஊதையிலே புகைந்துதான் போச்சுதென்பார்
ஓம்நமசி வாயவென்று சாபந்தீரார்
பேதைமனக் காரர்களே சிவநாமங்கள்
பிதற்றுது செய்யார்கள் சித்தர்தானே. (40)

சித்தாகு மிந்தமுறை செய்தபேர்க்குச்
சிவனுடைய தெரிசனமும் லபிக்கும்நன்றாய்ப்
பத்தாகும் மாத்ததனிற் காணுங்காணும்
பசுமையுள்ள தங்கமிது வேதைக்காகும்
சத்தாகும் ஆதிசிவ னுடமையப்பா
தான்புசித்துத் தானதர்மஞ் செய்தாற்றக்கும்
உத்தார்க்கும் பெத்தார்க்குங் கொடுக்கச்செய்தால்
உமையவள்தான் சபித்திடுவாள் பாபந்தானே. (41)

பாபபுண் ணியமிரண்டின் பரிசுகேளு
பத்திவை ராக்கியமும் புண்யமாச்சு
கோபமென்ற பாபமது வந்துதானாற்
கொடிதாகும் பவகோபங் கொன்றுபோடும்
சாபமது சேராமற் றவத்தைச்செய்து
சங்கரற்கும் பார்வதிக்கும் பூசைபண்ணித்
தீபவொளி தெரிசித்து வேதைதன்னைத்
திறமாகச் செய்துகொண்டு செலவுசெய்யே. (42)

சிலவுக்கு முட்டாது வேதைகண்டால்
சித்தரொல்லா மிதனாலே பிழைக்கிறார்கள்
உலகத்தில் வேதைவித்தை கிடைப்பதற்கு
உறுதியென்ற பொறுமையுளோ ருண்மையாகும்
மலமுத்த மானிடர்கள் செய்யும்வேதை
வயித்தியந்தான் வெகுசுளுவாய் வாய்க்குமப்பா
குலவித்தை படியாமல் வருகிறாப்போல்
குணமென்ற வுபாதிவருங் கூறக்கேளே. (43)

குன்மவாலாறு.

குன்மமென்ற யெரிகுன்ம வாயுக்காதி
குருபூசை யரிபூசை யரனார்பூசை
கன்மமது செய்வோரை நிந்தைபேசிக்
கற்புடைய மங்கையரைக் கருதினோர்க்கும்
தன்மமது பண்ணும விருக்கின்றோர்க்கும்
தாய்தகப்பன் பசித்திருக்க வுண்டபேர்க்கும்
வன்மமது மனதில்வைத்துப் பிறர்தனத்தை
வயிறெரியப் பறித்தவற்கும் வகுத்ததாமே. (44)

சாந்தி.

வகுத்திட்ட சத்திகுன்மம் வந்துதானால்
வயித்தியர்கள் கன்மத்தை நிவர்த்திசெய்ய
மகத்துவஞ்சே ரரசடியில் வீற்றிருக்கும்
மகத்தான விநாயகர்க்குப் பூசையாகும்
பகுத்தறிவாய் நூறுகுடஞ் சலத்தைக்கோரி
பாங்காபி ஷேகபிர தட்சணந்தான்
மிகுத்ததொரு மண்டலந்தான் செய்தாயானால்
விநாயகனாற் றீருமிந்த வுபாதிகாணே. (45)

குன்மமேட்டுக்கும் அயக்காந்த செந்தூரம்.

காணப்பா களஞ்சுஅஞ்சு காந்தந்தானும்
கனமான அறபொடிதான் களஞ்சுஅஞ்சு
பூணப்பா வெவ்வேறே பொடித்துக்கொண்டு
புதுமையுள்ள பழச்சாத்தி லூறப்போட்டுத்
தோணப்பா மூன்றுநாட் கழிந்தபின்பு
சுருக்கான காடிவிட்டுக் கழுவிவாங்கி
ஊணப்பா யிரண்டுமொன்றாய்ச் சேர்த்துவைத்து
ஒருபலநெல் லிக்காய்கெந் தகத்தைப்போடே. (46)

போடப்பா சவ்வீரங் கழஞ்சிரண்டு
புகழான சாதிலிங்கங் கழஞ்சிமூனு
நாடப்பா நவசாரங் கழஞ்சுபத்து
நலமாக விவ்வளவு மொன்றாய்ச்சேர்த்து
ஆடப்பா பழச்சாத்தி லாட்டிநன்றாய்
அம்மியிலே யனற்கொள்ளி நீட்டியாட்டி
ஊடப்பா பார்க்கையிலே வொளிவுகாணும்
உற்பனமாய் வழித்தெடுத்து வில்லைசெய்யே. (47)

வில்லையது செய்தபின்பு ஓட்டில்வைத்து
வெயிலிலே காய்ந்தபின்பு கொட்டிப்பாரு
நல்லதொரு வெங்கலம்போ லோசைகேட்கும்
நாகரிக அயக்காந்தம் புடத்திலிட்டால்
தொல்லையில்லை செந்தூரஞ் சுழுவதாகும்
சூக்ஷமா யதையெடுத்துச் செப்பில்வைத்துத்
தில்லையிலே நடம்புரியும் சிவனைப்போற்றிச்
சேவித்தால் குன்மமெட்டுந் தீருந்தானே. (48)

ஆனந்தவாயுவுக்கு.

தானென்ற சதாசிவத்தின் கிருபையாலே
சங்குசக்ர பாணிசொன்ன ரின்னமொன்று
ஊனென்ற உடம்புக்குள் நரம்புசிக்கி
யுதரத்தில் வாசியது வோடும்போது
நானென்ற ஆண்மைகெட்டு விந்துகெட்டு
நாட்செல்ல வுரல்போலே ஊதும்வாய்வு
வானென்ற ஆகாசந் தன்னைநோக்கி
வாங்காட்டா லானந்த வாயுவாமே. (49)

மருந்து.

ஆமப்பா வன்னியுட தோலைவாங்கி
அடைவாகச் சூரணித்து ஆவின்நெய்யில்
தாமப்பா போதுபத்து கொள்ளும்போது
சாத்தியமாம் பீசமது முன்போலாகும்
நாமப்பா கைகண்ட வித்தைசொன்னோம்
நலமாகு மிம்முறையை நாடிப்பாரு
போமப்பா புவிபைவிட்டு ஆண்டவாதம்
புகையிலையும் புளிப்பும் விலக்கிச்செய்யே. (50)

கெற்பமுண்டாக எண்ணெய்.

செய்யப்பா ஸ்திரிகளுட கெற்பந்தன்னை
திருமணியைப் புழுத்தின்று மலடியானல்
கையப்பா பாராதே வயித்தியோர்கள்
காசினியிற் பலவிதமாய் மருந்து செய்வார்
தையப்பா மாசிரண்டும் அறியமாட்டார்
தாய்தகப்பன் குருதெய்வந் தனையேகாணார்
பையப்பா தனையெடுத்து வயித்யனென்று
பார்முழுதுந் திரிவார்கள் கழுதைகாணே. (51)

கழுதையுட பாலுரிதான் கொண்டுவந்து
கனமான விலுமிச்சம் பழச்சார்நாழி
யழுத்தபா டாவனாயீ சங்குபின்னி
பண்பான பிரமயிலே வகைச்சார்நாழி
வழுத்தவிளக் கெண்ணெய்படி யதனிற்சேர்த்து
வைத்திடுவாய் நாளாறு பதனமாகக்
கொழுகொழுத்து யிருக்குமதை யேழாம்நாளில்
கொதும்பைவிற காலெடுத்து அடுப்பிலேத்தே. (52)

ஏத்தவே பொரிகாரம் ரசகற்பூரம்
இயல்பான சாதிலிங்கம் நவச்சாரந்தான்
தோத்தவே துத்தமொடு துருசுஆறும்
தூக்கியே வகைமூன்று கழஞ்சுமாகப்
போத்தவே பூனைக்கண் குந்திருக்கம்
புகழான விந்துப்பு பவளப்புத்தும்
சாத்தவே சீனமிவை நாற்சரக்கும்
சரியாக வகையிரண்டு கழஞ்சுவாங்கே. (53)

வாங்கவே கெந்தகந்தான் கழஞ்சுநாலு
வளமான திரிகடுகு திரிபலாதி
பாங்காஞ்சா திக்காய்பத் திரிகிராம்பு
பட்டையா மிலவங்கம் வாய்விலங்கம்
ஆங்காகு மரிதார மாத்தையக்ரு
அதிமதுரம் சிறுதேக்கு தாளிசபத்ரி
நீங்காமல் நேர்வாளஞ் சிறுநாகப்பூ
நிசமான சீரகமுங் காயங்கூட்டே. (54)

கூட்டுகருஞ் சீரகந்தோ டவ்வளவ்வும்
குறையாமற் கழஞ்சொன்று நிறுத்துவாங்கி
ஆட்டுவாய் மருந்தெல்லாம் பழச்சாற்றாலே
அரைத்துருட்டி முன்மருந்திற் கலக்கிநன்றாய்
மீட்டுவாய் அடுப்பேற்றி வத்தக்காய்ச்சி
மெழுகுபத மானபின்பு வடித்தெடுத்து
ஊட்டுவாய் கதிர்வேலன் குருவைப்போற்றி
உண்டவர்க்குக் கெற்பமதுண் டாகும்பாரே. (55)

பாரப்பா புளியாகாப் பத்தியந்தான்
பரிவாகக் கல்யாணி பெண்ணைத்தன்னை
ஆரப்பா கேட்டாலும் முறைகாட்டாதே
அடைவாகச் செய்தவைத்து மருந்தைக்காட்டு
சீரப்பா துட்டுக்கா சிடைதான்மூன்று
தினமுண்ணத் தெரிவையற்குக் கெற்பமுண்டாம்
பேரப்பா பிரபலமாய் வயித்தியத்திற்
பிசகாம லின்னமொன்று தொடர்ந்துகாணே. (56)

வேறு.

அறுசீர் குறுவிருத்தம்.

தோடகை யமுர்த வல்லி தூதளை பிரமி வேம்பு
தேடிய சிவதை சுக்கு திறுகுறுஞ் சாவி னோடு
நாடிய வெட்டு மொன்றாய் நறுநெயிற் காய்ச்சி நக்கப்
பேடியும் பிள்ளை யுண்டாம் பிராயமும் பிறக்கு மாதே. (57)

வேறு

ஆனந்தவாயுவுக்கு.

மாதர்களில் மலடில்லை யென்றுவேத
வாக்கியங்கள் விளம்புவதா லிந்நூல்பார்த்து
ஆதரவாய்ச் செய்தவர்க்குப் பலிதமாகும்
ஆதிசிவ னருளாலே பிள்ளையுண்டாம்
காதனுட வருள்பெற்று நந்திசொல்ல
நாரணனு ருபதேச மெனக்குச்சொல்லப்
போதரவாய் நாமுனக்குச் சொல்லிவிட்டோம்
புகழாக இன்னமொன்று புகலுவேனே. (58)

பாரிசவாய்வுக்கு

புகலுகிறேன் பாரிசவா யுவுக்குமப்பா
பூவுலகிற் புறுவினுட தொலியைவாங்கி
இகலாம லாவின்பால் விட்டரைத்து
இலுமிச்சங் காயளவு மெடுத்துக்கொண்டு
அகலாம லாவின்பால் தனிற்கரைத்து
அப்பனே நாளொன்றுக் கிருபோதுண்ண
இகலாம லிப்படியே செய்யும்போது
இன்னமொன்று சொல்லுகிறே னியல்பாய்ச்செப்பே. (59)

செய்யப்பா யிலுப்பையுட புண்ணாக்கைத்தான்
தீயெரிக்கு முமிக்காந்தற் றனிற்புதைத்து
நொய்யவே கருகினதை யெடுத்துக்கொண்டு
நுணுக்கமாய் வெண்ணீரி லரைத்துக்காய்ச்சி
பையவே பாரிசத்தில் நன்றாய்ப்பூசி
பரிவாகத் தீக்கொள்ளி யனலைக்காட்டி
உய்யவே வுலகுமிசை நாலுபோது
உற்பனமாய்ச் செய்துவிடிற் சுருங்கிப்போமே. (60)

லிங்க செந்தூரம்.

சுருக்கமா யின்னமொன்று சொல்லக்கேளு
சுயம்பான சாதிலிங்கங் கழஞ்சுநாலு
பெருக்கமுள சுறாமீனின் பாலைசுத்தி
பெருகவே யெருவொன்றிற் புடமாய்வைத்து
உருக்கியே புகையாமற் பாலைவெந்த
வுடனெடுத்து வோட்டில்வைத்து ஒளிதீயாக
இருக்கும்போ திரண்டுபல மிஞ்சிச்சாற்றை
யியல்பாகச் சுருக்கிட்டு எடுத்துக்கொள்ளே. (61)

பீசத்தில் குத்துவீக்கத்துக்கு.

கொள்ளப்பா சாராயத் தோர்கரண்டி
கோழியிலே சேவல்ரத்தத் தோர்கரண்டி
உள்ளப்பா மனமுறத்தோ ரேழுபோது
உற்பனம தாய்க்கொண்டால் ராமபாணம்
எள்ளப்பா தப்பாது பீசந்தன்னில்
இடராக வந்ததொரு பாரிசந்தான்
விள்ளாம லோடிப்போம் மைந்தாநீயும்
விரைவாகப் புளியுப்பு விலக்குவாயே. (62)

விலக்குமே யின்னமொரு முறைதானப்பா
விருதான கழச்சிசுட்டுப் பருப்பெடுத்துத்
துலங்கவே மைப்போலே சூரணித்துச்
சூட்சமொரு கரண்டியிலே அரக்குச்சாவல்
குலுங்காமற் றலையறுத்துக் கரண்டிரத்தம்
கூட்டியே யொருபோது கொடுப்பாயானல்
மலங்காமற் பீசவலி குத்துவீதம்
வாங்கிவிடு மிந்தமுறை மகிழ்ந்துபாரே. (63)

வாந்திபேதிக்கு.

மகிழ்ந்துபார் முன்சொன்ன ராமபாணம்
மகத்தாக யிஞ்சிச்சா றதனிற்சேர்த்து
இகழ்ந்துதான் போடாம லேழுபோது
இயல்பாகச் சேவித்தால் வாந்திபேதி
புகழ்ந்துதான் வெகுவாகக் காணுமப்பா
புத்தியதை யலையாமல் நிலைத்துக்கொண்டு
நிகழ்ந்துதான் போடாமற் செய்வீராகில்
நிச்சயமாய்ப் பாரிசரோய் தீர்ந்துபோமே. (64)

ரத்தசலப்பிரமேகம்

தீராத ரத்தசலப் பிரமேகங்கள்
தீர்ப்பதற்கு முறையொன்று சொல்லக்கேளு
ஆராலு மாதியந்த மறியவொண்ணு
தண்ணலார் நடனமிடுஞ் சுடலைதன்னிற்
பாராமற் கிடக்குகின்ற வத்திதன்னைப்
பசுவின்பால் விட்டரைத்து வில்லைசெய்து
சீராகக் காய்ந்தபின்பு முழப்புடத்தில்
திரமாக வைத்தெடுத்துச் செய்திகேளே. (65)

கேளப்பா மூன்றுதின மாறுபோது
கெடியான துட்டுக்கா சிடைதான்பாலில்
பாளப்பா செய்யாமற் கொண்டாயாகில்
பறக்குமடா ரெத்தசலம் பிரமேகந்தான்
நாளப்பா வொருவா ரம் இச்சாபத்யம்
நன்றாக இருந்துவிடில் வச்ரதேகம்
வேளப்பா கும்பமுனிக் குபதேசித்த
விபரமிது ஞானறிந்து விதித்திட்டேனே. (66)

வங்கபற்பம்.

திட்டமா யின்னமொன்று செப்பக்கேளு
திரமான வெள்வங்கக் கட்டிவாங்கி
வட்டமா யிடுகாட்டு மண்டையோடு
மகத்தாங்காட் டாமணக்கு விரையுஞ்சேர்த்து
கட்டமா யெண்ணுமற் கவசஞ்செய்து
கணபதிக்குப் பூசைபண்ணி புடத்தில்வைத்தால்
நட்டமாய்ப் போகாது இடைபடாது
நலமான வெள்வங்கப் பற்பந்தானே. (67)

பற்பத்திற் பணவிடைதான் பசுவின்வெண்ணெய்
பாக்களவிற் பொதிந்துபத்துப் போதுகொண்டால்
கெற்பத்தில் வந்தபெரும் பாடுதீரும்
கேசரிப்பால் தனிற்கொள்ளக் கிருக்குந்தீரும்
கற்பத்தில் மாதருட வனுபோகத்திற்
கர்மமாய் வந்தரத்தப் பிரமேகங்கள்
சொற்பத்தில் தீர்ந்துபோ மாவின்பாலிற்
சொர்னமிது வுண்டாகுஞ் சுளுவுகாணே, (68)

புத்துப்புண் முதலானதுக்கு.

காணவே கும்பிடுசிப் பியையெடுத்துத்
காட்டெருவிற் புடம்போட்டுப் பற்பமாக்கித்
தோணவே ஆவெண்ணெய் தன்னைச்சேர்த்துச்
சுருக்கங்காட் டாமணக்கின் பாலிலூட்டிப்
பூணவே புத்துப்புண் கிரந்தியாப்பு
புரையான வெகுவிஷத்துப் புண்களெல்லாம்
காணவே ஓடுங்கை கண்டவித்தை
நாரணனர் சொன்னமுறை நாடிப்பாரே. (69)

கண்நோவு முதலானதுக்கு.

நாடிப்பார் நயனத்தில் நோவுகண்டால்
நலமான யிலுமிச்சம் பழந்தானொன்று
தேடிப்பா ரிருகூறாய் நறுக்கிவைத்துச்
சிறப்பாக விதையெல்லாந் தெரிந்தெடுத்துக்
கூடிப்பார் சீனமொடு சீரகந்தான்
குன்றிபதி மூன்றிடைதான் மிளகுரெண்டு
வாடிப்பார் மைப்போலே சூரணித்து
வளமான பழத்துள்வைத்துக் கிளிதான்கட்டே. (70)

கட்டியே அயக்கரண்டி மண்வெட்டிதான்
கடிதான சட்டுவமிம் மூன்றிலொன்றில்
தட்டியே அடுப்பிலிட்டுத் தீயெரித்துத்
தழல்போலே காய்ந்தபின்பு யெடுத்துவைத்து
ஒட்டியே கிளியதனைக் கண்ணைச்சுத்தி
ஒத்தியே வுருட்டிவிடக் கல்க்கந்தீர்ந்து
அட்டியாய் வந்தபிணி யகன்றுபோகும்
ஆச்சரியம் வித்தையிது அடவாய்ச்செய்யே. (71)

கால் சூலக்கு.

அடவாக வந்ததொரு கால்சூலைக்கு
ஆச்சரியம் வெடியுப்பு இந்துப்புத்தான்
திடமாக வகையொன்று களஞ்சியொன்று
செயமான இலுமிச்சம் பழந்தான்நாலு
இடமான பாத்திரத்தி லொன்றாய்ச்சேர்த்து
எத்தபழஞ் சேலைதனி லூட்டிபப்பா
குடமான செம்பிலிட்டு வுலர்ந்தபின்பு
குறிப்பாகப் புண்ணிலிடத் தீருந்தானே. (72)

சூலைப்புண் துவாலையடங்க.

தானேதான பெண்களுக்குத் துவாலையப்பா
தனிவிரத்தஞ் சாணநீர் தயிர்போற்கண்டால்
தேனேபோ லிருக்கின்ற சாராயத்தில்
திடமாக ஆழாக்குத் தெரிந்துவாங்கி
வானேதா னேக்கிநிற்குந் தென்னம்பிள்ளை
மடற்குள்ளே மேலெழுந்த இளம்பூவோடு
பானைமைப் போலாட்டி மூன்றுபோது
பண்பாகக் கொண்டபின்பு அமுதுகொள்ளே. (73)

அமுதென்ன ஆவின்பாற் கொண்டுவந்து
அழகான குறுவைநெல் லரிசிபொங்கி
அமுதுண்டாற் புளியுப்பு மிரண்டுந்தள்ளி
அளவாக இப்படியே மூன்றுபோது
அமுதுண்டு மறுபத்யந் தீர்ந்துதானல்
அணைகட்டி மறுத்தாற்போ லடைத்துப்போகும்
சமுசியங்கள் வாராது நிசமதாகும்
சங்கானுர் கைமுறையாய்ச் சொன்னமட்டே. (74)

குன்மத்திற்கு.

மட்டற்ற வெரிகுன்மங் கோரவாய்வு
வயிற்றுவலி தீரவென்றால் முறையைக்கேளு
திட்டமதாய்க் காந்தாரி மிளகாய்வாங்கித்
திறமாக அரைப்படிதா னெடுத்துக்கொண்டு
இட்டமுள்ள அசுவகெந்தி முன்பால்தன்னில்
இயல்பான கறியுப்பு மூணுங்காச்சல்
மட்டதுதான் தப்பாமல் அவித்தெடுத்து
வரிசையுடன் உலர்ந்தபின்பு முறையைப்பாரே. (75)

முறையாகச் சாரணைவேர் வில்வவேரும்
முக்யமுள்ள அசுவகெந்தி, மூன்றுமப்பா
குறையாமல் வகையொன்றுக் கொருபலந்தான்
கொண்டுவந்து வில்லைவில்லை யாகச்செய்து
அறையாமல் முன்மருந்து கூடச்சேர்த்து
ஆவினுட மூத்திரத்தி லூறப்போட்டு
துறையாக வொருபோது கழித்தெடுத்துச்
சூரியனிற் காயவைத்து எடுத்துக்கொள்ளே. (76)

கீழ்க்காய்நெல்லித் தயிலம்.

எடுத்தபின்பு வெள்ளாட்டு மூத்திரத்தில்
இப்படியே ஒருபொழுது வூறப்போட்டு
விடுத்தெடுத்து நீர்வத்தக் காயவைத்து
வீரான எருமையுட தயிரிலேதான்
கடுத்தமுடன் ஒருபொழுது வூறப்போட்டு
காய்ந்தபின்பு சூரணித்துச் சீனிகூட்டி
கொடுத்திடவே குன்மங்க ளெல்லாந்தீரும்
குளிப்பதற்குக் கீழ்க்காயின் நெல்லிவாங்கே. (77)

வாங்கியே கால்துலாஞ் சமூலத்தோடே
வளமான ஐங்குறுணி நீரிற்போட்டுத்
தாங்கியே அடுப்பேத்தி வத்தக்காய்ச்சி
தயவாக இருநாழியாழம்வாங்கித்
தீங்கில்லா நல்லெண்ணெய் படிதானென்று
திறமான ஆவின்பால் படிதானென்று
நீங்கியே போகாம லொன்றாய்ச்சேர்த்து
நிசமான கோட்டமொரு பலந்தான்போடே. (78)

வாதத்துக்கு

போட்டவுடன் மெழுகுபதம் வடித்துவாங்கி
புகழாக முழுகிவரக் குன்மவாய்வு
ஓட்டமென ஓடிவிடும் உடலில்நில்லா
துடல்வாத மென்பதுவுந் தீரக்கேளு
வாட்டமற்ற மாவிலங்கு கொன்றைவேம்பு
மகத்தான வெள்ளறுகு சங்கங்குப்பி
கூட்டமிட்ட யெருக்கன்வேர் சித்ரமூலம்
கோஷ்டமொடு திரிகடுகோ டுப்புமஞ்சே. (97)

அஞ்சேது இந்துப்பு கல்லுப்புத்தான்
அட்டுப்பு சவிட்டுப்பு வளையலுப்பு
தஞ்சமா யிவ்வளவுங் களஞ்சியொன்று
தனித்தனியே நிறுத்துமிரு நாழிநீரில்
மிஞ்சவே அடுப்பேத்தி யெட்டொன்றாக்கி
மேதினியில் மண்டலந்தா னுண்டதற்பின்
பஞ்சயெண்ணெய்த் தயிலமது வுடம்பிற்பூசப்
பாகத்தை நன்றாகப் பகருவேனே. (80)

பகரக்கேள் வேப்பெண்ணெய் புங்கினெண்ணெய்
பரிவான யெள்ளெண்ணெய் இலுப்பையெண்ணெய்
நகரக்கேள் புன்னைக்கா யெண்ணெயோடு
நுணுக்கமுள்ள தில்லைப்பா லெருக்கலம்பால்
நகரமாய் மாவிலங்கு முருங்கைவாகை
நளினமா மிந்துப்பு வசம்பிருள்ளி
வகரமாங் காயமொடு மூலங்கூட்டி
வளமாக யெரித்தெடுத்து வுடம்பிற்றேயே. (81)

ஓரிதழ்த்தாமரைச்சூரணம்

தேய்த்திடவே முகவாதம் பக்கவாதம்
திமிர்வாதம் முடவாதங் கால்கைவாதம்
வாய்த்திடவே நடுநடுக்கும் வாதத்தோடு
மானிலத்தி லுண்டான வாதமெல்லாம்
நோய்த்திடவே மாட்டாது தீர்ந்துபோகும்
நொச்சியிலை சிறுபயிறு தேய்த்துவெண்ணீர்
ஊய்த்திடவே திறமாகும் மேகந்தீர
ஓரிதழ்தா மரையின்ச மூலம்வாங்கே. (82)

மேகாதிக்கு.

வாங்கியதை நிழலுலர்த்திச் சூரணித்து
வண்மையுடன் பலம்பத்துச் சீரகந்தான்
தீங்கில்லாச் சரக்காறு பலமுங்கூட்டித்
திவ்வியமாஞ் சந்தனத்திற் பலந்தான்மூன்று
தாங்கியசெஞ் சந்தனத்திற் பலமொன்றாகத்
தப்பாமற் சூரணித்து வைத்துக்கொண்டு
பாங்கியே கரும்புவெல்லம் பலந்தானைந்து
பாகுசெய்து சூரணத்தைத் தூவிடாயே. (83)

தூவியே நெய்விட்டுக் கிண்டிப்பார்த்துச்
சுருக்கான லேகியத்தை யெடுத்துக்கொண்டு
ஆவியது போகாமற் பதனஞ்செய்து
ஆறுமுக வேலவனைத் தியானஞ்செய்து
நேவித்யம் பூசைசெய்து எடுத்துக்கொண்டு
நிதமொன்றுக் கிருபொழுது நெல்லிக்காய்போல்
ஓவியமாய் மண்டலந்தா னிடைவிடாமல்
உத்தமனே அந்திசந்தி யுண்டுபாரே. (84)

தீமிருக்கு
உண்டவற்குக் காற்கடுப்புக் கைக்கடுப்பு
உஷ்டினங்கள் தீர்ந்துவெகு தாதுண்டாகும்
கண்டபடி நாம்சொன்னோம் இன்னமொன்று
காற்றிமிரு கைத்திமிரு குறைநோவுக்கு
மண்டைமுதல் ப்ாதமட்டும் வீக்கங்கண்டு
மகத்துவஞ்சேர் கைகால்கள் விரலிலேதான்
விண்டுவிழ நீர்வடிந்து காதூமுக்கு
மேலுதடுங் கீழுதடும் வீங்கினோர்க்கே. (85)

நோக்கான அளிசம்சேங் கொட்டைபெட்டி
நுணுக்கமுடன் புறச்சரக்கின் படிதானென்று
தாக்கான கெந்தகந்தான் பலமிரண்டு
தாயான வுவருப்புப் பலந்தானென்று
வாக்கான வெடியுப்பு கல்லுப்புத்தான்
மகத்துவஞ்சே ரிந்துப்பு வகைமூன்றுக்கு
நீக்காம லரைப்பலந்தான் நிறுத்துவாங்கி
நீள்கருஞ் சீரகமுமரைப் படித்தான்சேரே. (68)

சேர்க்கக்கார் கோலரிசி படிதானென்று
செயமான கழுதைநீர் விட்டரைத்து
வாக்காக வில்லைதட்டி யுலர்ந்தபின்பு
மகத்தான குழித்தயிலம் வடித்தெடுத்துப்
பாக்களவு கொன்றைப்பூச் சூரணத்திற்
பரிவாக மண்டலந்தான் கொள்ளும்போது
நீக்கப்பா புளியுப்புப் பத்தியந்தான்
நிர்ணயமாய்ச் செய்தவர்க்கு நிவர்த்திதானே. (87)

சயரோகத்துக்கு.

தானென்று வந்தபிணி யெல்லாந்திரச்
சதாசிவனு ரிருடிகட்கு அருளிச்செய்தார்
வானென்ற வுலகினுள்ள மானிடர்க்கு
வழங்காமல் மகாரிஷிகள் மறைத்துப்போட்டார்
நானென்ற ஆணுவத்தால் விஸ்வாமித்ரர்
ராட்சதர்க்கும் சுரர்களுக்குஞ் சொல்லிவைத்தார்
தேனென்ற கோதும்பை லேகியத்தைச்
செய்தவர்க்கு ரெகுராமா தெளிந்துசெய்யே. (88)

கோதும்பை லேகியம்.

செய்யவே கோதும்பை சிறுபயறு
சிறப்பான வலரிசி யுளுந்தினோடு
பையவே காற்படியும் அமுதமாவும்
பரிவமுக்கி ராவுநிலப் பனைநன்னாரி
வெய்யவே கசகசா யரசியாவும்
விருதான சீரகமும் பலந்தானென்று
நயைவே யிடித்துவச்ர காயஞ்செய்து
நறுநெய்படி சீனிகற் கண்டுசேரே. (89)

சேரப்பா கற்கண்டு வெல்லந்தானும்
சேர்சமனுய்க் குளம்புபோற் பாகுகாய்ச்சி
நேரப்பா மருந்தெல்லாந் தூவிக்கிண்டி
நின்னயமாம் லேகியம்போ லிரக்கிக்கொண்டு
காரப்பா மண்டலந்தான் காலைமாலை
காசளவு உண்டுவரத் தீரும்நோய்கேள்
வாரப்பா யிருமல்கக்கல் தொண்டைநோவு
வரச்சியஸ்தி சுரத்தினொடு சயமும்போமே. (90)

போமப்பா பித்தமொடு பீனிசங்கள்
புகைச்சல்முதற் பலபிணியும் போச்சுதப்பா
ஆமப்பா வச்சிரம்போற் றேகமாகும்
அழகுண்டாம் பெலமுண்டாந் தாதுவுண்டாம்
வாமப்பா யிந்தமுறை ஆண்டுகொண்டால்
வலுவுனக்கு எதிராரும் யில்லையப்பா
தாமப்பா யிந்தமுறை செய்தபேர்க்குத்
தப்பாது கூழ்ப்பாண்டங் தடியங்காயே. (91)

### கூழ்ப்பாண்டரசாயனம்.

தடியங்கா யொன்றுக்குப் பலந்தான் நூறு
சதிராக வாங்கியதை யிருகூறுக்கிக்
குடியிருக்கும் விரைதோடுந் தள்ளிப்போட்டுக்
குணமாகச் சீவியதைப் பிழிந்தெடுத்துக்
கெடிகலசத் ததிலிட்டு அடுப்பிலேத்திக்
கிண்டிவர நீர்வற்றும் பருவந்தன்னில்
வடிவாகப் பிழிந்தநீர் விட்டுக்கிண்டி
வத்தியபின் பாற்சோற்றின் பருவமாமே. (92)

ஆமப்பா அப்போது நறுநெய்நாழி
அதில்விட்டுக் கிண்டிவரப் பொறிப்போலானல்
தாமப்பா சீனிபல மெட்டும்போட்டுச்
தயவாகக் கிண்டிவரும் பருவந்தன்னில்
வாமப்பா சந்தனமும் வாய்விளங்கம்
வங்காளப் பச்சைதிரி கடுகுவலம்
ஏமப்பா வால்மிளகு வங்கமாஞ்சி
யிலவங்கப் பத்திரிகச் சோலந்தானெ (93)

தானென்ற அதிமதுரங் கிராம்புகோஷ்டம்
சாதிக்காய் சாதிபத்திரி தக்கோலந்தான்
நானென்ற அதிவிடையம் யானைத்திப்பிலி
நல்லதொரு சீரகஞ்செண் பகத்தின்மொட்டு
வானென்ற லாமிச்சு தாளிஸ்பத்ரி
வகைமூன்று கழஞ்சிடித்து வடிதான்கொண்டு
பானென்ற முன்பருவந் தன்னிற்றூவி
பதமாக நீபருவம் பார்த்திரக்கே. (94)

இரக்கியோர் படிசிறுதேன் விட்டுக்கிண்டி
இளக்கியொரு பாத்திரத்தி லடைத்துக்கொண்டு
அரைக்குள்வைத்துக் கூழ்பாண்ட ரசாயனத்தை
ஆறிருநா ளிருபோது அருந்தினேர்க்கு
விரைக்குமே மேகவெட்டை சிரோணிதவாய்வு
வெப்புப்பீ னிசசயங்கா யாசுவாசம்
மறைக்குமத்தி சுரந்தீரும் தாதுபுஷ்டி
மானிடர்க்கு அன்னருசி வழங்குந்தானே. (95)

துருசுச்சுண்ணம்.

வளங்கவே துருசுனுட வித்தைதன்னை
வளமான பாவல்விரை தன்னைவாங்கி
விளங்கவே குழித்தயிலம் வடித்தெடுத்து
வீறான துருசுகட்டி தன்னிற்பூசி
களங்கமற்ற ரவியில்வைக்க நாலாம்நாளிற்
கட்டிப்போம் பிறகுபதி மூன்றுவாரம்
முளங்கவே ரவியில்வைக்க நீறிப்போகும்
முடிவதனை யொருவர்க்கும் மொழியொண்ணாதே. (96)

பட்டைரசாயனம்.

மொழியக்கேள் துருசுசுண்ணம் வேதைக்காகும்
முக்கியமாம் வயித்தியத்தின் போக்குக்கெல்லாம்
எளிதல்ல வெகுசுருக்கு குடோரியாகும்
இதுபோலே இன்னமொரு மருந்துதானும்
தெளிவாகப் பட்டைரசா யனத்தைச்சொல்வேன்
திறமாகச் செய்மருந்து குறையாமற்றான்
வழியாகச் செய்யப்பா சங்குகருஞ்சூரை
வாகுநில வேம்புசெந் தட்டிவேரே. (97)

வேரான யமுக்கரர் நாமத்தாளி
வெள்ளறுகு குளப்பாலை கண்டங்காரி
பேரான தூதுவளை சங்கங்குப்பி
பிரியமுள்ள கெருடக்கொடி குறிஞ்சாவோடு
வேரான பதிமூன்று வேப்பம்பட்டை
விளங்கவே வகையொன்று பலந்தானென்று
சீராக இவ்வளவு மிடித்தூள்செய்து
சீலைவடி கொண்டபின்பு செய்திகேளே. (98)

செய்தியென்ன சாதிக்காபத் திரிகிராம்பு
சிறுதேக்கு சண்பகமொட் டபின்கஞ்சாவும்
எய்தியதோ ரேலமில வங்கமாஞ்சி
இயல்பான திரிகடுகு திரிபலையுந்தானே
உய்திடவே கொத்தமல்லி சிறுநாகப்பூ
உளமகிழும் அதிமதுரம் வால்மிளகு
வைதிகரே காயமிலா மிச்சுவோமம்
வளமான வெள்ளுள்ளி கூகைநீரே. (99)

நீருடனே சித்தரத்தை பேராத்தை
நிசமான சீரகமத் தித்திப்பீலி
கூருடனே குங்குமப்பூ கோரோசனையும்
குணமான கோஷ்டமொடு தாளிஸ்பத்ரி
பேருடனே பேரீத்தம் பழத்திஞேடு
பெரிதான முந்திரிகை திப்பிலிமூலம்
வீருடனே மருந்துவகை முப்பத்தாறும்
வெவ்வேறே களஞ்சிரெண்டு வகையொன்றுக்கே. (100)

வகையான சீனமென்ற பட்டைதன்னை
வாங்குவாய் பதினைந்து பலந்தானப்பா
துகையான மருந்தெல்லா மிடிதூள்செய்து
திடியாக ஐம்பதையும் ஒன்ருய்ச்சேர்த்து
தகையாமல் கரும்புவெல்லம் பலமுமஞ்சு
சட்டியிட்டு அடுப்பில்வைத்து தண்ணீர்விட்டு
பகையாமல் பாகாக்கி யிறக்கிவைத்துப்
பக்குவமாய்ப் பொடித்தூவிக் கிண்டுகிண்டே. (101)

கிண்டயிலே சீனிபலம் பதினைந்தப்பா
கெடியான தேன்நாழி நறுநெய்நாழி
கொண்டதிலே கூடவிட்டுக் கிளறிக்கொண்டு
கோவின்பால் நாலுபடி தன்னைவாங்கி
பண்டையிலே பால்காச்சுந் தாளிதன்னிற்
பால்விட்டு அடுப்பேத்தி வண்டுகட்டி
வண்டதின்மேல் முன்மருந்து வைத்துமூடி
வளமாக வெந்தபின்பு இறக்கியுண்ணே. (102)

உண்ணுவது நெல்லிக்கா யளவதாக
ஒருநாளைக் கிருபோது காலைமாலை
திண்ணுவாய் பிரமேகங் குன்மமெட்டுந்
தீராத கிரந்திகுட்ட மூலவாய்வு
புண்ணுடனே வெடிசூலை பவுந்திரங்கள்
புழுக்கடியுஞ் சொரிசிரங்கும் புரையுமாறும்
கண்ணுமணி யாகுமிந்த ரசாயனத்லதக்
கருதியுண்ணும் புளியாகாப் பத்யந்தானே. (103)

அரையாப்பு.

தானென்ற அரையாப்பு வந்துதானாற்
சமூலமடா கவுதும்பை பிடிங்கிவந்து
நானென்ற சூட்சமடா லாடமூலி
நாவினு லுரையாதே அரைத்துப்பூசு
கானென்ற வூமத்தங் காயைச்சுட்டுக்
கடுக்காயுஞ் சுட்டுநீ கருதக்கேளு
மானென்ற கும்பிடுகற் சிப்பிசுட்டு
வாழையுட பழத்தொலியைச் சுட்டிடாயே. (104)

சுட்டெடுத்த மருந்துடனே வெல்லங்கூட்டிச்
சுருக்கான கோழிமுட்டைக் கருவாலாட்டிக்
கட்டவிழ்த்து மூன்றும்நாட் பூசும்போது
கரைந்துவத்து மரையாப்புச் சூலேதானும்
திட்டமகிழ் ரசவாதி வயித்தியந்தான்
தேசத்தி லிம்மூலி செய்பமாட்டான்
மட்டலருங் குழலாளைச் சடையில்வைத்த
மானேந்தி சொன்னவித்தை வாய்விட்டேனே. (105)

வாதராட்சதன் குளிகை

விட்டகுறை தொட்டவுடன் பலிதமாகும்
வீண்பேச்சுக் கசடருக்குப் பலித்திடாது
திட்டமுடன் வாதராக்கன் குழிகைதன்னை
ஜெகத்திலுள்ள பண்டிதர்க் காயாதிநாதன்
சட்டமுனிக் குரைத்தபடி நானுங்கேட்டேன்
தப்பாது கைகண்ட வித்தையப்பா
கட்டரச செந்தூரங் காந்தசெந்தூரம்
கனமான லோகமுடன் கருதுவாயே. (106)

கருதுவாய் லோகசெந் தூரமூன்றும்
கடிதான தாம்பிரபற்பம் நாவிலிங்கம்
பெரிதுவாச் சாரமனே சிலையுமப்பா
பேர்பெற்ற துருசுசுண்ணம் கடுகுரோணி
விருதான சீரகமுஞ் சித்ரமூலம்
வெப்பாலை நன்னாரி பதினுலுந்தான்
அரிதான வகையொன்று கழஞ்சுமூன்று
அடவான நேர்வாளங் கொட்டையாறே. (107)

ஆறுடனே கெந்தகமுங் காயமப்பா
அடவான பொரிகாரம் நவச்சாரந்தான்
வீறுடைய வின்னுலு மருந்தையுந்தான்
வெவ்வேறே வகைக்காறு கழஞ்சுவாங்கி
பேறுடைய மருந்தொருபத் தொன்பதையும்
பிசகாமற் குழியம்மி தன்னிலிட்டுக்
கூறுடைய நொச்சியிலைச் சாற்றாலாட்டிக்
குழியம்மி தனில்வைத்துப் பின்னுங்கேளே. (108)

பின்னுமதை வெள்ளுள்ளிச் சாத்தாலாட்டிப்
பிசகாமற் குன்றிபோற் குளிகைசேர்த்து
நண்ணுகின்ற சிறுதேனிற் கொள்ளும்போது
நாடியதோர் வாதமெண் பதையுந்தீர்க்கும்
சண்ணுமடா சன்னிபதின் மூன்றுந்தீரும்
சார்வான வலியஞ்சும் சாந்தமாகும்
திண்ணுவரில் பெருவயிறு மூலவாய்வு
தீராத பாண்டுமகோ தரமுந்தானே. (109)

தானான சோகையொடு வறச்சிதீரும்
தாரணியில் வெகுநோவு உதிரவாய்வு
ஊனான சூதவலி உஷ்ணரோகம்
ஓடிவிடுஞ் சுரங்களெலா மூறைவிட்டுத்
தேனான வாதராட் சதனை நன்றாய்ச்
செப்பில்வைத்து மூடியே பதனஞ்செய்து
கோனான யீஸ்பரனைப் பூசைபண்ணிக்
குளிகைதனை யெடுத்துநீ மருந்துசெய்யே. (110)

தழுதாழியெண்ணெய்

செய்யவே தழுதாழை யெண்ணெய்தன்னைச்
செய்யகுறுந் தொட்டிவேர் பலம்பன்னிறு
துய்யதொரு தூணிசலந் தன்னிற்போட்டுச்
சுருக்காகக் காச்சியதை யெட்டொன்றாக்கி
எய்யாம லெள்ளெண்ணெய் படியிரண்டு
இயல்வாத மடக்கியிலைச் சாரெண்ணாழி
அய்யாவெள் ளாட்டின்பால் நாழிதானும்
அடவாகப் பாத்திரத்தி லிட்டுவையே. (111)

வையேநீ ஒருபொழுது களித்தெடுத்து
வரிசையுட னடுப்பேத்திக் காயும்போது
மெய்யேநீ வெள்ளாட்டின் உரிபால்தானும்
விட்டவுடன் கடைமருந்து கிராம்புகோட்டம்
செய்யேநீ யேலமில வங்கத்தோடு
செண்பகத்தின் மொட்டுடனே சாதிக்காயும்
உய்யேநீ அதிமதுரம் விடையந்தானும்
உரைப்பான மிளகினோ டொன்பதாமே. (112)

ஆமிந்த மருந்தெல்லாம் பொடித்துப்போட்டு
அடவாகக் காய்ச்சிடுவாய் சதங்கைபோலே
வேமிந்தப் பருவத்தில் வெள்ளாட்டின்பால்
விட்டிடுவாய்ப் படியொன்று விரைவதாகத்
தாமிந்தப் படிமெழுகு பதத்திற்காய்ச்சி
தப்பாம லோர்நாள்விட் டோர்நாள்தன்னில்
ஓமிந்தப் படிமுழுகி வந்தபேர்க்கு
உடல்வாதங் கால்வாத மோடிப்போமே. (113)

ஓடிப்போம் திமிர்வாதங் கைவாதங்கள்
ஊழ்வினையால் வந்ததொரு முடக்குவாதம்
ஓடிப்போம் உலகதனில் நில்லாதப்பா
உடற்குத்துச் சந்துவலி பிடரிக்குத்து
வாடிப்போம் வீக்கம்வலி யானதோடே
வாதவகை எண்பதுக்கும் மருந்திதாகும்
கூடிப்போம் படுகாய மசனதெல்லாம
கூடுதற்கு எண்ணெயொன்று கூறுவோமே. (114)

படுகாயத்துக்குஎண்ணெய்

கூறான சித்தகத்திச் சாறுநாழி
குணமான வெள்ளெண்ணெய் படிதான்நாழி
வீறான வேம்பாடம் பலந்தானென்று
விதமாக இவ்வளவும் ஒன்றாய்ச்சேர்த்துப்
பேறான அடுப்பேத்தி வத்தக்காய்ச்சி
பிசகாமல் மெழுகுபதந் தன்னில்வாங்கி
வாறான பழஞ்சேலை தன்னிலூட்டி
வடுவான புண்ணிலிட மாய்ந்துபோமே. (115)

மாயவே யின்னமொரு வகைதான்கேளு
மகாரிஷிகட் கீசுரனர் சொன்னவித்தை
காயகஞ் சாங்கோரை யென்று சொல்வார்
கண்டவர்கள் பேய்த்துளசி யென்றுஞ்சொல்வார்
நேயமுடன் பூசைசெய்யும் பச்சைபோலே
நிற்குமிது சித்திலையாய் வெளுத்திருக்கும்
வாயதுதான் பேசாமல் இலையைவாங்கி
வளமான பச்சைமஞ்சள் பிடிகள்தானே. (116)

மஞ்சளது விரலியிலே பத்துவைத்து
வடிமெழுகு போலரைத்து அயக்கரண்டி
துஞ்சவே குழப்பியதில் தேங்காயெண்ணெய்
தூவியே நீர்வத்தக் கிண்டிக்காய்ச்சி
நெஞ்சதுதா னுரைத்ததுவே படுகாயத்தில்
நெற்கனமாய்ப் பொதிந்துகட்ட வாறிப்போகும்
நஞ்சமுத மாகவுண்ட நாதன்சொன்ன
நலமான மருந்துதனை நாடிப்பாரே. (117)

காயப்புண்ணுக்கு.

பார்க்கவே யின்னமொரு முறைதானப்பா
பரிவான சீனியுடன் காசுக்கட்டி
சேர்க்கவே வகையொன்று கழஞ்சுரெண்டு
திறமாகக் குழியம்மி தன்னிலிட்டு
ஆர்க்கவே பொடிசெய்து படுகாயத்தில்
அடைவாகப் பொதிந்துகட்ட ஆறிப்போகும்
தீர்க்கவே யிதைவிட்டால் வேறொன்றில்லை
செப்பார்க ளிந்தமுறை செகத்துள்ளோர்க்கே. (118)

குன்மத்துக்கு உப்பு.

ஜெகத்திலுள்ள குன்மமெட்டுந் தீர்ப்பதற்குத்
திரமான லவணபற்பஞ் செப்பக்கேளு
இகத்திலுள்ள கறியுப்புப் பலந்தான்வாங்கி
எருக்கலம்பால் விட்டரைத்து வில்லைசெய்து
சுகத்திலே காய்ந்தபின்பு ஓட்டில்வைத்துச்
சுழுவாக முழப்புடத்தில் வைத்தாயாகில்
மகத்தான பற்பமது வாகும்பாரு
மஞ்சாடி பணவெல்லந் தன்னிற்கொள்ளே. (119)

மூதண்டகசாயம்.

கொள்ளவே தினமூன்றுக் குள்ளதாகக்
குடிபோகுங் குன்மமெட்டுங் குடலிலில்லை
விள்ளவே செய்யாதே யின்னமொன்று
விளம்புகிறேன் வாய்ப்புண்கள் தீருதற்கு
மெள்ளவே அறுகம்வேர் பிடிதானென்று
விரைவாகத் தானெடுத்துச் சுத்திசெய்து
நள்ளவே சீரகந்தான் கழஞ்சுரெண்டு
நலமான மிளகுபத்துக் கூடக்கூட்டே. (120)

கூட்டியே யிருநாழி தண்ணீர்விட்டுக்
குறுக்கியே ஆழாக்காய் வத்தக்காய்ச்சி
நாட்டியே புன்னைக்கா யளவாம்வெண்ணெய்
நலமாக யிட்டிரண்டு பொழுதுகொள்ள
வீட்டிலுள்ள அழல்தானு மத்துநன்றாய்
வீறான வாய்ப்புண்கள் தீர்ந்துபோகும்
தாட்டிமையா மூதண்டக் கிசாயமப்பா
தப்பாது கைகண்ட வித்தைதானே. (121)

நீரடைப்புக்கு.

வித்தையென்ன நீர்செறுப்பு நீரடைப்பு
வெகுகடின மானதுவுந் தீரவென்றால்
தத்தையுட மூக்குநிறச் சந்தனந்தான்
தனியாவின் கோரோசனை தானுங்கூட்டி
ஒத்தையிலே யொருவித்து தேத்தான்கொட்டை
உத்தமனே மூலைப்பாலில் மைப்போலாட்டிக்
கத்தன்கங்கைச் சடையானைப் போற்றிசெய்து
கடிகைக்கு மேல்வயிற்றிற் கனமாய்ப்போடே. (122)

போட்டபின்பு பூங்கதலி வாழைத்தண்டு
புகழாகக் கிழங்குடனே நாறுதள்ளி
வாட்டமற வாகாகக் கொணடுவந்து
வட்டமதாய் நறுக்கியதை யெடுத்துக்கொண்டு
தோட்டத்திற் சிறுபசலி பிடிதான்வாங்கிச்
சுகமாக யீதிரண்டுங் கலத்திலிட்டு
நாட்டமுடன் நாழிஜலங் கூடவிட்டு
நலமாக எட்டொன்றாய் வத்தக்காய்ச்சே. (123)

### கஷாயம்.

காய்ச்சியே கொண்டவர்க்கு நீர்ச்செறுப்பு
கடினமுள்ள நீரடைப்புத் தீர்ந்துபோகும்
ஆச்சரியம் வெகுசுருக்கு இதுதானப்பா
அடவாகச் செய்வதற்குப் பலிதமாகும்
தாச்சணியம் வாராம லின்னமொன்று
தயவாகச் சொல்லுகிறேம் சூலையரையாப்பு
மாச்சிமையாய்த் தீர்ப்பதற்குச் சித்ரமூலம்
மங்கையற்கு ஆண்வேரை வாங்குவாயே. (124)

### சூலை அரையாப்புக்கு எண்ணெய்.

வாங்குவது ஆணுக்குப் பெண்வேரப்பா
வரிசையுடன் நரமபுதள்ளித் தொலியெடுத்துப்
பாங்குடனே பலமொன்று நிறுத்திக்கொண்டு
பசுவினுட பால்படியி லிட்டபோது
தாங்குவது கருகாமல் வத்தக்காய்ச்சி
சதிரான வேர்த்தொலியை யெடுத்துக்கொண்டு
தீங்கான தருசுகால் களஞ்சிசேர்த்து
சிறப்பான இலுமிச்சம் பழந்தான்பத்தே. (125)

பத்தான பழச்சாத்தா லாட்டிமைந்தா
பரிவான நல்லெண்ணெய்படி யிற்பாதி
சித்தான முன்மருந்தை கலக்கிக்கொண்டு
சிறப்பான கரும்புவெல்லம் பலந்தானிட்டு
வத்தான மெழுகுபத மாகக்காய்ச்சி
வாங்கிமறு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு
கத்தான கக்குநெல்லி யளவதாகக்
கரண்டியெண்ணெய் ஒருபொழுது கண்டுகொள்ளே. (126)

கொள்ளப்பா மூணுநா ளேழுபோது
கொண்டவற்கு அரையாப்புச் சூலைபதினெட்டு
விள்ளப்பா செய்யாம லோடிப்போகும்
வெகுநாளை வியாதிகட்கு மிதனைச்செய்நீ
தள்ளப்பா தள்ளிவிடு மூலகுதன்னில்
தரியாது உடம்பைவிட்டுச் சாடிப்போகும்
எள்ளப்பா தப்பிலைகை கண்டவித்தை
என்னசொல்வேன் வெகுசுருக்கு வயித்தியந்தான் (127)

நாசிகாபீடம் தலைக்குத்து.

தானென்ற நாசிகா பீடத்துக்குச்
சாதிலிங்கம் ரசந்தாரங் கெந்தகந்தான்
கானென்ற காந்தமுடன் வகையஞ்சுக்குங்
கழஞ்சொன்று வெவ்வேறே நிறுத்துவாங்கித்
தேனென்ற மைப்போலச் சூரணித்துச்
சேலையிலே தானூட்டித் திரித்துக்கொண்டு
ஊனென்ற வூமத்துக் கழஞ்சுநொச்சி
உறப்பாம்வே லிப்பருத்தி யிலையின்னாலே. (128)

இன்னாலு வகையிலையுஞ் சமபாகந்தான்
இடித்தெடுப்பா யொருபடிச்சா றியல்பதாக
முன்னாலே திரித்ததிரி சாத்திவிட்டு
முருகவே காய்ந்தபின்னவ் விதமதாக
நன்னாலு தரமிட்டுக் காய்ந்தபின்பு
நலமான திரிகொளுத்திக் குழல்வைத்தூதப்
பின்னாலே போகாமற் புகையைவாங்கிற்
பீடமது நீராகக் கரைந்துபோமே. (129)

கரைந்துபோம் நாசிகா பீடந்தானும்
கனமான தலைக்குத்தும் நாசிநீரும்
விரைந்துபோம் மண்டைபிடி மூக்கடைப்பு
விசமான சிரசுநீர் குறுகுறுப்பு
இரைந்துவரும் செவிக்குத்துந் தீர்ந்துபோகும்
இதுபோலே சுருக்கேது மில்லையப்பா
சிரந்தனிலே நதிமதியை யணிந்தநாதன்
தெட்சணா மூர்த்திக்குச் சொன்னவாக்கே. (130)

லோகபற்பம்.

வாக்காக லோகபற்பம் சொல்லக்கேளு
வாழ்குமரிக் கரையோரம் மணலுருக்கி
நோக்காக வெடுத்தஅயந் தன்னைவாங்கி
நுணுக்கமாய்த் தகடடித்து ஒருச்சாணப்பா
பார்க்கவே சமசதுர மாகவெட்டிப்
பனைவோலைக் கனமாகத் தகடொன்றுக்குத்
தூக்கடா அரைக்கழஞ்சு வீரம்பூரம்
சுருக்கான நவச்சாரங் காரந்தானே. (131)

### நவலோகம்.

காரமுள்ள சவுக்காரம் வெள்ளைநாவி
சுனமான வெடியுப்புக் கெந்தகந்தான்
தூரமுள்ள சூதமொடு வகையொன்றுக்குத்
தூக்குவாய் அரைக்கழஞ்சு இடையதாக
சாரமுள்ள சம்பளச்சார் விட்டுஆட்டித்
தகட்டிலப்பிப் பறந்தசட்டி தன்னில்வைத்து
நேரமுள்ள ரவியில்வைத்துக் காய்ந்தபின்பு
நிசமாக இன்னமொரு சட்டிமூடே. (132)

### கெந்தகசுத்தி.

மூடியே சீலைமண் ணைஞ்சுசெய்து
மூடுவாய் குழிவெட்டிக் கெசபுடத்தில்
வாடியே போகாது நீறிப்போகும்
வளமாக இன்னமொரு புடந்தானப்பா
நாடியதோர் கெந்தகமும் பசுவின்வெண்ணெய்
நலமான அயக்கரண்டி தன்னிலிட்டுக்
கூடியே உருக்கியதைச் சிவக்கும்போது
கோவின்பால் தனிற்சாய்த்துப் பின்னும்பாரே. (133)

பின்னுமிரு கழஞ்சுகற் பூரங்கூட்டிப்
பிரபலமாய் முன்வைத்த லோகஞ்சேர்த்துப்
பொன்னுமிச்சம் பழச்சாறு தன்னாலாட்டிப்
புதுச்சட்டி தன்னில்வில்லை தட்டிவைத்து
முன்னுரைத்த படிரவியிற் காய்ந்தபின்பு
மூடுவாய் மறுசட்டி மேலேவைத்து
நுன்னுரையாய்ச் சீலைமண் முன்போற்செய்து
நுணுக்கமாய்க் கெசபுடத்தில் வைத்திடாயே. (134)

வைத்திடவே லோகமது நீறிப்போகும்
மகத்தான லோகமது ஒன்பதுந்தான்
பொய்த்திடா திந்தமுறை நீறிப்போகும்
பூதலத்திற் கைகண்ட வித்தையாகும்
மைத்தடங்கண் மாதுமையாள் பாகனான
மானேந்தி சொன்னதிந்த வயித்தியத்தை
மெய்த்திடவே செய்யாமல் வயித்தியோர்கள்
விதம்பலவாய்ச் செய்ததினாற் சீர்கேடாச்சே. (135)

### வில்வாதி லேகியம்.

சீரான வில்வாதி லேகியந்தான்
சித்தரெல்லாம் பலவிதமாய்ப் பெருநூற்சொன்னார்
பாராமற் பாடினதை உமையாள்பாகன்
பார்த்துவெகு கோபமுண்டா யிருத்திவைத்தார்
பேரான லோகபற்பம் லேகியந்தான்
பிசகாம விந்நூலிற் பேசினேனான்
நேரான லோகபற்பம் முன்னேசொன்னோம்
நிசமான வில்வாதி பின்சொல்வோமே. (136)

சொல்லவே வில்வவேர் பலமையாறு
சுகந்தமாம் வெட்டிவேர் பலந்தானாறு
நல்லமுத்தக் காசுகரு வேப்பினீக்கில்
நலமான விலாமிச்சு இம்மூன்றுந்தான்
வெல்லவே வகையொன்றுக் கோர்பலந்தான்
வெவ்வேறே நிறுத்தஞ்சு மொன்றாய்ச்சேர்த்துக்
கொல்லவே நாக்குறுணி தண்ணீர்தன்னிற்
குறுகவே தரித்திடித்து வத்தக்காய்ச்சே. (137)

காய்ச்சியே யெட்டொன்றாய் வடித்துவாங்கிக்
கசாயத்திற் றுலாமரைக்கா லிஞ்சிசீவிப்
பாச்சியே யிடித்துநல்லச் சாறெடுத்துப்
பக்குவஞ்சேர் முன்மருந்துங் கூடக்கூட்டி
மாச்சியே கரும்புவெல்லம் பலமோரெட்டும்
மகத்தான முன்னீரிற் கரைத்துநன்றாய்
ஆச்சியே வடிகொண்டு அடுப்பிலேத்தி
அதுவத்திச் சோனைவிழும் பருவம்பாரே. (138)

பருவத்திற் சடாமாஞ்சி செவியங்கோட்டம்
பண்பான கூகைநீர் கச்சோலந்தான்
தருகப்பா யிலவங்கம் சந்தனமும்ஏலம்
தற்கோலந் திரிகடுகு சித்திரமூலம்
குருவாகுஞ் சாதிக்காய் கிராம்புபத்ரி
குரோசானி சிறுநாகப் பூவினோடு
மருவபின் சீரகமுந் தாளிசப்பத்ரி
வங்காளப் பச்சைகருஞ் சீரகந்தானுமே. (139)

ஆகுமே பேரீச்சம் பழத்தினோடு
அடவான மருந்திருபத் தோடுமூன்றும்
வாகுபெற வகையொன்றுக் கொருபலந்தான்
வாங்கியே யிடித்துவடி கட்டிக்கொண்டு
பாகுதனிற் பிசரியே நறுநெய்நாழி
பக்குவமா யளைப்படிதேன் விட்டுக்கிண்டி
நாகுபட நீர்ப்பருவம் பார்த்திறக்கி
நல்லகண பதிக்குநீ பூசிப்பாயே. (140)

பூசித்து வில்வாதி லேகியத்தைப்
புகழாகப் பரணிதனில் வைத்துமூடி
ஆசித்தே மண்டலந்தா னிரண்டுபோது
அத்திக்கா யளவெடுத்து லோகபற்பம்
நேசித்துப் பணவிடைதான் கூடச்சேர்த்து
நிசமாகத் தின்றுவரில் சத்திகுன்மம்
ஏசிப்போம் எரிகுன்மம் மேகவாய்வு
எப்பிளைப்புக் கிராணிமுதற் கிரக்கம்போமே. (141)

போமப்பா காமாலை பாண்டுசோகை
புழுக்கடிநா வழுவழுப்பு வயின்பொரும்மல்
காமப்பா கலவியினால் வந்தமேகம்
காசமரோ சிகஞ்சுவாசங் கடுப்புத்தீரும்
தாமப்பா செயும்போதே தாதுபுஷ்டி
தப்பாது மலசுத்தி பசியுண்டாக்கும்
நாமப்பா யிந்நூலில் முறையாய்ச்சொன்னோம்
நாசிரத்தம் சிராய்விழும்பீ னிசத்தைக்கேளே. (142)

ரத்தப்பீனிசத்துக்கு

பீனிசந்தான் தீரவென்றால் மருந்தைக்கேளு
பிசுக்கொட்டி முருங்கையிலைக் கொழுந்தினோடு
மானிலத்திற் கரியுப்பு முலைப்பால்சேர்த்து
மயினமா யிடித்துநன்றாய்க் கிளிபோற்கட்டி
வானில்முகம பார்க்கவே கிடத்திக்கொண்டு
வரிசையாய் நாசிக்கோர் துளிதான்விட்டால்
ஏனினித்தா னிருக்கின்றே மென்றுசொல்லி
யேகுமே பீனிசமுஞ் சிராயுந்தானே. (143)

இஞ்சிலேகியம்.

தானேதான் கொதித்தெழுந்த பித்தத்தாலே
தலைக்கிரக்கம் காலசதி சோகைமந்தம்
ஊனேதா னனல்மீறித் தாகங்கொண்டு
உதரவலி மெய்வீக்கம் மலம்பிடித்தல்
மானேதான் வந்ததென்றால் மருந்தைக்கேளு
வளமான நாட்டிஞ்சி தொலைகால்வாங்கி
கானேதான் முளைத்தெழுந்த வேளைதன்னிற்
கனமான வேறொன்று கூடச்சேரே. (144)

சேரப்பா வெள்ளுள்ளித் தொலியைப்போக்கித்
திறமாகக் காற்படிதா னரிசிகூட்டிச்
சீரப்பா யிம்மூன்று மிடித்துச்சாறு
சீலைவடி கொண்டபின்பு செய்திகேளு
காரப்பா கரும்புவெல்லம் பலந்தான்பத்து
கரைத்துவடி கட்டியதை யடுப்பிலேத்திப்
பாரப்பாச் சோனைவிழும் பருவந்தன்னில்
பண்பான கடைமருந்து பரிந்துபாரே. (145)

பரிவான சீரகந்தான் பலமூன்றப்பா
பழுதில்லாத் திரிகடுகு சித்தரத்தை
அரிதான அக்கராக் காரமதிவிடையம்
அழகான சிறுதேக்கு தாளிசபத்ரி
பெரிதான சாதிக்காய் சாதிப்பத்ரி
பெருமையுள்ள கிராம்புபெருங் காயத்தோடே.
உரிதான மருந்துபன்னி ரண்டுமெப்பா
வொவ்வொன்றும் முக்கழஞ்சு வறப்பாய்வாங்கே. (146)

உறையாக மருந்தெல்லா மிடிதூள்செய்து
உத்ததொரு பாகுதனில் தூவிக்கிண்டிக்
குறையாம லரைப்படிதான் சிறுதேனோடே
கூட்டுநெறு செய்யுமரைப் படியேநன்றாய்
நிறையாக இவ்வளவும் விட்டபின்பு
நீர்வத்தி மெழுகுபதம் பார்த்திறக்கி
நறையாமற் பழந்தேங்காய் கொண்டுவந்து
நலமான கணபதியைப் பூசைசெய்யே. (147)

### விஷத்துக்குக்குடோரி.

செய்ததொரு லேகியத்தை நெல்லிக்காயளவு
 தினமொன்றுக் கிருபோது முண்பாயாகில்
வைதமில்லா தோடிவிடும் மண்டலத்தில்
 வயித்தியற்குக் காசுபணம் வாங்கலாகும்
மெய்தியதோர் சர்ப்பவிஷந் தீண்டினோர்க்கு
 விருதான மருந்தொன்று விளம்பக்கேளு
தைவேளைச் சாறிலொரு துளிதலையிற்
 றூன்நெல்வாற் போற்கீறிப் பிழிந்துபோடே. (148)

### சூரணம்.

போடவே விஷமிறங்கி யோடிப்போகும்
 பூதலத்திற் கைகண்ட மருந்தீதப்பா
தேடவே கிடையாமற் போச்சுதானுற்
 சீக்கிரத்தி லாடுதொடா மூலிதன்னை
நாடவே சமூலமாய்க் கொண்டுவந்து
 நலமாக இடித்துவச்சிர காயஞ்செய்து
கூடவே வெருகடிதான் சிறுநீர்தன்னிற்
 கொடுத்திடவே பாம்புவிஷ மெல்லாம்போமே. (149)

### தேள்விஷத்துக்கு.

விஷமென்ற தேளதுதான் கடித்துதானுல்
 வேளையிலை தனைக்கசக்கி யுள்ளங்கையில்
நிசமாக விரண்டுதுளி பிழிந்துகொண்டு
 நிண்ணயஞ்சேர் நாசியினு லுறிஞ்சிவாங்கப்
பிசகாமற் றேள்விஷந்தா னிறங்கிப்போகும்
 பேர்பெத்த வயித்தியர்க ளிதனைவிள்ளார்
கசமான பாழ்கிணற்றிற் பூமிநோக்கிக்
 கட்டாகப் படர்ந்திருக்கு மறுகுதானே. (150)

### சகலவிஷத்துக்கு மூலிகை.

அறுகான பிடியொன்று வெடுத்துவந்து
 அழகான மிளகுமுக் கழஞ்சுகூட்டிச்
சிறுநீரில் வடிமெழுகு போலரைத்துச்
 சிறப்பான கரண்டியிலே கலக்கிக்கொண்டு
குறுகவே காய்ச்சியதைக் கடிவாய்தன்னிற்
 குருநந்தி சிவாயநமா வென்றுபூசத்
தறுகாம லோடிவிடும் விஷங்களெல்லாம்
 தர்மவித்தை யானதிது சாத்தொண்ணுதே. (151)

### எலிகடிதீர.

சாத்தொண்ணூ தெலிகடித்த விஷத்துக்கப்பா
சதுரமுள்ள கள்ளியிலைக் கள்ளிவேர்தான்
மாத்தொண்ணூ யிலுமிச்சங் காயளவு
மாறுமல் வெவ்வேறே அரைத்துருட்டிச்
சேர்த்தொன்று யரிசிமா வரிதான்கூட்டிச்
சிறப்பாக அடைதட்டி எள்ளெண்ணெய்யில்
ஏத்தொன்று யவித்தெடுத்து மூன்றுநாள்தான்
எலிகடித்த மனிதருக்கு மியல்பாய்ச்செய்யே. (152)

இயல்பாக விப்படியே செய்யும்போது
எலிவிஷங்கள் பதினெட்டு மிறங்கிப்போகும்
பயமில்லை தோஷமில்லை பாவமில்லை
பத்யமென்ன புகையிலையும் புளியுமாகா
நயமாக மாதரனு போகமாகா
நறுநெய்பால் தயிருப்பு நாலுங்கூட்டு
சுயமான இந்நூலைத் துஷ்டருக்குச்
சொல்லாதே தோஷம்வரும் சூக்ஷஞ்செய்யே. (153)

### கொடுவேலித்தயிலம்.

செய்யவே கொடுவேலித் தயிலங்கேளு
திறமான கொடுவலிவேர் பலந்தான்பத்து
நையவே யிடித்ததனைப் பதக்குநீரில்
நலமாக அடுப்பேத்தி யெட்டொன்றுக்கித்
துய்யநல்ல சீரகந்தான் பலமதொன்று
தூக்கியே பசுவின்பால் விட்டுஆட்டி
அய்யமேன் நவநீதம் விளாங்காய்மட்டும்
ஆனதொரு நல்லெண்ணெய் படிதான்சேரே. (154)

ஆனவுட னிதைவடித்து முழுகும்போது
ஆனந்த வாய்வுடனே அந்த்ரவாய்வு
தேனமருங் குழலாளின் வாதமெல்லாம்
சிரங்குசொரி தினவுமுதல் குட்டந்தீரும்
போனதொரு அரையாப்புக் கிரந்திசூலை
புண்புரைகள் பிளவைமுதற் பொடிப்புவீக்கம்
நாணவே வந்தநோ யெல்லாந்தீரும்
நல்லதொரு தயிலமிது நாடிப்பாரே. (155)

லவணசேந்தூர முறை.

பாரப்பா அட்டகுன்ம வாய்வுபத்தும்
　　பாழான கெண்டைநீ ராம்பல்வீக்கம்
ஊரப்பா கெற்பசுரோ ணிதமாம்வாய்வு
　　உதரத்தின் திரட்சியொடு அண்டவாய்வு
தீரப்பா லவணசெந் தூரந்தன்னாற்
　　றீர்ப்பதற்குஞ் சுளுவாகும் மருந்தைக்கேளு
சீரப்பா கறியுப்புத் தன்னைவாங்கித்
　　திறமான மணியதனைத் தெரிந்துவையே. (156)

தெரிந்தெடுத்த கறியுப்புப் பலந்தான்மூன்று
　　சீரான வுவருப்புக் கல்லுப்புத்தான்
பரிந்தெடுத்த வெடியுப்பு இந்துப்புச்சீனம்
　　பாசாண வெள்ளையொடு பொரிகாரந்தான்
உரிந்தெடுத்த அண்டோடு கும்பிடுகல்சிப்பி
　　உத்தமனே அயக்காந்தந் துருசுவீரம்
வரிந்தெடுத்த மிருதார சிங்கிதாரம்
　　மனோசிலையுஞ் சாதிலிங்கங் கெந்திதானே. (157)

கெந்தியென்ன நெல்லிக்கா கெந்திநவச்சாரம்
　　கெடியான சூடனொடு இருபதுந்தான்
சிந்தியே போகாமல் வகையொன்றுக்குத்
　　திறமாக வொருகழஞ்சு நிறுத்துவாங்கி
நந்தியுட சீர்பாதம் போற்றிசெய்து
　　நலமாகக் கல்வத்தி லிட்டேஆட்டிப்
புந்திமகி ழெய்திடவே பொடித்துவாங்கிப்
　　புறம்பாக அருகில்வைத்துப் பின்னுங்கேளே. (158)

கேளப்பா காட்டாம ணக்கின்பாலைக்
　　கெடியாகக் காற்படிதான் கொண்டுவந்து
பாளப்பா போகாமற் கறியுப்போடு
　　பறந்தசட்டி தனிலேததிக் கலந்துநன்றாய்
நீளப்பா காட்டாம ணக்கின்பாலை
　　நீர்வற்ற வறுத்தபின்பு அருகில்வைத்துத்
தூளப்பா யிறையினள வாகத்தூற்றிச்
　　சுருக்காக வறுத்திடச்செந் தூரமாமே. (159)

செந்தூரந் தனையெடுத்துச் செப்பில்வைத்துச்
சிவந்தபுஷ்பம் நூற்றெட்டு கையில்வைத்து
நந்திகுரு நமசிவய சர்வரோகம்
நசிமசியென் றொருநூறு நாமஞ்சாத்திக்
கந்தனுக்குங் கணபதிக்கும் பூசைசெய்து
கரும்புவெல்லம் தேனில்பண விடைதானிட்டு
அந்திசந்தி யிருபோது வாரங்கொள்ள
அடங்காத ரோகமெல்லா மடங்கிப்போமே. (160)

விஷ்ணுசக்கரம்

போமிந்த மருந்துகொண்டாற் பத்தியந்தான்
புளியுப்பு புகையிலையு மாம்சமாகா
நாமிந்தப் படிசொன்னோம் நந்திதேவர்
நலமான வேதைக்கா மென்றுசொன்னார்
தாமிந்தப் படிசெய்யி லிரண்டும்வாய்க்கும்
சாத்திரத்தை யொருவருக்கும் சாற்றொண்ணாது
ஓமிந்த வுபதேச முமையாள்பாகன்
உரைத்திட்ட படியுனக்கிங் குரைசெய்தோமே. (161)

உரைசெய்த விஷ்ணுசக் கரத்தின்போக்கு
உலகத்திற் பண்டிதர்கள் கண்டோரில்லை
நரையில்லை திரையில்லை சாவுமில்லை
நாலாயி ரஞ்சில்வான் வியாதியில்லை
பரையான வுமைபாதந் தன்னைப்போற்றிப்
பரமனருள் தனைப்பெற்று ஆதிநாதன்
விரைவாகச் சொன்னதிந்த விஷ்ணுசக்ரம்
விபரமாய்ச் செய்துவிடு முறையாய்த்தானே. (162)

தானென்ற சந்தனமும் இலுப்பைப்பூவும்
தயவான முந்திரிபே ரீச்சங்காயும்
தேனென்ற திரிகடுகு செந்திலிங்கம்
சிறப்பான காந்தமாம் பொடிவசம்பு
நானென்ற ரசமும்திரு விஷம்வெள்ளுள்ளி
நன்னாரி கொடுவேலி பதினெட்டோடு
வானென்ற நறும்பிசினும் வகையொன்றுக்கு
மருந்துமுக் கழஞ்சுகுறை யாமல்வாங்கே. (163)

குறையாதே பெருந்தும்பை வேம்புநொச்சி
குணமான முருக்குகையான் ஆடாதோடை
அறையாதே தனிச்சாறுய் வகையொன்றுக்கு
ஆழாக்கு வீதமா யெடுத்துக்கொண்டு
மறையாதே கல்வத்தி லிட்டேஆட்டி
மகத்துவமாய்க் கடலையள வாயுருட்டி
நறைமலரும் பழந்தேங்காய் கரும்புவெல்லம்
நலமான கணபதிக்குப் பூசைசெய்யே. (164)

பூசைசெய்து குளிகைதனைச் செப்பில்வைத்துப்
புகழாக விஞ்சிச்சா றதனிற்கொள்ளப்
பாசையிட்டே ஜன்னிபதி மூன்றுமோடும்
பகவாதம் திமிர்வாதம் முகவாதங்கள்
ஓசையண்ட வாதவலி குன்மவாதம்
உரைத்தவுள் ளடிவாய்வு செவியின்நோவு
வேசையர்புண் ணேடுகுதிர் வலிகுடோரம்
வெருண்டோடும் வேறுவெள் ளுள்ளிவித்தே. (165)

வெள்ளுள்ளி லேகியம்.

வித்தான வெள்ளுள்ளி யரிசிதன்னை
விரைவாக விரண்டரைப்ப லந்தானப்பா
கொத்தாம்வல் லாரைசா றணைவேரோடு
கொழுந்தான பிரண்டையிலை வகைமூன்றுக்குச்
சித்தான வகையொன்றுக் கரைப்பலந்தான்
சேர்த்துப்பின் சாதிக்காய் சாதிப்பத்ரி
முத்தான குங்குமப்பூ முத்தக்காசு
முக்கடுகு திப்பிலியின் மூலந்தானே. (166)

மூலமதி மதுரமக்ருக் காரமோமம்
முனையான சீரகமுங் கிராம்பினோடு
ஏலமொடு கரியசீ ரகமுஞ்சேர்த்து
இம்மருந்து பதினைந்தும் வகையொன்றுக்குச்
சீலமுடன் முக்கழஞ்சு வீதந்தூக்கிச்
சிறப்பாக வொருபத்தொன் பதையுங்கோவின்
பாலமுதம் விட்டரைத்துப் பலந்தான்மூன்று
பனைவெல்லம் பசுவின்பால் படியிரண்டே. (167)

ரெண்டுபடி பசுவின்பால் தனிற்கனாத்து
 ரேசித்து அடுப்பேத்தி நீர்தான்வத்தக்
கிண்டையிலே ஆழாக்குச் சிறுதேன்விட்டுக்
 கெடியாக நீர்வத்தும் பருவம்பார்த்துக்
கொண்டதிலே ஆழாக்கு நறுநெய்விட்டுக்
 குறிப்பான மெழுகுபதம் பார்த்திறக்கி
மண்டலந்தான் பாக்களவு காலைமாலை
 மகத்துவமா யுண்டுவர வாசிகேளே. (168)

வாசியாங் கிராணியதி சாரம்போகும்
 வயிற்றளச்சல் களிச்சல்பிர மேகமோடும்
பேசினதோர் குடல்வாய்வு உதிரவாய்வு
 பெரிதான பித்தத்தின் வாய்வுவோடும்
கூசியதோர் உடல்நடுக்கம் குன்மவாய்வு
 குடிபோகும் பித்தவெறி யாப்புத்தீரும்
நாசிநுனி புருவமையம் நாடிநிற்கும்
 நாதனு ருரைத்தபடி நாட்டினேனே. (169)

தாளிசபத்திரி சூரணம்.

நாட்டியே சொல்லுகிறே னின்னமொன்று
 நலமாகத் தாளிசபத்ரி சூரணந்தான்
தாட்டியே அப்பத்ரி பலந்தான்பத்து
 தயவான திரிகடுகு திரிபலாதி
நீட்டியே கோஷ்டமோ டக்ரூக்காரம்
 நிணையத்தித் திப்பிலியுஞ் சீரகந்தான்
கூட்டியே கொத்தமல்லி வாய்விளங்கம்
 கூரான கிராம்பேலஞ் சாதிக்காயே. (170)

காயோடு பத்திரியு மாஞ்சிசோம்பு
 கருவான வால்மிளகு லவுங்கப்பட்டை
தாயோடு சந்தனமும் கூகைநீரும்
 தான்பலமொன் ருகச்சூ ரணித்துக்கொண்டு
சேயோடு சக்கரையுஞ் சமனாய்க்கூட்டிச்
 சேர்த்துவெரு கடியளவாய்க் காலைமாலை
வாயோடு மண்டலந்தான் கொண்டாயானால்
 வாங்குமடா சயகாச மிளைபோமே. (171)

போமப்பா அத்திசுரம் அத்திவெட்டை
பொருந்தாத நீர்த்தாகம் புண்ணும்நெஞ்சில்
நாமப்பா பித்தவெட்டை பித்தப்பாண்டு
நாடாது கிராணிவகை யெல்லாந்தீரும்
தாமப்பா அரோசிகங்க ளன்னதோஷம்
தளராத விம்மலொடு விக்கல்கக்கல்
சாமப்பா கைகாலி லெரிவுகாந்தல்
சாதகமாய்ப் புளியுப்பு மகிழ்ந்துதள்ளே. (172)

கொம்பராக்குத் தைலம்.

மகிழவே கொம்பரக்குத் தயிலஞ்சொல்வேன்
வளமான கொம்பரக்குப் பலந்தானெட்டு
நிகழவே தூணிநீ ரெட்டொன்றுக்கி
நிசமாகத் தாளிக்குள் வடித்துவிட்டு
தகழவே யெள்ளெண்ணெய் சேர்தானஞ்சு
தயிர்த்தண்ணீர் சேரஞ்சு பால்சேரஞ்சு
நகழவே காடியது சேர்தானஞ்சு
நலமான கடைமருந்து சொல்லக்கேளே. (173)

கேளப்பா சதகுப்பை கடுகுரோகிணி
கிளியூறல் பூஞ்சாந்து பச்சைப்பூலா
தாளப்பா செவ்வள்ளி வங்கபத்ரி
தளமான யிலவங்கம் மாஞ்சிகோஷ்டம்
வாளப்பா கஸ்தூரி மதுரங்கெந்தம்
வளமிருசீ ரகமேல மிவைகளெல்லாம்
ஆளப்பா வகையொன்றுக் கிருகழஞ்சு
ஆவின்பால் விட்டுநீ ஆட்டுவாயே. (174)

ஆட்டுவா யெள்ளெண்ணெய்க் குட்கரைத்து
அடுப்பேத்தி மெழுகுபத மானபின்பு
நாட்டுவாய் வடித்ததனை முழுகும்போது
நலமாகத் தீருகிற வியாதிகேளு
தாட்டிகமாம் பித்தவெட்டைச் சுரமும்போகும்
தலைமயக்கம் வாயூறல் சாந்தமாகும்
வாட்டியதோர் தேகசுர மிரண்டேவோடும்
வத்தியதோர் தேகமெல்லாம் ஊதும்பாரே. (175)

ஊறுமே கணைவெட்டை கணைசுரங்கள்
உத்தமனே கணைபாண்டு வெளுத்ததேகம்
தேறுமே தேகத்தில் வலிகடுப்பு
திறமான சூலையெல்லாந் தீருந்தீரும்
நாறுமே கற்றாழை நாற்றம்வீச்சம்
நலமாகும் வியாதியெல்லாம் நாடாதோடும்
சீறுமே காசமெலாந் தீர்ந்துபோகும்
திறமாக வொன்றைவிட் டொருநாளெண்ணே. (176)

உவருப்பு பற்பம்.

எண்ணவே பத்தியந்தான் புளிகசப்பு
இதமான புகையிலைபெண் போகமாகா
நண்ணயமா மருந்தொன்று சொல்லக்கேளு
நலமான உவருப்புத் தன்னைவாங்கி
அண்ணதனை யிருசாமந் தாளிச்சாற்றில்
ஆட்டியே கதுவாலிப் புடத்திற்போட
வண்ணமுடன் வெள்ளையா மதையெடுத்து
மறுதரமு மப்படியே புடத்திற்றுக்கே. (177)

நீலகண்ட செந்தூரம்.

தாக்கியே அஞ்சுதரம் புடத்திற்போடு
தயவான வெள்ளையதை யெடுத்துக்கொண்டு
பாக்கியஞ்சேர் வெள்ளைக்குச் சரிபாகந்தான்
பண்பான துருசுதனைக் கூடச்சேர்த்து
யோக்கியமாய்த் தாளிச்சா றதனாலாட்டி
ஓங்காரக் கணபதியைப் பூசைசெய்து
பூக்கமழுஞ் சடையண்ணல் பாகம்பெற்ற
பொற்கொடியைப் போற்றிசெய்து புடத்திற்போடே. ()

போட்டவுடன் ஆத்தாளைப் போற்றிசெய்து
புடமாறி யெடுத்திடச்செந் தூரமாகும்
வாட்டமற்ற நீலகண்ட செந்தூரத்தை
வலுவான பிணிகளுக்கு மருந்துகூடக்
கூட்டியே அரிசியிடை கொடுத்தாயானால்
கூத்தாடி யோடுமப்பா ரோகமெல்லாம்
நாட்டமுள்ள முப்பூவு முடித்துச்சேர்த்தால்
ராஜவயித் தியனென்பார் நலமதாமே. (179)

முப்பு.

நலமான முப்பூவைச் சித்தரெல்லாம்
ரசவாதஞ் செய்வதற்கோர் விதமதாகப்
புலமாகச் சொல்லிவிட்டார் பூமிதன்னிற்
புத்திகெட்ட மனிதரப்பா செய்துபார்த்துப்
பலமான தில்லையென்று விட்டுவிட்டார்
பரிகாசப் பேச்சாச்சிப் பாரைச்சூழ்ந்த
ஜலமான சமுத்திரத்தை யுண்டநாதன்
தட்சணா மூர்த்திசொன்ன திட்டந்தானே. (180)

திட்டமுள்ள சித்தருக்கும் முனிவருக்கும்
தேவருக்கும் ரிஷிகளுக்கும் மனுடருக்கும்
அட்டதிக்கும் போற்றுகுரு நாதனப்பா
ஆதிமுனி அகத்தீச ரைம்பதுக்குள்
வெட்டவெளி யாயுரைத்தார் முப்பூதன்னை
விபரமாய் நான்பார்த்தேன் சூட்சமாக
விட்டகுறைக் காரனென்றே யென்னைச்சொன்னார்
விருதான முப்பூவின் விபரம்பாரே. (181)

உவருப்பு சுத்தி.

பார்தனிலே உவருப்பைக் கொண்டுவந்து
பாண்டத்தி லளந்திட்டு நாலுபங்கு
சீர்பெறவே சுத்தஜலந் தன்னைவிட்டுச்
சிறப்பாகக் கலக்கியதைத் தெளிவிருத்துப்
பேர்பெறவே அடுப்பேத்தி வத்தக்காச்சிப்
பிலமான உப்பெடுத்துப் பின்னுஞ்சுத்த
நீர்தனையே யிருபங்கு கூடச்சேர்த்து
நிசமாகப் பத்துமுறை காச்சிவாங்கே. (182)

வாங்கியதோ ருவருப்புச் சுண்ணாந்தன்னை
வளமான பரணியிலே பதனஞ்செய்து
நீங்கில்லாக் கறியுப்புத் தன்னைவாங்கித்
திறமான மணியதனைத் தெரிந்தெடுத்துப்
பாங்காய்நீ யிரட்டிஜலந் தனிற்கரைத்துப்
பார்தெளித்துப் பத்துமுறை முன்போலாக
நீங்காமற் காச்சியதை யெடுத்துக்கொண்டு
திண்ணயஞ்சேர் கல்லுப்பு நிலையைக்காணே. (183)

### கல்லுப்பின் விபரம்.

காணவே கல்லுப்பென் கடையில்விற்பார்
கட்டிலே பாறைக்குள் வளர்ந்தஉப்பு
தோணவே பளிங்குக்கல் போலிருக்கும்
துவர்ப்புடனே புளிப்பிருக்கும் மருந்துக்காகா
தாணுவென்ற ஈசன்விந்து பூமிநாதம்
தவளநிறப் பருவதம்போல் வளர்ந்திருக்கும்
நீணிலத்தி லதைவெட்டித் தாணெடுத்தால்
நிசமான வயிரம்போல் மின்னும்பாரே. (184)

மின்னியே அடுக்கடுக்கா யிருக்குமப்பா
மேதினியி லதைநீத்திச் சுண்ணும்பாக்கிப்
பன்னிரண்டு சூரியனு முதித்தாப்போலே
பளிங்குபோல் வெளுத்திருக்குங் கற்சுண்ணும்பு
தன்னிலே ஜலம்விட்டே உலகத்தோர்கள்
தாம்பூலந் தனிற்றேய்த்து அருந்துவார்கள்
உன்னிதஞ்சே ரடுக்குக்கல் தனையெடுத்து
உவர்மண்ணை அமுரியிலே கலக்கிடாயே. (185)

கலக்கியே தெளிவிருத்துக் கல்லைப்போட்டுக்
காய்ச்சிடவே யடுக்குக்கல் கட்டிப்போகும்
துலக்கமா யதையெடுத்துக் கல்வத்திட்டுச்
சூரணித்து அண்டநீர் தன்னாலாட்டிப்
பிலக்கவே வில்லைசெய்து காய்ந்தபின்பு
பிரபலமா யுலையிலிட்டங் கூதும்போது
நலக்கவே வெளுத்துநல்ல சுண்ணும்பாக்கி
நலமாகச் சுத்தஜலம் விட்டுநீத்தே. (186)

நீத்தியே சுத்தஜலந் தன்னைவார்த்து
நிண்ணயமாய் மண்டலந்தான் பதனஞ்செய்து
பார்த்திடவே தண்ணீர்க்கு மேலேதானும்
படர்ந்திருக்குங் கல்லுப்பு வெண்மையாகப்
பூத்திருக்குங் கல்லுப்பை அறிந்தெடுத்துப்
புகழான உவருப்புங் கறியுப்புந்தான்
நேத்தியாம் வகையொன்று பலமொன்றப்பா
நிசமான பூரமொரு பலமுங்கூட்டே. (187)

கூட்டவே வகைநாலுங் கல்வத்திட்டுக்
கோழிமுட்டை வெண்கருவா லாட்டிவாங்கி
வாட்டமற ரவியுலர்த்திக் காயவைத்து
வளமான வோட்டில்வைத்து ஓடுமூடி
நாட்டமுடன் சீலைமண் ணஞ்சுஞ்செய்து
நலமாக முழப்புடத்திற் றூக்கிநீத்தித்
தேட்டமுட னதையெடுத்து வைத்துக்கொண்டு
திறமாகப் பின்னுமொரு முறைதான்செய்யே. (188)

முப்புச்சேந்தூரம்.

செய்வதென்ன சவ்வீரம் புனுகுபூரம்
சேர்த்திடுவாய் வகையொன்றுக் கொருகழஞ்சு
நையவே கல்வத்தி லிட்டுக்கொண்டு
நல்லெலுமிச் சம்பழத்தின் சாற்றாலாட்டி
உய்யவே வில்லைசெய்து ரவியில்வைத்து
உலர்ந்தபின்பு முன்போலே ஓட்டில்வைத்து
வெய்யமுழப் புடத்திற்செந் தூரமாகும் (189)
விள்ளாதே முப்பூவின் குருவிதாமே.

முப்பூமகிமை.

குருவான உவருப்புக் கணேசனாகும்
கூறரியக் கல்லுப்பு பிரமனாகும்
கருவான கறியுப்பு விஷ்ணுவாகும்
கருத்தான பூரமது ருத்திரனாகும்
மருவான புனுகுமயேஸ் பரனதாகும்
வண்மைசதா சிவமேசவ் வீரமாகும்
உருவான எலுமிச்சங் கனியேபிண்டம்
ஓகோகோ கோழிமுட்டை அண்டந்தானே. (190)

அண்டபிண்டம் நிறைந்தபொருள் முப்பூவப்பா
அருப்பிணிகள் தீர்க்கவொரு குருவுமாச்சு
அண்டபிண்டம் நிறைந்தபொரு ளிதனைத்தொட்டு
ஆடலாம் வெகுகோடி வித்தைதன்னைக்
கண்டகண்ட விதமாக வுலகுதன்னிற்
கருவறிந்து மருந்துசெய்யத் தெரியாமற்றான்
கொண்டகடை மருந்துகளைத் தானேவேண்டிக்
கொண்டுபோய் பலமருந்துங் கொடுப்பார்தானே. (191)

கொடுப்பார்கள் குருவில்லா மருந்துதன்னைக்
கொடுத்தாக்காற் பிணிதீர மாட்டாதப்பா
கெடுப்பதொழி மூதோர்கள் சொன்னநூலைக்
கேளாமற் பலவிதமாய் வயித்தியர்தான்
துடுக்கான மருந்துகளைக் கொடுத்தாராஞல்
தூலவுடல் தன்னைவிட்டுச் சூட்சம்போகும்
அடுப்பெரிதீ யணைத்திடலாம் வயித்தியோர்கள்
அறியாமற் கொடுத்தமருந் தாருத்தீயே. (192)

ஆருத்தீ யாகில்வெகு கோடிபாவம்
ஆதிசிவ னருளாலே தீரவேண்டும்
பேருக வேண்டுமென்ருல் வயித்தியோர்க்குப்
பின்னைநிக ரில்லையிந்நூல் பார்த்தாராகில்
கூருக ரோமர்பதி னெட்டினேடு
கொங்கணரைஞ் ஞூறும்கத் தீசர்நாலும்
வேருக வெண்ணுமல் நூல்பார்த்தேஅவ்
விதஞ்செய்ய வியாதியில்லை விபரம்பாரே. (193)

தாம்பூரச் செந்தூரம்.

பாரப்பா தாம்பூரச் செந்தூரந்தான்
பண்பாகச் சொல்லுகிறேன் சுழுவதாகச்
சேரப்பா செம்பினுட பொடிதானென்று
திறமாக வெங்கலத்திற் பொடிதானென்று
சீரப்பா ரசங்கெந்தி லிங்கந்தாரம்
சிறந்தமனே சிலைக்காந்தம் பச்சைநாவி
நேரப்பா யீதெல்லாங் கழஞ்சுநாலு
நிறுத்தெடுத்து இஞ்சிச்சார் தன்னிலாட்டே. (194)

ஆட்டுவா யிருசாமங் கழித்தப்பாலே
அடவாக வெள்ளுள்ளிச் சாறுதன்னிற்
கூட்டுவாய் சாமமிரண் டரைத்தபின்பு
குமரிச்சா றிருசாம மரைத்தபோது
போட்டுநீ வில்லைசெய்து ரவியில்வைத்துப்
புகழாகக் காய்ந்தபின்பு கலசத்திட்டு
நீட்டுவா யோடுகொண்டு கவிழ்த்திமூடி
நிசமாகச் சீலைமண் ணஞ்சுஞ்செய்யே. (195)

செய்யப்பா எருவடுக்கிக் கவசம்வைத்துத்
    தீமூட்டிக் கடிகைதொண் ணூற் றூறதாக
மெய்யப்பா யெரித்துத்தீ யாறவிட்டு
    மேல்வைத்த கவசத்தின் மூடிதள்ளிக்
கையப்பா யெடுதாம்பூ ரச்செந்தூரம்
    காவிபோ,ற் சிவந்திருக்கும் பதனம்பண் ணு
பொய்யப்பா ஆகாதெங் தெந்தநோய்க்கும்
    போக்கறிந்து அனுப்பானம் புகழ்ந்துதாக்கே. (196)

நீரடைப்பு.

தாக்குநீ பொரிகாரந் தனைப்பொரித்துத்
    தயவாக இளநீரைக் கண் திறந்து
நோக்குநீ பணவிடைசெந் தூரம்போட்டு
    நுணுக்கமாய்க் கொடுத்திடவே நீர்க்கடுப்பு
நீக்குமே நீர்ச்செறிப்பு சதையடைப்பு
    நிலைபெறு திந்த்ரகண்டி யெனும்புருக்கி
தீர்க்குமே அல்லியா வரைக்கொழுந்து
    சிந்தியுட னிவ்வளவுங் குடிநீர்வையே. (197)

குடிநீரிற் பணவிடைசெந் தூரத்தோடு
    கூட்டமுத மாவும்வெரு கடியும்போட்டுத்
துடியாகக் குடிக்கநீ ரழிமூவெட்டும்
    சுருக்குபிர மேகம்நீர்க் களிச்சலஞ்சும்
வெடியான வுள்வெட்டை யெட்டுந்தீரும்
    வெள்ளுள்ளித் தயிலபண விடைசெந்தூரம்
மடியாமற் கொடுவாத மெண்பதோடு
    வலியான ஜன்னிபதி மூன்றும்போமே. (198)

வயிற்றுவலி பித்தவாய்வு.

போமப்பா வயிற்றுவலி பித்தவாய்வு
    போவதற்கு மருந்தொன்று புகலக்கேளு
ஓமப்பா ஓமமது கழஞ்சிரண்டு
    உத்தமனே திருகுகள்ளிப் பூத்தானஞ்சு
சாமப்பா சாமமொன்று கல்வத்திட்டுச்
    சாதகமா யரைத்ததனை மெழுகுபோலே
தாமப்பா உண்டைசெய்து செப்பில்வைத்துத்
    தாரணியிற் சுக்கிரண்டு கழஞ்சுவாங்கே. (199)

வாங்கியே சட்டிதனி லிட்டுக்கொண்டு
வாகாக இருநாழித் தண்ணீர்விட்டுத்
தாங்கியே அடுப்பேத்தி யனலைமூட்டித்
தயவாக எட்டொன்றாய் வத்தக்காய்ச்சி
நீங்கியே போகாமல் வடித்தெடுத்து
நிண்ணயஞ்சேர் குளிகையொன்றை யுரைத்துக்கொள்ள
ஏங்கியே ஓடுமடா பித்தவாய்வு
எரிகுன்ம வயிற்றுவலி யில்லைத்தானே. (200)

வயிற்றளைச்சல் தலைவலிக்கு.

தானென்ற வயிற்றளச்சல் சுரத்தினோடு
தலைவலியுங் கிருகிருப்புந் தீரவென்றால்
கோனென்ற பிரணவத்தி லுதித்தஓமம்
குண்டலியுங் கணபதியு மதுதானப்பா
ஊனென்ற உடலுயிரு மதுதானப்பா
ஓமென்ற வெழுத்திரண்டு மதுவேயாகும்
நானென்று வந்தபிணி யெல்லாந்தீர்க்கும்
நல்லதொரு ஓமமதை நாடிப்பாரே. (201)

நாடியே ஓமமது பலந்தானொன்று
நல்லதோ ரோட்டிலிட்டு வெதுப்பிவாங்கி
ஆடியே துணியிலிட்டுக் கசக்கிப்போட்டு
அப்பனே கொழித்தெடுத்துப் பின்னுமுன்போல்
கூடியே பத்துடனோர் தரம்வெதுப்பிக்
குறையாமற் கசக்கியதைக் கல்வத்திட்டு
ஓடியே போகாமற் சாறுமொன்றே
உறுதியாய்த் தானரைக்கக் குளம்பதாமே. (202)

குளம்பதனைப் பீங்கானிற் பதனஞ்செய்து
குறையாம லொருவாரம் அந்திசந்தி
வளம்பெறவே சுண்டக்கா யளவுகொள்ள
வயிற்றளச்ச லத்திசுரம் மாறிப்போகும்
உளமாந்தை தலைக்கிரக்க மானதெல்லாம்
ஓகோகோ வுலகத்தில் நில்லாதப்பா
பிளவாகப் புகையிலையும் புளியுமாகாப்
பெண்ணுடனே தான்கூடி மருவொண்ணாதே. (203)

வியாதி வரலாறு.

மருவியதோர் வாதபித்த சிலேற்பனங்கள்
வருவதுதா னேதாஞற் பத்யபாகம்
தெரியாமற் செய்வதினுல் ரோகமாகிச்
சிறுநரம்பும் பெருநரம்புஞ் சிக்கும்போது
குருநாடி தனிற்சேர்ந்து தொந்தமானுல்
கோடான கோடிகன்மஞ் செய்யுமப்பா
கருவான நாடிதனை அறிவதற்குக்
காலாங்கி யகத்தீச ருரைத்திட்டாரே. (204)

அகத்தீச ருரைத்தகுரு நாடிசாத்ரம்
அணுவளவுந் தப்பாகை கண்டவித்தை
ஜெகத்திலே அறிந்தவனே சித்தனுகும்
சித்தனென்றுல் பண்டிதனே அல்லாவில்லை
மகத்தான வித்தையப்பா வயித்தியந்தான்
மகரிஷிகள் செய்யுமுறை மந்த்ரதந்த்ரம்
முகத்திலே பார்த்தவுடன் தீர்ந்துபோகும்
முறையாக நாமறிந்த திந்தநூலே. (205)

இந்தநூ லிருநூற்றி யாறதாக
ஈசனுமை தன்னருளாற் பாடிவைத்தேன்
சுந்தரஞ்சேர் வயித்தியத்தைப் படித்துச்செய்தாற்
சுகிர்தமிக வுண்டாகும் இராமச்சந்த்ரா
உந்தனக்குச் சொன்னதிந்த வுலகிலுள்ளோர்
ஓர்மனதாய்ச் செய்தவர்க்குப் பலிதமாகும்
கந்தனருள் கணேசனருள் பெற்றுவாழ்வார்
கருத்தாக முற்றும்பூ ரணநூலாமே. (206)

வசிஷ்டர் வைத்திய சூஸ்திரம் உ௱௬.

முற்றிற்று.

இல்லறத்தோர்க்கும் துறவறத்தோர்க்கும் ஏற்படும் வியாதிகளுக்குத் தக்க அவிழ்தமும் 'குருமுடிப்பதற்கு முறையும் யோகசாதனத்தோர்க்குக் கர்ப்பமும் இதிற் சொல்வதால் இதையும் இச்சாஸ்திரத்துடன் சேர்த்திருக்கிறது, ☞ இ. ராம. குருசாமிக்கோன்.

உ

குமரன்றுணை.

பன்னிரண்டாவது:

பாம்பாட்டிச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

# ஞான சூஸ்திரம் ௰௬.

சுத்தநிரா மயமாய்நிட் களங்கமாகி
சுயஞ்சோதி யாயெங்கும் நிறைவதாகி
நித்தியா னந்தசுகா தீதமாகி
நேரறிந்தோ ரகக்கமல தீபமாகி
அத்தனயன் மாலெனப்பல் வடிவமாகி
அகிதலமுற் றுண்டுசெய் தாண்டோனுகி
முத்தியெனு முச்சுடரின் கம்பமாகி
முழங்கிநின்ற பரம்பொருளின் பாதங்காப்பே. (1)

பாரோங்குங் கயிலாச வர்க்கந்தன்னிற்
பலகலைகள் தெரிந்ததொரு போகர்தானும்
சீரோங்கச் செய்துவைத்தா ரனந்தநூல்கள்
சிறப்புடனே யதையறியா மூடரப்பா
பேரோங்கச் செய்யாமல் வகையில்லாமல்
பிழைக்கமதி யுணராமல் மாய்ந்துபோனூர்
நேரோங்க அநேகநா ளவரிடத்தில்
நிலைத்திருந்து கண்டுகொண்ட விபரங்கேளே. (2)

கேளப்பா ஞானத்தின் மார்க்கங்கண்டால்
கீர்த்தியுட னேயிருப்பாய் பொய்யதில்லை
நாளப்பா வீணுய்நாட் கழிக்கவேண்டாம்
நன்மையுடன் மாயையிரு ளொளித்துவிட்டு
பாழப்பா போகாதே சிவயோகத்தைப்
பத்தியுடன் குறியில்நின்று பரிவாய்நீயும்
வாழப்பா பரத்தினிலே நாட்டங்கொண்டு
வளமாக ஞானமதைத் தெரிவாய்நீயே. (3)

தெரிவாய்நீ பழக்கத்திற் றன்னைத்தானே
    தெரிந்ததன்பின் மோனமது தோணுந்தோணும்
அறிவாய்நீ பாப்பிர்ம சொரூபந்தன்னை
    அப்பனே யதன்பெருமை சொல்லப்போமோ
உரியதொரு கலையறிந்து வாசிபூட்டி
    உறுதியுடன் ஞானமென்ற மதுவையுண்டு
பெரியபரம் பொருளதனைக் கண்டபேர்கள்
    பேரின்ப முத்திவழி காண்பர்தானே. (4)

தானென்ற வாறுதலம் விளங்கவேதான்
    தன்னுள்ளே விளையாடும் விமலையம்பாள்
கோனென்ற யிவள்ரூபந் தெரிந்தாயானால்
    குவலயத்தி லஷ்டசித்தி யெட்டுமாடும்
தேனென்ற பராரூபந் தெரியாவிட்டால்
    சிற்சொரூ பந்தனையா ரறியப்போறுர்
மானென்ற வாறுதலங் கடந்தாயானால்
    மகத்தான ஞானமப்பா பாருபாரே. (5)

பாரப்பா சிகாரமென்ற தெளிவினாலே
    பாங்குடனே மனதுகந்து அறியவேண்டும்
சாரப்பா சிவத்தினொடு மனத்தையூட்டி
    சஞ்சலங்க ளில்லாமல் நிஷ்டைகூடி
சீரப்பா மனதையொரு வசமதாக்கிச்
    சிந்தித்து அங்கியையி லிருந்துகொண்டு
காரப்பா தேகமது பிலக்கும்பாரு
    கருத்துடனே ஞானமதைக் கண்டுகொள்ளே. (6)

கண்டதொரு பூரணத்திற் கருத்தையூன்றிக்
    களிப்புடனே மவுனமதில் நின்றுகொண்டு
அண்டர்களுங் கண்டறியாச் சூட்சந்தோணும்
    அப்பொருளை யொருவருக்கும் வெளிவிடாதே
பண்டுசெய்த பலனிருந்தாற் பலிக்குமப்பா
    பார்த்துமன தொன்றாக யிருந்துகொண்டு
விண்டுநீ சொல்லாமல் மனத்தில்வைத்து
    வேதாந்த வீடறிந்து மேவுவாயே. (7)

மேவுவாய் முந்நான்கு ஆச்சுஆச்சு
மேதினியிற் றெரியுமப்பா கண்டுதேறு
தாவுவாய் வாசியெனும் புரவியேறித்
தாண்டியந்த எல்லையிலே தனித்துநில்லு
காவுகளி லலையாதே சர்ப்பந்தன்னைக்
களிப்புடனே யேகாந்த வெளியில்விட்டு
தேவியெனு மென்னுத்தா ளருளினாலே
செப்புகிறே னறிந்துகொண்டு செல்லுவாயே. (8)

செல்வமுள்ள சிரோமணிபூ பதிதானப்பா
சீர்பெறவே சொல்லுகிறேன் சிறப்பதாகக்
கல்வியுள்ளோ ரறிந்திதனைச் செய்வாராகிற்
கருணையுடன் வியாதிகளைத் தீர்ப்பதாகும்
தொல்வினையை யகற்றிநிற்க மருந்தின்பாகம்
தோத்தரித்து விளம்புகிறேன் நன்றாய்க்கேளு
வல்வினையை யகற்றிநிற்க மருந்தின்பாகம்
வயணமுட னறிவிப்பேன் வழங்கத்தானே. (9)

வழக்கமதாய் விடுகாமற் சரக்கைப்பார்த்து
வதிசயம்போற் பார்த்தெடுத்து நிறுக்கவேணும்
பழக்கமதா யனுதினமும் பண்பதாகப்
பலாபலத்தின் காரியத்தை யுணரவேணும்
முழக்கமிட்டுத் திரிந்தலைந்தால் லாபமுண்டோ
மூடருடன் சேராம லறிவைத்தேற்றி
அழுக்குழக்கு யெனச்செப்பும் வார்த்தைநீக்கி
ஆசைவைத்துப் புத்தியதி லன்பாய்நில்லே. (10)

அன்பான லிங்கமது பலமும்ரெண்டு
ஆச்சரிய கெந்தியது பலமுமொன்று
நண்பான கல்வத்தி லரைத்துமைப்போல்
நலமாக யிஞ்சிச்சா றாட்டியேதான்
பண்பாகப் பின்புமிதை நன்றாயாட்டிப்
பார்புகழ வழித்தெடுத்துக் கரண்டிதன்னில்
தென்பாக விட்டடுப்பி லெரித்துவாங்கத்
துலங்கியதோர் நீர்களெல்லாஞ் சுவறுந்தானே. (11)

சுவறியபின் கல்வத்திற் போட்டுக்கொண்டு
சுகுணமுடன் சந்தனத்தூள் கஷாயம்வார்த்துக்
கவனமுடன் முச்சாமம் நன்றாயாட்டிக்
கனலெழும்பச் சிவப்பேறும் பவளம்போலாம்
தவறிவிடா தேபார்த்து வழித்தெடுத்துத்
தயங்காமற் குன்றியைப்போ லுருட்டிக்கொண்டு
நவமான பூபதியைக் குழலில்வைத்து
நன்மையுட னுத்தாளின் பாதம்போற்றே. (12)

போற்றியே தீபமொடு தூபங்காட்டிப்
பொலிவாகச் சிந்தித்து நின்றுகொண்டு
ஏற்றியே தொழுதபின்பு பிணியாளர்க்கு
யெடுத்ததனி லோருருண்டை கொடுப்பாயாகில்
மாற்றிவிக்குஞ் சன்னிமுதற் குளிர்சுரங்கள்
மடக்குகின்ற மாரடைப்பு மூர்ச்சையாவும்
தூற்றிவயிற் றுண்டாகும் நோவுதானுந்
தூரமென வகன்றுவிடுந் துரிதந்தானே. (13)

துரிதமுடன் திரிகடுகு தேனிற்சேர்த்துத்
துயரகலக் கொடுத்திடவே சொன்னநோய்கள்
பரிவுடனே நீங்குமப்பா பண்பதாகப்
பண்டிதற்குக் கைகண்ட முறைதானப்பா
விரிவான மருந்திதிலே சொல்லவில்லை
விகிதமுடன் செய்தவர்க்கு மேன்மையாகும்
தெரிவிதமா யுணர்ந்துகொண்டா லவனேசித்தன்
தெளிவுசுத்த மவிழ்தமிந்த பாகந்தானே. (14)

பாகமுடன் சந்தனத்தூள் பலந்தான்மூன்று
பண்பான லவங்கப்பூ பலந்தானொன்று
ஏகமுடன் செண்பகப்பூ பலமோமுக்கால்
இதமுடைய சரக்கதனை யிடித்துவாங்கி
ஆகவே யிதுகளைநீ ரதனைவிட்டு
அப்பவே யம்மிதனி லரைத்துக்கூட்டி
வேகமது போகாமற் கொடுக்கும்போது
மேன்மையுட னுத்தாளைத் தொழுதுபோற்றே. (15)

தொழுதபடி பத்தியத்தை நன்றாய்க்கேளு
துலங்கவே கோதுமையின் கஞ்சியாகும்
வழுவாத மிளகுரசஞ் சாதமாகும்
வயணமுட னுண்பதற்கா வின்பாலாகும்
முழுகநல் லெண்ணெய்சீ யக்காயாகும்
முழுகினதோர் மற்றுநா ளெல்லாமாகும்
வழியாகச் சொல்லிவிட்டேன் அவுஷதத்தை
மைந்தனே வழிகண்டு நடத்துவாயே. (16)

பாம்பாட்டிச்சித்தர் ஞான சூஸ்திரம் ௱௬.

முற்றிற்று.

சத்திகிரி சிவகிரி திருவாவினங்குடி யெனத் தழைத்தோங்கும் திருப் பழனிமலையிலெழுந்தருளிய ஸ்ரீ கைலாச போகமகாரிஷீஸ்வர சுவாமி யவர்கள் ஆதீன ஆச்சிரமம் ஆதீன மகாகைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ கைலாசதெண்டாயுதபாணி ரிஷீஸ்வரசுவாமி யவர்களிட மிருந்துவாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம்அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

பதின்மூன்றாவது:

# பாம்பாட்டிச்சித்தர்பாடல்

கடவுள் வணக்கம்.

தெளிந்து தெளிந்துதெளிந் தாடுபாம்பே சிவன்
சீர்பாதங் கண்டுதெளிந் தாடுபாம்பே
ஆடுபாம்பே தெளிந் தாடுபாம்பே சிவன்
அடியிணை கண்டோமென் றாடுபாம்பே. (1)

நீடுபத நமக்கென்றுஞ் சொந்தமென்றே
நித்தியமென் றேபெரு முத்தியென்றே
பாடுபடும் போதுமாதி பாதநினைந்தே
பன்னிப்பன்னிப் பரவிநின் றாடுபாம்பே. (2)

பொன்னிலொளி போலவெங்கும் பூரணமதாய்ப்
பூவின்மணம் போலத்தங்கும் பொற்புடையதாய்
மன்னும்பல வுயிர்களின் மன்னிப்பொருந்தும்
வள்ளலடி வணங்கிநின் றாடுபாம்பே. (3)

எள்ளிலெண்ணெய் போலவுயி ரெங்கும்நிறைந்த
ஈசன்பத வாசமல ரெண்ணியெண்ணியே
உள்ளபடி யன்புபத்தி யோங்கிநிற்கவே
ஒடுங்கி யடங்கித்தெளிந் தாடுபாம்பே. (4)

அண்டபிண்டந் தந்தவெங்க ளாதிதேவனை
அசலாம லேநினைந் தன்புடன்பணிந்
தெண்டிசையும் புகழ்ந்திட வேத்தியேத்தியே
ஏகமன மாகநாடி யாடுபாம்பே. (5)

சோதிமய மானபரி சுத்தவஸ்துவைத்
தொழுதழு தாவலறத் தொந்தோமெனவே
நீதிதவ றாவழியில் நின்றுநிலையாய்
நினைந்து நினைந்துருகி யாடுபாம்பே. (6)

அருவாயும் உருவாயும் ஆதியாயும்
அந்தமாயும் ஒளிவாயும் ஆகமாயும்
திருவாயுங் குருவாயுஞ் சிவனாயுஞ்
செறிந்தவஸ் துவைப்போற்றி யாடுபாம்பே. (7)

சுட்டிக்காட்ட வொண்ணாதபாழ் சூனியந்தனைச்
சூட்சமதி யாலறிந்து தோஷமறவே
எட்டிப்பிடித் தோமென் றனந்தமாப்பை
யெடுத்து விரித்துநின் றாடுபாம்பே. (8)

எவ்வுயிரு மெவ்வுலகு மீன்றும்புறம்பாய்
இருந்து திருவிளையாட் டெய்தியும்பின்னர்
அவ்வுயிரு மவ்வுலகு மாகியும்நின்ற
ஆனந்த வெள்ளங்கண் டாடுபாம்பே. (9)

குருவணக்கம்.

சாற்றுமுடற் பொருளாவி தத்தமாகவே
தானம்வாங்கி நின்றவெங்கள் சற்குருவினைப்
போற்றிமனம் வாக்குக்காயம் மூன்றும்பொருந்தப்
புகழ்ந்து புகழ்ந்துநின் றாடுபாம்பே. (10)

பொய்ம்மதங்கள் போதனைசெய் பொய்க்குருக்களைப்
புத்திசொல்லி நன்னெறியிற் போகவிடுக்கும்
மெய்ம்மதந்தா னின்னதென்று மேவிவிளம்பும்
மெய்க்குருவின் பாதம்போற்றி யாடாய்பாம்பே. (11)

வேதப்பொரு ளின்னதென்றும் வேதங்கடந்த
மெய்ப்பொருளைக் கண்டுமன மேவிவிரும்பிப்
போதப்பொரு ளின்னதென்றும் போதனைசெய்யும்
பூரணசற் குருதாள்கண் டாடாய்பாம்பே. (12)

உள்ளங்கையிற் கனிபோல வுள்ளபொருளை
உண்மையுடன் காட்டவல்ல வுண்மைக்குருவைக்
கள்ளமனந் தன்னைத்தள்ளிக் கண்டுகொண்டன்பாய்க்
களித்துக் களித்துநின் றாடாய்பாம்பே. (13)

அங்கையிற்கண் ணாடிபோல வாதிவஸ்துவை
அறிவிக்கு மெங்களுபி ரானகுருவைச்

சங்கையறச் சந்ததமுந் தாழ்ந்துபணிந்தே
    தமனியப் படமெடுத் தாடாய்பாம்பே. (14)

காயநிலை யழிகையைக் கண்டுகொண்டுபின்
    கற்பநிலை யுள்ளிற்கொண்டெக் காலமும்வாழும்
தூயநிலை யகண்டபரி சுத்தகுருவின்
    துணையடி தொழுதுநின் றாடாய்பாம்பே. (15)

கூடுவிட்டுக் கூடுபாயுங் கொள்கையுடைய
    குருவின் வல்லபமெவர் கூறவல்லவர்
வீடுபெறும் வகையைமென் மேலுங்காட்டும்
    மெய்க்குருவைப் பணிந்துநின் றாடாய்பாம்பே. (16)

அட்டதிக்கு மண்டவெளி யானவிடமும்
    அடக்கிய குளிகையோ டாடிவிரைவாய்
வட்டமிட்டு வலம்வரும் வல்லகுருவின்
    மலரடி தஞ்சமென் றாடாய்பாம்பே. (17)

கற்பகாலங் கடந்தாதி கர்த்தாவோடும்
    கடமழி யாதுவாழுங் காரணக்குரு
பொற்பதமே தஞ்சமென்று போற்றுதல்செய்து
    பூரணச் சிந்தையோ டாடாய்பாம்பே. (18)

வச்சிரத்திற் கோர்பழுது வாய்க்குமாயினும்
    வல்லுடம்புக் கோர்குறைவு வாய்த்திடாது
மெச்சுகட முள்ளவெங்கள் வேதகுருவின்
    மெல்லடி துதித்துநின் றாடாய்பாம்பே. (19)

பாம்பினது சிறப்பு.

நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே
    நச்சுப்பையை வைத்திருக்கும் நல்லபாம்பே
பாதலத்திற் குடிபுகும் பைகொள்பாம்பே
    பாடிப்பாடி நின்றுவிளை யாடுபாம்பே. (20)

வளைபுகும் போதேதலை வாங்கும்பாம்பே
    மண்டலமிட் டுடல்வளை வண்ணப்பாம்பே
தளைக்கஞ்சி நின்றிடுஞ்சத் தியப்பாம்பே
    தலையெடுத் தேவிளை யாடுபாம்பே. (21)

குற்றமற்ற சிவனுக்குக் குண்டலமானாய்
கூறுந்திரு மாலினுக்குக் குடையானாய்
கற்றைக்குழற் பார்வதிக்குக் கங்கணமானாய்
கரவாம லுளங்களித் தாடுபாம்பே. (22)

மண்டலத்தைத் தாங்குமிகு வல்லமைகொண்டாய்
மாயனுக்குப் படுக்கைக்கு வண்ணப்பாயானாய்
கண்டபடை நடுங்கிடக் காட்சியும்பெற்றாய்.
கண்ணேசெவி யாகக்கொண்டா யாடுபாம்பே. (23)

சந்திரனைச் சூரியனைத் தாவித்தீண்டினாய்
சங்கரனுக் காபரணந் தானுமாகினாய்
மந்திரத்திற் கடங்கினாய் மண்டலமிட்டாய்
வளைந்து வளைந்துநின் றாடுபாம்பே. (24)

சித்தர் வல்லபங்கூறல்.

எட்டுநாகந் தன்னைக்கையா லெடுத்தாட்டுவோம்
இந்திரனு லகத்தை யிங்கேகாட்டுவோம்
கட்டுக்கடங் காதபாம்பைக் கட்டிவிடுவோம்
கடுவிஷந் தனைக்கக்கி யாடுபாம்பே. (25)

ஆதிசேட னாகினுமெம் அங்கையினாலே
ஆட்டிவிடு வோமெங்க ளாக்கினைக்குள்ளே
நீதியோ டடங்கியேநின் றிடச்செய்வோம்
நின்றநிலை தவறாம லாடுபாம்பே. (26)

தூணைச்சிறு துரும்பாகத் தோன்றிடச்செய்வோம்
துரும்பைப் பெருந்தூணாகத் தோற்றச்செய்குவோம்
ஆணைப்பெண்ணும் பெண்ணையாணு மாகசெய்குவோம்
ஆரவாரித் தெதிராய்நின் றாடுபாம்பே. (27)

எட்டுமலை களைப்பந்தா யெடுத்தெறிவோம்
எழுகட லையுங்குடித் தேப்பமிடுவோம்
மட்டுப்படா மணலையு மதித்திடுவோம்
மகராசன் முன்புநின் றாடுபாம்பே. (28)

மண்டலமுற் றுங்கையான் மறைத்திடுவோம்
வானத்தையும் வில்லாக வளைத்திடுவோம்

தொண்டருக்குச் சூனியஞ்சொல்லிக் காட்டுவோம்
தோன்றலுக்கு முன்புநின் றுடாய்பாம்பே. (29)

மூண்டெரியு மக்கினிக்குள் மூழ்கிவருவோம்
மூந்நீருள் ளிருப்பினும் மூச்சடக்குவோம்
தாண்டிவரும் வெம்புலியைத் தாக்கிவிடுவோம்
தார்வேந்தன் முன்புநின் றுடுபாம்பே. (30)

செப்பரிய மூன்றுலகுஞ் செம்பொன்னாக்குவோம்
செங்கதிரைத் தண்கதிராய்ச் செய்துவிடுவோம்
இப்பெரிய வுலகத்தை யில்லாமற்செய்வோம்
எங்களுட வல்லபங்கண் டாடுபாம்பே. (31)

வேதன்செய்த சிஷ்டிகள்போல் வேறுசெய்குவோம்
வேதனையு மெங்கள்கீழே மேவச்செய்குவோம்
நாதனுடன் சமமாக நாளும்வாழ்குவோம்
நங்கள் செய்கை யிதுவென் றுடுபாம்பே. (32)

அறுபத்து நாலுகலை யாவுமறிந்தோம்
அதற்குமே லொருகலை யானதறிந்தோம்
மறுபற்றுச் சத்துமில்லா மனமுடையோம்
மன்னனே யாசானென் றுடுபாம்பே. (33)

சீறுபுலி யானையாளி சிங்கமுதலாய்ச்
சிற்றடிக்குக் குற்றேவல் செய்யச்சொல்லுவோம்
வீறுபெருங் கடவுளை யெங்களுடனே
விளையாடச் செய்வோமென் றுடுபாம்பே. (34)

சித்தர்சம்வாதம்.

வாசுகியை யொருபக்கம் மன்னநிறுத்து
பகத்தான பதுமனை மறுபக்கம்வை
தேசுலவு தக்கனைத்தன் திக்கிற்சேரு
செய்யபது மனைக்கொள் சித்தனாரே. (35)

அனந்தனை யொருபக்க மாகநிறுத்தி
அதன்பக்கங் குளிகனை யண்டச்சேரு
கனங்கொண்ட கார்க்கோடகன் காணக்காட்டுக்
கடுஞ்சங்க பாலனைத்தா சித்தனாரே. (36)

அட்டதிக்குஞ் சக்கரங்க ளாகக்கீறி
அக்கோண நிலைகளி லக்கரஞ்சேரு
திட்டமுடன் மந்திரத்தைச் செபித்துநில்லு
சித்தந்தடு மாறுதே சித்தனாரே. (37)

அட்டதிக்குஞ் சக்கரங்க ளமைத்துவிட்டோம்
அவ்வவ்வறைக் கக்கரங்க ளடைத்துவிட்டோம்
எட்டுநாக மிருக்கின்ற விடத்தில்விட்டோம்
இனியென்ன செய்வதுசொல் சித்தனாரே. (38)

நடுவாக வாதிசேடன் றன்னைநாட்டு
நான்குதிக்கு மந்திரித்த நீறுதூவு
கடுவிஷங் கக்கிடவே கட்செவிகளைக்
கையிலெடுத் தாட்டுங்கள் சித்தனாரே. (39)

பொருளாசை விலக்கல்.

நாடுநகர் வீடுமாடு நற்பொருளெல்லாம்
நடுவன் வரும்பொழுது நாடிவருமோ
கூடுபோன பின்பவற்றாற் கொள்பயனென்னே
கூத்தன்பதங் குறித்துநின் றாடாய்பாம்பே. (40)

யானைசேனை தேர்ப்பரி யாவுமணியாய்
யமன்வரும் போதுதுணை யாமோ அறிவாய்
ஞானஞ்சற்று மில்லாத நாய்கட்குப்புத்தி
நாடிவரும் படிநின் றாடாய்பாம்பே. (41)

மாணிக்கமா மணிமுடி வாகுவலயம்
மார்பிற்றெருங்கும் பதக்கங்கண் மற்றும்பணிகள்
ஆணிப்பொன் முத்தாரமம்பொ னத்தகடகம்
அழிவான பொருளென் றாடாய்பாம்பே. (42)

மாடகூட மாளிகைகள் வண்ணமண்டபம்
மதில்சூழ்ந்த வரண்மனை மற்றுமுள்ளவை
கூடவரா தென்றவந்தக் கொள்கையறிந்தோர்
குலவாமல் வெறுப்பாரென் றாடாய்பாம்பே. (43)

மலைபோன்ற செம்பொற்குவை வைத்திருப்பவர்
மறலி வரும்பொழுது வாரிச்செல்வரோ

அலையாம லகத்தினை யத்தன்பால்வைத்தோர்
அழியாரென் றேதுணிந் தாடாய்பாம்பே. (44)

பஞ்சணையும் பூவணையும் பாயலும்வெறும்
பாழ்சுடுகா டதனிலே பயன்பெறுமோ
மஞ்சன்மணம் போய்சுடு நாறுமணங்கள்
வருமென்று தெளிந்துநின் றாடாய்பாம்பே. (45)

முக்கனியுஞ் சர்க்கரையு மோதகங்களும்
முதிர்சுவைப் பண்டங்களு முந்தியுண்டவாய்
மிக்கவுயிர் போனபின்பு மண்ணைவிழுங்க
மெய்யாகக் கண்டோமென் றாடாய்பாம்பே. (46)

வண்ணபட்டும் வாசனையும் வாய்த்தகோலமும்
வண்கவிகை யாலவட்ட மற்றுஞ்சின்னமும்
திண்ணமுடன் யமபுரஞ் செல்லுங்காலத்தில்
சேரவர மாட்டாதென் றாடாய்பாம்பே. (47)

மக்கள்பெண்டீர் சுற்றமரு மக்கண்மற்றவர்
மாளும்போது கூடவவர் மாள்வதில்லையே
தக்கவுல கனைத்தையுந் தந்தகத்தனைத்
தாவித்தாவித் துதித்துநின் றாடாய்பாம்பே. (48)

கானலைமா நீரெனவே கண்டுசெல்லல்போல்
காசினிவாழ் வினைமூடர் கண்டுகளிப்பார்
மேனிலைகண் டார்கள்வீணாய் வீம்புபேசிடார்
மெய்யன்பதம் நாடுவரென் றாடாய்பாம்பே. (49)

பெண்ணாசை விலக்கல்.

வெயில்கண்ட மஞ்சள்போன்ற மாதரழகை
விரும்பியே மேல்விழுந்து மேவுமாந்தர்
உயில்கண்ட இலவுகாத் தோடுங்கிளிபோல்
உயிர்போனா லோடுவாரென் றாடாய்பாம்பே. (50)

செண்டுகுய வண்டுவிழி கொண்டதேரையைச்
சித்தப்பாம்பால் விழுங்கியே சீயென்றொறுத்தோம்
குண்டுகட் டெருமையேறுங் கூற்றுப்பருந்தைக்
கொன்றுதின்று விட்டோமென் றாடாய்பாம்பே. (51)

வட்டக்குப மென்றுமிக வற்றுந்தோலை
மகமேரு வென்றுவமை வைத்துக்கூறுவார்
கெட்டநாற்ற முள்ளயோனிக் கேணியில்வீழ்ந்தார்
கெடுவரென் றேதுணிந் தாடாய்பாம்பே. (52)

மலஞ்சொரி கண்ணைவடி வாளுக்கொப்பாக
வருணித்துச் சொல்வர்மதி வண்மையில்லாதார்
குலநலம் பேசுகின்ற கூகைமாந்தர்கள்
கும்பிக்கே யிரையென் ருடாய்பாம்பே. (53)

சிக்குநாறுங் கூந்தலைச் செழுமேகமாய்ச்
செப்புவார்கள் கொங்கைதனைச் செப்புக்கொம்மதாக
நெக்குநெக் குருகிப்பெண்ணை நெஞ்சினினைப்பார்
நிமலனை நினையாரென் ருடாய்பாம்பே. (54)

நாறிவரு மெச்சிலினை நல்லமுதென்று
நண்ணுஞ்சளி நாசிதனை நற்குமிழென்று
கூறுவார்கள் புத்தியில்லாக் கூகைமாந்தர்
கோனிலையை யறியாரென் ருடாய்பாம்பே. (55)

மயிலென்றுங் குயிலென்றும் மாணிக்கமென்றும்
மானேயென்றுந் தேனேயென்றும் வானமுதென்றும்
ஒயிலான வன்னமதிற் கொத்தவளென்றும்
ஓதாமற் கடிந்துவிட் டாடுபாம்பே. (56)

மின்னற்கொடி யென்றுஞ்சோதி விளக்கமென்றும்
மெல்லியென்றும் வல்லியென்றும் மேனகையென்றும்
கன்னற்கட்டி யென்றுஞ்சீனிக் கற்கண்டென்றும்
கழறுமற் கடிந்தோமென் ருடாய்பாம்பே. (57)

பூவையென்றும் பாவையென்றும் பொன்னேயென்றும்
பூந்திருவே யென்றுமென்றன் பொக்கிஷமென்றும்
கோவையென்றுங் கோதையென்றுங் கோகிலமென்றுங்
கூறுமற் றுறந்தோமென் ருடாய்பாம்பே. (58)

மலக்குட மீதிலே மஞ்சள்பூச்சென்றும்
மல்கும்புழுக் கூட்டின்மேல் வண்ணத்தோலென்றும்

சலக்குழிக் குள்ளேநாற்றஞ் சார்ந்தசேறென்றுந்
தானறிந்து தள்ளினோமென் றூடாய்பாம்பே. (59)

சரீரத்தின்குணம்.

ஊத்தைக் குழியிலே மண்ணையெடுத்தே
உதிரப் புனலிலே யுண்டைசேர்த்தே
வாய்த்த குயவனார் பண்ணும்பாண்டம்
வரவோட்டுக்கு மகாதென் றூடாய்பாம்பே. (60)

இருவர்மண் சேர்த்திட வொருவர்பண்ண
ஈரைந்து மாதமாய் வைத்தசூளை
அருமையா யிருப்பினு மந்தச்சூளை
அரைக்காசுக் காகாதென் றூடாய்பாம்பே. (61)

பரியாசம் போலவே கடித்தபாம்பு
பலபேர றியவே மெத்தவீங்கிப்
பரியார மொருமாது பார்த்தபோது
பையோடே கழன்றதென் றூடாய்பாம்பே. (62)

சீயுமலமுஞ் செந்நீரு நிணமுஞ்
சேர்ந்திடு நாற்றக் குடமுடைந்தால்
நாயும் நரியும் பேயுங்கழுகும்
நமதென்றே தின்னுமென் றூடாய்பாம்பே. (63)

நீரிலெழு நீர்க்குமிழி நிலைகடல்போல்
நில்லாதுட னீங்கிவிடு நிச்சயமென்றே
பாரிற்பல வுயிர்களைப் படைத்தவன்றனைப்
பற்றறவே பற்றித்தொடர்ந் தாடாய்பாம்பே. (64)

நாறுமீனைப் பலதரம் நல்லதண்ணீரால்
நாளுங் கழுவினுமத னாற்றம்போமோ
கூறுமுடல் பலநதி யாடிக்கொண்டதால்
கொண்டமல நீங்காதென் றூடாய்பாம்பே. (65)

காய்ந்தமர மதுமிகக் கல்லடிபடும்
கன்மவினை கொண்டகாயங் கண்டனைபெறும்
வாய்த்ததவ முடையவர் வாழ்பவரென்றே
வஸ்துதிரு வடிதொழு தாடாய்பாம்பே. (66)

பேசரிய நவவாயிற் பீறற்றுருத்தி
　　பெருங்காற்றுப் புகுந்தாற் பேச்சுண்டாச்சே
ஈசனிலை யறியாருக் கிந்தத் துருத்தி
　　எரிமண்ணிற் கிரையாமென் றூடாய்பாம்பே. (67)

மரப்பாவை போலவொரு மண்ணுருச்செய்து
　　வளமான சீவனென்னுஞ் சூத்திரமாட்டித்
திரைக்குள் ளிருந்தசைப்போன் றீர்ந்தபொழுதே
　　தேகம்விழு மென்றுதெளிந் தாடும்பாம்பே. (68)

தசநாடி தசவாயு சத்ததாது
　　சாந்தமரக் கப்பலது தத்திவிழுமே
இசைவான கப்பலினை யேகவெள்ளத்தில்
　　எங்களூ மோட்டத்துணிந் தாடாய்பாம்பே. (69)

அகப்பற்று நீக்கல்.

தாமரையி னிலையிலே தண்ணீர்தங்காத்
　　தண்மைபோலச் சகத்தாசை தள்ளிவிட்டென்றும்
தூமணியாய் விளங்கிய சோதிபதத்தைத்
　　தொழுது தொழுதுதொழு தாடாய்பாம்பே. (70)

கள்ளங்கொலை காமமாதி கண்டித்தவெல்லாம்
　　கட்டறுத்து விட்டுஞானக் கண்ணைத்திறந்து
தெள்ளிதான வெட்டவெளி சிற்சொரூபத்தைத்
　　தேர்ந்துபார்த்துச் சிந்தைதெளிந் தாடாய்பாம்பே. (71)

சொல்லும்புளி யம்பழத்தின் றோடுபோலவே
　　சுற்றத்திருந் தாலுமவர் தொந்தங்களற்று
நில்லுமன தேபர நின்மலத்திலே
　　நின்றுணைதான் வெறும்பாழென் றூடாய்பாம்பே. (72)

சேற்றிற்றிரி பிள்ளைப்பூச்சி சேற்றைநீக்கல்போல்
　　தேசத்தொத்து வாழ்பவரச் செய்கைகண்டபின்
சாற்றுபர வெளிதனைச் சாரும்வழியே
　　தானடக்க வேண்டுமென் றூடாய்பாம்பே. (73)

எண்ணெய்க்குந் தண்ணீர்க்குந் தொந்தமில்லாவாறுபோல்
　　எப்போது மிப்புவியி லெய்தவேண்டும்

கண்ணுக்குக்கண் ணனவொளி கண்டுகொள்ளவே
கட்டறுத்து வாழ்ந்திடநின் றூடாய்பாம்பே. (74)

கக்கிவிட்ட சோறுகறி கந்தமலங்கள்
கண்களுக் கசுத்தமான காட்சிபோலவே
சிக்கிக்கொண்ட சகத்தினைச் சீயென்றொறுத்துச்
சீர்பாதங் காணத்தெளிந் தாடாய்பாம்பே. (75)

கோபமென்னு மதயானை கொண்டமதத்தைக்
கூர்கொள்புத்தி யங்குசத்தாற் கொன்றுவிட்டங்காண்
தீபமெனுஞ் சிற்சொரூபச் செய்யபொருளைச்
சேர்ந்துறவு கொண்டோமென் றூடாய்பாம்பே. (76)

நித்திய மெனுமலையில் நின்றுகொண்டோம்யாம்
நினைத்தபடி முடித்துநின் மலமானோம்
சத்தியமா யெங்கள்சடந் தானழியாவே
சந்ததமும் வாழ்வோமென் றூடாய்பாம்பே. (77)

மனமென்னுங் குதிரையை வாகனமாக்கி
மதியென்னுங் கடிவாளம் வாயிற்பூட்டிச்
சினமென்னும் சினிமேற் சீராயேறித்
தெளிவிடஞ் சாரிவிட் டாடாய்பாம்பே. (78)

ஆசையென்னுஞ் செருப்பின்மே லடியைவைத்தே
ஆங்கார முட்காட்டை யாரமிதித்தே
காசையென்னுந் துற்குணத்திற் கனல்கொளுத்திக்
காலாகாலங் கடந்தோமென் றூடாய்பாம்பே. (79)

காலனென்னுங் கொடிதான கடும்பகையைக்
கற்பமென்னும் வாளினாற் கடிந்துவிட்டோம்
சாலப்பிறப் பிறப்பினைத் தான்கடந்தோம்
தற்பரங் கண்டோமென் றூடாய்பாம்பே. (80)

தேனில்வீழ்ந்த வீயைப்போலச் சிந்தையலைந்து
திகையாமற் சிற்சொரூப தெரிசனைகண்டு
வானிற்பறந் திடச்சூத வான்மணிதீர்ந்து
வாயிற்போட் டேகநின் றூடாய்பாம்பே. (81)

தூக்கிய பாதங்கண்டேன் சோதிகண்டேன்
சுத்தவெளிக் குள்ளேயொரு கூத்தன்கண்டேன்
தாக்கிய சிரசின்மேல் வைத்தபாதம்
சற்குருவின் பாதமென் றாடாய்பாம்பே. (82)

ஆலடிப் பொந்திலே வாழ்ந்தபாம்பே
அரசடிப் பொந்திலே புகுந்துகொண்டாய்
வாலடி தன்னிலே பார்த்துப்பார்த்து
வாங்கியே தூங்கிநின் றாடாய்பாம்பே. (83)

நாலு தெருவிலே நாலுகம்பம்
நடுத் தெருவிலே பொன்கம்பம்
போலும் விளங்குபொன்னங் கம்பத்தினுக்கே
பூமாலை சூட்டிநின் றாடாய்பாம்பே. (84)

ஆழிபெயர்ந் தாலுமேரு மட்டமலையும்
அடியோடே பெயர்ந்தாலு மன்றிக்கால
வூழிபெயர்ந் தாலுமாதி யுண்மையடிக்கே
உறுதிபெய ராதுநின் றாடாய்பாம்பே. (85)

வாயுவினை யிரைவாக வாங்கியுண்டே
வருஷிக்கும் நீரினை வாயுண்மடுத்தே
தேயுவினிற் குளிர்காய்ந்து வெட்டவெளியில்
திசைப்பறச் சேர்ந்துநின் றாடாய்பாம்பே. (86)

மாசில்கதிர் வளையிலே மண்டலமிட்டே
மதியான பெரும்படமடல்விரித்தே
ஆசில்பரா பரமான வாதிபதத்தை
அடுத்தடுத் தேதுதித் தாடாய்பாம்பே. (87)

காடுமலை நதிபதி காசிமுதலாய்க்
கால்கடுக்க வோடிற்பல காணலாகுமோ
வீடுபெறும் வழிநிலை மேவிக்கொள்ளவே
வேதாந்தத் துரையினின் றாடாய்பாம்பே. (88)

எள்ளளவு மன்பகத்தி லில்லா தார்மூத்தி
எய்துவது தொல்லுலகி லில்லையெனவே

கள்ளப்புலன் கட்டறுத்துக் காலகாலனைக்
கண்டுதொழு தேகளித் தாடாய்பாம்பே. (89)

சூரியனைக் கண்டபனி தூரவோடல்போல்
தொந்தபந்தஞ் சிந்தபரி சுத்ததலத்தில்
ஆரியனைக் கண்டுதெரி சித்தேயன்புடன்
அகலாமற் பற்றித்தொடர்ந் தாடாய்பாம்பே. (90)

காந்தம்வலி யிரும்புபோற் காசின்மனதைக்
காட்சியான வஸ்துடன்க லக்கச்சேர்த்துச்
சாந்தமுடன் றேண்டியுந் தாம்புபோலச்
சலியாமற் றொடர்ந்துநின் றாடுபாம்பே. (91)

உளியிட்ட கற்சிலையி லுண்டோபலன்கள்
உலகத்தின் மூடர்களுக் குண்டோவுணர்ச்சி
புளியிட்ட செம்பிற்குற்றம் போமோவஞ்ஞானம்
போகாது மூடர்க்கென் றாடாய்பாம்பே. (92)

திரளான போரிலூசி தேடல்போன்முத்தி
சிக்காது தேசாசார தேசிகர்தம்மால்
அருளான மூலகுரு வையர்செயலால்
ஆனந்தங் கண்டோமென் றாடாய்பாம்பே. (93)

எட்டுச்சுரைக் காய்கறிக் கெய்திடாதுபோல்
எண்டிசைத் திரிந்துங்கதி யெய்தலிலையே
நாட்டுக்கொரு கோயில்கட்டி நாளும்பூசித்தே
நாதன்பாதங் காணார்களென் றாடாய்பாம்பே. (94)

தன்னையறிந் தொழுகுவோர் தன்னைமறப்பார்
தன்னையறி யாதவரே தன்னைக்காட்டுவார்
பின்னையொரு கடவுளைப் பேணநினையார்
பேரொளியைப் பேணுவாரென் றாடாய்பாம்பே. (95)

பாலிற்சுவை போலுமெங்கும் பாய்ந்தவொளியைப்
பற்றிப்பொன் பற்றவைத்த பான்மைபோலே
காலிற்சுழி முனைநின்று கண்டுகொண்டு
களித்துக் களித்துநின் றாடாய்பாம்பே. (96)

தேக்கெடுத்தே யோடும்வாணத் தேனையுண்டபின்
தேகபந்தங் கொண்டனமித் தேசவாழ்வினை
ஒக்காள மென்றெண்ணி யோகையுடனீ
உள்ளந் தெளிந்தேநின் றாடாய்பாம்பே. (97)

சதுர்வேத மாறுவகை சாஸ்திரம்பல
தந்திரம் புராணகலை சாற்றுமாகமம்
விதம்வித மானதான வேதநூற்களும்
வீணான நூற்களென் றாடாய்பாம்பே. (98)

சமயபேதம் பலவான சாதிபேதங்கள்
சகத்தோர்க்கே யல்லதுசர்ச் சாதுக்களுக்கோ
சிமயத்தி லேறினபேர் சித்தமாறுமோ
சித்தர்சித் தாந்தந்தேர்ந் தாடுபாம்பே. (99)

பூசைசெய்த தால்சுத்த போதம்வருமோ
பூமிவலஞ் செய்ததால்நற் புண்ணியமுண்டோ
ஆசையற்ற காலத்திலே ஆதிவஸ்துவை
அடையலா மென்றுதுணிந் தாடாய்பாம்பே. (100)

மூலவே றறிந்துகொண்டான் மூன்றுலகமும்
முன்பாகவே கண்டுநித்ய முத்திசேரலாம்
சாலவே றறிந்ததாலே தான்பயனுண்டோ
சகத்தைப்பொய் யென்றுதெளிந் தாடாய்பாம்பே. (101)

சகத்தாதி யென்றிடாது தானநாதியாய்ச்
சமைந்ததென் றுரைப்பார்கள் சத்தைபதியார்
மகத்துவ நிலைகற்ப வன்மையல்லாது
மற்றும்வன்மை யில்லையென் றாடாய்பாம்பே. (102)

ஆயிரத்தெட் டிதழ்வீட்டி லமர்ந்தசித்தன்
அண்டமெல்லாம் நிறைந்திடு மற்புதசித்தன்
காயமில்லா தோங்கிவளர் காரணசித்தன்
கண்ணுள்ளொளி யானவனென் றாடாய்பாம்பே. (103)

நாற்பத்துமுக் கோணநிலை நாப்பணதாக
நாடுமெக்கரச் சொரூப நாயகந்தனை

மேற்படித்திக் கொண்டாலந்த மேலுலகெலாம்
மெல்லடிக்குத் தொண்டேயென் றூடாய்பாம்பே (104)

கண்டவர்க ளொருக்காலும் விண்டவர்களல்
விண்டவர்க ளொருக்காலுங் கண்டவர்களல்
கொண்டகோல முள்ளவர்கள் கோணிலேகாணார்
கூத்தாடிக் கூத்தாடி யாடுபாம்பே. (105)

ஆறுதலக் குச்சுக்குள்ளே யாடுமொருவன்
அயல்வீட்டுட் போகுமுன்னே யரண்கோலிக்கொள்
வேறுபட்டா லவன்றனை மீட்டலரிதே
மேவுமுன்னே விடாதுகொண் டாடுபாம்பே. (106)

எண்ணரிய புண்ணியங்க ளெல்லாஞ்செய்துமென்
ஏகனடி நெஞ்சமதி லெண்ணுவிடிலே
பண்ணரிய தவப்பயன் பத்தியில்லையேல்
பாழ்படு மென்றேதுணிந் தாடாய்பாம்பே. (107)

எவ்வுலகுஞ் சொந்தமதா யெய்தும்பயனென்
றெங்களாதி பதாம்புய மெண்ணுக்காலையில்
இவ்வுலகு வாழ்வுதானு மின்றேயறுமென்
றெண்ணிக்கர்த்த னடிநினைந் தாடாய்பாம்பே. (108)

மணக்கோலங் கண்டுமிக மனமகிழ்ந்து
மக்கண்மனை சுற்றத்தோடு மயங்கிநின்றாய்
பிணக்கோலங் கண்டும்பின்னுந் துறவாவிட்டால்
பிறப்புக்கே துணையென் றூடாய்பாம்பே. (109)

பிறப்பையு மிறப்பையு மற்றுவிடயான்
பெருமருந் தொன்றுசொல்வேன் பெட்புடன்கேளாய்
திறப்புடன் மனப்பூட்டுஞ் சிந்தைக்கதவும்
திறந்திடும் வகையறிந் தாடாய்பாம்பே. (110)

இறந்தவ ரைவரவ ரிஷ்டமானவர்
எய்துமைவ ரிறந்தாரென் றெல்லவர்க்குஞ்சொல்
மறந்தவ ரொருவரென் றேமண்ணுள்ளோர்
வகையறிந் திடவேநின் றூடாய்பாம்பே. (111

நான்கடிச்செய்யுள்.

ஆகார முதலிலே பாம்பதாக
        ஆனந்த வயலிலே படம்விரித்தே
ஊகார முதலிலே யொத்தொடுங்கி
        ஓடிவகாரத்தி னுக்கை நீட்டிச்
சிகாரங் கிடந்ததோர் மந்திரத்தைச்
        சித்தப் பிடாரனார் போதஞ்செய்ய
மாகாரப் பிறப்பையும் வேரறுத்து
        மாயபந்தங் கடந்தோமென் றாடாய்பாம்பே. (112)

தந்திரஞ் சொல்லுவார் தம்மையறியார்
        தனிமந்திரஞ் சொல்லுவார் பொருளறியார்
மந்திரஞ் செபிப்பார்கள் வட்டவீட்டினுள்
        மதிலினைச் சுற்றுவார் வாயல்காணார்
அந்தரஞ் சென்றுமே வேர்பிடுங்கி
        அருளென்னும் ஞானத்தா னுண்டைசேர்த்தே
இந்த மருந்தினைத் தின்பீராகில்
        இனிப்பிறப் பில்லையென் றாடாய்பாம்பே. (113)

களிமண்ணி னாலொரு கப்பல்சேர்த்தே
        கன்மனப் பாய்மரங் காணநாட்டி
அளிபுலந் தன்னையே சுக்கானாக்கி
        அறிவென்னு மாதாரச் சீனிதூக்கி
வெளியென்னும் வட்டத்தே யுள்ளடக்கி
        வேதாந்தக் கடலினை வெல்லவோட்டித்
தெளிவுறு ஞானிய ரோட்டுங்கப்பல்
        சீர்பாதம் சேர்ந்ததென் றாடாய்பாம்பே. (114)

உள்ளத்தைக் குள்ளேயு ணரவேண்டும்
        உள்ளும் புறம்பையு மறியவேண்டும்
வெள்ளக் கனலையெ ழுப்பவேண்டும்
        வீதிப் புனலிலே செலுத்தவேண்டும்
கள்ளப் புலனைக் கடிந்துவிட்டுக்
        கண்ணுக்கு மூக்குமேற் காணநின்று
தெள்ளு பரஞ்சோதி தன்னைத்தேடிச்
        சீர்பாதங் கண்டோமென் றாடாய்பாம்பே. (115)

ஓங்காரக் கம்பத்தி னுச்சிமேலே
        உள்ளும் புறம்பையு மறியவேண்டும்
ஆங்காரக் கோபத்தை யறுத்துவிட்டே
        ஆனந்த வெள்ளத்தைத் தாக்கிக்கொண்டே
சாங்கால மில்லாமற் றானுவுடனே
        சட்டதிட்ட மாகச்சேர்ந்து சாந்தமாகவே
தூங்காமற் றூங்கியே சுகமடைந்து
        தொந்தோந் தொந்தோமென் றாடாய்பாம்பே. (116)

விரகக் குடத்திலே பாம்படைப்போம்
        வேதாந்த வெளியிலே விட்டாட்டுவோம்
கரணங் களைப்பிடுங்கி யிரைகொடுப்போம்
        காலக் கடுவெளிநின் றாட்டுவிப்போம்
தூரகதந் தனிலேறித் தொல்லுலகெங்கும்
        சுற்றிவலம் வந்துநித்ய சூட்சுமங்கண்டும்
உரையற்ற மந்திரஞ் சொல்லிமீட்போம்
        ஒருநான்கும் பெற்றோமென் றாடாய்பாம்பே. (117)

காயக் குடத்திலே நின்றபாம்பைக்
        கருணைக் கடலிலே தியங்கவிட்டு
நேயச் சுழிமுனை நீடுபாய்ச்சி
        நித்தியமான வஸ்துவை நிலைக்கநாடி
மாயப் பெருவெளி தன்னிலேறி
        மாசற்ற பொருளினை வாய்க்கத்தேடி
ஆயத் துறைகடந் தப்பாற்பாழினை
        ஆனந்தஞ் சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. (118)

மூலத் தலத்திலே நின்றகருத்தை
        முற்றுஞ் சுழிமுனை தன்னினூடே
மேலத் தலத்திலே விந்துவட்டம்
        மேலை வழியிலே மேவிவாழும்
பாலத் ததாய கருணையினால்
        பரகதி ஞானசொ ரூபமாகி
ஆலச் சயனத்து மா லுடனின்றே
        ஆனந்தஞ் சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. (119)

புலனைந்து வீதியில்லை யாளிபாயும்
புரவி யெனுமனதை யொன்றுபடுத்தி
மலபந்த வுலகங் கடந்ததாலே
மன்னுகுரு பாதத்தின் நிலைநாட்டித்
தலமைந்து பூலோகங் கடந்ததாலே
சந்திர மண்டலங் கடந்ததாகும்
அலம்வந்து பூலோகக் கடலைநீக்கி
ஆனந்த மாகிநின் றாடாய்பாம்பே. (120)

குருவென்னு மாசா னுருவெடுத்துக்
குறியான ஞானத் துப்பாக்கியாக்கி
அருளென்னு மருளே யுண்டையாக்கி
ஆனந்த மாகவே யதைக்கடந்தே
மருளென்னு மாந்தர்தந் நெற்றிதொட்டு
வாங்காம லேயிந்த நெட்டையிட்டுப்
பருவலைக் குள்ளே பட்டம்தன்றே
பற்றுணைப் பற்றிநின் றாடாய்பாம்பே. (121)

கன்னான் குகையிலே காளமறிப்போம்
கருமா னுலையிலே தீமூட்டுவோம்
சொன்னார் தலையிலே பொன்னாக்குவோம்
சுருதிபுருக் கல்வியு மொப்பஞ்செய்வோம்
மின்னார்கள் பாசத்தை விட்டெரிப்போம்
மெய்ப்பொருட் குறிகண்டு விருப்படைவோம்
பன்னாதே பன்னாதே சும்மாவிரு
பராபரஞ் சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. (122)

சாதிப் பிரிவிலே தீமூட்டுவோம்
சாந்த வெளியினிற் கோனாட்டுவோம்
வீதிப் பிரிவினில் விளையாடுவோம்
வேண்டாத மனையி லுறவுசெய்வோம்
சோதித் துலாவியே தூங்கிவிடுவோம்
சுகமான பெண்ணையே சுகித்திருப்போம்
ஆதிப் பிரமாக்க ளைந்துபேரும்
அறியார்க ளிதையென் றாடாய்பாம்பே. (123)

நெட்டெழுத் ததனிலே நிலைபிடித்து
நீங்கா வெழுத்திலே வாலைமுறுக்கி
விட்ட வெழுத்திலே படம்விரித்து
விண்ணின் வழியிலே மேவியாடிப்
பட்ட வெழுத்தையும் பதிந்திருப்போம்
பன்னிரண்டா மெழுந்தினிற் பண்ணிக்கூடிய
திட்டமுட னெமக்கரு டேசிகனார்
சீர்பாதஞ் சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. (124)

ஊசித்துளைக் குடத்திற் பாம்படைப்போம்
உலகெலாஞ் சுற்றி யுலாவிவருவோம்
மாசுள்ள பிறவியை மறித்திருப்போம்
மனமொத்த வெளியிலே விட்டாட்டுவோம்
மாசுப் புலன்களை யிரைகொடுப்போம்
மனதுற்ற வுச்சியி லேறியாடுவோம்
பேசு மெழுத்தையும் விழுங்கிவிடுவோம்
பிறப்பிறப் பற்றோமென் றாடாய்பாம்பே. (125)

ஆணிக் குடத்திலே பாம்படைப்போம்
அக்கினிக் கோட்டைமே லேறப்பார்ப்போம்
மாணிக்கத் தூணின்மேல் விட்டாட்டுவோம்
மனம்வாக்குக் காயத்தை யிரைகொடுப்போம்
நாணிக் கயிற்றையு மறுத்திடுவோம்
நமனற்று நாதன்பதம் நாடியேநிற்போம்
ஏணிப்படி வழிகண் டேறிவிடுவோம்
இதையாரு மறியாரென் றாடாய்பாம்பே. (126)

வடக்குங் கிழக்குமாய் நூலிழைப்போம்
மற்றுஞ் சுழலிலே பாவுபூட்டுவோம்
நடக்கும் வழியிலே யுண்டைசேர்ப்போம்
நடவா வழியிலே புடவைநெய்வோம்
குடக்குக் கரையிலே கோல்போடுவோம்
கொய்சதை யெங்குமே விற்றுவிடுவோம்
அடக்கியே கக்கத்துள் வைக்கவல்லோம்
ஆதிபதங் கண்டோமென் றாடாய்பாம்பே. (127)

சூத்திரக் குடத்திலே பாம்படைப்போம்
சுழிமுனைக் குள்ளே சுகித்திருப்போம்
பாத்திரங் கொண்டுமே பலியிரப்போம்
பத்தெட்டு மூன்று படிகடந்தோம்
ஊத்தைக் கடத்தினைப் புடமிடுவோம்
உளவ னெமக்குநல் லுறுதிசொல்லப்
பார்த்துணை யிதன்மெய் பலிக்கவெண்ணிப்
பதனம் பதனமென் றாடாய்பாம்பே. (128)

மவ்வக் குடத்திலே பாம்படைப்போம்
மணிவட்ட வாசியை வாரியுண்போம்
சவ்வக் குடங்களைத் தள்ளிவிடுவோம்
சாக்கிர சொற்பனந் தாண்டிடுவோம்
பவ்வ வெளியிலே விட்டாட்டுவோம்
பஞ்ச கருவியைப் பலிகொடுப்போம்
சிவ்வுரு வாகியே நின்றேமென்றே
சீர்பாதங் கண்டுதெளிந் தாடுபாம்பே. (129)

---

## சரித்திர வரலாறு.

நீர்வளம் நிலவளம் குடிவளம் பொருந்திய நீணிலத்தையாண்டிருந்த ஓர் நிருபன் இறந்த காலத்தில், அந்நாட்டிலுள்ளோரும் அவ்வரசன் மனைவியும் அழுது பாதவிப்பதைக்கண்ட ஒரு சித்தர், அவர்கள் துயரம் அகன்றேடும்படி தமதுசரீரத்தை ஆலமரப்பொந்தில் மறைத்துச் சிஷரைக் காவல் வைத்துச் சிலநாளைக்குள் வருவேனென்று அவ்வேந்தன் சரீரத்திற் $ பரகாயப் பிரவேசமாயினர். அவர் நெடுநாளாக வாராமையால் சிஷர்களாகிய சித்தர்கள் பாம்பாட்டிகளைப்போல தங்க ளாசானாகிய அரசன்முன் சென்று இப்பாடல்களைப் பாடினதுமன்றி அன்றிரவில் வெட்டியான் வேடம்பூண்டு நான்கு சாமத்துக்கும் பின்வரும் நான்குவெண்பாக்களைப்பாடிப் பறைபடித்து ஆசானை மீண்டும் அழைத்துச்சென்றனர்.

($ பரகாயப் பிரவேசமாவது - கூடுவிட்டுக்கூடு பாய்தலாம்.)

## வெண்பா.

ஆலஞ்ச ரீரம் அநித்தியமென் றெண்ணுங்கள்
காலன் தினம்வருவான் காணுங்கள்—காலன்
கலங்காத கண்டன்நற் கண்மணியைப் போற்றி
உறங்கி யுறங்கா திரு. (1)

வானமணித் தேவர் வனத்திலுள வைவேடர்
ஞானமணி யைத்திருட நண்ணினார்—ஞானம்
நறுங்காலந் தானறிந்து நல்லுணர்வை நாடி
உறங்கி யுறங்கா திரு. (2)

ஆசையினாற் பாசம் அளவிறந்த கர்மமிது
ஆசைவிட்டுப் போவ தரிதரிது—ஆசை
யறுங்காத லாகி யரனடியைப் போற்றி
உறங்கி யுறங்கா திரு. (3)

தந்தைதாய் பந்துஜனம் தாரம் சகோதரங்கள்
விந்து நிலையறியா வீணரே—விந்து
வெறும்பாழென் றெண்ணியே மெய்யுணர்வை நாடி
உறங்கி யுறங்கா திரு. (4)

பாம்பாட்டிச்சித்தர் பாடல் ௱௯௰,

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் தெற்குத்தெரு, சாலிமகாரிஷி கோத்திரம் வைகுண்டராம மூப்பனாரவர்கள் குமாரர் புஸ்தகவியாபாரம் வை. சிவகுருநாதமூப்பனாரிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

பதினான்காவது:

சத்தியநாதரென்ற ஞானச்சித்த ரருளிய

# மெய்ஞ்ஞானம் ௰௨.

ஓங்கார வட்டசுழி முனையிலேதான்
　　உற்றநடம் புரிந்திலங்குஞ் சோதியாகி
பாங்கான வண்டபிண்டம் நிறைந்ததாகிப்
　　பகரரிய வேதமுறைப் பொருளதாகி
நீங்காத வருட்கருணைக் கடலதாகி
　　நின்மலமாஞ் சுகுணகுண தீதமாகிச்
சோங்கான பேரின்பா னந்தமாகித்
　　துலங்குபரம் பதம்பணிந்து சாற்றுவேனே. (1)

சாற்றிடவே மூலமதில் நின்றெழுத்துத்
　　தயவான பீசமதோங் காரவட்டம்
ஏற்றமா யுன்றனக்குச் சொல்லுகின்றேன்
　　என்மகனே நினைவாக வுற்றுக்கேளு
காற்றிசையு மறியாத மந்திரந்தான்
　　நவிலுகிறேன் தனித்துநின்ற தலத்திலப்பா
தேற்றமுடன் நோக்கிடவே அந்தபீசம்
　　தெரிந்திடுவாய் நந்தியிட மதுவாமென்றே. (2)

ஆகுமப்பா நினைவையொட்டிக் குறித்துப்பாரு
　　அவ்விடத்தில் நந்திகாலுந் தோணுந்தோணும்
வாகுடனே நந்தியர சிருந்தவீட்டின்
　　மத்தியிலே அமுதகங்கை யொழுகுப்பாரு
பாகமுள்ள சோதிமய வமுதந்தன்னைப்
　　பார்த்தறிந்துட் கொள்வதுவே பாதைமார்க்கம்
ஏகமென்ற முச்சந்தி வீதிதன்னில்
　　இயல்பாமெட் டங்குலத்தி னுள்ளாய்த்தானே. (3)

எட்டங்கு லந்தனிலே அமுதந்தானும்
இன்பமென நின்றதொரு தலமதாகும்
மட்டடங்கா ஒளியுளதா மரையைப்போலாம்
மைந்தனே அதனுடைய மத்திதன்னில்
திட்டமுட னுற்றதுவே உயிர்தாகும்
தேடினு லொன்றுமிலை வெளியாய்த்தோணும்
வெட்டவெளி தனிலிருக்கு மமுதந்தன்னை
மேன்மையுட னுண்டிடவே வகைசொல்வேனே. (4)

சொல்லுகிறே னுன்றனக்குச் சூட்சமாகச்
சுகமுடனே அண்ணாக்கை யுண்ணாக்கேற்றி
நல்லதொரு மூலத்தி தனையெழுப்ப
நலமான நந்தியுறும் வழிதான்காணும்
வல்லதொரு முதுவீணாத் தண்டினுள்ளே
மகத்தான நந்தியது தானேபாயும்
சொல்லவொண்ணா தந்தமதி யமுதந்தானும்
சூட்சமுள்ள நந்தியின்றன் சொந்தமாமே. (5)

சொந்தமுள்ள தென்றுமனஞ் சந்தோஷித்துச்
சுகமுடனே தாய்பதத்தைப் பணிந்துபோற்றி
அந்திசந்தி சுழிமுனையில் நாட்டிப்பாரு
அரகரா வாயுவுடன் றேய்வுங்கூடி
வந்ததொரு வழியதனி லமர்ந்தேநின்று
மைந்தனே அமுதமது தலைகீழாகும்
பந்தமுள்ள இடந்தனிலே சிவமேமிஞ்சும்
பாலகனே பழக்கம்வைத்துப் பரிந்துதேடே. (6)

தேடாய்நீ வாசியைத்தான் வெளிவிடாமல்
தீர்க்கமுட னப்பரியை வெளிப்பிசத்துள்
ஓடாம லுள்ளிருத்தி யமுத்திப்பார்த்தால்
உத்தமனே ஞானவொளிச் சுடரேதோணும்
வாடாம லதையறிந்து வெளிவிடாதே
மகிழ்ச்சியுடன் நந்திநிலை யறிந்துநின்றால்
கூடாத வமுதந்திற் கூட்டிவைக்கும்
குறிப்பறிந்து பாரமுதஞ் சிந்துந்தானே. (7)

சிந்துகின்ற அமுதகங்கை சொரியும்போது
சிக்கெனவே நந்திபதம் பற்றிக்கொள்ளு
வந்தவொரு இச்சடமோ சூட்சப்பாலவ
மகத்துவமென் றெண்ணுதே யழிந்துபோகும்
பந்தமற்ற வீடதிலே சிறந்துநின்று
பார்மகனே தேகமது பரமேயாகும்
சொந்தமுனக் கொன்றுமில்லை நந்திதன்னைச்
சூக்குமமாய்க் கண்டறிந்தால் ஞானந்தானே. (8)

தானென்ற ஞானமதைக் கண்டுகொள்ளத்
தன்னுக்குட் டானறிந்து தெளியவேண்டும்
நானென்ற மாயைதனை யறுக்கவேண்டும்
நானிலத்திற் பற்றுசை யொளிக்கவேண்டும்
கோனென்ற குருபதத்தை யடுக்கவேண்டும்
குற்றமில்லாக் குறியதனை யறியவேண்டும்
தேனென்ற அமுதமது நிலைகண்டாக்கால்
சித்தியென்ற ஞானமது தெரிவார்பாரே. (9)

பாரப்பா மானிடர்கள் மாயையாலே
படுத்துயரம் மெத்தவடா அறிந்தாயில்லை
நீரப்பா நீர்க்குமிழிக் கொத்தகாயம்
நிலையறிந்து நின்றவர்க்கே வச்சிரதேகம்
தேரப்பா அறியார்க்கு மண்பாண்டந்தான்
செகமதிலே ஞானமது தெளியாவிட்டால்
பேரப்பா வென்னபல னடைப்போரூர்
பெருநிலத்திற் பாவையைப்போ லலைவர்தாமே. (10)

தாமேதான் வெகுபேர்கள் ஞானியென்று
சகலகலை தெரிந்தவர்போற் பேசுவார்கள்
வாமேதான் ருத்திராக்க மாலைபூண்டு
மண்ணெடுபொன் பெண்ணாசை யற்றூர்போல
நேமமுடன் திரிவதனுற் பலனுண்டாமோ
நிட்களங்க ராமயத்தைத் தெரிவாராகுல்
நாமேதான் ஞானியென வெவருங்காண
நானிலத்திற் சொல்வாரோ நன்றாய்ப்பாரே. (11)

நன்றான காரியத்தை நாடவேண்டும்
  நாடியே சித்தனென் றிருக்கவேண்டும்
ஒன்றான பொருளையறிந் துணரவேண்டும்
  உற்றுநின்ற வாசிநிலை யறியவேண்டும்
குன்றாத சிவயோக மார்க்கம்வேண்டும்
  குறைவுபடா நந்திநிலை குறிக்கவேண்டும்
சென்றான காரியத்தைத் தள்ளிவிட்டுச்
  சிவயோக ஞானநிலை தெரிந்துகொள்ளே. (12)

ஞானச்சித்தர், மெய்ஞ்ஞானம் ௰௨.

முற்றிற்று.

சத்திகிரி சிவகிரி திருவாவினங்குடி யெனத் தழைத்தோங்கும் திருப் பழனிமலையிலெழுந்தருளிய ஸ்ரீ கைலாச போகமகாரிஷீஸ்வர சுவாமி யவர்கள் ஆதீன ஆச்சிரமம் ஆதீன மகாகைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ கைலாசதண்டாயுதபாணி ரிஷீஸ்வரசுவாமி யவர்களிட மிருந்துவாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம்அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

பதினைந்தாவது:

சத்தியநாதரென்ற

# ஞானச்சித்தர் பாடல் ௫.

## கண்ணிகள்.

ஆதி பராபரையே அம்பிகை மனோன்மணியே
சோதிச் சுடரொளியே சுத்த நிராமயமே. (1)

தாயே பகவதியே தற்பரையே அற்புதமே
நேயமுடன் ஞான நெறியையறி விப்பாயே. (2)

முடிநடுவும் மூலமுமாய் முச்சுடராய் முப்பொருளாய்
மடிவில்லா மெய்ஞ்ஞான மார்க்கத் தகோசரமாய். (3)

அஞ்ஞானக் காடுகடந் தாங்குவழி யேதொடர்ந்து
மெய்ஞ்ஞானங் காணநின்னை வேண்டி யலைகிறண்டி. (4)

நிலையில்லாப் பொய்க்கூட்டை நிச்சயங் கொண்டாசை
வலையிலகப் பட்டுழன்று வாடித் திரிகிறண்டி. (5)

தன்னையறி யாமற் றலைமெட்டுங் காணாமல்
அன்னையன்னை யென்று அலறித் திரிகிறண்டி. (6)

தவநிலையிற் றேறாமற் றன்னையுண ராமற்
பவநிலையிற் புக்கியகப் பட்டுழன்று வாடுறண்டி. (7)

பொல்லாக் கொலையும் புலையவா விட்டுன்றன்
வல்லபதங் காண மயங்கித் திரிகிறண்டி. (8)

துன்பமெல்லாம் போக்கிச் சுகானந்த மானநின்றாள்
இன்ப மனுபவிக்க வேங்கித் தவிக்கிறண்டி. (9)

வஞ்சகம்பொய் சூதுகொலை மாணர் மயக்கமெனும்
சஞ்சலத்தை நீக்கித் தனித்திருக்கத் தேடுறண்டி. (10)

ஆசைப் பெருக்கா றதில்வீழா தன்பாத
பூசைப் புரியப் புலம்பித் தவிக்கிறண்டி. (11)

ஊணுறக்க மின்பதுன்பத் துற்றவினை யையொழித்துக்
காணுதற்கெட் டாப்பொருளைக் கண்டு மகிழ்ந்தனடி. (12)

பஞ்சபூ தாதிப் பகுப்புகள்பொய் யென்றுணர்ந்துன்
செஞ்சரணைக் கஞ்சமதைத் தேடி யலைகிறண்டி. (13)

ஆசை யொழிந்தும் அருள்ஞானங் கண்டறிந்தும்
பேசத் தெரியாமற் பேய்போ லலைகிறண்டி. (14)

ஆங்காரம் விட்டு அருள்வெளியைக் கண்டடுத்து
நீங்காப்பே ரின்ப நிலையறியத் தேடுறண்டி. (15)

சருவம் பிரமமெனத் தான்தெரியுந் தன்மை
மருமங்கா ணாமல் மயங்கித் திரிகிறண்டி. (16)

ஐங்காயக் கோட்டை யதுமெய்யென் றன்பாத
பங்கயம்போற் றாமற் பரதவித்து நிற்குறண்டி. (17)

பச்சைப்பாண் டத்தைப் பலகா லிருக்குமென
நிச்சயமா யெண்ணி நிலைதவறி வாடுறண்டி. (18)

நீரிற் குமிழியைப்போல் நில்லா வுடம்பினைவி
சாரிக்கப் பொய்யென்றே தானறிந்து வாடுறண்டி. (19)

நானென்ற கர்வம் நசித்ததனைச் சுட்டறுத்துத்
தானென்ற பிர்மந் தனையறிய வேண்டுறண்டி. (20)

யோகந் தெரிந்ததன்றன் னுண்மை யறிவதற்குப்
பாகமுண ராமற் பதறி யலைகுறண்டி. (21)

மவுனத்தை யுச்சரித்து மந்திரபீ டத்தேறிக்
கெவுன மறிந்து கிலேசமதை விட்டேனடி. (22)

கற்பஞ்சாப் பிட்டே கனத்ததவஞ் செய்ததினால்
விற்பனனென் றென்பேர் விதித்தார் பெரியோர்கள். (23)

காயசித்தி யோகசித்தி கண்டதனி லொண்டினதால்
மாயசித்தி யாலே மயங்கா திருக்கிறண்டி. (24)

ஓமென்ற அக்கரத்தி னுட்பொருளைக் கண்டுவந்தும்
நாமென்ற ஆணவத்தால் நாட்டம் மறந்தேண்டி. (25)

பிரணவமுந் தானறிந்து பேச்சடங்கி நின்ற
சொருபந் தெரிந்தத் துலக்கத்தில் நிற்குறண்டி. (26)

நந்தி கொலுவிருப்பை நானறிந்து கண்டுகொண்ட
சந்தி தெரிந்து தவியா திருந்தனடி. (27)

அஷ்டகரு மந்தெரிந்தும் ஐவர் நிலையறிந்தும்
இஷ்ட மதிற்சற்று மில்லா திருக்குறண்டி. (28)

நானென்னு மாணவங்கள் நணுகாது நானெனலும்
தானெனலும் அற்றுத் தனியே திரிகுறண்டி. (29)

எட்டாச் சுழிமுனையி லேயிருந்து மென்மனதுக்
கெட்டாப் பொருளதனை யெட்டிப் பிடித்தேண்டி. (30)

சாகாக்கா லின்னதெனத் தானறிந்து கொண்டதற்பின்
வேகாத் தலையும் விரைவி லறிந்தேண்டி. (31)

மோகாந்த காரமெனும் மோகந் தவிர்ந்ததற்பின்
ஏகாந்த மாக இருந்து மகிழ்ந்தனடி. (32)

சரியைகிரி யையோகந் தாண்டியபின் ஞான
புரிக்கோட்டைக் குள்ளே புகுந்து திரிகுறண்டி (33)

மந்திரமுந் தந்திரமும் மாயா விசர்க்கமெலாம்
உந்திரமென் றெண்ணி யுறுதியது கொண்டேண்டி. (34)

சத்தத்தி னுள்ளே சதாசிவத்தைத் தானறிய
உத்தமியே நின்னருளென் றோர்ந்தறிந்து கொண்டேண்டி. (35)

சத்தியநாதரேன்ற ஞானச்சித்தர் பாடல் ௩௫,

முற்றிற்று.

மதுரைவடக்குமாசிவீதி இராமாயணச்சாவடித்தெருவிலிருக்கும் ☞ அஷ்டாங்கயோகி சுந்தரமகாலிங்கசுவாமிக ளிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

ப தி னா று வ து:

சுகப்பிர்மரிஷி திருவாய்மலர்ந்தருளிய

# ஞான சூஸ்திரம் ௩௨.

உச்சிமகா மேருமுடித் தீபமாகி
உண்ணாக்கின மேற்புருவ நடுவதாகிக்
கச்சிபதி நின்றொழுகு மமுதமாகிக்
கலாகாணாச் சின்மயசொ ரூபியாகிப்
பச்சிமத்தின் மேலான திரைகடந்து
பகலிரவு மற்றதல வாசமாகிச்
சச்சிதா னந்தசிற் சத்தியாகித்
தன்மயமா யிலகுபரன் பதங்காப்பொன்றே. (1)

ஒன்றான தாமலா நா லாயிரந்தான்
ஓகோகோ கூடாது வொருவராலே
நன்றான சிகாரமது பிராணவாய்வு
நலபருவ மபானத்தின் பழக்கங்கேளு
குன்றாம லதிலப்பா வைஞ்ஞூறாகக்
கூடொத்து அபானன்றான் கீழேநோக்கும்
வென்றான மும்மலத்தைத் தள்ளுந்தள்ளும்
மேவிநின்ற வகாரமதை விளாந்துபாரே. (2)

பாரப்பா நெஞ்சினுள்ளே நினைவையொட்டிப்
பனிப்புகைபோ லிணைந்தோடும் பத்திப்பாரு
நேரப்பா மேற்கொண்டே வுன்னியாடும்
நிலைப்பாக மயேசுரனில் நின்றுபாரு
சேரப்பா விதுக்குள்ளே நாலைக்கூட்டிச்
செய்தவரா ரென்றாக்காற் புசுண்டர்செய்தார்
காரப்பா நாடோறுங் காத்தாயானால்
கற்பாந்த கோடியுகங் கடிகையாமே. (3)

ஆமென்று அவர்செய்த வகையைக்கேளு
அப்பனே கும்பகந்தா னறுபானுலும்
வாமென்ற பூரகந்தான் பதினாறுகும்
வகையான ரேசகந்தான் முப்பான்ரெண்டும்
ஓமென்று அவரிருந்து பெற்றூர்பேரு
உத்தமனே கற்பகமாம் விருட்சமேலே
காமென்ற காகமென வுருவைக்கொண்டு
கண்டிருந்தார் கோடியுகங் கரைகாணேனே. (4)

காணாத பிர்மாக்கள் கோடிகண்டார்
கரையற்ற விஷ்ணுமயங் தனைக்கண்ணுற்றார்
பூணாத சங்கரனாக் கோடிகண்டார்
போக்காக மயேசுரனைத் தாண்டிநின்றூர்
தோணாத சதாசிவன்று ணெடுங்கிச்சத்தி
தொலையாத நாதவிந்து வோர்மையாகிக்
கோணாத சிவனுஞ்சிற் பரையிற்சேர்ந்து
குணங்கடந்து பூரணத்தி லடங்கினுரே. (5)

அடங்குமந்த அவ்வதனைத் தொட்டுயேறி
அகண்டத்திற் சுழுத்தியெனச் சினந்துநின்றூர்
படங்கவிந்த்ர ஜாலவித்தை போற்றன்மாயி
பாரப்பா க்ஷணப்பொழுதி லங்குவந்து
நிடங்கரிச மெனவிரித்தாள் கூடாரத்தை
நிமிஷத்தி லண்டமெல்லாம் நிறைந்துபோச்சு
மூடங்கவிதை வேனுமென்றால் முடக்கவல்லால்
முத்திக்கு வித்தான முத்தித்தாயே. (6)

முத்தியிலே நின்றுவந்த புசுண்டமூர்த்தி
முன்போலே கற்பகமே ஆவாவென்றூர்
பத்தியிலே அவள்போற்கூடாரம்போட்டார்
பார்க்கையிலே கூட்டோடே வருஷமாச்சு
அத்தியிலே நின்றுனாத்த சித்தைப்போல
ஐயரந்தக் கூட்டுக்குள் ளமர்ந்தாரப்பா
சுத்தியிலே யூடுருவும் பூவைப்போலே
கண்டத்தே நின்றுனாத்துக் கருதினுரே. (7)

கருதியதோர் புசுண்டருட பிறப்பைக்கேளு
கலந்துமது வுண்டன்னங் களிக்கும்போது
பருதிமுதற் சோமனையுந் தரித்தயீசன்
பார்வதியுஞ் சென்றங்கு பார்க்குங்காலை
பொருதியென்ற ஜீவகலை காகந்தாகம்
போற்றழைய அன்னமங்கே நிறைந்தகெற்பம்
தருதியென விருபானே டொன்றும்பிள்ளை
தன்னுக்குள் ளிவரொருவர் தானுங்காணே. (8)

காணப்பா இருபதுபேர் கர்மத்தாலே
காசினியிற் கைகடந்து போனாரப்பா
பூணப்பா யிவரெடுத்தார் பிராணாயாமம்
பொற்பூவும் வாசனையும் போலேயாச்சு
ஆணப்பா பிறந்ததென்றால் எல்லாந்தானே
அவர்போலே பேருபெற வெவராலாகும்
ஊணப்பா மூந்திமூந்தி மூலயோகம்
உத்தமனே கண்டபின்பு நெஞ்சிற்பாரே. (9)

நெஞ்சிலே நின்றதுதான் மூலம்பார்த்து
நேராக வந்ததென்றார் புசுண்டமூர்த்தி
பஞ்சிலே பொறிப்பட்டாப் போலேயேறும்
பார்த்தேறுங் கொங்கணரே யென்றுரையா
குஞ்சிலே குயிலின்கா லொடிந்துபோனாற்
கூடாது இனத்தோடக் கொள்கைபோல
அஞ்சிலே மூலத்மேதே கூடாவிட்டால்
அரிதரிது பிராணனென்று ணாயர்தானே. (10)

ஐயரன்று சொன்னமொழி கேட்டுப்பொங்கி
அடிதொழுது சரணமென வீழ்ந்தேன்யானும்
ஐயரன்று சுகப்பிரம அப்பாயென்றும்
அழியாது வாழ்வாயென் றனுக்ரகித்தார்
ஐயரன்று சொன்னதென்ன மூலமாதி
அதுகண்டு பிராணனைத்தா னறியவேணும்
ஐயரன்று இருக்கையுமே ருவுக்குத்தெற்கே
அவருடைய ஆட்டமெல்லாந் திருசினுட்டே. (11)

ஆட்டுவதும் அழிப்பதுவும் படைப்பதுந்தான்
அசைவற்ற சிவயோகத் தாண்மையப்பா
மூட்டுவதும் முடிப்பதும்பின் படைக்கச்செய்யும்
மூதண்ட கிமிளைபட்ட தருசுவெள்ளை
கூட்டுவதுங் குறைப்பதுவு மாகச்சேர்த்துக்
கொள்ளாத பூரணத்தே குமட்டுஞ்சேதம்
நீட்டுவதும் அலைப்பதுடன் நடக்கப்பண்ணும்
நேரான தருசினுட குளிகைதானே. (12)

குளிகையென்ற பெருமைக்கொப் புவமைகேளு
கூர்ந்துநின்ற பெரியோர்கள் மனந்தானப்பா
களிகையென்ற தருசுக்குத் தேவியொப்பு
கணக்கடங்கா மவுனமுத்தி மூலம்பாரு
இளிகையென்று விட்டாக்கா லெடுத்துப்போடும்
இறக்கிறதும் பிறக்கிறதுங் கொண்டுமூலம்
தளிகைநன்று யென்றுக்கால் மூலம்போக்கு
தாணிழியாப் பதிவேண்டில் மூலம்பாரே. (13)

மூலமென்ற பொருளாலே யோகம்சித்தி
மூட்டுகிற மனத்தாலே ஞானஞ்சித்தி
கோலமென்ற லெட்சயத்தால் வாசிசித்தி
கூறாத மவுனத்தால் புலன்கள்சித்தி
ஓலமென்ற கண்டத்தால் ஆத்தாள்சித்தி
உத்துப்பா ரிதைக்கொண்டு எட்டுஞ்சித்தி
ஆலமுண்ட கண்டர்சித்தி மையம்பார்த்தால்
ஆகாகா வாதசித்தி தருசுபாரே. (14)

பாரப்பா வாதத்தில் ஞானநூலைப்
பதிப்பானே னென்றுக்காற் பலனைக்கேளு
நேரப்பா வாதஞ்சா தகமாய்ப்பண்ணி
நிலையான குளிகையிட்டு ஞானங்காண
வேரப்பா வாதமது ஞானத்துக்கும்
மேன்மையாய்ச் சித்தரெலாம் விளங்கினார்கள்
ஆரப்பா யெனைப்போலே வெளியாய்ச்சொல்வார்
ஆனதாற் சுகப்பிரம ராகினாலே (15)

ஆதியென்ற மூலகுரு தர்மத்தாலே
அநேகம்பேர் பிழைத்தார்கள் அவர்கட்குள்ளே
வாதியென்ற அடியார்க்கு மடியேன்யான்தான்
வகையாகச் சொல்லிவந்தேன் வாதஞானம்
ஓதியதோ ரென்னூலைப் பார்த்தோன்முத்தன்
உத்தமனே உங்கட்காஞ் சித்தர்க்காகும்
பேதியென்ற துன்மார்க்கர்க் கெய்துமானால்
பிழைக்கறியா ருலகத்திற் பிரளுவாரே. (16)

பிரளுவா ரவ்வாதம் பிறகேயெய்தும்
பேரான வாதத்திற் பெண்ணைக்கூடிற்
பிரளுவா ருலகத்தே சலனப்பட்டு
பீயுண்ண நாய்போலே பேயாய்ப்போவார்
பிரளுவார் தீனியினாற் காயங்கட்டார்
பிரமைகொண்டு சிற்றின்பப் பேயுமாவார்
பிரளுவா ருலகத்தே மக்காள்நீங்கள்
பிரிவான அஷ்டாங்கம் பேணிப்பாரே. (17)

பேணியதோர் வாதத்தில் நிகளபந்தம்
பெரியதொரு கட்டான பேரைச்சொல்வேன்
ஆணியதோர் கட்டுகின்ற சாரம்ரெண்டு
அப்பனே துருசுயென்ற சுண்ணம்ரெண்டு
ஊணியதோர் வெங்காரச் சுண்ணமொன்று
உத்தமனே இந்துப்புப் பலந்தான்ரெண்டு
ஏணியதோ ரெருக்கம்பால் சேரையொன்று
இயல்புசது ரக்கள்ளி சேரையொன்றே. (18)

ஒன்றாகப் பலமொன்று புரசம்வித்து
உத்தமனே குங்கிலியப் பலந்தானொன்று
நின்றாகக் கல்வத்தி லிடித்துக்கூட்டி
நிலைபெறவே மெழுகாக வைத்துக்கொண்டு
குன்றாக ரெண்டுபல மெழுகைவாங்கிக்
கொண்டதிலே பலயாறு சூதம்வாரு
நன்றாக மேல்மூடிப் புடத்தைப்போட்டு
நாட்டிவைத்து நாற்சாமந் தீயைமூட்டே. (19)

சூட்டினதை யாரவிட்டு யெடுத்துப்பாரு
முந்துப்போல் வெளுப்போடு கறுப்பாய்நிற்கும்
ஆட்டினதைக் காரமிட்டு உருக்கிலப்பா
அடவாகக் குகைபோலே வாருவாரு
நீட்டியிந்தக் குகைக்குள்ளே ரசத்தைவாரு
நினவாக வெதுப்பையிலே சூதங்கட்டும்
சூட்டியிந்தச் சூதந்தான் குருவுமாகும்
பொன்முதலாய் நவலோகம் பொருமிநீரே. (20)

நீராகச் சொல்லுகிறேன் வரிசைகேளு
நிறையான தங்கமது நாலுக்குள்ளே
வீராக இச்சூத மொன்றுபோட்டு
வெருவியொரு மணியாக வாங்கிக்கொண்டு
தாராக வீரமொடு துருசுவெள்ளை
தணிநாலுக் கொன்றப்பா மணிமேற்பூசி
கூராகச் சுண்ணமஞ்சு குகையில் வைத்துக்
குறிப்பாகச் சீலைசெய்து புடத்தைப்போடே. (21)

போட்டுடனே தங்கமது குருவேயாகும்
புகழான சரக்கெல்லாம் பிரண்டுசாகும்
நீட்டுடனே நவலோகப் பொன்னுமாகும்
நிலையான வுபசரங்கள் நீறிப்போகும்
கூட்டுடனே இக்குருவாற் சூதங்கட்டும்
கொள்கிடவே நூறுதொந்தஞ் சூதமேறும்
ஆட்டிடவே இக்குருதான் நல்லாளாக்கம்
ஆகுமென்ற முக்கரைச்சி யாட்டுத்தானே. (22)

தானென்ற வெள்ளியப்பா நாலுக்குள்ளே
தாக்கியிந்தச் சூதமொன்று மணியாய்வாங்கு
வானென்ற வீரமொடு துருசுநீறும்
வாகாக நாலிலொன்றை மணிக்குப்பூசி
தேனென்ற அஞ்சுசுண்ணக் குகையில்வைத்துச்
சிறக்கவொரு புடம்போட்டு ரசிதச்சுண்ணம்
வேனென்ற வங்கமைஞ் ஞூற்றைக்கூட்டு
வெள்ளியப்பா பதினாறு விரைந்தமாத்தே. (23)

மாத்தாக வெள்ளியுமாம் நவலோகங்கள்
　　மாட்டுகிற முறையறிந்து மாட்டுமாட்டு
எத்தாக இக்குருவைச் சூதத்தோடே
　　என்னசொல்வேன் வெள்ளியப்பா யிருபத்தஞ்சு
கூத்தாகக் களிமண்ணிற் குருவைக்கூட்டிக்
　　குகைபோலே பிடித்துவைப்பாய் மூசையாக
ஆத்தாக மூசையிலே நவலோகத்தை
　　ஆட்டிடவே வெள்ளியுமா மறிந்துபாரே. (24)

பாரேதான் சிவயோக ஞானம்பாரு
　　பாலகனே சொல்லுகிறேன் உண்மைதன்னை
நேரேதான் நவ்வெழுத்தின் மேலேமைந்தா
　　நேர்த்தியுடன் மவ்வெழுத்தாம் சிகரந்தோணும்
தேரேதான் நவ்வெழுத்தின் மேலேசென்றால்
　　தெரிந்ததொரு மவ்வெழுத்தின் கீழதாகச்
சீரேதான் சிவாலயமும் நதியுமுண்டு
　　சிறப்புடனே அவ்விடத்திற் கண்டுதேறே. (25)

அவ்விடத்திற் சேர்ந்தந்த நதியில்மூழ்கி
　　அழகான சிவாலயத்தைப் பூசைபண்ணி
பவ்வியமாய்ப் பூரணத்தின் கீழதாகப்
　　பரிவான சிவாலயங்க ளநேகமுண்டு
மவ்வியமாம் அநாகதமாம் மயிர்ப்பாலத்தில்
　　மகிழ்வுடனே சிவாலயங்க ளதிகமுண்டு
நவ்வியமாய் வாசிமலர் தனையெடுத்து
　　நாதாந்தச் சிவாலயத்தை நன்றாய்ப்போற்றே. (26)

போற்றுதற்கு அப்பனே பலத்தைக்கேளு
　　புகழ்பெரிய அட்டாங்க யோகம்வேணும்
தேற்றியே அட்டாங்கஞ் சித்தியானால்
　　சிவஞான சிவயோகம் நினைவிற்றோன்றும்
ஊற்றமுள்ள சிவயோகம் நினைத்தபோதே
　　இன்பமாய்க் குருபரனும் பதிவாய்வந்தே
ஆற்றலுடன் சிவராஜ யோகங்காட்டி
　　அன்புடனே பூசைவகை நல்குவாரே. (27)

நல்லதொரு பரமகுரு வந்ததாலே
நலமுள்ள சரியைவழி மார்க்கந்தோணும்
மெல்லவே சரியைவழி கடந்தாயானால்
விபரமதாய்க் கிரியைவழி விரைவிற்றோன்றும்
வல்லதொரு கிரியைவழி கண்டபின்பு
மைந்தனே யோகவழி தெளிவாய்த்தோணும்
செல்லவொரு யோகவழி கடந்தாயானால்
திறமையுள ஞானவழி தெரியும்பாரே. (28)

தெரியாத ஞானவழி கண்டபின்பு
சித்தமது ஏகாந்த வழியில்நில்லு
அரிதான ஆதார மூலந்தன்னில்
அன்பான அக்கினிதன் னுவிதன்னை
விரியாமல் முக்கோணச் சுவரில்நின்று
மேலான வாசிதனை மேலேயேத்திச்
சரியான படிசொந்த மனையைக்கண்டு
சங்கையுடன் தானிருந்து தன்னைக்காணே. (29)

தன்னைத்தான் கண்டுமேல் வழியைப்பார்த்துத்
தானறிந்து அவ்வழியிற் கலந்துமேவி
இன்னதென நிராதாரஞ் சித்தமாகி
இனிமையுடன் பூரணமாய் நின்றதாலே
முன்னமே சிவனயன்மால் பூசைசெய்து
முடிவான தீவினைக ளிரண்டுமற்று
என்னவே பிரபஞ்சத் தாசையற்று
இனிமையுள்ள சோதியிலே புகுந்துபாரே. (30)

பார்த்தவுடன் மனமகிழ்வு மிகவுண்டாகும்
பகரரிய இறப்பிறப்பை மாற்றிவைக்கும்
நேர்த்தியதாய்ச் சோதியுடன் சேர்ந்துவாழ்வாய்
நேர்மையுள்ள பூரணத்தின் கிருபையாலே
சீர்த்தியுடன் மனமொத்துப் பார்க்கவேண்டும்
சிறப்பான உண்மைநிலை தெரியவேண்டும்
சேர்த்ததொரு ஞானநிலை கண்டுகொண்டால்
தேறுதலாய் சாயுஜ்ய பதங்காண்பாயே. (31)

ஆயேநீ காயசித்தி செய்துநீயும்
　　அறிவுடனே உலகத்திற் சஞ்சரித்தால்
நேயமுடன் ஆணுவத்தை விட்டுமைந்தா
　　நேர்மையுடன் தானிருந்தாற் சித்தனுவாய்
காயமதை அழியாமற் செய்வதற்குக்
　　கருத்தான சிவயோகங் கண்டுதேறு
மாயமுள வாழ்வதனை மறந்துபோடு
　　மைந்தனே ஞானமதின் வழியில்நில்லே. (32)

சுகப்பிர்மரிஷி ஞான சூஸ்திரம் ௩௨

முற்றிற்று.

பழனி யாதவாள் மடாதிபதி நாச்சிமுத்துச்சுவாமி யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

முருகன் துணை.

பதினேழாவது:

கூர்மானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# மவுன ஞானம் ரு.

சிறந்தமய மானசிவ சோதிபாதம்
　　சீர்பெறவே யென்நாளும் புவியின்மீது
நிறந்தரமாய் நின்றவொரு ஆயிதன்னை
　　நேத்திரமும் மூக்குமத்தி நினைவாய்ப்பார்த்து
பிறந்ததொரு ஆகாசம் பூமிலோகம்
　　பிசகாம லடுக்கடுக்காய் வரைகள்காண
மறமலிமா முகத்தோன்றன் பாதந்தன்னை
　　மனதுள்வைத்து யென்நாளும் வணங்கினேனே. (1)

வணங்கினேன் மக்களுக்குப் புத்திசொன்னேன்
　　மாயையொடு பொய்கோபம் மூன்றுந்தள்ளி
இணங்கினேன் மனிதரொடு வாய்பேசாமல்
　　என்மகனே வேதாந்தத் துறையினின்று
பணிந்திட்டேன் பூரணத்தை நோக்கிக்கொண்டு
　　பராபரையைப் பூசித்துப் பானம்பண்ணி
குணங்கிடா ஆறுவரை யூணியேறி
　　குணமான ஆனந்த அறிவில்நில்லே. (2)

நில்லேநீ யிருந்தாடக் குறியைக்கேளு
　　நேர்மையுள்ள மூன்றெழுத்தின் குணத்தைக்கேளு
வல்லபங்கள் வேண்டாங்காண் அங்கென்றாணி
　　வமட்டியே வுட்கொள்ள அடங்கும்வாசி
அல்லலாய் அலையாதே சிங்கென்றேதான்
　　அறிந்துவிடு சிவசூட்ச மறியலாகும்
நல்லதடா மங்கென்ற வெழுத்தைநாட்ட
　　ஞானமுடன் யோகசித்தி நடத்தும்பாரே. (3)

நடத்துமடா மகாரத்தை விடுதலாகும்
 நலமான சிகாரத்தை வாங்கலாகும்
இடமாக விங்கதுவே அடுக்கடுக்காய்
 எல்லோர்க்குஞ் சொல்லிவிட்டே னிதமாய்க்கேளு
திடமான தீட்சையடா மௌனவாலை
 சிறுபிள்ளை செய்தாலுஞ் சித்தியாகும்
தடமான குமரியடா ஆத்தாள்சொன்னாள்
 சாபங்கள் நிவர்த்தியடா விதுகண்டோர்க்கே. (4)

கண்டவர்க்கு ஓரெழுத்து இதனுக்குள்ளே
 கனமான மூன்றெழுத்து மிதனுக்குள்ளே
கண்டதொரு அஞ்செழுத்து மிதனுக்குள்ளே
 காயசித்தி யோகசித்தி யிதனுக்குள்ளே
மூண்டான முப்பத்திரண்டுதீட்சை
 மோகனமுந் தம்பனமு மிதனுக்குள்ளே
பண்டைமறை சாபங்க ளிதனுக்குள்ளே
 பராபரையுஞ் சிவனுமையும் பாதமுற்றே. (5)

கூர்மானந்தர் மவுனஞானம் ரு.

முற்றிற்று.

மதுரை மேலச்சித்திரவீதி வளவிக்காரத்தெரு பெருமாள்செட்டியார் குமாரர், பெருமாள்செட்டியாரிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

பதினெட்டாவது:

கூர்மானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# ஞான சூஸ்திரம் ருய.

திருந்துமதி முகத்தாளென் தாயார்பாதம்
சிந்தையுற்று யானைமுகன் பாதம்போற்றி
பொருந்துகின்ற சனகாதி ரிஷிகள்பாதம்
போற்றிசெய்து காலாங்கி பாதம்போற்றி
அருந்தவஞ்செய் தெட்சணஞ்சின் மயமாந்தேவர்
அடிதொழுது சூத்திரமா மைம்பதுக்குள்
மருந்தினல் வாதமொடு யோகஞானம்
வகையாகச் சொல்லுகிறேன் மனதுதானே. (1)

மனதுசெய மானுக்கால் வருமெய்ஞ்ஞானம்
வாதமென்ன யோகமென்ன ரெண்டுமொன்று
தனதுபண்ணிக் கொள்ளவுமே சித்தர்தன்னுற்
சகலசித்தும் கைவசமாய்த் தானேயாகும்
தினையளவு கற்பமறிந் துண்ணவேணும்
தேகசித்தி யாவதற்குத் திறமையுண்டாம்
கனதையுள்ள சீடருக்கு யெய்துமிந்நூல்
கனமான யோகநிஷ்டை காட்டுவேனே. (2)

காட்டுகிறே னஷ்டாங்க யோகமெல்லாம்
கண்டித்துச் சொல்லாமற் சித்தர்சொன்னூர்
தீட்டுகிறேன் பலபல்வா யோகமெல்லாம்
செடம்நிலைக்க மாட்டாது சிதறிப்போகும்
ஊட்டுகிறேன் மவுனமென்ற யோகத்தாலே
உறுதிபண்ணிக் கொள்ளலாம் மூலத்தீயால்
வீட்டிலே யேத்திவைத்தாற் பிரகாசிக்கும்
வெளியேறி னுற்றீபம் மெலிந்துபோமே. (3)

மெலியாமற் சுழிமுனையி னூடேதாக்கு
    மேற்குகையின் வாசல்கும் பகமேசெய்யச்
சலியாமற் சிகாரவகா ரத்திலூட்டச்
    சந்திரமண் டலமுரசு தாரையோடும்
கலியேது கர்மவினை தானுமேது
    கண்டமடித் துண்ணுக்கி லேற்றும்போது
வலுவான பிராணனுக்கு அசைவங்கேது
    மாபாத கங்களெல்லாம் மாறுந்தானே. (4)

மாறுத வாழ்வல்லோ வாசியோகம்
    மவுனசித்தி வாய்த்தாக்கால் வருமெய்ஞ்ஞானம்
கூறுத மெய்ஞ்ஞானம் வாய்த்துதானுற்
    கோடிவிதி மாண்டாலுங் குறைவொன்றில்லை
மோன திரிகோண மூலத்தீயை
    மேலேற்றிச் சகஸ்திரியாள் பானமோடு
தேராத பேர்க்கானு லென்ன செய்வோஞ்
    சிவயோக வாழ்க்கையல்லோ திரமென்றுரே. (5)

திரமான மேல்மூலம் பாதைமார்க்கம்
    செப்பாமற் போனூர்கள் சித்தரெல்லாம்
வரமான நடுமூலம் கண்டத்தூணி
    வாயுதனை யாகாச வட்டஞ்சேர்த்துப்
பிரமான வாசலொன் பதையும்பூட்டிப்
    பிடரிவழி கண்திறந்து பூரணத்திற்
பரமான போதமுன்னைத் தூக்கிக்கொண்டு
    பந்தமத்த யோகமதைப் பழக்கம்பண்ணே. (6)

பழக்கமல்லோ மூந்திமுந்தி மூலாதாரம்
    பழகியபின் மேன்மூலம் பார்க்கவேணும்
பிழைக்கவென்றுற் சுழிமுனையை யடுத்தேவன்னி
    பிங்கலைதா னுதித்தன் காந்தியாச்சு
துழைக்கருகே யிடைகலையே சந்திரபீசம்
    சூரியனு மக்கினியுஞ் சோமன்மூன்றும்
மழைக்குடைப்பின் கலைரெண்டுஞ் சுழியிற்கூடு
    மத்திசத்தில் நிற்குமட் சரமுந்தானே. (7)

அட்சரத்தின் போக்கறியாத் தோஷத்தாலே
அப்பனே மவுனங்கை பலியாதையா
மிச்சமென்ற அசவைமணி கீழேநின்று
வேரறுக்க மாட்டாத வீணரெல்லாம்
அட்சரத்தால் மவுனமென்பா ரறியமாட்டார்
அந்தரங்கஞ் சொல்லுகிறே னடியேனுக்குப்
பச்சணத்தைக் கொண்டுவரக் கற்பதேகம்
பாதியோ பரமானம் பாலுமாமே. (8)

பாலாகும் பழமாகும் சீனியாகும்
பனைவெல்ல மானாலும் பத்தவேணும்
மேலான பச்சரிசிப் பயறுமாகும்
மிளகுசீ ரகமாகும் வெண்ணீராகும்
மாலாக விப்படியே வாங்கியுண்டு
மாண்டிறந்து போனவர்கள் கோடாகோடி
காலான மவுனத்தைப் பெற்றபேர்கள்
கருத்தினா லறிவார்கள் கடினந்தானே. (9)

கடினமென்று தள்ளாதே மவுனயோகம்
கண்மூக்கு மத்தியிலே கருதிப்பாரு
துடியிருந்த சுழிமுனையி னூடுதாக்கு
சூரியனுஞ் சந்திரனு மொன்றாய்ப்போகும்
குடியிருப்புச் சக்கரத்தின் கோட்டையாச்சு
கோடிகற்ப காலயுகம் வாழ்வதாச்சு
நொடிநிமைக்கு நேரமல்லோ பிரமன்வாழ்க்கை
நுண்ணிமையாய்ப் பார்த்திருந்து நடங்குவாயே. (10)

நடங்கினாற் பூரணமாஞ் சுழினையுள்ளே
நுழைந்தேறி யாகாசப் பதியினின்று
துடங்கின விதுவல்லோ மவுனவாழ்க்கை
துருவமென்ற சூட்சமதிற் சொக்கிப்போகும்
அடங்கினாற் பின்னுமந்தப் படிசிருட்டி
ஆக்கலாங் கருமானு பவத்தைவெட்டித்
திடங்கொள்ளு மிப்படியே மவுனமாகச்
சித்தர்வந்து ரகசியங்கள் செப்புவாரே. (11)

செப்புகிறேன் ரேசகபூ ரகமாங்கும்பம்
திடப்படவே காலொன்றுக் கிருநேரந்தான்
தப்பிதங்கள் வாராம லெழுத்தைச்சேர்த்துச்
சாதித்தால் மவுனவித்தைக் காதாரந்தான்
இப்படியே தீட்சையெனு மேணிவைத்து
ஏறினார் சித்தரெல்லா மண்டத்துள்ளே
எப்போதும் பூரணத்தி லிருந்துகொண்டு
ஏகாந்த வஸ்துவைநீ யெடுத்துமுண்ணே. (12)

உண்ணையிலே கர்மவினை யோடிப்போச்சு
உற்றதீ பாக்கினியு மற்றுப்போச்சு
பெண்ணையனு சரித்தாலும் விடையமார்க்கம்
பிறவியிலே நோக்காது பேதியாது
மண்ணிலெழு பிறப்பாகும் வண்ணுனுப்பு
வானிலிருந் தக்கினியாய் வந்தவுப்பு
தண்ணீயிலே பிறந்தவுப்பு தீட்சைநீரு
சமுசியங்க லில்லாமற் றணதுமாமே. (13)

தனதாகச் சிவயோகம் பண்ணவேண்டி
தருகாமல் பானமலந் தள்ளியேகும்
மனதான பேய்க்குரங்கு ஐந்துகொம்பில்
மாளாமற் கேசரத்தில் மாட்டிக்கொண்டு
தினமூன்று ரேசகபூ ரகமேபண்ணித்
தேறிதகை யாறிக்கும் பகமேசெய்யக்
கனலேறும் படிதானே ஆயிரத்தெண்
கலைமதிபா லுண்டுயனக் கவலைதீரே. (14)

கவலையற்ற விடமல்லோ பிரமக்யானம்
கலைமதிபா லுண்டதல்லோ காயகற்பம்
கெவுனமிட்டுப் பாய்வதல்லோ குளிகைமார்க்கம்
கெணபதியைக் காண்பதல்லோ தீட்சைமூலம்
சிவனுடைய வுப்பறிந்தால் வேதையோட்டம்
தேகமழி யாதிருந்தால் யோகஞ்ஞானம்
புவனவிளை யாட்டல்லோ சித்தராட்டம்
பூரணத்தைக் கண்டவரைப் பூசைபண்ணே. (15)

பூசையிலே மெத்தநன்று மூலாதாரம்
பூசித்தாற் கேசரத்தி லாயிபூசை
ஆசையற்ற ஆசையல்லோ குருவின்பூசை
அறியாம லுலகத்தோ ராசைபூண்டு
காசினியிற் கோவிலென்றுந் தீர்த்தமென்றும்
கற்றவர்கள் கட்டியவக் ராரமென்றும்
பாசையினாற் பேசியபுத் தகங்களென்றும்
பலபலவாய்ப் பூசைகளைப் பண்ணுவாரே. (16)

பண்ணுவது பிரணவத்தின் மகிமையாலே
பரிதிமதி ரெண்டையுமே பாழ்போகாமல்
விண்ணிலே கட்டிவைப்பார் வாசிதன்னை
மேலேற்றிப் பூரணமாம் வெளியைக்காண்பார்
கண்ணிலே கண்டநெருப் பல்லோவீசன்
காரணத்தைப் பெற்றதல்லோ பூசைமார்க்கம்
புண்ணியமே செய்தவர்க்கு யெட்டுமெட்டும்
பொய்யான துரோகிக்குப் பொய்யாமென்னே. (17)

பொய்யாமற் சொல்லுகிறேன் பூசைமார்க்கம்
போகாமற் பதினாறிற் பொறிசெல்லாமல்
மெய்யாகப் பனிரெண்டி லிருத்தியூது
மேலாங்கே சரத்திற்கும் பகமேசெய்யத்
தொய்யாமல் நாளுக்கு நாளாயிந்தச்
சோடசத்தி னல்வன்னிச் சுடர்களிட்டு
ஐயையோ வமுதமது குமிழிபாயும்
அரகரா பிரமன்விதி யதனைத்தாண்டே. (18)

விதிதாண்ட வேணுமென்றால் மதிபாலுண்ணு
விமலனுட பாதமதை மெய்யாய்ப்பாரு
கெதிகாண வேணுமென்று லண்டத்துள்ளே
கிட்டினாற் சாயுட்சியங் கிடைக்குமப்பா
பதிகாண வேணுமென்றால் வாலைதேவி
பராபரையைப் பூசித்துப் பண்பாய்ப்பாரு
நிதிகாண வேணுமென்று லுவரடுக்க
நிறைவுப்பைக் கண்டெடுத்து நீட்டிப்பாரே. (19)

பாரப்பா பூமியிலே தலங்களுண்டு
பண்பான மலைச்சார்வு மெத்தநன்று
கூரப்பா காசிக்கு வடமேல்மூலை
கூசாம லாறுயோ சனைதூரத்தில்
நீரப்பா வவ்விடத்திற் பாறையுண்டு
நெடுநாளைக் குடியிருப்புத் திடலோரத்தில்
சேரப்பா வதில்விளையும் பூமிநாதம்
தேவியென்றும் யீசனென்றுஞ் செப்பலாமே. (20)

செப்புகிறேன் காசிக்குத் தெற்கதாகச்
செயநகர மென்றுசொலுந் தலந்தானுண்டு
அப்புகிறேன் அவ்விடத்திற் பூமிநாதம்
அதில்விளையு மரனுமங்கே யருகிருப்பார்
ஒப்புகிறேன் தெளிவுதிருப் பதியாமென்று
ஒருமலைதா னேழுமலை யென்றுரைப்பார்
துப்புகிறே னதின்மேற்குப் பதின்காதத்துள்
சோதிபோற் பூவழலை தோணும்பாரே. (21)

தோணுமங்கத் தேவியுட நகரமுண்டு
சொல்லுகிறேன் தினந்தோறுஞ் சோழதேசம்
வேணுமந்த ஸ்ரீரங்கம் வடமேல்மூலை
வீரான வைங்காத மேலேசென்றால்
ஆணுசில விடங்களிலே பூமிநாதம்
அவ்விடத்தி லரனிருப்பா ரதற்குத்தெற்கு
கோணமிலை பாண்டியனார் தேசந்தன்னிற்
கோனிருந்த நகரமல்லோ கூடல்தானே. (22)

கூடலுக்குக் கீழ்மூலை மறவர்நாட்டிற்
குணமான தலமொன்று விசாலமெத்த
நாடதுக்குட் பூநாதம் விளையும்பூமி
நன்றாக வீசனுமோ குடியிருப்பார்
ஆடவர்கோன் கன்னியா குமரிமேற்கு
ஐம்பதுநா ழிகைவழியிற் றலமொன்றுண்டு
தேடியதோ ரவிடத்திற் பூமிநாதம்
தேவியுடன் சிவனிருப்பார் செய்திகேளே. (23)

கேளப்பா பொதிகைமலைச் சார்புதன்னிற்
    கிருபையுள்ள நாலாறு தலங்களுண்டு
நாளப்பா தேவியுப்பு மீசனுப்பு
    கலமாகக் காணலாம் பயமில்லாமல்
வேளப்பா விப்படியே பூமிதோறும்
    வெகுவிதமாய் நாதமது விளையும்பூமி
நீளப்பா கோடான கோடியுண்டு
    நிலம்பார்த்து வுப்பெடுத்தால் நிசங்கள்தானே. (24)

தானென்ற பூமியிலே யின்னமுண்டு
    தலமறிந்து சொல்லவென்றாற் சோலிமெத்த
தேனென்ற தேசத்திற் பூமிநாதம்
    தெரிந்தெடுப்பார் சித்தரெலாஞ் சிவனைக்காண்பார்
கோனென்ற பூநீற்றின் பெருமைசொல்வேன்
    கூர்ந்துபா ரதுநேர்மை வெள்ளையாகும்
வேனென்ற சித்திரையிற் கதிருபோல
    விளையுமடா சந்திரன்றன் விந்துநீரே. (25)

நீரான தேங்காயைத் திருகினாற்போல்
    நிலத்திலே பொதிந்திருக்கும் நெடுமாலென்பார்
சாரான மாதவிடாய்க் குருதியென்பார்
    சத்தியென்றும் பரமென்றுங் கூறுவார்கள்
பேரான வுவரென்றும் வண்ணானென்றும்
    பிண்டமென்றுஞ் சந்திரனார் பீசமென்றும்
தூரான மூலமென்றும் புளிதானென்றும்
    சுத்திசிவ கூர்மனென்றுஞ் சொல்லுவாரே. (26)

சொல்லுவார் வித்தென்றுஞ் சாரமென்றும்
    சுந்தரியாள் சுட்டதென்று மனந்தானென்றும்
மல்லுவார் சாகாத கால்தானென்றும்
    மழலையென்று மாயிக்கு வகுப்பார்நாமம்
நல்லுவா ரீசனுக்கு நாமரூபம்
    ஞானியென்றும் அங்கியென்றும் நஞ்சாமென்றும்
வெல்லுவார் வெள்ளைக்கற் சுண்ணம்மென்றும்
    வீரமென்றும் விந்தென்றும் விளம்புவாரே. (27)

விளம்புவார் சமாதியுப்பு நிலவுப்பென்றும்
வேகாத தலையென்றும் வெடிதானென்றும்
களங்கமில்லா வாகாசக் கம்பியென்றும்
கதிரென்றுங் கருவென்றுங் காரமென்றும்
முளங்கியதோர் இருடியென்றுஞ் சுழிதானென்றும்
முத்துபோல் நிறமென்றும் மோனமென்றும்
உளங்குளிரச் சொல்லுவா ராதியென்றும்
உண்மையென்றும் வஸ்துவென்றும் ஓதும்நூலே. (28)

ஓதுமே ஆயியுட பூமிநாதம்
உத்தநிலங் கசிந்திருக்குங் கசிவுகொண்டு
ஏதேனும் விளையாது புற்பத்தாது
இந்தநில மாயிக்கு மூகந்தவீடு
ஆதரவாய்த் தேவியைவிட் டகலாமற்றான்
அடுக்கவே குடியிருப்பா ரவனுமையா
வாதநூ லாயிரத்திற் சொன்னேனிந்த
வகையெல்லாங் கண்டறிந்து வாதம்பாரே. (29)

வாதமென்றா லுப்புவகை யறியவேணும்
வாய்ப்பேச்சி னால்வருமோ ரசவாதந்தான்
வேதமென்றா லறிவுகொண்டு நிலைக்கவேணும்
வீணாகப் பேசினால் வருமோஞானம்
காதமென்றால் வழிநடந்து தொலைக்கவேணும்
கண்மூடி யிருந்துவிட்டால் நடப்பங்கேது
நாதமென்றால் வாசிகொண்டு வூதவேணும்
நாய்போலே திரிந்தாக்கால் நலமாகாதே. (30)

நலமான வாச்சியுட நாதந்தானே
நல்லதண்ணீர் பட்டாக்காற் சிவந்துபோகும்
மலையாமல் மஞ்சள்பட்டால் ரத்தமாகும்
மயக்கமில்லை தேவியுட நாதமாச்சு
குலமறியாச் சண்டாள ருலகத்துள்ளே
கோதையுட யோனியிலே வடிந்தரத்தம்
பிலமான வாதத்துக் காதியென்றும்
பேசுவார் வீணரெல்லாம் பேசுவாரே. (31)

பேசுவார் பூநீரே சாரஞ்சாரம்
பெலமான வீசனுப்பே காரங்காரம்
கூசாமல் ரெண்டுக்கு நிலமேதெய்வம்
குடியிருப்பு வோரிடத்திற் குறித்துப்பார்க்கத்
தேசமெல்லாம் போனாலுந் தெரியாதப்பா
சிவயோக வாழ்க்கைவந்தாற் சித்தியாகும்
வீசுவா ருப்பறிந்தோ மென்றுசொல்லி
மிலேச்சர்களைத் தேடாதே குருவைத்தேடே. (32)

குருமுடிக்குங் காலமல்லோ மீனமேஷம்
கொண்டாட்ட மாகவேதான் குறித்துச்சொன்னார்
கருவெடுக்குங் காலத்தைப் பிரித்துச்சொல்லிக்
காட்டாமற் சூத்திரங்கள் காட்டிப்போட்டார்
பொருள்முடிக்கப் போறதெங்கே வுப்பில்லாமற்
பூநீற்றை மாத்திரமே பொசுக்கியென்ன
இருவகைக்கு மதிபுகுநாள் முன்னும்பின்னும்
எட்டுரெண்டா மாதமறிந் தெடுத்துக்கொள்ளே. (33)

எடுத்தாக்காற் றீட்சைக்கு ஆதியென்ன
ஏகாந்தப் பிரணவநீ ரூட்டவேணும்
குடித்தாக்காற் பூதபஞ்ச கரணமப்பா
கூட்டினாற் போதாதோ குருவுமாகும்
பிடித்தாக்கால் நில்லாத சூதராஜன்
புலிகண்ட ஆடதுபோற் பொசிங்கிப்போகும்
படித்தாக்கா லென்னவுண்டும் உட்பூராயம்
பாராமற் சுட்டதெல்லாம் பாழ்கண்டீரே. (34)

பாழாகப் போகாம லீசனுப்பைப்
பதினாறு கலைமதியிற் பாடம்பண்ணு
ஏழமையாய்ப் போகாமற் றேயுவுப்பை
ஈராறு சூரியனில் ரெட்டித்தேறு
கோளாகப் போகாம லிவைரெண்டுக்கும்
குற்றமில்லாச் சுத்தஜலங் குளிரத்தாக்கு
நாளாக லிப்படியே மாறிமாறி
நாளொன்றுக் கிருநேரம் நயந்துசெய்யே. (35)

செய்வதே யிடைபாகஞ் சிதறிடாதே
தீட்சையிலே முதற்றீட்சை மறந்திடாதே
கொய்வதிலே புப்பெடுக்கும் நாள்விடாதே
குருமுடிக்குங் காலமதைக் கோணிடாதே
பொய்வசனச் சீடர்களைச் சேர்த்திடாதே
பூவையர்களாசையிலே புக்கிடாதே
தொய்வதிலே மனதுதனைப் பேதியாதே
துண்டாக விருந்துநீ தொழிலைச்செய்யே. (36)

தொழில்செய்து முடிந்தாக்கால் வாசியோகம்
தொட்டேறிக் கற்பமறிந் தூட்டவேணும்
பழியான வுலகத்தைத் தள்ளவேணும்
பரமகுரு வேடத்தைப் பூணவேணும்
செழிவான மனங்களிலே சேரவேணும்
நீங்காம லாயிரத்தெட் டண்டமெல்லாம்
வழிபாதை நடப்பதற்குக் குளிகைவேணும்
மைந்தனே ரசகுளிகை மார்க்கங்கேளே. (37)

மார்க்கமென்ன சிவசூதம் மெத்தநன்று
வாய்த்தாக்கால் வாலைரசந் தனக்குமைந்தா
தீர்க்கமென்ற வழலைகுரு கடுநீரப்பா
சேர்த்திடவே ரவிமுகத்திற் றிரண்டுபோகும்
ஆர்க்குமிந்த மணிகிடைக்க மாட்டாதையா
அருளான சிவயோகி யானாலெய்தும்
சேர்க்குமிந்தக்குளிகைக்குச் சாரணையைத்திட்டச்
செப்புகிறேன் நினைவாகத் தெளிந்துகேளே. (38)

தெளிந்து சொல்வோம் பூமியிலேவிளைந்ததாது
திரமான பாஷாணம் நாலெட்டென்பார்
அழுந்தியதோர் பாஷாணம் பரங்கிவைப்பு
அப்பனே முப்பத்திரண்டேயாகும்
குளிர்ந்திடுமே யுபரசநூற் றிருபதப்பா
குற்றமிலா நவரத்ன மொன்பதாகும்
நெளிந்துசொல்ல மாட்டாது விந்தநூலில்
நிசமான நவலோக மொன்பதாச்சே. (39)

ஆச்சப்பா வகாரமொடு சகாரந்தானும்
அப்பனே நாற்பத்தி அஞ்சதாகும்
பேச்சப்பா விதுவெல்லாந் திகைபேதென்றாற்
பிசகாம விருநூற்றிப் பதினஞ்சாகும்
ஊச்சப்பா வகைக்குமொரு கழஞ்சிவீதம்
ஊட்டவே ரசகுளிகை வாங்கிக்கொள்ளும்
மூச்சப்பா வோடாமற் புடத்திலின்றால்
மூதமென்ற குளிகையது சகடுமாச்சே. (40)

சகடமிலே திரிதாஞ்சா ரணையைத்தீர்த்தால்
தாழ்வில்லை கெவுனமென்ற குளிகையாச்சு
விகடமிலே யஞ்சாநாட் போகியென்று
மிஞ்சாம லொன்பதிற்சந் தாணமென்பார்
அகடமிலே பதினொன்றுந் கிரமேயானல்
அஷ்டமா சித்தியென்றே அறையலாகும்
துகடபதின் மூன்றிற்பூ ரகமேயென்றும்
சொற்பெரியா ரின்னமுண்டு சொல்லுவாரே. (41)

சொல்லுவார் பதினஞ்சு கமலியென்று
திகையெண்ண விருபதிலே சொரூபமாச்சு
மெல்லுவார் பாடியதோர் குளிகையெட்டு
மேலான சித்தர்கள்தான் செய்யும்போது
கல்லுமே சத்துகளைக் குடித்தசூதம்
கழஞ்சியல்லாற் கடுகளவு கதித்திடாது
கொல்லுமே சாரணைக்கு வெடுத்தமூலம்
கூறின இருநூற்றிப் பதினஞ்சாமே. (42)

ஆகுமே மூலிகையாற் கவசங்கட்டி
ஆயிரத்தின் புடமாறு லப்பாற்றீட்சை
சேகரமாய் முப்பத்தி ரெண்டுங்கூட்டிச்
சிவனுமையைத் தியானித்துச் செபங்கள்செய்யிற்
போகுமே யண்டகோ ளகையுந்தாண்டிப்
போகாமல் வாசிதனை நிறுத்திக்கொள்ளு
சோகமே வாறுமற் கற்பசித்தி
சொற்பெரிய பூரணத்திற் சொக்கலாமே. (43)

சொக்கலாங் குளிகையுட திரத்தினாலே
சோம்பாமற் றிரும்பலாந் துவாதசாந்தம்
நிற்கலாம் பிரபஞ்ச சாகரத்தை
நீந்தலாம் நினைவோடே நிலைதப்பாமற்
பக்குவமாய்ச் சித்தர்களைக் கண்டுபோற்றி
பண்பான சித்தனென்றும் பேருவாங்கி
தக்கதோ ரஷ்டமா சித்துமாடிச்
சாகாத ரிஷியாகித் தலைவனாமே. (44)

தலைவன்மணி தனக்குச்சா ரணையைத்தீரு
சத்ததினா லக்குளிகை யிடைதான்மிஞ்சி
மலையாமற் கவனத்தி லேறும்போது
வாறியே தலைகீழாய்த் தள்ளுந்தள்ளும்
நிலையாது தாபமொடு சோபத்தாலே
நிமிடத்திற் கண்டியங்கி நினைவுபோகும்
தொலையாத லகிரியினால் மயங்கித்தள்ளும்
சூதமணி கட்டுகிற தொழில்சொல்லாரே. (45)

சொல்லாம லிருக்கவில்லை யாயிரத்திற்
சொல்லிவிட்டேன் ரசமணியின் றுகைதப்பாமல்
எல்லாரும் காண்பதற்குத் தேவிபூசை
யீசனுப்பு யிடைபாகம் இயம்பிவைத்தேன்
கல்லாத மூடனுக்குத் தெரியவேண்டிக்
கங்கைதனைக் காட்டினேன் கைபாகங்கள்
அல்லாமற் செயநீர்செந் தூரஞ்சுண்ணம்
அநேகவித மானதெல்லா மறைந்திட்டேனே. (46)

அறைந்திட்டேன் யோகமொடு ஞானமார்க்கம்
அப்பனே கற்பமுதற் சித்தியெல்லாம்
குறைந்திட்டுப் போகாம லாயிரத்திற்
கொட்டினே னதைக்குறுக்கி யைம்பதுக்குள்
நிறைந்திட்ட வங்கமெல்லாஞ் சுருக்கிப்பாடி
நின்றதனாற் சித்தர்கண்டு நிசமென்றார்கள்
பறைந்திட்டே னென்குருவின் மயமாந்தேவர்
பரிபாஷை தள்ளியிந்நூல் பாடென்றாரே. (47)

பாடினேன் குருவினுப தேசத்தாலே
பாங்காக விந்நூலின் பரிட்சைபோல
தேடினேன் சித்தர்களுஞ் சொன்னாரில்லை
சிவசிவா பலபாஷை செப்பிநூல்கள்
கூடினேன் கூர்மனென்று பேரும்பெற்றேன்
கோடிகற்ப காலமல்லோ குகைக்குள்வாழ்ந்தேன்
ஆடினேன் சித்துகளை அண்டந்தோறும்
அம்மம்மா செயநீரோன் றறையக்கேளே. (48)

அறைகிறேன் நிலவுப்பு நாலுபங்கு
அவ்விடைக்குச் சத்தியுப்புக் கூடக்கூட்டி
நிறைகிறேன் அயக்கரண்டிக் குள்ளேயிட்டு
நிலக்குமிழின் படிச்சாறு நிறையவிட்டு
பறையாமற் சிறுகொதிப்பாய்க் கொதிக்கவைத்துப்
பழச்சாறு விட்டாட்டி மூன்றுநேரம்
நறையாமல் வில்லைதட்டிப் புடத்தேபோட்டு
நோகாமற் சிவனுமையுஞ் சுண்ணமாச்சே. (49)

ஆச்சப்பா சுண்ணாம்பைக் கொட்டிக்கொண்டு
அதனூடே சாத்தையுந்தான் பீங்கானுக்குள்
நீச்சப்பா நிலமாகு மந்தநீரில்
நிசமாக வீரமொடு பூரஞ்சேர்த்து
தோச்சப்பா சரக்குகளை ரவியில்வைத்துத்
தோயவே வீரமொடு பூரநீரும்
மூச்சப்பா வாசிதனைப் பழக்கம்பண்ண
மூன்றுதபா விம்மருந்தை யருந்தமுற்றே. (50)

கூர்மானந்தர் ஞான சூஸ்திரம் ருடு,

முற்றிற்று.

---

மதுரை புதுமண்டபம் புத்தகவியாபாரம் எஸ். முத்தையபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

பத்தொன்பதாவது:

சூரியானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# ஞான சூஸ்திரம் ௰௩.

சீர்கொண்ட அருமறையின் பொருளாய்நின்ற
தெட்சணா மூர்த்தியுட பாதங்காப்பு
பேர்கொண்ட சூஸ்திரமே பதிமூன்றுக்குள்
பிரித்துரைப்பேன் பூவழலை பெருமையெல்லாம்
நீர்கொண்ட வூசரத்தின் மகிமைதன்னை
நிசமாகச் சொல்லாமல் மறைத்துப்போட்டார்
ஆர்கொண்ட வேணியனு ருமைக்குச்சொன்னார்
ஆத்தாளு மடியேனுக் கறைந்திட்டாளே. (1)

அறைந்திட்ட வகையேது வுப்பேதாகி
ஆகாச விந்துவினால் ஜெனித்தபிண்டம்
மறைந்திட்ட வுப்பதுவே காரங்காரம்
மண்ணான வுப்பதுவே சாரஞ்சாரம்
கறைந்திட்ட வூசரத்துக் கேற்றவுப்பைக்
காணமற் போனதினாற் கலக்கமாச்சு
இறைந்திட்ட மலஜலமாய்க் காணலாகும்
இந்தவிரண் டோரிடத்தி லிருக்கும்பாரே. (2)

இருக்கின்ற வுப்பினுக்கு மூலாதாரம்
இந்துவொன்று இரவியொன்று வன்னியொன்று
பெருக்கின்ற வீசனுக்குச் சூட்சமுந்தான்
பிருதிவியே தூலமெனப் பேசலாகும்
கருக்கொண்ட யோனியிலே நாலுபேதம்
கருதையிலே யெழுதோற்றங் காணலாகும்
உருக்கொண்ட ஜீவஜெந்து அனேகமுண்டாம்
உற்றும்பா ரண்டபிண்ட முண்மைதானே. (3)

தானாக நின்றதுவே யாருமாச்சு
சகலசித்தும் பிரகிருதி யுயிருமாச்சு
வானாகி நின்றதுவே சாட்சியாகும்
மன்னுயிரெல் லாஞ்சோதி மயமுமாச்சு
ஊனாகப் பிறந்தசடம் பிறவாமுத்திக்
குதவியல்லோ பிரகிருதி யோனியோனி
கோனாக நின்றகுரு வுபதேசத்தாற்
குழிபுகுந்து வுப்பெடுத்துக் கொள்ளுவாயே. (4)

கொள்ளுவார் முப்பூவின் முதலாமங்கம்
கூர்ந்துபா ரூசரத்தைக் கொள்கிக்கொண்டு
விள்ளுவார் யோனியதன் படிவிடாமல்
மேலேற்ற மேலுதவி மேவித்தானாற்
றுள்ளுவா ரிந்தவுப்பு சிவமுமாச்சு
துருசுப்பு பணவிடையாத் றெந்தமேற்றித்
தள்ளுவார் பிரளயமோர் கோடிகாலம்
சகலசித்தும் மூலவுப்பு தன்னிலாச்சே. (5)

ஆச்சப்பா மூலவுப்புக் கஞ்சுதீட்சை
ஆதியுப்புக் கப்படியே தீட்சையாகும்
மூச்சப்பா தசதீட்சை யார்தான்செய்தார்
மூலகுரு செய்தார்பின் னார்தான்செய்தார்
ஏச்சப்பா கொங்கணவர் தீட்சைமார்க்கம்
ஏற்றிவிட்டார் முப்பத்தி ரண்டாமென்று
பேச்சப்பா பேசினதி லாவதுண்டோ
பிண்டவுப்புக் கேழுவிதம் பேசலாமே. (6)

பேசுகின்ற வுப்பினுக்கு மேலேஅங்கம்
பெருமையுள்ள சித்தர்கள்தான் செய்யும்மார்க்கம்
வீசுகின்ற சூதத்தின் துறைகளெல்லாம்
மிஞ்சவில்லை மூன்றுநா லஞ்சானாலும்
பாஷையினாற் சொன்னார்கள் வெளிதோணாது
பாலனுக்குத் தோன்றுமிந்த நூலைப்பார்த்தால்
கூசல்மிஞ்சிப் போடுதென்று என்றன் நூலைக்
குகைக்குள்மறைத் திட்டதினாற் கூறெலண்ணாதே. (7)

ஒண்ணான நூலாகு மிருநூற்றைந்தில்
　　ஓதிவைத்த கருத்தெரியு மிருபத்தைந்தில்
கண்ணாகு மிந்தநூற் பதிமூன்றுக்குள்
　　கருவையொரு கற்பமுறை காட்டிவைத்தேன்
*வண்ணானை யறியாத பேருக்கெல்லாம்
　　வாதியென்ற பேரேது வாதமேது
பெண்ணுடன் சுரோணிதமும் விந்துங்கண்டால்
　　பேரான பூரணத்தின் பெருமைதானே. (8)

பெருமையென்ற காயசித்தி பண்ணுவிட்டாற்
　　பேரான அடியோடு முடியும்போச்சு
அருமையென்ற குண்டலிக்குள் வராகிபூசை
　　அப்பலே கண்டமதி லங்கென்றாணு
புருவமையத் துள்ளேவும் மென்றுகும்பி
　　போதமென்ற மவுனவித்தை கைக்குள்ளாச்சு
தருமவித்தை பிரகிருதி மூச்சாடாது
　　சகஸ்திரத்தெண் மலர்ப்பதத்திற் சார்ந்துநில்லே. (9)

நில்லாத மூலிகையாற் காயசித்தி
　　நிஷ்டைமவு னத்தாலே யோகசித்தி
கொல்லாத மூலமதில் அபானசுத்தி
　　கூடாம லிருந்துவிட்டா லேதுமுத்தி
சொல்லாத வீசனுப்பு மதிசூதத்திற்
　　சூட்டினேன் வெள்ளையென்ற சூடன்வித்தை
எல்லாரு மிந்தவிதம் பாடமாட்டார்
　　இதமான சூதகத்தின் வெடியுப்பாச்சே. (10)

---

"எண்ணு யிரத்தி லிருநூறு மந்திரம்
அண்ணலி சொன்னு ரடியே னறிந்தேன்
சொன்னுர் சிவப்பு சோர்பச்சை ரூபம்
வண்ணு னறிவான் வகாரத் திரையமே." என்றும்
* திருமூலர் திருமந்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதைபார்த்துத் தெளிந்துகொள்ளவும்.

உப்பான வெடியுப்புச் செயநீராலே
　　ஒருகோடி வித்தையெல்லா மாடலாகும்
அப்பான கல்லுப்பு நீரினாலே
　　ஆடலாந் துருசினுட அங்கமெல்லாம்
செப்பாத யோனிருது சேநீர்பட்டாற்
　　சிவன்வேறு தானுண்டோ யிவனல்லாமல்
தப்பாமற் செய்வதென்ன சவுக்காரந்தான்
　　சஷ்டிமுதற் பவுரணையுந் தாக்கிப்பாரே. (11)

தாக்கிப்பா ராகாசஞ் சருவசாட்சி
　　சதாநித்தம் அந்தரமே சாடிநின்றால்
நோக்கிப்பார் வாயுலயப் படுவதற்கு
　　நூதனமாய் வன்னியதிற் கூடவேணும்
மூக்கிற்று ஞேடுவது பிராணவாயு
　　மூலமெனும் வளையமது நகாரந்தன்னைத்
தூக்கித்தான் விட்டவர்க்கு யோகமெய்தும்
　　சூரியா னந்தனிவை சொல்லும்நூலே. (12)

சொல்வதென்ன ரேசகத்தை வெளிவிடாதே
　　துடியான பூரகத்தைப் பின்னிடாதே
வெல்வதென்ன கும்பகத்தை யடிவிடாதே
　　மேலேற்று மாத்திரையை மறந்திடாதே
செல்வதென்ன கற்பத்தை மறந்திடாதே
　　செந்தூரஞ் சேர்க்கையிலே சிதறிடாதே
கொல்வதென்ன அருந்தயிலே பறக்குமிந்தக்
　　குளிகைக்குச் சாரணைசெய் குணமாமுற்றே. (13)

சூரியானந்தர் ஞானசூஸ்திரம் ௧௩
முற்றிற்று.

மதுரை, தல்லாகுளம் அன்னதானத் தண்ணீர்ப்பந்தல் தருமபரி பாலனம். சோ. சுந்தரராஜக்கோனாரவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதி யின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

இருபதாவது:

சூரியானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# கற்ப ஞானசூஸ்திரம் உரு.

பூரணமாய் மதியணிந்து யெழுகடலைவாரிப்
 புகட்டுசடைக் குள்ளணிந்து வன்னிமழுவேந்திக்
காரணமாய்க் கரியுரித்துப் புலியுரித்துப்போற்றிக்
 காலதனை யாபரண மாகவினிதணிந்து
ஆரணமாய் நால்வேத முடிவினிக்குமெட்டா
 தானந்தப் பெருவெளிய தாகியெங்குமாகி
நாரணமாய்ப் போதமருள் தெட்சணாமூர்த்தி
 நாதாந்தப் பதமலரை நான்சிரசிற்கொண்டேன். (1)

கொண்டிருபத் தஞ்சதனிற் காயசித்திவாதம்
 கூறுக வேயுரைப்பேன் நவகோடிசித்தர்
கண்டுசித்தி செய்யும்வகை கோடாகோடி
 கவராகப் பிரித்துரைத்த கருவிற்றோயா
பண்டுசெய்து காயசித்தி பண்ணும்போது
 பார்க்கிறதோர் கருச்சொல்வேன் மவுனஞானம்
உண்டுமந்தக் குண்டலிக்குள் வாசியினாற்பூரி
 ஒடுக்கமந்தக் கண்டமதில் அங்கென்றானே. (2)

ஊனுமந்த ரேசகத்திற் புருவமையம்
 உற்றுப்பார் வெளியிலும் மௌனவேகும்பி
தோணுமந்தப் பரவெளியின் தறிவதாகிச்
 சுடர்கோடி காந்தியதாய்த் தூக்கும்பாரு
காணுமந்த யிடிநாதம் போலவோசை
 கண்டமந்த நாதத்தே கவிழ்ந்துமெள்ள
வேணாழி வழிசகஸ்திரத் தெண்மலர்க்குள்
 விரவியது முன்னுமது மவுனமாமே. (3)

ஆமப்பா மவுனவித்தை யார்தான்செய்தார்
ஆதியந்தங் கைலேபரா பரையாய்வந்தான்
ஓமப்பா தெட்சணசின் மயமாந்தேவு
ஒருகோடி சித்தருக்கு வுபதேசித்தார்
தாமப்பா வென்றென்றஞ் சாகாமற்ருன்
தனக்குளுரித் தேதென்றல் மவுனத்தாலே
வாமப்பா வெகுகோடி சித்தராச்சு
மவுனம்விட்டாற் காயசித்தி தூரப்போச்சே. (4)

போச்சென்று விடுகாதே மவுனசித்தி
புகட்டுகின்றேன் காயசித்தி வரிசைகேளு
பேச்சென்ற சிதம்பரமுந் தேவிபூசை
பேராகப் பூசையினற் சித்திசெய்வார்
காச்சென்ற தேகமது சுத்திசெய்யக்
கழற்றிவிடு அறுசுவையுஞ் சுந்தரன்போல்
மூச்சடங்கா .வாதபித்த சிலேற்பனந்தான்
மூன்றுமதை வாங்குமிட முடியப்போமே. (5)

போகுமே வழலேபின்வல் லாரைகொள்ளு
புகலோரான் டதனிற்பொற் கடுக்காயுண்ணு
ஆகுமே யண்டதனில் மண்டலந்தான்
அமுரிகொள்ளு மண்டலந்தான் கரந்தைகொள்ளு
வாகுமே மண்டலந்தான் சிந்திகொள்ளு
மண்டலந்தான் செனித்தபின்பு நிம்பங்கொள்ளு
சாகுமடா நரைகளொடு திரைகள்தானும்
சாலேயடி மேனிதனைத் தேனிற்கொள்ளே. (6)

கொள்ளப்பா மண்டலம்வா லுழுவையோடு
கூர்தயிலம் சிவன்வேம்பு தூதுவேளை
விள்ளப்பா சாதிக்காய் கோலங்கூட்டி
வெருளாதே மண்டலந்தா னுண்டுதேறு
தள்ளப்பா கருங்கோழி யண்டங்கட்டிச்
சாதகமாய்க் கெருடனிரு பதுநாளுண்ணு
முள்ளப்பா குமரியிரு பதுநாளுண்ணு
முகிந்தபின்பு பின்னுமொரு சற் ங்கேளே. (7)

கேளப்பா கரிப்பான்மண் டலமேயுண்டு
　　கெடிரெண்டு காக்கணம்பொற் றலைவல்லாரை
நாளப்பா கருநீலி பாக்களவுபாலில்
　　நலமாக மண்டலமு முண்டுதேறு
வேளப்பா யிவ்வளவு முண்டுதீர்ந்தால்
　　வேண்டியதோர் கற்பமெல்லா முள்ளேகொள்ளும்
பாழப்பா மற்றதெல்லாஞ் சித்தியாகா
　　பாங்காக யிந்தமுறை யறிந்துசெய்யே. (8)

செய்யவே பதினெண்பேர் நூல்களெல்லாம்
　　திரமில்லை காடுமுர டாகச்சொன்னார்
பையவே பதிமூன்று முண்டுதீர்ந்தாற்
　　பாங்கான அருணனைப்போ லாகுந்தேகம்
மெய்யவே யிதுகடந்து பின்னுமொன்று
　　வேதாந்தச் சின்மயத்தி னருளாற்சொல்வேன்
கையாவின் பாலதனிற் கெந்தகசுத்தி
　　கல்வமிட்டுக் குமரியிட்டு இருநாளாட்டே. (9)

ஆட்டிவா படிக்காரத்தி லிருசாமந்தான்
　　அடைவாக வுலர்த்திவைத்துச் சூதஞ்சுத்தி
மீட்டுவாய் கஞ்சாவும் ஓமமிட்டு
　　வெஞ்சுடரி லுலர்த்திசத்தி சிவமிரண்டும்
கூட்டுவா யிரண்டுபண விடைதானப்பா
　　குன்றியதன் மேலேமண் டலந்தான்கொள்வாய்
பூட்டுவாய் மலமும்நீர் நீங்கித்தானே
　　பூரித்துக் காயசித்தி பொன்போலாமே. (10)

ஆமப்பா வதின்மேலாஞ் சமூலங்கெந்தி
　　அருணனைப்போற் றேகமுமாம் ஆத்தாளப்பன்
காமப்பா ஆத்நாள்தான வரமந்திங்கள்
　　கைமுறையாய்ப் பூசைசெய்வாய் கழறஞ்சட்டை
வேமப்பா நல்வினைதீ வினைகளெல்லாம்
　　வெந்துவிடுந் தணற்காட்டில் விறகுபோல
நாமப்பா உள்ளபடி சொன்னோஞ்சொன்னோம்
　　நம்பேரு சூரியா னந்தனாமே. (11)

ஆனந்தக் காயசித்தி பண்ணுவிட்டால்
அடியோடே முடிபோச்சு வாதம்பொய்பொய்
மோனந்தப் படியோவ கோடிசித்தர்
மூதண்டக் காயசித்தி முறையாய்ச்செய்து
வானந்த மலசலத்தி லுப்பைவாங்கி
மாதவிடைக் கிடையிடவே நீரதாச்சு
காணந்த வுமிநீருங் கலசப்பாலும்
கைமுறையாய் விந்துவுடன் கலந்தார்காணே. (12)

காணப்பா சவுக்காரச் சுண்ணம்வீரம்
கற்பூரம் வண்டரமுங் கடிபசூதம்
பூணப்பா புழுகினெடு சமன்தான்கூட்டிப்
போட்டறைத்துப் பூசுகண்டா பொருமிநீறுங்
தோணப்பா யிம்முறைதான் முதலாமங்கம்
துருசுதனை யறியாட்டாற் சொல்லேபொய்பொய்
வீணப்பா மற்றதெல்லாம் வாதம்பொய்பொய்
விந்தென்ற ரசமுண்டு சித்தியாச்சே. (13)

ஆச்சப்பா வாதமென்ற பேருக்கெல்லாம்
ஆகாகா சூதமுண்டு மூலத்தீயாற்
போச்சப்பா சுட்டதனாற் குருவுமாச்சு
பூரணத்தின் வல்லமையா லெல்லாமாச்சு
போச்சப்பா சித்தர்சொன்ன நூல்களெல்லாம்
பொய்மறைப்பாய்ப் பாடிவிட்டார் முன்பின்னாகக்
கூச்சப்பா சித்திசெய்தோ னங்கேகொஞ்சம்
கொடுத்துவிட்டால் மலசலத்தைக் கொள்ளையாச்சே. (14)

கொள்ளையப்பா வுப்பெடுத்துச் சரக்கிற்போட்டாற்
குருவாகு மறுபதமுங் குறையாதப்பா
வெள்ளையப்பா துருசாற்று ளகந்தான்சுண்ணம்
வேதாந்த வங்கமுடன் நிமிளைச்சுண்ணம்
பிள்ளையப்பா சாரமுடன் துருசுச்சுண்ணம்
பேரான ரசச்சுண்ணந் தங்கச்சுண்ணம்
விள்ளையப்பா யிதன்வேதை யுப்புச்சுண்ணம்
வேதாந்தப் பூரமது வெள்ளையாமே. (15)

ஆமப்பா அங்குபண விடையினுப்பால்
        ஆடலாங் கோடிகவர் கோடிகாலம்
போமப்பா சூதமுண்டுட் கருவினாலே
        பூட்டினார் வெகுகோடி வாதவித்தை
காமப்பா வெளியிலோர் கருத்தானுண்டு
        கண்டசுண்ணந் தஞ்சுடனே கலந்தகாரம்
ஓமப்பா சோடசமும் அமுரியுந்தான்
        உட்சார மோர்பாறை யுப்புமொன்றே. (16)

ஒன்றுடனே யொன்றிடுவாய் கற்சுண்ணந்தான்
        ஓகோகோ அமுரிதனி லுறவாகத்தான்
நன்றுடனே தெளிவிருந்துக் காய்ச்சிப்பின்பு
        நற்குழம்பு பருவமதில் விடவேகேளு
அன்றுடனே பூமிதனிற் சாம்பற்கொட்டி
        அதன்மேலே துணிவிரித்து விடவேகட்டும்
சென்றுடனே பெண்ணடியைக் கலசத்திட்டுச்
        சிறப்பாக ஆண்முடியை அதன்மேல்வையே. (17)

வைத்ததின்மே லிணங்கனொரு படிதானிட்டு
        வளமாக மேலுமந்தப் படிதான்வைத்துக்
கைத்ததின்மேற் சில்லிட்டுச் சீலைசெய்து
        கடும்புடஞ்செய் நூறெருவி லுடைத்துவாங்கி
மொய்த்தமலம் பலம்பத்து ரோமமஞ்சு
        மூட்டுபழச் சாறதனை லிரண்டுசாமம்
மெய்த்தெருக்கம் பால்சேரா கோழிமுட்டை
        வெண்கருவு மிருபதுடன் விட்டிடாயே. (18)

விட்டிடவோர் சாமமுமே அரைத்தெடுத்து
        வில்லைசெய்து நூறெருவிற் புடமுந்தீர்த்து
தெட்டகாடி நீர்நாலு படிகரைத்துத்
        தெளிவிருத்தஞ் சாங்காய்ச்ச லுப்பதாகக்
கட்டியுருப் போடெண்ணெய் தன்னைத்தானும்
        காய்ச்சிவிடு முன்கலப்பாய்க் கிண்டிக்காய்ச்சி
சட்டமெழு காம்பதத்தி லுருட்டியண்டம்
        சவுக்காரம் நாமமென நாதனுரைத்தானே. (19)

உரைத்தண்டத் துண்டைசுண்ணத் துள்ளிருத்தி
யுத்தமமாஞ் செயநீர்விட் டுண்டைக்கப்பி
வரைத்தரவி வைக்கஎண்ணெய் வடியும்நீருள்
வைத்தெரிக்கக் கறுக்கும்வெண் கருவினாலே
அரைத்துவில்லை தட்டிவரா கப்புடத்தில்
அன்பாக யிட்டெடுக்க வெண்மையாகும்
உரையெருக்கம் பாலரைத்து வில்லைசெய்து
உலர்ந்தபின்பு கடுங்கார மதனிலேற்றே. (20)

ஏற்றிபுடந் தீர்ந்துகடுங் காரநீரை
யென்மக்காள் வஸ்துவினால் நிலைமுன்கண்டாய்
போற்றுமந்த வளிமெழுகு அங்கங்காக்கை
பொன்னிமிளை பூங்காம்பொற் கரந்தைகோபம்
தேற்றியிந்த உபரசங்கள் சத்துவாங்கிச்
செந்தூரந் தின்றிடவே தேகம்பொன்னும்
மாத்துகிறேன் பிள்ளைக்கு வயதீரெட்டாய்
மகத்தான ரச்சித்தி மார்க்கம்பாரே. (21)

பாரப்பா பரிச்சுண்ணஞ் சாரம்ரெட்டிப்
பாயரைக்கச் சலமாகுஞ் சூதங்காய்ச்சி
நேரப்பா மணியாகுஞ் சூதராஜன்
நிலைப்பான நூற்றிருப துபாசத்தில்
பேரப்பா பாசாண மறுபானாலும்
போகார சாரமுட னிருபத்தஞ்சும்
சேரப்பா பீசமஞ்சு மணியொன்பானுந்
திரமூலி ஆயிரத்தி னெட்டுங்கூட்டி
வாரப்பா வெவ்வேறு சத்துவாங்கி
மணிதனக்குச் சாரணைநீர் வைத்துக்கொள்ளே. (22)

கொண்டமணி வாயிலிட்டு மூலத்துள்ளே
கூடிவீ டாறமூ டுருவியோடி
அண்டமென்ற முப்பாழுந் தாண்டியேகும்
அருளான மணியினுட வேகந்தானும்
விண்டசிவந் தாண்டியப்பா லானந்தத்தில்
வெருளாம லூடுருவி நடனவோசை
கண்டந்த வெளிக்குள்ளே மேலேவாங்கிக்
கடிந்தோடுங் கண்டமென்ற திரட்டிற்றானே. (23)

ஓடயிலே குளிகையது கீழ்வாங்கி
ஓசையிட்ட மணியொலிதான் மேலேவாங்க
நாடயிலே மீண்டவர்க ளெங்குமில்லை
நாதாக்கள் மீளாம லகண்டமானார்
தேடயிலே இம்மணிதா னந்தியாசான்
தெண்டித்துச் சின்மயமாந் தேவன்சொன்னான்
ஆடயிலே வெகுகோடி சித்தர்பிள்ளை
ஆச்சப்பா ஆயிரத்தெண் மாத்தாம்பாரே. (24)

ஆமப்பா காயசித்தி பண்ணித்தீர்ந்தால்
ஆட்டியல்லோ வாசியினால் மூலந்தன்னில்
ஓமப்பா மேல்நோக்கி மவுனத்தூட்டி
யுற்றசிவ விந்துவுண்டு வாதம்பார்த்துத்
தாமப்பா ரசமணிசா ரணையைத்தீர்த்துச்
சாதகமா யறுவரையு மேறியாட
வேமப்பா நல்வினைதீ வினைகளெல்லாம்
விதமறிந்து கொளும்வாசி விளையுந்தானே. (25)

சூரியானந்தர் கற்பஞான சூஸ்திரம் உரு.

முற்றிற்று.

மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் ந. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

முருகன் துணை.

## இருபத்தோராவது:

### கண்ணானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# சிவராஜ யோகம் ௱௪.

ஆதியெனக் குபதேசக் குருவதாகி
    ஆண்டருளு மனோமணியின் பாதம்போற்றி
நீதியுள்ள பலகலைக ளோதிவைத்த
    நிற்குணஞ்சேர் பிருகுமகா ரிஷியைப்போற்றிக்
கோதில்லா மேலோர்கள் பாதம்போற்றிக்
    குறிப்புடைய சிவயோக மார்க்கந்தன்னை
மேதினியிற் சொல்லுகிறேன் தெளிவதாக
    மெய்யென்ற நிலைதெரிந்து யோகஞ்செய்யே. (1)

செய்யப்பா கரங்கொண்டு காலைக்கட்டிச்
    செம்மையுடன் கண்மூடி செய்வாய்நீயும்
உய்யக்கும் பகத்தில்இம் மென்றுகும்பி
    உயர்வான வாசியது மூலம்பார்க்கும்
வெய்யதொரு வைந்திடத்திற் பழக்கம்பண்ணு
    விரும்பியதோர் யோகமது சித்தியாகும்
பையமதி தன்னில்அங் கென்றுகும்பி
    பண்டிரவி தனில்வங்கென் றேத்திப்பாரே. (2)

பாரப்பா வைந்திடத்திற் பழக்கஞ்செய்யப்
    பருதிமதி யெழுந்திருக்க மாட்டாதப்பா
நேரப்பா கீழுமில்லை மேலுமில்லை
    நிச்சயமா யந்தரத்திற் கட்டும்வாசி
யாறும்போ திரேசகமாய்க் கும்பித்தாக்கால்
    வல்லசத்தி தோணுமடா மகிழ்வாய்க்காணு
சேரும்போ தில்வாசி யெழும்பாமற்றான்
    சிவசிவா யிருப்பிடத்திற் சேருந்தானே. (3)

தானென்ற ஓராண்டு பழக்கஞ்செய்தால்
தன்மையுடன் திங்கள்பத்திற் பாலனவாய்
நானென்ற மூன்றாண்டு பழக்கஞ்செய்தால்
நன்மையுள வாய்விருக்கு மிடங்கள்தோற்றும்
மானென்ற அரிசிவனுங் கண்ணிற்றோற்றும்
மைந்தனே சூரியன்போற் பிரகாசிக்கும்
கோனென்ற ஆதியந்த மூலத்துள்ளே
குருபரனே வாசியடி வாரம்பாரே. (4)

பார்க்கையிலே ஆறுதலந் தோணுமப்பா
பாலகனே சத்திமுத்தி யதுதானப்பா
ஏர்க்கையுள்ள வாசியினு லெல்லாமாச்சு
இனிமையுடன் வகாரமடா சிவயோகந்தான்
சேர்க்கையுட னடிமுடியும் நடுவில்நின்று
சித்தியுள்ள அபானனென்ற வாயுவாச்சு
மார்க்கமுள்ள மதியாச்சு ரவியுமாச்சு
மைந்தனே யதற்கடியிற் சலமுமாச்சே. (5)

ஆச்சென்ற யோகமது சுருக்கமாக
அப்பனே சொல்லிவைத்தே னருமையாகப்
பேச்சென்ற யென்னுசான் பிருகுசொன்ன
பிர்மசிவ யோகத்தில் விரிவாய்ச்சொன்னார்
மாச்சலது மில்லாமற் பார்த்துக்கொள்ளு
மைந்தனே சிவயோகங் கண்டுதேறு
சூச்சமாய்ச் சருவெல்லாங் கண்டுபாரு
சொல்லுமடா விபரமதைச் சொல்லக்கேளே. (6)

கேளப்பா யோகிக்கெள் ளெண்ணெயோடு
கெடியான கடுகாகா முழுகுகற்கு
நாளப்பா சவுரியுடன் பொடுதலைச்சார்
நாடுசம னிடைபசும்பால் வேம்பின்வித்து
வாளப்பா நெல்லிபருப் புங்கடுக்காய்
வால்மிளகு சீரகமுஞ் சேர்த்துக்காய்ச்சி
கோளப்பா வாராது முழுகிவந்தால்
கொதிப்பான மூலவன்னி யடங்கும்பாரே. (7)

பாரப்பா வுந்தியிலே மைந்தாகேளு
பலமான கங்கைசிவ கங்கையுண்டு
நேரப்பா அங்கிலேயை அடுத்துக்கண்டு
நிராமயத்தின் கங்கைதனைச் சுகமாய்நீயும்
தேரப்பா அந்திசந்தி கொண்டாயானல்
சிவசிவா ஆதார மூலாதாரம்
சீரப்பா நிராமயத்தின் மூலந்தன்னைத்
திறமாகக் கண்டறிவாய் சொல்லினேனே. (8)

சொல்லினே னுதார மூலமார்க்கம்
சுருக்கமாய் விள்ளுகிறேன் நன்றாய்க்கேளு
வல்லதொரு குருவருளால் அகாரதீட்சை
வந்தபின்பு உகாரமடா சத்திதீட்சை
நல்லதொரு மவுனமடா மகாரதீட்சை
நலமாகக் குருவறிந்து தீட்சைபெற்று
மெல்லவே யமுதகற்ப முண்டாலப்பா
மேதினியிற் காம து சித்தியாச்சே. (9)

சித்தியென்ற சித்தியது யோகமார்க்கம்
சிவமறிந்த மூலமடா பிர்மஞானம்
மத்தியிலே ஞானகே சரியின்தீபம்
மவுனத்தி லானதுவு மூலத்தீதான்
சத்தியுட தீயதுதா னுந்தியுந்தி
சரியான ஆவியப்பா பிராணயந்தான்
முத்தியென்ற நாதமடா சிலம்பிேனசை
மூலமடா ஓசையைநீ தெளிவாய்ப்பாரே. (10)

பாரேதா னுகாச வோசைமைந்தா
பத்தியுள்ள மூலமதி லாவிதன்னல்
நேரேபார் வாசியடா மேகமாச்சு
நீதியுள்ள மேகமது ரவியினுவி
வேரேயா மிரவியுடன் மேகஞ்சேர்ந்து
விந்தையுள்ள விரைச்சலுடன் சலமுமாச்சு
கூரேதான் மேகசலந் தன்னல்மைந்தா
குவலயத்தி லங்கங்கு உயிருண்டாச்சே. (11)

ஆச்சப்பா சோதிபிர காசங்கண்டு
    அப்பனே கருக்களெல்லாஞ் சொல்லிவிட்டேன்
பேச்சப்பா ஞானிகட்குத் தெரியுமல்லால்
    பின்னொருவ ருக்குமிது தெரியாதப்பா
சூச்சத்தின் வழியறிந்து செய்வாயாகிற்
    சோதிபிர காசமது கைக்குள்ளாச்சு
மாச்சலிலா தேயறிந்து செய்துகொள்ளு
    வகையாகப் பிறப்பிறப்பு மாறிப்போமே. (12)

போமேதான் சூடுகொண்டாற் கசாயமப்பா
    புகன்றிடுவெள் ளறுகின்வேர் பலமேபத்து
நாமேதா னதிமதுரங் கூகைநீரும்
    நல்லமா தளம்பூவால் மிளகினோடு
நேமமுடன் பலமரைதான் கூடப்போட்டு
    நிர்மலமாஞ் சலமாறு படியேவிட்டு
சாமமிரண் டடுப்பேத்தி யெரித்துமைந்தா
    சரிமுக்காற் படியாக வத்தக்காச்சே. (13)

வத்தியதோர் கசாயமதிற் படிகால்வாங்கி
    வளர்கொட்டைப் பாக்களவு பசுவின்வெண்ணெய்
சித்தமுடன் றானிட்டுக் கலக்கிநன்றாய்த்
    திறமாக மூன்றுநாட் காலைதன்னில்
பத்தியுட னேபொசித்தால் யோகச்சூடு
    பறக்குமடா யிவ்விதமுட் கொண்டாயானால்
சத்திசிவ னருளாலே ஞானம்பெற்று
    சதாகோடி காலம்வரை வாழ்குவாயே. (14)

கண்ணனந்தர் சிவயோகம் ௰௪.

முற்றிற்று.

மதுரைவடக்குமாசிவீதிஇராமாயணச்சாவடித்தெருவிலிருக்கும், ☞ அஷ்டாங்கயோகி சுந்தரமகாலிங்கசுவாமிக ளிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

## இருபத்திரண்டாவது:

அசுவனிதேவர் திருவாய்மலர்ந்தருளிய

# சிவயோக கற்பம் ௰௬.

சித்தாகிச் சித்தறியும் பொருளுமாகித்
தீபசுட ரொளிவாகி முடியுமாகி
அத்தனயன் மாலுடனே அன்னையாகி
ஆனந்த ரூபிகர மோனமாகி
நித்தியமாம் அறிவாகி அறிவிலூறும்
நினைவாகி நினைவறியுஞ் செயலுமாகிச்
சுத்தநிரா லம்பநிரா மயமதாகித்
துலங்குபரம் பொருளதனை வணக்கஞ்செய்வாம். (1)

சிவரூப சத்திதனை யாருங்காணார்
சின்மயமாம் பரம்பொருளை யறியமாட்டார்
தவமுடைய விரண்டையுந்தா னுரைக்கக்கேளு
சத்திசிவ மிரண்டும்ரவி மதியுமாச்சு
பவமில்லா ரவிமதிதான் காரசாரம்
பாருலகிற் காரமடா ரவியுமாச்சு
உவமையுற்ற மதியுமல்லோ சாரமாச்சு
உண்மையுள்ள தத்துவமு மிவைதான்பாரே. (2)

பாரப்பா ரவிமதியி னுண்மைகேளு
பாலகனே குருவினூற் செய்யுமார்க்கம்
சேரப்பா மதிதனிலே மதியாய்நின்று
தீரமுடன் நினைவினால் ரவியைக்காணார் .
பேரப்பா ரவிகாணு மாந்தர்தானும்
பேருலகிற் பிறந்திறந்து மாள்வாரப்பா
வேரப்பா இடகலையை ரவியிற்சேர்க்கும்
விதமறிந்தா லமுதமதாம் விரைவிற்பாரே. (3)

விரைவுடனப் பால்பொசித்துப் பதியில்நின்றால்
வேதாந்தத் தமர்வாசற் பூட்டுந்தோணும்
நிறைவுடனே கால்பிடித்து வாசிபூட்டி
நிச்சயமாய் நின்றதினாற் கால்தானோடி
குறைவில்லாத் தமர்வாசற் பூட்டில்மைந்தா
குறிப்பாக வாசிசென்று நின்றுகொண்டு
கரையில்லாத் தமர்வாசற் றிறந்தால்மைந்தா
காணலாம் பூரணத்தின் மகிமைதானே. (4)

தானென்ற பரப்பிரமக் கபாலந்தானும்
தன்மயம தானகயி லாசமாகும்
வானென்ற கயிலைபெனு மேருவேறி
மைந்தனே அறிவதனு லமுதங்கொள்ளத்
தேனென்ற பூரணத்தி னமுதங்கண்டால்
திரமாகச் சதாபோதை புகழ்ந்துகாணும்
கோனென்ற அப்போதை தன்னில்நின்று
குருவருளாற் சிவயோகங் கண்டுதேறே. (5)

தேறப்பா மனம்வேறாய்ப் புத்திவேறாய்த்
தேறும லலைந்ததினாற் சுகமுண்டாமோ
காரப்பா மனம்போன வழியேசென்றால்
கள்ளைப்போற் பூவுலகி லலைவார்பாரு
கூரப்பா அறிவுடனே மனதையுந்தான்
குறிப்பாகக் கட்டினவன் சித்தனாகும்
வேரப்பா மனத்தாலே அறிவைக்கட்டி
விட்டவனே ஞானியென்று மேவுவாரே. (6)

வாரேயிந் நூலதுதா னோர்க்குக்கிட்டும்
மகத்தான ஞானிகளுக் கெய்தும்பாரு
சேரேநீ தன்மையதிற் பொறுமையப்பா
திரமான பொறுமையதா லடக்கமாகும்
வேரேதான் ரேசகபூ ரகமிரண்டும்
விளங்கியதோர் கும்பகமுந் தன்மையாகும்
நேரேதா னறிவுகுரு விதுமூன்றாகும்
நிச்சயமா யறிவாலே யெல்லாமாச்சே. (7)

ஆச்சென்ற பொருளதனைத் தெளிவதாக
        அப்பனே ரேசகபூ ரகத்தினோடு
பேச்சென்ற சிவயோக வழியைச்சொன்னேன்
        பேரறிவால் யோகவழி யறியும்போது
மாச்சலென்ற வெப்பதிக மாகக்கண்டால்
        வகையுடனே குடாரிகற்ப முண்பதற்கு
வாச்சுதென விதையறிந்து வைத்துக்கொள்ளு
        மைந்தனே சொல்லுகிறேன் புகழீதாமே. (8)

தாமதஞ்செய் யாமல்நீ துரிதமாகத்
        தருணமதிற் செய்வதற்கோர் பாகங்கேளு
நாமறிந்த படியேதான் புகல்வேனப்பா
        நலம்பெறவே கற்றாழைச் சோறெடுத்து
பூமலர்போற் செய்வதற்குத் தண்ணீர்விட்டுப்
        புனிதமுடன் பன்னிரண்டு தரமலம்பி
சோமனைப்போற் பலம்பத்து பாண்டத்திட்டு
        சுகிர்தமுள்ள வெங்காயம் பலம்பத்தாமே. (9)

பலம்பத்துச் சிறிதாகக் கொய்துபோடு
        படியொருசித் தாமணக்கி னெண்ணெய்தன்னைக்
கலந்துமிக வடுப்பேத்தி யெரிக்கும்போது
        கனத்ததொரு வெந்தயந்தான் விராகனென்று
பெலமான வதிமதூரஞ் சாதிக்காயும்
        பேர்பெறவே கழஞ்சியொன்று கணக்கினோடு
நலமாசப் பொடியாக்கிக் கூடச்சேர்த்து
        நாடியே யெரித்துவடித் திறுப்பாய்தானே. (10)

இறுத்துமொரு பீங்கானில் வைத்துக்கொண்டு
        இயல்பாக ஆத்தாளைப் பூசைசெய்து
நிறுத்திதனைக் காசிடைதான் சாப்பிட்டாக்கால்
        நெடுநாளாய் நிற்குகின்ற கனல்மூலங்கள்
பெருத்தவித நோய்களெல்லாந் தீர்ந்துபோகும்
        பிறருக்குச் சொல்லாதே வெளிவிடாதே
திருத்தமுள்ள ஞானிகட்கு மூலகோருக்கும்
        திரமுடனே கொடுத்துநீ தேர்ந்துபாரே. (11)

தேர்ந்தந்தக் குணங்கண்டு கொடுப்பாயானல்
திராத நோய்களெல்லாந் தீர்ந்துபோகும்
சேர்ந்தகனல் மீறுது நெடுநாட்கொண்ட
தீச்சூட்டை மாற்றுமிது திறமையாக
கூர்ந்திந்தப் பாகமதை யறிந்துசெய்தாற்
கொடுமையுள்ள பிணிகளெல்லாம் மாறிப்போகும்
நேர்ந்திதனை யுனக்காகச் சொன்னேனின்னம்
நேர்மையுள்ள பத்தியந்தான் மிகச்சொல்வேனே. (12)

சொல்லவொரு பத்தியந்தான் ஞானிக்கில்லை
சுகமான இல்லறத்தோர் தங்களுக்கு
வல்லதொரு பத்தியங்கள் மிகவுமுண்டு
மகத்தான இச்சாபத் தியமதாகா
மெல்லவே கரப்பான்பண் டங்களாகா
மீன்கறிகள் மற்றவைகள் மிகவுமாகா
நல்லதொரு தலைமுழுக்கு வெந்நீர் கொள்ள
நலமாக வியாதியது தீர்ந்துபோமே. (13)

போமேபார் மூன்றுசை சொல்கிறேன்கேள்
பொருளாசை பெண்ணுசை மண்ணினுசை
வாமேதான் மூன்றுசை பிடித்தமாண்பர்
மானிலத்தில் மெத்தவுண்டு கோடாகோடி
ஆமேதான் நெறிதவருன் கோடிக்கொன்று
அப்பனே அவர்களுக்குப் பாக்யமெய்தும்
தாமேதான் ஞானிக்குச் சொன்னேனல்லால்
தடித்தபுத்தி படைத்தோர்க்குச் சாற்றிலேனே. (14)

சாற்றினேன் காமுகர்க்குச் சாற்றவில்லை
தனியாத கர்மத்தால் வினைகள்தேடி
நாற்றிசையிற் றெரியாம லநேகபாவம்
நல்லதென்று செய்துண்டார் கோடாகோடி
மாற்றிடவே மருந்துகொண்டார் வகைதானுண்டா
மறுசென்மமெடுத்திவர்கள் மாளப்போறுர்
தேற்றிடவே சொன்னனப்பா வினைதேடாமற்
சீரான பரம்பொருளைத் தேடுவாயே. (15)

தேடுவாய் சிவயோக மார்க்கந்தன்னைச்
சிற்பரத்தின் சுயரூபந் தெரியவென்றால்
நாடுவாய் பிராணபக் கருவைப்பாரு
நல்லதொரு வைந்தெழுத்தை மனதிலூனு
கூடுவாய் சித்தருடன் குறிப்பறிந்து
கூசாமல் ஞானநிலை தன்னிற்றேறு
மூடுவாய் மவுனமதாய் நின்றுபார்க்க
முத்திபெற்று நல்வழியில் வாழ்குவாயே. (16)

அசுவனிதேவர் சிவயோக கற்பம் ௰௬.

முற்றிற்று.

சத்திகிரி சிவகிரி திருவாவினன்குடி யெனத் தழைத்தோங்கும் திருப்பழனிமலையிலெழுந்தருளிய ஸ்ரீ கைலாச போகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் ஆதின மகாகைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ கைலாசதேண்டாயுதபாணி ரிஷீஸ்வரசுவாமியவர்களிடமிருந்துவாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம்அச்சிடலானது.

உ

குருவேதுணை.

## இருபத்திமூன்றுவது:

பராசரிஷி திருவாய்மலர்ந்தருளிய

# ஞானோபதேசம் ௨௨.

உச்சியெனும் முடியாயோங் காரமாகி
உற்றவைந்து பூகமுமா யொளிவுமாகி
சச்சிதா னந்தவடி வாகிமோன
சற்குருவா லறிவிக்குந் தோற்றமாகி
பச்சிலையிற் றுயிலரியோ டயனுமாகிப்
பரமாகி யண்டாண்ட பிண்டமாகி
இச்சையற்ற பொருளாகி யெங்குமாகி
இலங்குபர வெளியொளியின் பாதங்காப்பே. (1)

கண்மணியா யிலங்குகின்ற ஞானமார்க்கம்
கருத்துகந்து சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
உண்மையா யடிநடுவின் முடியைப்பாரு
உந்தனக்குக் கைநெல்லிக் கனிபோற்றோணும்
பண்டைந்து வக்கரமை முகமதென்றாற்
பாலகனே யாறுமுக மெங்கேயென்று
விண்டறியக் கேட்டாக்கா லருஞ்சொல்லார்
வேதாந்தச் சுருதிமுடி வாறுமாச்சே. (2)

ஆச்சப்பா ரேசகபூ ரகத்திருந்து
அருளான வீடமர்கும் பகமேயாகும்
பேச்சப்பா புன்னுனியின் மணியதாகும்
புகலதுபின் நவமணிபோல் நாதமாகும்
நீச்சஞ்சக் கரத்துக்கா தாரமாகி
நின்றபூ ரணந்தானு றெழுத்ததாகும்
ஏச்சப்பா பேதமெல்லா மெலுக்கேயாகும்
இயல்பாமைந் தெழுத்துமூன் றுருந்தானே, (3)

தானான குருமணியுங் கிரீடமாகும்
　　தண்மலரின் வாசமுட னில்லாதாகும்
கோனாக நேசித்தா லெல்லாமாகிக்
　　குறிநின்ற வாறுமுகங் காணலாகும்
வேனான பூரணத்திற் கால்நிறுத்தி
　　வினையமுடன் மூலமென்ற நாடிதன்னை
நானான சுழினையெனும் நாடிதன்னில்
　　நலியாமற் பூட்டிடரே சகமுஞ்செய்யே. (4)

செய்துயரும் பூரகம தாகநின்று
　　சேகரமாம் பூரணத்தைக் கொண்டாயானால்
வைபவமா யாறுமுகன் செயல்கடோற்றும்
　　வழுவன்றி யாதியந்தக் கருவறிந்து
உய்யவே மனதொன்றாய்ப் பூட்டுபூட்டு
　　உருதியாண் டொன்றினிலே பொறிதான்காணும்
துய்யனெனத் தன்மயமாய் நின்றபோது
　　தோற்றுஞ்சக் கரத்தோடக் கரமுந்தானே. (5)

கரமான தேனமுத மங்கேசிந்தும்
　　கண்டுண்டு நின்மனமுந் தெளிந்துகொள்ளு
பரயோகஞ் செய்வதற்கு மவுனம்வேணும்
　　பதறாமற் சற்குருவைக் காணவேணும்
திரமான கற்பமுடன் சமாதிவேணும்
　　தெளிவாக நந்தியுட பார்வைவேணும்
வரமான மெய்ஞ்ஞான மார்க்கமென்னும்
　　மகத்தான பூரணத்தின் சீலம்பாரே. (6)

சீலனே அண்டாண்ட பிண்டமெல்லாம்
　　சேகரமாம் பூரணத்தி னருளினாலே
கோலமுள்ள புற்பூடு தாபரங்கள்
　　குலவுமடா மதிகதிரும் சேர்க்கைபாரு
சாலமல்ல அகாரத்தில் உகாரந்தோன்றி
　　தன்மையுள்ள மகாரமொடு விந்துதானும்
நாலமென்ற விந்துவிலே அனந்தன்சோமன்
　　நாதாந்தத் திரோதாயி யென்பதென்றே. (7)

பரிபாஷை.

என்றதொரு உகாரமதிற் சத்தியோடு
இயல்வியா னன்சமா னன்விடப்பா
நின்றருளைத் தருகும்ஓம் ரூபியோடு
நேரனந்தை முதனுதை அனுதையான
குன்றாத சிறுதைதது யிவைநாலுந்தான்
குணமான சிவகலையென் றறிந்துகொண்டு
சென்றுபதி னறுகலைத் தீபம்பார்க்கத்
திறவுகோல் உகாரந்தான் மின்போம்சொக்கே. (8)

சொக்கியல்லோ மூலத்தில் முழங்கிநிற்கும்
துடியான அகாரமல்லோ விருதயத்துள்
அக்கினிசேர் பிரபையைப்போ லுற்றிருக்கும்
ஐயனே மகாரமது கண்டந்தன்னில்
முக்கியமாய் நின்றுகதிர் கோடிவீசும்
மூதண்ட விந்துமின் னொளிவதாகி
பக்குவமாய்க் கண்டத்தின் மேலதாகப்
பார்நான்கங் குலங்கடந்து நிற்குமென்னே. (9)

என்னவே புருவநடுச் சந்திரன்போல்
இலங்கிநின்ற சம்புபத முனக்குத்தோணும்
நன்னயமாய்த் தினந்தோறும் பழக்கஞ்செய்தால்
நாடியதோர் கற்பூரத் தேகமாச்சு
இன்னங்கே ளதன்மேல்மூவ் விரலேசென்றால்
ஏகாந்த நாதகலை மணிபோல்வீசும்
உன்னியே கால்மாறி யூன்றிப்பாரு
உச்சியிலே ரவிகோடி யொளிவுண்டாச்சே. (10)

உண்டாச்சு மாத்திரைதா னரைக்கால்வைத்து
ஊணிப்பார் பிடித்தவிடம் பொய்யாய்ப்போச்சு
கண்டறிவாய் காணாத மோனவீடு
கடந்ததங் குலம்நான்கு அப்பாற்செல்ல
பண்டுசுழி யாதசத்திக் கலைமின்போலப்
பளீரெனவே கதிரொளிபோற் காணுமங்கு
மண்டுமா காணிமாத் திரைதான்வைக்க
வளர்சுடரைப் போலாமுன் தேகமாமே. (11)

ஆமடா பராபரையி னடியைக்கண்டு
　　அப்புறம்நான் கங்குலந்தான் சென்றாயானால்
தாமடா வியாபினியின் கலைதானின்று
　　தபனனுட வொளிவீசு மங்கேநீயும்
வாமமரைக் காணிமாத் திரைபூசிக்க
　　மைந்தனே யுன்தேகஞ் சோதியாகும்
காமமடா மவுனமதாய்த் தோத்தரிக்க
　　நலமான சித்திமுத்தி வருமென்றோதே. (12)

ஓதப்பா வுச்சிவெளி கடந்துசென்றால்
　　உற்றசமன் கலைதளர்ந்து சோதிகாணும்
நீதப்பா மாத்திரைதான் கால்மாகாணி
　　நேராக மனக்கண்ணாற் போற்றிப்பாரப்
போதப்பா வுன்சடலங் காந்திமீறும்
　　புகழாக வுன்மனையை மேவிப்பாரு
வாதப்பா வல்லவிளங் கதிரோன்கோடி
　　வந்துதித்தாற் போலொளியும் வீசுந்தானே. (13)

வீசுமனைக் காணிமாத் திரைதானோத
　　விளங்குனது சடலம்பொன் மாற்றுமீறும்
பேசுமப்பா பிடித்தயிட மொன்றுமில்லை
　　பேணியண்ட ரண்டமெல்லாஞ் செல்லலாகும்
கூசுமோ சகலசித்தி யுனக்கேயாச்சு
　　குணயாயா தாரமா றதிமேலநின்றால்
ஆசுகத்தை யென்னசொல்வேன் சடலந்தானும்
　　ஆச்சுதடா கல்லாக வோர்ந்துபாரே. (14)

பார்த்தறிந்து வாசியுட மூலங்கண்டாற்
　　பண்பான சமாதிக்கு வழியுமாச்சு
சேர்த்தியன்றி யிதிலொன்று தப்பவிட்டாற்
　　சித்தெல்லாம் பொய்யாகப் போகும்பாரு
நேர்த்தியாய் நீயிருப்பா யவ்வாறின்றி
　　நிலையான மந்திரத்தை யாருங்காணார்
ஆர்த்தியா மூச்சுறீங் காரவித்து
　　ஆயதிரி கோணமூனை தோற்றுந்தானே. (15)

தோற்றவே மணிக்குளிகை முட்டியாடும்
　　தொடர்ந்துமோ ராண்டினிலே சித்தியாகும்
போற்றவே சிவாயநம அவ்வும்சவ்வும்
　　புகழ்ந்துகூட் டிடமுத்தி வழியதாகும்
சாற்றநடு வானசுழி முனையேமுத்தி
　　சத்திக்குச் சவ்வுண்டு சித்தியாகி
ஏற்றமுள்ள சதாசிவந்தான் அவ்வுமுண்டு
　　இயல்பான வைந்தெழுத்தைத் துதிசெய்வாயே. (16)

வாயவெழுத் தைந்தாலே மூன்றைப்பாரு
　　வல்லவெழுத் தெட்டதுவும் வாலையாச்சு
நேயமந்த வெழுத்தாலே மனத்தைப்பாரு
　　நின்றகரு சுயம்புலிங்கந் தானேதோணும்
தாயகம தானவைந் தெழுத்தைப்பற்றி
　　தாணுவா மோரெழுத்தை யாவர்காண்பார்
நாயகத்தைக் காணரிது மூலசூட்சம்
　　நாடியறிந் தவன்சித்தன் முத்தனாமே. (17)

ஆமப்பா வழியறிந்து செல்லுதற்கு
　　ஆகாது மாந்தரால் சுழிதிறந்து
காமப்பா மேலாறுஞ் சுடர்விட்டாப்போல்
　　நாடிமனம் பேயாகு முன்பின்பார்த்து
ஓமப்பா குருவறிந்து வொண்டிநில்லு
　　உற்றசுழி னைக்குட்கற் பூரதீபம்
தாமப்பா வாசிகொண் டேறித்தானும்
　　தணல்தூண்டி நிராதாரங் கடந்தப்பாலே. (18)

அப்பாலே சுழினைசென் றதனைப்பற்றி
　　அகலவிட்ட நாலதனைத் தானடைந்து
செப்பாம லிகம்விட்டு பரத்துள்ளாகத்
　　திடமான மனமதுமா ருட்டஞ்செய்யும்
தப்பாது நிலைக்கசிவ யோகியாகும்
　　தயவான வசியவென்றும் யவசியென்றும்
ஒப்பாகச் சிவயவென மூன்றுமாறும்
　　உறுதியுடன் பிராணய மென்றதாச்சே. (19)

ஆச்சப்பா யிருதரந்தான் றிறந்தாயானால்
அமுதமது சிந்தும்பொன் னிறமாந்தேகம்
பேச்சப்பா பிராணயம் நேமம்யேமம்
பேலத்திடவே யோகத்திற் குறிகண்ணூட்டி
வாச்சப்பா கும்மென்ற நாதத்துள்ளே
மகிழ்ந்துஉம் மம்ஆம்ஊம் மென்றேவோது
நீச்சப்பா உம் அம் மம் ஓமென்றேத்து
நிலையான அஷ்டசத்தி யெழுத்தாமீதே. (20)

ஈதாகு மைந்தெழுத்து மூடேமாறு
எட்டெட்டுச் சர்மமது மிதனாலாடும்
ஆதார மானதெல்லாந் தருகும்பாரு
அருளான சிவவாலை யெழுத்துங்கூட்டிக்
கோதான தன்றிநீ தாக்கினாக்கால்
குறிப்பாகக் காயசித்தி சகலசித்தி
மூதாக்கள் தெரிசனையுண் டாகுமப்பா
முனையாக றீங்கார மதனிற்பூட்டே. (21)

பூட்டியல்லோ சிவவாலை யெழுத்தைமாறிப்
புதைத்து வைத்தார் பலநூலிற் கண்டுதேறு
காட்டினிலே தேறவென்று லென்னூற்பாரு
நல்லமுத மாயிரத்தெண் மலரில்நிற்கும்
தேட்டமுடன் சென்றக்கா லொளிவுண்டாகும்
தெரிமூலம் கும்பசபூ ரகத்திறேனேடு
வாட்டமிலா ரேசகமுஞ் செய்யமுதத்தி
வாய்க்குமடா மெய்யாமின் னூலதாமே. (22)

பராசரிஷி ஞானோபதேசம் உஉ.

முற்றிற்று.

மதுரை திண்டுக்கல்ரோட் சிவராஜயோகி ☞ பங்காருசாமியார் அவர்கள் குமாரர் ☞ முத்தியாலு நாயுடு அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

முருகன் துணை.

இருபத்திநான்காவது:

தேரையர் திருவாய்மலர்ந்தருளிய

# நவலோக பற்பம் ௰௬.

கங்கைபிறைச் சடைக்கணிந்த பரமனீன்ற
    கணபதிதன் னிருசரணங் கருத்தில்வைத்து
எங்கள்பிரான் குருமுனிவன் பாதம்போற்றி
    எனையாண்ட தன்வந்திரி குருதாள்போற்றி
மங்களஞ்சேர் நால்வேதந் தன்னிலுள்ள
    வாகடசூத் திரமதனை வகுத்துப்பார்த்து
அங்கமுள்ள நவலோக நீற்றினத்தை
    அழகாகப் பதினாறி லருளுவேனே. (1)

அருளுவேன் முன்னுரைத்த நூல்களெல்லாம்
    அரகரா சாரத்தால் நீறய்நீறும்
பெரியோர்களுரைத்ததினாற் காரசாரம்
    பெருமையினால் நீத்தினங்கள் பெலமுண்டாச்சு
தெரியாத நாயடியேன் சித்தருக்குச்
    சீஷனெனுந் தேரையனான் செப்பும்நூலிற்
பெருமையெனும மூலிகையால் நவலோகத்தைப்
    பெலமாக நீத்தும்வகை பேசுவேனே. (2)

அயபற்பம்.

பேசுமயத் தகடுநெற் கனமாய்த்தட்டிப்
    பிசகாம லேயடித்துக் கழுவிப்போடு
கூசுகிறேன் செம்முருங்கை வேரைவாங்கிக்
    குணமாக வேஅரைத்துக் கவசங்கட்டித்
தூசுகிறேன் ஏழுசீலை மண்ணுஞ்செய்து
    சுருக்கமாய்க் கெசபுடத்திற் போடுபோடு
வீசுகிறேன் அத்தகடு நீறிப்போகும்
    மேல்வீக்கம் பாண்டுவெல்லாம் விட்டுப்போமே. (3)

தங்கபற்பம்.

போகுமே பொன்காசு தன்னைவாங்கிப்
பூநாக மொருகளஞ்சி பொடித்துக்கொண்டு
ஏகுமே அணிக்கிழங்கு பலமுங்கூட்டி
இரண்டையுமே கல்வத்தி லரைத்துக்கொண்டு
ஆகுமே காசுதன்னைப் பொதிந்துருட்டி
அப்பனே சீலைமண் ணேழுசெய்து
சேகரமாய்க் குக்குடத்தின் புடத்தைப்போடு
செயலான சொர்னபற்பந் திறத்தைப்பாரே. (4)

தாம்பூரபற்பம்.

பாரப்பா சொர்னத்தால் மேகரோகம்
பயந்துபோ மனுப்பான மறிந்துண்டாக்கால்
சீரப்பா தாம்பூரத் தட்டுவாங்கிச்
சிவக்கவே காய்ச்சிவிடு எருக்கம்பாலில்
நீரப்பா குளச்சிங்கி விராகனஞ்சு
நிசமான அணிக்கிழங்கு விராகனஞ்சு
கூரப்பா ரெண்டையுமே ஆட்டிமைப்போற்
கூசாமற் றட்டுக்குக் கவசங்கட்டே. (5)

கட்டியதோர் கவசத்தைக் குகைக்குள்வைத்துக்
கனமாகச் சீலைமண் ணேழுஞ்செய்து
திட்டமாய் முப்பதெரு புடத்தைப்போடு
செம்புசெய மாகவல்லோ பற்பமாச்சு
மட்டிகளே தெரியாதோ யினிமேலுந்தான்
மலைபோலே வந்தபிணி வாங்கா துண்டோ
கெட்டியாய்ப் பத்திரஞ்செய் யிந்தநூலைக்
கிடைத்தாக்கால் பராபரத்தின் கீழ்நிற்பீரே. (6)

வெள்ளிபற்பம்.

நிற்பதற்கு வெள்ளியென்ற ரூபாய்தன்னை
நிலக்குமிழம் பழச்சாற்றிற் காய்ச்சித்தோய்த்து
அற்பமில்லாச் சவணரிலை சமூலம்வாங்கி
அரைத்தவுடன் கவசமிட்டுக் குகைகள்மூடி
உற்பனமாய் ஐம்பதெரு புடத்தைப்போடு
ஓகோகோ இந்தநீ ருசத்திமெத்தக்
கற்பமிது வல்லாமல் வேறேவுண்டோ
கண்ணேறெய்தொண் ணூற்றூறுங் கடலிற்போமே. (7)

காரீயபற்பம்.

கடல்காணுங் காரீயந் தன்னைவாங்கிக்
சுருத்தாட்டு நீர்தனிலே சுத்தியாக்கித்
திடமாகத் தகடுதட்டி நெற்கனத்திற்
செப்புகிறேன் நாயுருவி சிவந்தவேரு
மடலான சிறுதேக்குப் பூவுங்கூட்டி
மைந்தனே இருவகையுஞ் சரியாயாட்டிப்
படபடன்று செய்யாதே கவசங்கட்டிப்
பாங்கான சட்டியிலே பதித்திடாயே. (8)

பதித்தவுடன் மேற்சட்டி கொண்டுமூடிப்
பாங்கான ஆட்டெருவைக் குழியிற்கொட்டிக்
கதித்தசட்டி தனில்வைத்து மேலுமந்தக்
கருத்தாட்டுப் புழுக்கைகொட்டிப் புடத்தைப்போடு
குதித்தாறி யெடுத்துப்பார் பற்பமாச்சு
சூதபற்ப மிதற்கீடாய்ச் சொல்லப்போமோ
எதிர்த்துமுன்னே நிற்காது மேகரோகம்
இதுபோலே சுருக்கொன்று மில்லைத்தானே. (9)

வெள்வங்கபற்பம்.

இல்லையென்று சொல்லாமல் வெள்வங்கத்தை
எருமைமோர் தனிற்சாய்க்கச் சுத்தியாகும்
தொல்லையே பண்ணமற் றகடுதட்டிச்
சுடுசோடு மீட்டான்வேர் தூளாய்ப்பண்ணி
மெல்லவே தகட்டுக்கு நாலுபங்கு
மேலுமிட்டுக் கீழுமிட்டுச் சட்டிக்குள்ளாய்
வல்லமையாய்ச் சீலைமண் ணேழுஞ்செய்து
வாகுமுழப் புடம்போடப் பற்பமாச்சே. (10)

நாகபற்பம்.

ஆச்சப்பா நாகத்தைக் கொண்டுவந்து
அழகான மிலுப்பைநெய்யி லுருக்கிச்சாய்க்கப்
பேச்சப்பா சொல்லவில்லை சுத்தியாகும்
பிசகாமற் றகடுவெகு லேசாய்த்தட்டித்
தாச்சப்பா கீழ்க்காயின் நெல்லிவேரும்
சாரணைவேர் பொடியாகச் சமனாய்ப்பண்ணி
நீச்சப்பா சட்டிக்குட் டகடுவைத்து
நிசமாகக் கீழ்மேலும் பொடியமுக்கே. (11)

### பித்தளைபற்பம்.

பொடியமுக்கிச் சீலைமண்ணும் கன்றும்ச்செய்து
புசமாக வராகமெனும் புடத்தைப்போடு
துடிமிகுந்த நாகமது பற்பமாச்சு
சுருக்கான நவமூலம் மாண்டுபோகும்
கொடியதொரு பித்தளைக்குச் சமுத்திரத்தின்
கொடும்பாசி தனைக்கவசங் கொடுத்துக்கொண்டு
திடமான புடம்போடப் பற்பமாகும்
தீராத காமாலை தீருந்தானே. (12)

### வெண்கலபற்பம்.

தானென்ற வெண்கலத்தைக் காணச்சாத்தில்
தயவாக வேயுருக்கிச் சாய்க்கச்சுத்தி
வேனென்ற கஞ்சமதைப் பலத்துக்கையா
வெள்ளையென்ற கண்டங்கத் திரியின்மூலம்
தேனென்ற மெழுகதுபோ லாட்டிக்கொண்டு
திடமாகக் கவசமிட்டுக் குகைக்குள்மூடி
வானென்ற வராகபுட மிட்டாயானால்
மைந்தனே பற்பமது வயனமாமே. (13)

### திராப்பற்பம்.

வயனமாந் திராத்தகடு செற்கனத்தில்
வளமாக வேயடித்துப் பழங்காடிக்குள்
தயனமா யேழுதரஞ் சாய்ச்சித்தோய்க்கச்
சண்டாள ஊறலற்றுச் சார்ந்தேநிற்கும்
பயனமாஞ் சிறுதேக்குப் பூவரைத்துப்
பாங்காகக் கவசமிட்டுப் புடத்தைப்போடு
அயனமாம் பற்பமது தவளமாகும்
அரகரா மேகமெல்லாம் அணுகாதென்றே. (14)

### உருக்குப்பற்பம்.

அணுகாத உருக்குஒரு உளியைவாங்கி
அரைவிரற் கடைக்கனத்தில் நீட்டிக்கொண்டு
குணுகாதே சிறுநீரிற் சாய்ச்சித்தோய்க்கக்
கூர்மையுள்ள உருக்கதுவுஞ் சுத்தியாகும்
பணுகாது பசுந்தேறல் இலையரைத்துப்
பாங்காகத் தேங்காய்போற் கவசங்கட்டி
முணுகாமல் ஐம்பதெருப் புடத்தைப்போடு
மோசமில்லை பற்பமது முத்துநீரே. (15)

முத்துநீர் தன்னாலே வியாதியெல்லாம்
　　முன்னிற்க மாட்டாது சிதறிப்போகும்
குத்தமில்லை நான்சொன்ன பற்பத்துக்குக்
　　கூர்மையா யனுப்பான மறிந்துண்டாக்கால்
பித்தமில்லை வாதமில்லை சிலேற்பனத்திற்
　　பிறந்தபல ரோகமெல்லாம் பிரிந்துபோகும்
சுத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் என்னூல்மார்க்கம்
　　தப்பாது தேரையர்சொல் தமிழுமுற்றே. (16)

தேரையர் நவலோக பற்பம் ௧௬.

முற்றிற்று.

மதுரை வடக்குமாசிவீதியி லிருக்கும் பாத்திர வியாபாரம் ந. ரா. ம. கணபதிபிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

இருபத்தைந்தாவது:

தேரையர் திருவாய்மலர்ந்தருளிய

# சிவபூஜாவிதி ௭௫,

அருவாகி யுருவாகி அகிலமாகி
ஆதிமூலமதாகி அங்கங்காகித்
திருவாகிச் சுடர்மணியி னொளிவதாகித்
திகழ்கின்ற ஐம்பூதத் தோற்றமாகிக்
கருவாகி வித்தாகி வஸ்துமாகிக்
களங்கமில்லா தொளிர்கின்ற தீபமாகிக்
குருவாகி மெய்ஞ்ஞானப் போதனாகிக்
குலவுகின்ற சோதிபதங் காப்பதாமே. (1)

ஆமப்பா மாயைபொய் கோபந்தள்ளு
அறிவில்லா மாந்தருடன் கூடிடாதே
தாமப்பா ஞானபூ ரணத்தைக்கண்டு
தற்பரையைப் பூசித்துப் பானஞ்செய்து
வாமப்பா ஆறுவரை யூதிசென்று
வளமான பொருளறிந்தே அதனிற்கூடு
நாமப்பா மூன்றெழுத்தின் குறியைக்கேளு
நங்கென்ன வாசியுள் ளடங்கும்பாரே. (2)

பாரப்பா சிங்கென்ன சூட்சங்காணும்
பண்பாக மங்கென்ன யோகஞ்சித்தி
தேரப்பா மகாரத்தை வாங்கலாகும்
தெளிவான சிகாரத்தை விடுகலாகும்
நேரப்பா இங்கிதுவொண் டுக்குமாகும்
நிலையான தீட்சையிது மவுனவாலை
சேரப்பா யாவருக்குஞ் சித்தியாகும்
தெரிந்தவர்க்குச் சாயமற்றுப் போகுமென்னே. (3)

என்னவெழுத் தொன்றுமூன் றானவைந்தும்
இயல்முப்பா னீர்தீட்சை சர்வசித்தி
நன்னயமாய் மோகனதம் பனமுமீசன்
நாரணியின் பாதமல ரிதனுள்ளென்று
தன்மயமாய்க் காணாமற் கோடாகோடி
சற்குருவை யறிந்திடா திறந்தாரப்பா
அன்னவர்போ லாகாமல் உய்வதற்கு
அருளான வழியொன்று புகலக்கேளே. (4)

கேளப்பா மகாரமங்கு மதிவில்வாங்கி
கெடியாக வதட்டித்தன் னுள்ளேவாங்கு
காளப்பா சகாரசுழி சங்கென்றானு
நாடியே புருவம்பார் பசுமைகாணும்
வாளப்பா மெய்யாகும் வித்தையெல்லாம்
வளமாயோ ரிதழுக்கு ளமுதக்கண்டு
நீளப்பா வாசிதனைப் பற்றிக்கொண்டு
நிலையான் மூவெழுத்தைக் காணநன்றே. (5)

நன்றான பேரின்ப வாசிசேர்க்கும்
நாடிநின்ற இருளகன்று சோதிகாணும்
தன்மையுடன் நமசிவய தம்பனந்தான்
தானான யவசிமந வசியமாகும்
முன்னின்ற சிவயநம வுச்சாடந்தான்
முயங்கிநீ வசியநம அழைப்பதாகும்
ஒன்றான நயவசிம மோகனந்தான்
உருவுவய நமசியும்வித் வேடமாமே. (6)

வேடமெனும் மநயவசி பேதனந்தான்
வினையமுடன் மசிவயந மாரணந்தான்
நாடவே அஷ்டகர்ம் மாடுதற்கு
நலமாக இவ்வெழுத்தைத் தியானஞ்செய்யத்
தேடவே மூன்றெழுத்தைக் கூட்டியோதத்
திடமாக வெட்டெட்டுஞ் சித்தியாகும்
கூடவே கருமமொன்றுக் குருலெட்சந்தான்
தீரமுடன் செய்திடவே சித்தியுண்டே. (7)

உண்டாகும் ஓமென்ற வட்சரத்திற்
கொளிவுடனே யுமைபர்தம் யோகங்காணும்
தொண்டுசெய்ப் பிராணுயஞ் சித்தியாகும்
சுத்தவெழுத் தாமென்ப மதியுங்காணும்
மண்டலத்திற் பரவெளியி னறிவிற்சேர்க்கும்
மைந்தாசீ மென்றதற்குத் தெளிவுகாணும்
பண்டான வட்சரங்கள் சிங்குவங்கு
பண்பான வங்கென்னல் வகாரந்தானே. (8)

தானான வகாரமல்லோ அழைப்புவித்தை
சகலமுமே கைவசம்யங் காயபீடம்
கோனான பதங்காணும் அறிவுண்டாகும்
கூறுகிறேன் றிங்கென்னு மிடத்தைக்கண்டால்
ஊனான வுன்றேகம் நிலைக்குமப்பா
உங்கென்று பொசிக்கவே யெல்லாமாகும்
வானான விட்டகுறைக் கமுதமுண்ணு
வல்லதொரு ஞானியென விருதுவாங்கே. (9)

வாங்கப்பா மாயையிலே சேர்ந்திடாதே
வாகாய வெளியறிந்தால் ஞானம்வாய்க்கும்
சோங்கான வெளிக்குள்ளே யிருந்தமூலி
சூட்சமுடன் வேகாமற் றயிலம்வாங்கி
பாங்காகக் காசிடைதான் புசித்தாயானல்
பாலகனே நரைதிரையு மண்டிடாது
ஓங்காரப் பொருளதனைக் கண்டுகொள்வாய்
உத்தமனென் றேசித்த ரழைப்பார்பாரே. (10)

பாரப்பா மெய்க்கண்ணால் மெய்யைக்காண
பராபரத்தின் மெய்ஞ்ஞானந் தோணுந்தோணும்
சீரப்பா யின்னமொன்று வட்டம்போடு
தேவியுட முக்கோணம் நடுவேபோடு
வீரப்பா சூலமிட்டு அதற்குள்ளாக
விளங்குகின்ற பிரணவமும் மெனவேநாட்டிக்
காரப்பா வடமுகமா யிருந்துகொண்டு
கருத்தான யுத்திதா வேணுமென்னே. (11)

என்னவே வலக்கரத்தில் கடத்தைவாங்கி
இயல்பான மோகனத்தின் சாபந்தீர்த்து
நன்னமாய்த் தாய்பதத்தில் மலர்கள்தூவி
நாடியே அன்னமொடு அண்டஞ்சுத்தி
இன்னம்பல் பலகார வகையும்வைத்து
இயல்பாகப் பூசிப்பாய் தீபங்காட்டி
சின்மயமாஞ் சிற்பரையைக் கண்டாயானால்
சித்திபெற்று முத்தனென வாழ்வாய்பாரே. (12)

பாரப்பா சிதம்பரத்தை யிருபத்தைந்தால்
பரிவாகச் சிறுவீடாய்ப் பதிந்துகொண்டு
நேரப்பா வசியமென்ற வகாரத்தாலே
நிலையாக முதல்வரையில் வரிசைகொண்டு
கோரப்பா மறுவரையில் அகாரத்தாலே
கூட்டியல்லோ பதிந்துகொண்டு குணந்தான்பாரு
மூரப்பா மூவரையில் நகாரத்தாலே
முடிவாகப் பதிந்துகொண்டு முயற்சிபாரே. (13)

பாரப்பா நால்வரையில் மகாரத்தாலே
பரிவாகப் பதிந்துகொண்டு பாருபாரு
ஆரப்பா ஐவரையில் சிகாரத்தாலே
அப்பனே பதிந்துகொண்டு ஆட்டம்பாரு
சேரப்பா மேலரைஓங் ஓங்காரபீசம்
நிலையான ரீங்காரம் ஐங்காரந்தான்
தேரப்பா யிப்படியே பதிந்துகொண்டால்
தெளிவான சிதம்பரந்தான் சித்தியாமே. (14)

சித்தியாம் வாலையுட நிஷ்டைவேணும்
சிதம்பரந்தா னப்பவல்லோ வசியமாகும்
பத்தியாம் பரத்தினுட சோதிகாணும்
பரிவான சிதம்பரந்தான் பழக்கமாகும்
முத்தியாம் மோட்சவித்தின் குறிதான்காணும்
மோகனந்தான் கைவசிய மாகும்பாரு
சத்தியாஞ் சிவசத்தி சக்கரந்தான்
சகலசித்து மாடுமடா சதுராய்ப்பாரே. (15)

பார்க்கவென்றால் சும்மாதான் பார்க்கலாமோ
பாங்கான குருவினனுக் கிரகம்வேணும்
தேர்க்கவென்றால் குருவுக்குக் கேட்டதெல்லாம்
தெளிவாக அவர்மனதைத் திருப்திசெய்து
ஊர்க்கவென்று லொவ்வொன்றால் வாங்கிக்கொள்ளு
உத்தமனே ஒன்றுக்கு வருஷம்பாரு
கோர்க்கவென்று லப்படியே கோர்க்கவேணும்
கோடிதன மீய்ந்தாலும் வாராதப்பா. (16)

வாராது சிதம்பரத்தின் வகையைக்கேளு
வரிசையா யஷ்டவித்தை யாடவென்றால்
தோராது சிதம்பரந்தான் தோணுதப்பா
துரிதத்தைக் கடந்துநின்றால் தூக்கியாடும்
ஏராது சிதம்பரத்தை யிந்தபேரை
யெளிதாக நினைத்துவிட்டா லேறுதப்பா
பாராது சிதம்பரந்தான் பாராதப்பா
பாங்காக வந்தவித்தை யெல்லாம்போமே. (17)

போகுமடா அஷ்டாங்க யோகம்போகும்
பெரியபுகழ் வாசியுட யோகம்போகும்
வேகமடா குருவினுட வேகம்மெத்த
விதிமுறையாய்ச் சொன்னமுறை மறந்திட்டாக்கால்
காகமடா போலாகப் பறப்பார்பாரும்
காணாத பருந்ததுபோ லாவார்பாரும்
நாகமடா சிதம்பரந்தா னாகமப்பா
நல்நாகம் போலேயடா பழக்கம்பாரே. (18)

பாரப்பா சிதம்பரத்தை யெண்பத்தொன்றால்
பரிவாக நடுவீட்டில் வகாரம்மாட்டு
நேரப்பா வீடதுதா னெட்டுக்குள்ளே
நிலையான யகாரத்தை மாட்டுமாட்டு
வாரப்பா பதினாறு வீட்டுக்குள்ளே
வரிசையுடன் நகாரத்தை மாட்டிக்கொள்ளு
ஓரப்பா யிருபத்து நாலுவீட்டில்
உத்தனே மகாரத்தை மாட்டிக்கொள்ளே. (19)

கொள்ளப்பா முப்பத்தி ரண்டுவீட்டிற்
குறிப்பான சிகாரத்தை மாட்டிக்கொண்டு
நள்ளப்பா நடுவீட்டில் ஓங்காரந்தான்
நலமான றீங்காரம் ஐங்காரந்தான்
விள்ளப்பா முப்பத்தி ரண்டுவீட்டில்
வெளியாகச் சூலமது யிட்டுக்கொள்ளு
அள்ளப்பா அப்படியே ஆடுந்தோறும்
அப்பனே சிதம்பரந்தா னாடும்பாரே. (20)

ஆடுமடா மோகனத்தை யறியச்சேனு
அப்பனே சிதம்பரத்தை இருபத்தைந்தால்
நாடுமடா முதல்வரையில் மகாரம்நாட்டு
நலமான வீடதுதான் மூன்றுக்குள்ளே
ஓடுமடா ஓங்காரம் றீங்காரந்தான்
உத்தமனே ஐங்காரம் உயரப்போடு
வாடுமடா மறுவரையில் சிகாரம்மாட்டு
வரியான மூன்றுவரை வகாரம்மாட்டே. (21)

மாட்டப்பா வரைதானும் நாலுக்குள்ளே
வரிசையுடன் யகாரத்தை மாட்டிப்போடு
ஆட்டப்பா வரைதானும் அஞ்சுக்குள்ளே
அப்பனே நகாரத்தை மாட்டிக்கொண்டு
வீட்டப்பா முதல்வரையைத் தொட்டுக்கொண்டு
வெளியெல்லாஞ் சூலத்தை மாட்டிப்போடு
நாட்டப்பா வுன்மனதைச் சக்ரத்துள்ளே
நலமாகப் பூரணத்தை நாட்டிப்பாரே. (22)

பாரப்பா சிதம்பரத்தை யெண்பத்தொன்றில்
பரிவான மோகனத்தைப் பார்க்கவென்றால்
நேரப்பா நடுவீட்டில் மகாரம்மாட்டு
நிலையான வீடதுதா னெட்டுக்குள்ளே
சீரப்பா சிகாரத்தை மாட்டிக்கொண்டு
சிறப்பான சோடசத்தில் வகாரம்மாட்டு
ஈரப்பா யிருபத்து நாலுக்குள்ளே
இருப்பான யகாரத்தை மாட்டுமோட்டே. (23)

மாட்டப்பா முப்பத்தி ரண்டுக்குள்ளே
மனம்வரவே நகாரத்தை மாறிப்போடு
வீட்டப்பா முப்பத்தி ரண்டுக்குள்ளே
வெளியாகச் சூலத்தை மாட்டிக்கொண்டு
நாட்டப்பா வரைதானும் நால்தான்போடு
நலமாக வாசலது நால்தான்காணும்
ஓட்டப்பா வரைக்குள்ளே சிறிங்காரமிட்டு
உத்தமனே மோகனத்தி னுறுதிபாரே. (24)

பாரப்பா மோகனத்தைப் பார்த்தபேர்கள்
பரிவான ரிஷிகளிலே கோடாகோடி
நேரப்பா சித்தரிலே யனந்தங்கோடி
நிலையான ஞானிகளில் நிலைத்தபேர்கள்
ஊரப்பா வனந்தமுண்டு சொல்வேன்கேளு
உத்தமனே மோகனத்தின் பெருமைமெத்த
ஆரப்பா அறிந்துநன்றாய்ச் செய்தபேர்க்கு
அப்பனே மோகனந்தான் சித்தியாமே. (25)

சித்தியாஞ் சித்தினுட வாலேகேளு
சிதம்பரத்தில் மோகனமும் வசியம்வேணும்
உத்தியாம் அகாரமது உள்ளேபோடு
உத்தமனே றீங்காரம் வளையம்போடு
பத்தியாய்க் கோணமது மூன்றேபோடு
பாங்கான கோணத்திற் சூலம்போடு
சத்தியா யிடைப்பக்கம் ஐங்காரந்தான்
சதுரான சிரசில்கிலீங் காரந்தானே. (26)

தானான வலப்பக்கஞ் சவுங்காரந்தான்
தாக்குமதன் பேரில்பிர ணவத்தைப்போடு
வானான வலப்புறம்வங் கென்றுவாங்கு
வகையிடது புக்கம்நங் கென்றுமாட்டு
சீனான சிங்கென்று பக்கம்பூட்டு
சிதையாம லதினெதிரே யங்கென்றேதது
நானான வாசலது நாலுகாணும்
நலமாக வதற்குள்ளே சூலம்போடே. (27)

போடப்பா சூலமது யெட்டுப்போடு
பெரிதான சந்ததுதான் வைக்கவேண்டாம்
வேடப்பா சிதம்பரமும் சித்துவாலே
வெளியில்லாச் சிவயோகங் காணவென்றால்
ஆடப்பா அறிந்தவரைக் கண்டுவாங்கு
அப்பனே இவைகளைத்தான் வாங்கிக்கொண்டு
ஏடப்பா யிப்படியே ஏற்றிவாரீ
எளிதல்ல சிவயோகங் காணும்பாரே. (28)

பாரப்பா மயேசுரன்றன் பூசைகேளு
பரிவான தேவியைத்தான் நிறுத்திக்கொண்டு
நேரப்பா நால்வரைத்தான் காவல்வைத்து
நிலையாக வஸ்துவுக்குஞ் சுத்திக்கப்பா
ஆரப்பா சாபமது யிட்டதென்றால்
அப்பனே அடவாகச் சொல்வேன்கேளு
ஏரப்பா என்னுடைய சாபமொன்று
இபலான மகேசருட சாபமொன்றே. (29)

ஒன்றான சுக்கிரன்றன் சாபமொன்று
உத்தமனே நவசித்தர் சாபமொன்று
அன்றான ஐவருட சாபங்கேளு
அப்பனே யைவரிலே பிரமசாபம்
நன்றான விஷ்ணுவுட சாபமொன்று
நலமான ருத்திரன்றன் சாபமொன்று
மன்றான மயேசுரன்றன் சாபமொன்று
வகையான சதாசிவத்தின் சாபம்பாரே. (30)

பாரப்பா சாபத்தை நிவர்த்திபண்ண
பரிவான கொங்கணர்தன் காண்டமூன்று
நேரப்பா கடைக்காண்டம் அஞ்ஞூறுள்ளே
நிலையான சாபத்தை நிவர்த்திசெய்தார்
ஆரப்பா அப்படியே ஒவ்வொன்றாக
அப்பனே ஆறிரண்டு ஆயிரந்தான்
ஓரப்பா வொன்பதுபேர் சாபந்தீர்க்க
உத்தமனே யெடுத்ததெல்லாஞ் சித்தியாமே. (31)

ஆகுமடா லட்சத்தெண் ணாயிரந்தான்
அப்பனே உருப்போட்டு அப்பாற்கேளு
வேகமடா தற்பனம்பன் ணயிரந்தான்
விதிமுறையா யெண்ணூறு வகுத்திட்டேனே
ஓகுமடா ஆயிரத்தி யெண்ணூறப்பா
உத்தமனே நூற்றெட்டுப் பிராமணர்க்கு
ஏகமடா யிப்படியே யீய்ந்தாயாகில்
எடுத்ததெல்லாஞ் சாம்பிராணி வாடைகாணும். (32)

காணவே வஸ்துவுக்கு வடமாலைசூட்டு
கருத்தாக யிருகையி லெடுத்துக்கொண்டு
பூணவே ஒன்பதுபேர் சாபந்தீர்த்து
புத்தியுள்ள மைந்தனே புகலுவேன்கேள்
தோணவே குடத்தைவைத்து துவாதசாந்தம்
தூக்காகப் பார்த்துநன்றாய்த் துரியம்பார்த்து
வாணவே காலதுதான் மூணுபேரில்
வகையாக வைத்துவிட்டு வரிசைகேளே. (33)

கேளப்பா சத்திக்கு பூமாலைசூட்டு
கெடியாகப் பாத்திரந்தான் ஆறுவைத்து
தேளப்பா வஸ்துவது நிரம்பவிட்டுத்
தெளிவாக வாலையைத்தா னர்ச்சித்தப்பா
நாளப்பா யிப்படியே நாள்தோறுந்தான்
நலமாக மயேசுரத்தி லமுந்துவாய்நீ
ஆளப்பா ஆதிசத்தி பீடங்காணும்
அப்பனே கும்பதிகம் வேண்டாம்பாரே. (34)

பாரப்பா ஆதாரம் ஆறுண்டப்பா
பரிவான தேவதைதான் ஆறேயுண்டு
நேரப்பா யிதற்கதிகம் வேண்டாம்பாரு
நிலையாக ஐவரைத்தான் நிறுத்தலாகும்
மூரப்பா மூவரவ ராகும்பாரு
முன்பாக யிருவரவர் சிவமுஞ்சத்தி
ஓரப்பா ஒருவர்நின்று செய்தாராகில்
உத்தமனே பலனதிக மொன்றுண்டாமே. (35)

ஒன்ருகப் பாத்திரந்தா னுறுவாங்கு
உத்தமனே யிருவர்நின்ருல் தேவையில்லை
நன்ருக யிருவர்நின்ரு லுத்தமாகும்
நலமாக ஆறுக்குள் நயந்துபாரு
ஒன்றென்றுக் குப்பாத்தி ரந்தான்மூன்று
உத்தமனே யிடக்கையிற் கொடுத்துவிட்டு
வன்ருக வலக்கையிற் சுத்தியீந்து
வகையாகச் சாபத்தை நிவர்த்திபண்ணே. (36)

பண்ணப்பா வாரமது கேளுகேளு
பரிவாஞ்சுக் கிரவாரம் சோமவாரம்
அண்ணப்பா அமாவாசை பருவந்தானும்
அப்பனே கிராணவுச்ச காலந்தன்னில்
நண்ணப்பா நவராத்ரி காலந்தன்னில்
நல்லகல சந்திலாவா கனமும்பண்ணு
ஒண்ணப்பா ஓமமது ஆயிரந்தான்
உத்தமனே செய்துநன்ரு யுறுதிபாரே. (37)

பாரப்பா ஓமத்தின் சமர்த்தைக்கேளு
பரிவான தாமரையின் பூவின்றண்டு
நேரப்பா ஒருசாண்தான் வைத்துநன்ருய்
நிலையான நூல்களெல்லாஞ் சுற்றிக்கொண்டு
ஆரப்பா ஆயிரமா குதியும்பண்ண
அப்பனே பலனதிகங் கோடாகோடி
வேரப்பா நூலைத்தான் திரியாய்ச்செய்து
விளக்கிலிட்டு நெய்விட்டு வெளியாய்க்காணும். (38)

காணுமடா சிதம்பரர்க்கு வில்வத்தாலே
காணவே ஆயிரத்து யெட்டுமீயத்
தோணுமடா யோகமஷ் டாங்கந்தோன்றும்
துரிதத்தி லாத்தாள்தான் தெரிசிப்பாள்காண்
பூணுமடா உன்மனதை யதிலேயூணு
புகழான மோகனமும் வசியமாகும்
நாணுமடா புத்திரனுஞ் சம்பத்தாகும்
நலமாக லோகமெல்லாம் நாட்டமாமே. (39)

நாட்டமாம் இஞ்சிநடு பரநதான்கோடி
நலமான வாலைமடா கோடியென்று
வாட்டமாம் வாலைக்கு வாலைபீசம்
வகையான சிதம்பரர்க்குச் சிவபீசந்தான்
ஓட்டமாம் உருப்போட்டுக் கணக்கையென்று
உத்தமனே கேட்டதெல்லா மீவார்பாரு
ஆட்டமாம் ஆகாய சித்தர்வந்து
அப்பனே குளிகையது யீவார்பாரே. (40)

பாரப்பா சிவயோகம் பண்ணும்பேர்க்குப்
பரிவாக நித்திரைதான் வேண்டாமப்பா
நேரப்பா இரவில்நித் திரைதான்பண்ண
நிலையாகச் சூட்சமொன்று நிகழ்த்துவேன்கேள்
வாரப்பா வரிசையாய்க் கால்தான்நீட்டி
வகையாக நித்திரைதான் பண்ணவேண்டாம்
ஓரப்பா ஒருபக்க மாகச்சாய்ந்து
உத்தமனே மேற்கையை மேற்கொள்வாயே. (41)

கொள்ளப்பா ஒன்றின்மேற் சாய்ந்துகொண்டு
குறிப்பாக நித்திரையும் செய்துநீங்க
அள்ளப்பா அஷ்டாங்க யோகம்பாரு
அப்பனே சிவயோகம் வாசியோகம்
நள்ளப்பா பிராணாய மவுனயோகம்
நலமான மவுனத்தின் யோகம்பாரு
வள்ளப்பா வாசியது கீழ்நோக்காது
வகையாக மேனோக்கி யேறும்பாரே. (42)

ஏறுமடா சுவாசமது ஏறிப்பாயும்
இகபரமா யமுதமது சொரியும்பாரு
வாறுமடா வண்டில்போல் சுழன்றுகாணும்
வகையாக நித்திரைதான் வேண்டாமப்பா
தாறுமடா தமர்வாசல் திறந்துதானால்
தாக்கான தேவியவள் தெரிசிப்பாளே
ஆறுமடா ஆறதல மறியக்காணும்
அப்பனே தேவதைதான் ஆறக்காணும். (43)

காணுமடா அஷ்டாங்க யோகங்காணும்
கடிதான சிவயோகங் காணும்பாரு
பூணுமடா பிராணாயம் வாசியோகம்
பெரிதான கவுனத்தின் யோகங்காணும்
தோணுமடா மவுனத்தின் யோகங்காணும்
தூக்கான சிதம்பரத்தின் நடனங்காணும்
ஆணுமடா ஆதிசத்தி நடனங்காணும்
அப்பனே நித்திரையை யறிந்துபண்ணே. (44)

பண்ணப்பா நவநாட்டுச் சித்தர்கேளு
பாங்கான வுயரமடா மனைதானாகும்
துண்ணப்பா நூற்றிலொன்று தென்னைபோலத்
தூக்காக நிற்பார்கள் திறத்தைக்கேளு
அண்ணப்பா அருணைநிறம் போலேபாரு
அப்பனே சங்கநிறம் போலேபாரு
பொண்ணப்பா பொற்சிலைபோல் கோடாகோடி
பெரிதான வச்ரமடா தேகம்பாரே. (45)

பாரப்பா அவர்களுட பெருமைகேளு
பாங்காகச் சித்ததுதா னதிகமப்பா
நேரப்பா அவர்கள்கண்ட யுகந்தான்கேளு
நிகழ்த்துகிறேன் கோடியுகங் கண்டபேர்கள்
ஆரப்பா அவர்களுட பெருமைகண்டோர்
அப்பனே கொங்கணர்தா னறிவார்பாரு
ஏரப்பா யெழுநூறு கோடிசித்தர்
இயலாக மலைதோறு மிருப்பார்பாரே. (46)

இருப்பார்கள் ரவிகுளிகை வாயில்தாக்கி
யியலாக நாள்தோறும் வளர்வாரப்பா
நெருப்பாகச் சோதியது காணும்பாரு
நிலையாகக் கண்டவர்க்குப் பயந்தான்றோன்றும்
மருப்பாக மலைதோறும் நிற்பார்பாரு
வகையான வமுதமது யென்னேரந்தான்
அரிப்பாகச் சொரிக்குமடா அவர்களுக்கு
அப்பனே யமுதமது பாயும்பாரே. (47)

பாரப்பா திருமூலர் மடந்தானஞ்சு
பாங்கான தேவதையை உபதேசித்து
ஏரப்பா யெழுநூறு ஆயிரந்தான்
இயல்பாக வருடமது உண்டாச்சப்பா
ஆரப்பா அவர்களுக்குக் குளிகையிந்தோர்
அப்பனே திருமூலர் பயந்தார்பாரு
பேரப்பா அவர்களுட கணக்கைக்கேளு
பெரிதான ஆயிரந்தான் கோடியாச்சே. (48)

ஆச்சப்பா திருமூல வர்க்கம்மெத்த
அங்கங்கே மூலகுரு வர்க்கங்கோடி
காச்சப்பா நடுமூலங் கண்டபேர்கள்
நலமாகச் சித்திக்கும் பாருபாரு
வாச்சப்பா அவர்களுக்கு கணக்கோயில்லை
வகையாக அவர்களுட அடையாளந்தான்
கோச்சப்பா கொஞ்சியென்ற சடைதானொற்றைக்
குறியெல்லா மைந்தரைப்போ லிருப்பார்பாரே. (49)

இருப்பார்கள் பாதுகையும் படிகமாலை
யிடதுகையிற் பிரம்பொன்று யிருக்கும்பாரு
வருப்பாக வலதுகையிற் றண்டுசோலும்
வகையான மாத்திரைக்கோல் புத்தகந்தான்
நெருப்பாக யோகத்தி லிருப்பார்பாரு
நிலையாக அஷ்டாங்க மாடுவார்கள்
அருப்பாக அப்படியே கோடாகோடி
அப்பனே திருமூலர் வர்க்கம்பாரே. (50)

பாரப்பா மாந்தரிலே சித்தராகப்
பாரிவாகச் சிவயோகி யாகவென்றால்
நேரப்பா ரிஷிகளவ ராகவென்றால்
நிலையாக ஞானிகள்தா னாகவென்றால்
ஆரப்பா கணபதியா லயந்தான்கட்டு
அப்பனே அவர்களுக்குப் பூசைசெய்ய
சீரப்பா பசுபதியா லயந்தான்கட்டு
சிறப்பாகத் தருமத்தைச் செய்துவாயே. (51)

வருகையிலே நாள்தோறும் வளரும்பாரு
வகையான தர்மமது கோடியாகும்
பெருகையிலே கணபதியி னருளினாலே
பெரியோர்கள் வந்துநன்று யுபதேசிப்பார்
அருகையிலே சிதம் ரமுஞ் சித்தியாகும்
அப்பனே வாலையது சித்தியாகும்
உருகையிலே சிவயோகம் பிராணாயாமம்
உத்தமனே குளிகையது காணும்பாரே. (52)

பாரப்பா வொருகாலம் கல்லாமண்டம்
பரிவாக வொருகாலம் மண்ணுமண்டம்
நேரப்பா வொருகாலம் விருட்சமாகும்
நிலையாகப் பரவெளியாய் நிற்கும்பாரு
ஊரப்பா வொருகாலம் சலமாமண்டம்.
உத்தமனே யொருகாலந் தீயுமாகும்
வேரப்பா வொருகாலம் மனிதராவார்
வித்தகரே வித்ததுதா னுவார்பாரே. (53)

பாரப்பா வொருகாலம் அண்டங்கேளு
பார்க்கையிலே தேவதைதா னுவார்பாரு
நேரப்பா வொருகாலம் அண்டங்கேளு
நிலையாக ராட்சதர்கள் நிகழ்த்துவார்கள்
ஊரப்பா வொருகாலம் அண்டங்கேளு
உத்தமனே புஷ்பமது ஆகும்பாரு
காரப்பா வொருகாலம் அண்டங்கேளு
காடதுதா னுகுமென்று காட்டினுரே. (54)

காட்டினுர் ராவணனும் ராமர்கூட
காணவே பதினெட்டுத் தரந்தான் வந்தார்
பூட்டினுர் பாண்டவருந் திர்தராட்டிரன்
பெரிதாகப் பதினெட்டுத் தரமேவந்தார்
சூட்டினு ரிரணியனு மிரணியாட்சன்
சீராகப் பனிரண்டு தரமேவந்தார்
மூட்டினுர் சுப்பிரமண்யர் சூரபத்மன்
முன்பாக யிருபத்துத் தரமேவந்தார். (55)

வந்தார்தா னிப்படியே யிருக்கிறேனே
வகையாக யெழுநூறு யுகந்தான்கோடி
பந்தாக அண்டமெல்லாம் ஆட்டுறூர்கள்
பாங்கான போததுதா னசையுமென்று
கந்தாகக் காகத்தின் வடிவைப்போலே
காண்கவே பார்த்துநன்று யிருந்தேனப்பா
எந்தாக யெந்தனுக்குக் கடிகைகேளு
யிகபரமாய்க் கடிகையொன்றே முக்காலாச்சே. (56)

ஆச்சப்பா யிப்படியே தாண்டச்சொன்னூர்
அப்படியே நாதாக்க ளனந்தங்கோடி
வாச்சப்பா தேவிக்கு யிந்தநாட்கள்
வகையாகச் சிலம்பொலியின் ஆட்டமொன்று
ஏச்சப்பா யெந்தனுக்கு யிந்தநாட்கள்
இகபரமாய் வருஷமது பத்துமாச்சு
மூச்சப்பா கொங்கணர்க்கு வருஷம்நூறு
மூவருக்கு வருஷமடா ஐம்பதாமே. (57)

ஆகுமடா சட்டைமுனி வருஷங்கேளு
அப்பனே வருஷமது ஐம்பதாச்சு
போகுமடா போகருக்கு அறுபதாச்சு
புகலுமகப் பேய்சித்தர் ஐஞ்ஞூறப்பா
பாகுமடா பாம்பாட்டிச் சித்தர்க்கப்பா
பாங்கான வருடமது யெழுநூறுச்சு
வேகமடா கருவூரார் நொண்டிக்கப்பா
வித்தகனே வருஷமது எண்ணூறுச்சே. (58)

ஆச்சப்பா அழுகண்ணி சித்தர்கேளு
அப்பனே வருஷமது ஆயிரந்தான்
பேச்சப்பா புலத்தியர்க்கு ஆயிரந்தான்
பெரிதான புண்ணைக்கு யீசர்க்கப்பா
வாச்சப்பா வருஷமாயி ரத்தோடெட்டு
வகையான சொருபனந்தர் வருஷங்கேளு
ஏச்சப்பா ஆயிரத்தி னெழுபதாகும்
யியல்பான மவுனருக்குக் கடிகையேழே. (59)

ஏழப்பா யிப்படியே எடுத்துச்சொன்னர்
இயலான புசுண்டருக்கு ஒன்றேமுக்கால்
வாழப்பா அவரவர்க்கு வுயர்ந்ததென்ன
வகையாக மற்றவர்க்குத் தாழ்ந்ததென்ன
காழப்பா கெவுனருக்கு உயர்ந்ததப்பா
கடிதான மவுனருக்குத் தாழ்ந்தப்பா
பாழப்பா சமுசார வாழ்க்கையாலே
பாங்காக மனிதரெல்லா மாளுவாரே. (60)

மாளுவா ரிப்படியே கோடாகோடி
மனிதருக்குஞ் சமுசார வாழ்க்கைமெத்த
ஆளுவார் பெண்மயக்க நாட்டத்தாலே
அப்பனே வயதுமெத்தக் கொஞ்சமப்பா
நாளுவார் நாள்தோறும் அலைந்துநன்றாய்
நரகத்துக் கேதுவாய் நாடிப்போறர்
தாளுவார் தவமெல்லா மட்டையாகத்
தாக்கான சிவயோகங் காணர்பாரே. (61)

பாரப்பா பிள்ளையது சித்தராகப்
பரிவாக வாசியுட யோகங்காண
நேரப்பா அஷ்டாங்க யோகசிவயோகம்
நிலையான பிராணய மவுனயோகம்
வாரப்பா வாலையுட நிட்டைசெய்ய
வகையாகச் சிதம்பரத்தின் பூசைசெய்ய
சாரப்பா சன்னசம் துறவதாகச்
சதுராகப் பெற்றவர்க்குக் கேளுகேளே. (62)

கேளப்பா தகப்பனுக்குந் தாய்தனக்கும்
கெடியாகத் தாரமென்று வந்தவர்க்கும்
வாளப்பா பெண்ணென்ற பிறவியில்லை
வகையாக யிருவருக்கும் புருஷரூபம்
ஆளப்பா தந்தைபிரா மணனுமாவன்
அப்பனே யவனுக்கு மோட்சமுண்டு
நாளப்பா யிவர்களுக்குக் கேளுகேளு
நலமாக மோட்சமென்று நவின்றிட்டாரே. (63)

நவின்றிட்டா ரிப்படியே வந்தபேர்கள்
நலமாக அடைந்தவர்கள் கோடாகோடி
விவின்றிட்டா ரிப்படியே ஆனசித்தர்
விதம்விதமாய் வந்தவர்கள் விரித்துச்சொன்னேன்
கவின்றிட்டார் கவுனத்தின் சித்தராகக்
கண்டுவிட்டார் குளிகையெல்லாங் கண்டாரப்பா
அவின்றிட்டா ரிப்படியே ரிஷிகளானோர்
அப்பனே யனந்தமுண்டு அறிந்துபாரே. (64)

பாரப்பா ராவணன்று னொருநாள்கேளு
பரிவாக வேதமது நாலுந்தூக்கி
நேரப்பா வேதமென்ற நாலேயுந்தான்
நிலையாகச் சீர்தூக்கிப் பார்க்கும்போது
ஆரப்பா ஆயிரத்தோ டெட்டுவேதம்
அப்பனே சிக்கறுத்துக் கோர்த்துவிட்டான்
ஊரப்பா ஊர்தோறும் பரவவில்லே
உத்தமனே யப்பவல்லோ தெலுங்குண்டாச்சே. (65)

ஆச்சப்பா தமிழினுட பெருமைகேளு
அப்பனே யகத்தியன்றான் நின்றாரப்பா
வாச்சப்பா வடுகருக்கும் ஆகும்பாரு
வகையான பிராமணர்க்கு மாகும்பாரு
காச்சப்பா கன்னடியர்க் காகும்பாரு
கலையான குச்சிலியர்க் காகும்பாரு
மாச்சப்பா மராஷ்டகருக் காகும்பாரு
மறையான மிலேச்சருக் காகும்பாரே. (66)

பாரப்பா யனைவருக்கும் வேணும்வேணும்
பாங்கான க்ஷத்திரியர்க்கு வேணும்வேணும்
நேரப்பா வைசியர்க்கு வேணும்வேணும்
நிலையான சூததிரர்க்கு வேணும்வேணும்
தேரப்பா துலுக்கருக்கு வேணும்வேணும்
தெளிவான கலிங்கருக்கு வேணும்வேணும்
ஏரப்பா எடுத்திருக்கும் அண்டத்தோர்க்கும்
இயலான தமிழதுதான் வேணும்பாரே. (67)

பாரப்பா அதலமென்றும் விதலமென்றும்
பரிவான நிதலமென்றும் ஏழுலோகம்
மேரப்பா மேலேழு லோகமுண்டு
மெய்யான லோகமடா சத்யலோகம்
ஏரப்பா யிப்படியே கூடிநின்றால்
இயலான அண்டமடா வொன்றுமாகும்
ஆரப்பா ஆயிரத்து யெட்டுஅண்டம்
அப்பனே யவர்களுக்குந் தமிழேவேணும். (68)

வேணுமடா சிதம்பரத்தைப் பார்க்கவென்றால்
விரிவான தமிழதுதான் வேணும்வேணும்
பூணுமடா வாலையைத்தான் பூணவென்றால்
புகழாகத் தமிழதுதான் வேணும்வேணும்
தோணுமடா சிவயோகம் வாசியோகம்
தூக்கவென்றால் தமிழதுதான் வேணும்வேணும்
ஆணுமடா யனைவருக்கும் வேணும்வேணும்
அப்பனே யனைவருந்தா னறிந்துபாரே. (69)

பாரப்பா கிரேதயுகஞ் சித்தரப்பா
பலமான பெருக்கினுட கணக்கைக்கேளு
நேரப்பா கோடியடா ரண்டுலட்சம்
நிலையான திரேதயுகம் லட்சங்கோடி
தூரப்பா துவாபரத்திற் கோடிகேளு
தூக்கான தைம்பதென்ற ஆயிரந்தான்
காரப்பா கலியுகத்திற் கோடிகேளு
கணக்கிருபத்தையாயி ரந்தான்பாரே. (70)

பாரப்பா யுகந்தோறும் வாசிகேளு
பரிவாக யிப்படியே பெருகும்பாரு
வேரப்பா சித்தரென்ற பேரேயெங்கும்
விதம்விதமாய்ச் சித்தருட பெருக்கம்மெத்த
நேரப்பா யிப்படியா யிரந்தான்கோடி
நிலையான லட்சமடா கலியுமானால்
காரப்பா கணக்கெல்லாஞ் சரியேயாச்சு
காணாத பரவெளியி லடங்கும்பாரே. (71)

அடங்குவார் சித்தரெல்லா படங்கிப்போவார்
அப்பனே சோதியிலே கலப்பார்பாரு
கடங்குவார் கண்டுநன்றாய்க் களிகூர்வார்கள்
கனக காட்சியெல்லாங் காணுவார்கள்
சடங்குவார் சிலம்பொலியின் சத்தங்காண்பார்
சாஸ்திரத்தை யறிந்துநன்றாய்ச் சத்தங்கேளு
ஒடுங்குவார் நடனசத்தி பாதந்தன்னில்
உத்தமனே யொடுங்கிநன்று யுருகுவாரே. (72)

உருகுவா ரிப்படியே சித்தரப்பா
உத்தமனே சித்தருட பெருமைகேளு
வருகுவா ருகந்தோறும் வளர்ந்துநிற்பார்
வானென்ற அண்டத்தி லாடுவார்கள்
சருகுவார் சமாதியிலே யடங்கிநிற்பார்
சரமான வாசியைத்தா னுட்கொள்வார்கள்
பெருகுவா ரிப்படியே பெருகிநிற்பார்
பேசாத மவுனத்தின் பெருமைபாரே. (73)

பாரப்பா கணபதியி னாட்டத்தாலும்
பாங்கான சிதம்பரத்தின் ஆட்டத்தாலும்
நேரப்பா வாலைபுட ஆட்டத்தாலும்
நிலையான சிவயோக நிஷ்டையாலும்
வாரப்பா பிராணாயம் வாசியோகம்
வகையாக மவுனத்தின் யோகத்தாலும்
ஏரப்பா யெடுத்ததெல்லாஞ் சித்திபெற்று
இருப்பார்கள் முத்தருந்தா னிந்நூல்பாரே. (74)

தேரையர் சிவபூஜாவிதி ௭௫,
முற்றிற்று.

சத்திகிரி சிவகிரி திருவாவினன்குடி யெனத் தழைத்தோங்கும் திருப்பழனிமலையிலெழுந்தருளிய ஸ்ரீ கைலாச போகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் ஆதீன மகாகைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ கைலாசதேண்டாயுதபாணி ரிஷீஸ்வரசுவாமியவர்களிடமிருந்துவாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

## ஆன்றோர்களாய்ந்துரைத்த பதினெண் சித்தர்கள் அடக்கமான ஆலயங்கள்.

ஆதிகா லத்திலே தில்லையிற் றிருமூல
    ரழகமலை யிராம தேவர்
அனந்தசய னங்குப்ப முனிதிருப் பதிகொங்க
    ணவர்கமல முனிவ ராரூர்
சோதிரங் கஞ்சட்ட முனிகருவை கருவூரர்
    சுந்தரா னந்தர் கூடல்
சொல்லுமெட் டிக்குடியில் வான்மீக ரோரேற்
    றெல்காசி நந்திதேவர்.
பாதியரி சங்கரன் கோவிலிற் பாம்பாட்டி
    பழனிமலை போக நாதர்
பரங்குன்ற மதின்மச்ச முனிபொயூர் கோரக்கர்
    பதஞ்சலி யிராமே சுரம்
சேதிவைத் தீசுரன் கோவிறன் வந்திரி
    திகழ்மயூ ரங்கு தம்பர்
சித்தருணை யோரிடைக் காடர்ச மாதியிற்
    சேர்ந்தன் ரெமைக் காக்கவே.

இதிற் சொல்லாத அநேக சித்தர்கள் முனிவர்கள் ஞான்சாஸ்திரங்களை அடுத்தபாகங்களிற் காண்கலாம்.

உ

குருவே துணை.

# தேவ, ரிஷி, முனி, சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# யோக ஞான சாஸ்திரத் திரட்டின்

## ஐந்தாம் பாகத்தில் சொல்லியிருக்கிற

# முக்கிய விஷயங்கள்.

ஐயா! இதற்கடுத்த ஐந்தாம் பாகத்தில், சுந்தரானந்தர், கடுவெளிச்சித்தர், சங்கிலிச்சித்தர், ஊர்வசி, பதஞ்சலியார், வியாக்கிரமபாதர், திரிகோணச்சித்தர், கொங்கணர், பரத்துவாசர், சங்கரர், வரரிஷி, சமதக்கினி, சச்சிதானந்தர், கடைப்பிள்ளை முதலிய அருந்தவமுனிகளால் அருளிச்செய்யப்பெற்ற முப்பத்திரண்டு சாஸ்திரங்களில் அடங்கிய விஷயங்களை இதனடியிற் காணலாம். அவையாவன:—

26-வது: சுந்தரானந்தர் சுத்தஞானம் ஐம்பத்தொன்றில், நீர்மேற் குமிழியென்னும் நிலையில்லாக் காயத்தை நித்திய சூரியரைப்போல் என்றும் நிலைபெறச் செய்யுங் கற்பமுறை விபரங்களையும், யோக சாதனத்துக்குரிய வாசிப் புரவியை நடாத்தி ஞானமார்க்கஞ் செல்லும் விபரங்களையும்;

27-வது: சுந்தரானந்தர் சிவயோக ஞானம் முப்பத்திரண்டில், வாதம், மவுனம் ஞான முதலியதற்குரிய ரேசகபூரக கும்பக மாத்திரை விபரங்களையும்;

28-வது: சுந்தரானந்தர் அதிசய காரணம் முப்பத்தாறில், பலவகைப் பட்சிகளின் கூண்டுகளிலுள்ள சிலவகை வேருகளிற் செய்யத்தகுந்த சித்து விபரங்களையும்;

29-வது: சுந்தரானந்தர் வயித்தியம் ஐந்தில், மேகவெட்டை முதலிய வியாதிகளுக்குப் பாகமான பத்திய விபரங்களையும்;

30-வது: சுந்தரானந்தர் சூஸ்திரச் சுருக்கம் பத்தில், சுழிமுனை சோதி தெரிசன விபரங்களையும்;

31-வது: சுந்தரானந்தர் ஞான சூஸ்திரம் பதினொன்கில், பூரண மென்னுஞ் சோதி தெரிசன விபரங்களையும், காரணமான வாசிமூல மந்திர விபரங்களையும்;

32-வது: சுந்தரானந்தர் முப்பு இருபத்தைத்தில், செயநீர், சுண்ணம் முப்பு குரு வேதைமுடிக்கும் விபரங்களையும்;

33-வது: சுந்தரானந்தர் பூஜாவிதி முப்பத்தேழில், அறுகோண சக்கரத்தின் மூலமந்திரங்களையும், அதற்குரிய பூசை முறைகளையும், காயகற்ப குளிகை சித்தி விபரங்களையும்;

34-வது: சுந்தரானந்தர் வாக்கிய சூஸ்திரம் அறுபத்துநான்கில், செயநீர் சுண்ணம் செந்தூரம் குருவேதை காயகற்பம் முதலிய விபரங்களையும்;

35-வது: கடுவெளிச் சித்தர் சிவராஜயோகம் பதினெட்டில், தச தீட்சை குரு கற்பமுறை சிவயோக முதலிய விபரங்களையும்;

36-வது: கடுவெளிச்சித்தர் பூரண ஞானம் அறுபத்தேழில், சரியை கிரியை யோகம் ஞானம் திரிமூர்த்திகள்-தெரிசனவிபரங்களையும்;

37-வது: கடுவெளிச்சித்தர் பாடல் முப்பத்தைந்தில், இப்பிரபஞ்சம் அநித்தியமென்றும், பிர்மமொன்றே நித்தியமென்றும், அப்பிர்மத்தைச் சேருதற்குரிய விபரங்களையும்;

38-வது: சங்கிலிச்சித்தர் ஞான சூஸ்திரம் பதினாறில், பரம்பொருளின் மகத்துவ விபரங்களையும், பராசத்தியாகிய திரிபுரையின் அஷ்டாட்சர விபரங்களையும்;

39-வது: சங்கிலிச்சித்தர் பாடல் முப்பத்தாறில், ஊமையட்சரம் பஞ்சபூதநிலை யோகசித்தி முதலிய விபரங்களையும்;

40-வது: ஊர்வசி இரத்தினச் சுருக்கம் பத்தொன்பதில், ஜீவான்மா பரவான்மா யோக ஞான சாதனங்களுக்குரிய கால நிர்ணய விபரங்களையும்;

41-வது: பதஞ்சலியார் ஞானம் ஐம்பத்து நான்கில், யோக ஞான சாதனங்களுக்குரிய மூலாட்சர விபரங்களையும், வாசி சித்தி சொரூபதெரிசன விபரங்களையும்;

42-வது: பதஞ்சலியார் சூஸ்திரம் இருபதில், வேதை கெவுன குளிகை, வஸ்து உப்பு குண்டலி பிராணய யோக விபரங்களையும்;

43-வது: வியாக்கிரமபாதர் ஞானம் பதிமூன்றில், சொரூபநிலையைத் தெரிசித்து ஞானத்தை யடையும் விபரங்களையும்;

44-வது: வியாக்கிரமபாதர் சூஸ்திரம் பதினாறில், கெற்பரோக நிவாரணத் தயில விபரங்களையும், பட்சிதோஷ பரிகார எந்திர விபரங்களையும்;

45-வது: வியாக்கிரமபாதர் சமாதி எட்டில், ஆறுதாரம் வாசி அமுதபானம் காயகற்ப விபரங்களையும்;

46-வது: திரிகோணச் சித்தர் சிவஞான சூஸ்திரம் ஐம்பத்திரண்டில், அண்டபிண்டம் சுழிமுனை குரு வழலை விபரங்களையும்;

47-வது: திரிகோணச்சித்தர் பாடல் தொண்ணூற் றிரண்டில், சரியை கிரியை யோக ஞானசித்தியும் அதற்குரிய விபரங்களையும்;

48-வது: கொங்கணர் முதற்காண்ட சூஸ்திரம் நாற்பத்தொன்றில், குருவழலை சுண்ணம் முப்பூ விபரங்களையும்;

49-வது: கொங்கணர் நடுக்காண்ட சூஸ்திரம் ஐம்பதில், யோக சாதன காயசித்தி முதலிய விபரங்களையும்;

50-வது: கொங்கணர் கடைக்காண்ட சூஸ்திரம் அறுபதில், குரு வேதை அஷ்டகர்மத்துக்குரிய விபரங்களையும், யோக ஞான சித்தி முதலிய விபரங்களையும்;

51-வது: பாத்துவாச மகாரிஷி யோகசாதனம் இருபத்திமூன்றில், ரவிமதி சுழிமுனை ஆறுதார தெரிசனம் காயசித்தி யோகசித்தி விபரங்களையும்;

52-வது: சங்கரர் நவக்கிரக கக்ஷிஷம் நூறில், அஞ்சுதேவதை சித்தி விபரங்களையும், அஷ்டகர்மச் சக்கர மூலமந்திர அட்சர எக்கியங்களின் விபரங்களையும்;

53-வது: வரரிஷி கலைக்கியானம் இருபத்திரண்டில், கற்பம் மூலிகை கவுனமணிக்கட்டுக்குரிய விபரங்களையும், வாசிமூல சித்தியின் வகை விபரங்களையும் நந்திதெரிசன விபரங்களையும்;

54-வது: சமதக்கினி மகாரிஷி வஸ்து தெரிசனம் முப்பத்தொன்றில், தேசதேசங்கடோறும் ஜீவஜெந்துவாய் ஜெனித்த எழுவகைத் தோற்றம் எண்பத்துநான்கு லெட்சம் ஜீவராசிகளில் நிறைந்து எங்கும் வியாபித்திருக்கின்ற பரம்பொருளின் முடிவும், ரவிமதியா லமுதம் பொசிக்கும் விபரங்களையும்;

55-வது: சச்சிதானந்தர் சுழிமுனை சூஸ்திரம் முப்பத்தொன்றில், அண்டபிண்ட நிலை குண்டலி பராசத்தி சோதி சொரூப தெரிசனம் என்றும் அழிவில்லா ஜீவன் முத்தர்களாகும் விபரங்களையும்;

56-வது: கடைப்பிள்ளை மவுனதீட்சை பன்னிரண்டில், மணிவாசல் திறப்பும், பிரணவ மூலமும், நாசிமுனை நாட்டமும் யோகஞான சித்திக்குரிய விபரங்களையும்;

57-வது: கடைப்பிள்ளை பஞ்சாட்சரச் சுருக்கம் முப்பத்திரண்டில், ஆருதாரம் சடாட்சரம் கற்பசெந்தூரம் வாசி மூலமந்திரம் சோதிசொரூப தெரிசன விபரங்களையும் சொல்லப்பெற்றிருக்கின்றன.

முன்னர் சொன்ன நான்கு பாகங்களிலும் ஒளிப்பா யுரைத்துள்ளதை நன்குய்த் தெரியவேண்டுமானல் ஐந்தாம் பாகத்தை வாங்கி வாசிக்க நன்கு விளங்கும். தவசிரோமணிகளின் சாதுரிய மதுரவாக்கியத்தன்மைகளை இதனல் அறியலாம், ஆகையால் யாவரும் ஐந்தாம் வாலியத்தையும் சேர்த்துப்பார்க்கும்படி கோருகிறேன்.

---

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோன்,

புஸ்தகஷாப், புதுமண்டபம் மதுரை.